# எங்கள் விடுதலைப் போர்

## (1947 - 1956)






*"When Pattom Thanu Pillai wanted to drive us out of the state and let loose a reign of terror, it was the Supreme Court of India that gave us protection. It was the High Court of Mysore that granted us our liberty"*
**Shri. A. Nesamony,** *Lok Sabha, 14 Dec. 1955*

இளந்தோட்டம் **கு. சுகுமாறன்**

எங்கள் விடுதலைப் போர் (1947 - 1956)

இளந்தோட்டம் கு. சுகுமாறன்



நூல் ஆசிரியர்



C. குமாரதாஸ்



D. பீட்டர்



"அறப்போர் ஆரம்பித்தது, தமிழகத்தில் உணர்ச்சிப் பிரவாகம் பொங்கியது. அந்த உணர்ச்சிக் கடலிலே மிதந்து செல்லும் நப்பாசையுடன் எத்தனையோ கட்சிகளும் தலைவர்களும் இங்கே வந்தார்கள், பேசினார்கள். விண்ணதிரப் பேசினார்கள். ஆனால் விளவங்கேட்டிலே வெடி சப்தம் கேட்டதும் தி.த.நா.கா. வைத் தவிர இங்கு வேறு யாரையுமே காணவில்லையே. தமிழர்கள் அறியமாட்டார்களா இதை? ...... சுடுகாடாக பாலைவனமாகக் காட்சி அளித்தது திருவிதாங்கூர் தமிழகம். இதற்குப் புகல் சொல்லித்தீர வேண்டுமே. யாரைக்கண்டது இந்த நாட்டில். வெத்துப் பேச்சுகள் அன்று தேவைப்படவில்லை. காரியம் அவசியமாக இருந்தது. யார் வந்தார்கள் இந்த நாட்டிலே?"

- A. நேசமணி, தினமலர், 25-02-1955

வெளியிட்டோர் : **சந்தினி பதிப்பகம்**
மனை எண். 4/23, கிறிஸ்டோபர் நகர்
நாகர்கோவில் - 629 003

# எங்கள் விடுதலைப் போர்


*ஆசிரியர்*

**இளந்தோட்டம் கு. சுகுமாறன், பி.எ.**



*வெளியீடு*

**சாந்தினி பதிப்பகம்**

*கதவு எண் : 15/155; வியாகப்பர் தெரு,*

*கிறிஸ்டோபர் நகர், பெருவிளை*

*நாகர்கோவில் - 629 003.*

# நூலைக் குறித்து

♦♦♦♦♦♦♦♦


| | | |
|---|---|---|
| *பெயர்* | : | எங்கள் விடுதலைப் போர் |
| *பொருள்* | : | திருவிதாங்கூரில் உயர்சாதி இந்துக்களான மலையாள நாயர்களின் கோரப்பிடியில் இருந்து தமிழன் இழந்த மண்ணாகிய குமரி மாவட்டத்தை மீட்டெடுக்க நடந்த போராட்டத்தின் வீர வரலாறு. |
| *ஆசிரியர்* | : | நாடார் நல சிந்தனையாளர்<br>இளந்தோட்டம் கு. சுகுமாறன் |
| *மொழி* | : | தமிழ் |
| *வெளியீட்டு நாள்* | : | 12-06-2011 |
| *உரிமை* | : | ஆசிரியருக்கு மட்டும் |
| *மொத்த பிரதிகள்* | : | 500 |
| *நூலின் அளவு* | : | 1/8 டெம்மி (21.5 cm x 14 cm) |
| *அச்சு பரப்பளவு* | : | 17.5 cm x 11cm |
| *எழுத்து உருவ அளவு* | : | *10.5 புள்ளிகள்* |
| *அச்சிட்டோர்* | : | பெனியேல் பிரிண்டர்ஸ்<br>75-B, W.C.C. சாலை,<br>நாகர்கோவில் - 629 001. |
| *வெளியீடு* | : | சாந்தினி பதிப்பகம்<br>கதவு எண் : 15/155, வியாகப்பர் தெரு.<br>கிறிஸ்டோபர் நகர், பெருவிளை,<br>நாகர்கோவில் - 629 003. |
| *நன்கொடை* | : | ரூ. **50/-** க்கு குறையாமல் |

## திருமண பொன்விழா காணும் நூலாசிரியர்



**திருமணநாள் : 12-1-1961**



**பொன்விழா நாள் : 12-1-2011**

# அணிந்துரை

வரலாற்றில் மனித இனம் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய இனிப்பான நிகழ்வுகளும், வெட்கப்படக்கூடிய கசப்பான நிகழ்வுகளும் சகஜமே. பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய நிகழ்வுகளுக்குச் சொந்தம் கொண்டாடி தங்களை சமுதாய அடுக்கில் மேல்தளத்தில் நிலை நிறுத்தவும், வெட்கப்படவேண்டிய நிகழ்வுகளுக்கு வேறு சிலரைச் சொந்தமாக்கி அவர்களை சமுதாய அடுக்கில் கீழ்தளத்தில் நிலை நிறுத்தி வைத்து அடிமைப்படுத்த முயற்சிப்பதுவும் உயர் ஜாதியினரின் வழக்கமான செயல்களில் ஒன்று. எனவே, **ஒடுக்கப்பட்டு விடுதலையடைந்த ஒரு சமுதாயத்தின் விடுதலை வாழ்வு ஒரு தொடர் போராட்டமே** என்பது உறுதியாகி விடுகிறது.

கன்னியாகுமரி மாவட்ட விடுதலை வரலாறு (1947–1956) ஒடுக்கப்பட்ட ஒரு தமிழ் சமுதாயத்தின் மகத்தான விடுதலைப் போராட்ட வரலாறு ஆகும். இந்த மகத்தான வரலாறுக்குச் சொந்தம் கொண்டாடி, மேன்மை தேட உயர் ஜாதியினர் களம் இறங்கினர். வரலாறை மறைப்பதிலும்–திரிப்பதிலும்–திருடுவதிலும் மும்முரமாக ஈடுபட்டனர். எந்த வித முதல் நிலை ஆவணத்தாங்கல்களும் இல்லாமலே, தங்களை மேன்மைப் பாராட்டும் அளவில் சில நான்காம் தர நூல்களை எழுதி தாங்களே வெளியிட்டுக் கொண்டனர். இந்நிலையில் **அந்த மகத்தான விடுதலை வரலாற்றின் சொந்தக்காரர்கள் விழித்துக் கொண்டார்கள்.**

விடுதலை நாயகன், குமரித்தந்தை மார்ஷல் ஏ. நேசமணியுடன் தோளோடு தோள் நின்று போராடியவர், முன்னாள் பாராளுமன்ற மேலவை உறுப்பினர், திரு. ஏ. அப்துல் ரசாக் அவர்கள். விடுதலைப் போராட்ட வரலாறை உயர் சாதியினர் வேண்டுமென்றே மறைப்பதையும் – திரிப்பதையும்– திருடுவதையும் கண்டு மனம் பொறாது,

திரு.ஏ.ஏ. ரசாக் அவர்கள் நிகழ்வுகளை உள்ளவாறே அப்படி அப்படியே எடுத்து வைத்து 1998–ல் **நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்** என்ற நூலைத் தந்தார்கள். இது உயர் ஜாதியினரின் மறைப்புக்கும் – திரிப்புக்கும் – திருட்டுக்கும் போரிடியாக அமைந்துவிட்டது. வேதனையைத்தாள இயலாத உயர் ஜாதியினர், நூலாசிரியர் திரு. ஏ.ஏ. ரசாக் அவர்களின் மறைவைச் சாதகமாக எடுத்துக்கொண்டு, நூல் வெளியீட்டாளர், பேராசிரியர் டாக்டர் மு. ஆல்பன்ஸ் நத்தானியேல் அவர்களை நீதிமன்றத்துக்கு இழுத்து, பல்லாண்டுகள் அலைக்கழித்து வஞ்சம் தீர்த்துக்கொண்டனர். வரலாறு திருடர்கள் தோல்வியைச் சந்தித்திருந்தாலும், அந்த **வரலாற்றின் சொந்தக்காரர்கள் என்றும் விழிப்புடன் இருந்து செயல்பட வேண்டும்** என்ற உண்மையை உணர்த்துவதாக அந்த அலைக்கழிப்பு நிகழ்ச்சி அமைந்தது.

திரு. ஏ.ஏ. ரசாக் அவர்கள் சொல்ல முனைந்து, பின்தயங்கி நடுவழியில் நின்று போன அனேக நிகழ்வுகளை அவருடைய நூலில் காணலாம். இளந்தோட்டம் கு. சுகுமாறன் அவர்களின் **எங்கள் விடுதலை போர்** என்ற இந்நூல் அந்த குறையை நீக்கி, **நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம் என்ற நூலுக்கு விரிவுரையாகவும், விளக்கவுரையாகவும், தெளிவுரையாகவும் அமைந்துள்ளது.** இயேசுவைப் போன்ற இனப்பற்றையும், நேசமணிமணியைப் போன்ற தைரியம் – துணிச்சல் – வெளிப்படை ஆகியவற்றையும், விடுதலைப் போராட்ட வரலாற்றில் இருக்கும் ஆழ்ந்த அறிவையும், போராட்ட நிகழ்வுகளுடனான சமகால தொடர்பையும் இளந்தோட்டம் அவர்களின் எழுத்தில் காணமுடிகிறது.

தலைவனிடம் ஒரு திடமான கொள்கை இருக்க வேண்டும் – அந்த கொள்கையில் அவன் உறுதியாக இருக்க வேண்டும் – தவறு செய்யும் தோழர்களை மன்னித்து ஏற்றுக் கொள்ளும் மனோநிலை வேண்டும்– கவர்ச்சிகளில் வீழ்ந்து விடா மனோ நிலையும் வேண்டும்.

மக்கள் வழி தலைவன் அல்ல – தலைவன் வழியே மக்கள் என்ற கோட்பாட்டில் நம்பிக்கை வேண்டும். தோழமை என்ற பெயரில் பிறதலைவர்களின் வழிநடவாமை வேண்டும். இவையாவும் ஒருங்கே அமையப்பெற்றவர் குமரித் தந்தை மார்ஷல் ஏ. நேசமணி என்பதை இளந்தோட்டம் வெளிப்படுத்துகிறார்.

ஆலன் நினைவு மண்டபத்தில் தி.த.நா.கா. என்ற அரசியல் கட்சி துவங்கிய நாளில், திருவிதாங்கூர் தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு விடுதலை வேண்டும் என்று நேசமணி முழக்கமிட்டார். இறுதியாக , திருவிதாங்கூர் தமிழர்கள் வாழும் பகுதிகள் முழுமைக்கும் விடுதலை வேண்டும் என்று பாராளுமன்றத்தில் நேசமணி வாதிட்டார். **நேசமணியிடம் திடமான கொள்கை இருந்தது** என்பதற்கு இவைகள் சான்றாகின்றன.

ஆகஸ்ட் 11,1954–ல் இரு இடங்களில் துப்பாக்கிச் சூடு நடந்தது – பதினொருபேர் மாண்டனர் – அனேகர் முடமாயினர் – சுமார் 300 –க்கும் மேலானோருக்குச் சிறையில் சித்திரவதை – 3000 –க்கும் மேலானோர் வெளிமாநிலங்களிலும், காடு–மலைகளிலும் மறைந்து, பசி–பட்டினியால் வாடினர் – அவர்கள் குடும்பங்கள் புனிதம் இழந்தன – குடும்பத்தினர் பசி – பட்டினியால் துவண்டுபோயினர். எது – எங்கு– எப்போது நடக்குமோ என்ற திகில் எங்கும் நிறைந்திருந்தது – சுமார் 8 மாதங்கள் கல்குளம் – விளவங்கோடு தாலுகாக்கள் சுடுகாடாகக் காட்சிதந்தன – **அரசுக்கு அடிபணிய கட்சித்தோழர்கள் தலைவனை வற்புறுத்தினர் – நேசமணியோபணியாமல் கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்தார்.** இந்த நிகழ்வுகளை இளந்தோட்டம் அவர்கள் விரிவாகத் தன் நூலில் எடுத்து வைத்துள்ளார்கள்.

திருவிதாங்கூர் அரசால் தாக்குப் பிடிக்க முடியாத அளவில் தி.த.நா.கா.–வின் வளர்ச்சிவேகம் இருந்தது. மந்திரி பதவி, சபாநாயகர் பதவி, மன்னரின்பண முடிப்பு, இன்னும் பல கவர்ச்சிகள் நேசமணியை

நெருங்கி வந்தன. ஏளனச் சிரிப்பைப் பதிலாகத்தந்து நேசமணி அவைகளை நிராகரித்தார் – தன் குறிக்கோளுக்கு நேராக வீரநடை போட்டார். மட்டுமா? அன்று வக்கீல் தொழிலில் கொடிக்கட்டிப்பறந்து கொண்டிருந்தவர் நேசமணி அவர்கள். **தொழில் மூலம் வரக்கூடிய அபரிமித வருமானத்தைக்கூட முற்றிலும் துறந்து, நேசமணிதான் ஏற்றுக்கொண்ட விடுதலைப் பணியில் முற்றிலுமாக ஈடுபட்டிருந்தார்.** இந்த உண்மையையும் இளந்தோட்டம் அவர்கள் வெளிச்சமிட்டுக் காட்டுகிறார்கள்.

கட்சிப் பிரமுகர்களில் ஒருவரான திரு. பா. தாணுலிங்கம், மலையாளிகள் விரித்தவலையில் வீழ்ந்து, போட்டி தி.த.நா.கா. வைத் துவங்கி, தேர்தலில் தி.த.நா.கா. வேட்பாளர்களை எதிர்த்துப் போட்டியிட்டு, மண்ணைக் கவ்வினார். அவர் அபயம் தேடி மீண்டும் தி.த.நா.கா.வுக்கு வந்தபோது, கட்சிக்குள் இருந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாது, நேசமணி ஏற்றுக்கொண்டார்.

தென்திருவிதாங்கூரில் காங்கிரஸ்கட்சி நாயர் ஆதிக்கத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. அரசுக்கு எதிராக செயல்பட்டுக் கொண்டிருந்த காங்கிரஸ் கட்சிக்கு கிறிஸ்தவ நாடார்கள் ஆதரவு கொடுக்கவில்லை. மாறாக, இந்து – கிறிஸ்தவ நாடார் ஒற்றுமைக்குப் பாடுபட்டார்கள். இச்செயல் தங்களை பெலவீனப்படுத்தும் என்று அறிந்து கொண்ட நாயர்கள், காங்கிரஸ் பிரமுகரான திரு. ஏ. குஞ்ஞன் நாடாரைப் பயன்படுத்தி ஒற்றுமை முயற்சியை முறியடிக்கப் பாடுபட்டார்கள். நாளடைவில் குஞ்ஞன் நாடாரின் செல்வாக்கு காங்கிரஸ்கட்சிக்குள் எடுபடாமல் போனது. அவர் தி.த.நா.கா.–வில் அபயம் கேட்டு வந்தார். கட்சிக்குள் பலருடைய எதிர்ப்புகள் இருந்தும் குஞ்ஞன் நாடாரை நேசமணி ஏற்றுக்கொண்டு முக்கிய கட்சிப்பொறுப்புகளையும் அவருக்குக் கொடுத்தார். இவ்வாறாக, **நேசமணியின் மன்னிக்கும் மற்றும் தயாளகுணங்களையும்**

**தியாகங்களையும் இளந்தோட்டம் அவர்கள் தன் நூலில் கோடிட்டுக்காட்டுகிறார்கள்.**

**கட்சி எடுக்கும் முடிவுகளுக்கு என்றுமே தலைவணங்கி செயல்பட்டார் நேசமணி.** பிரதம மந்திரி நாராயண பிள்ளைக்குத் தன் மந்திரி சபையை காப்பாற்றிக் கொள்ள தி.த.நா.கா. சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்பட்டது. அது தொடர்பாகப்பேச பாளையங்கோட்டையில் ஒரு சந்திப்பு நிகழ்ச்சி ஏற்பாடானது. தி.த.நா.கா. பிரமுகர்கள் அனைவரும் கலந்துக்கொண்டனர். பல நிபந்தனைகளின் அடிப்படையில் ஒரு சமரசம் உருவானது. அதன் பெயர்தான் **பாளையங்கோட்டை சமரசம்.** அந்த சமரசத்தை தி.த.நா.கா. பொதுக்குழு ஏற்றுக்கொள்ளவில்லை. பாளையங்கோட்டை சமரசத்தில் அங்கமாக இருந்தவர்களில் சிலரும் பொதுக்குழுவில் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மனம் உடைந்துபோன தி.த.நா.கா.கட்சித்தலைவர் திரு. என். சேம் நத்தானியேல் தன் தலைவர் பதவியை இராஜினாமா செய்ததோடு நில்லாமல், பின் ஒரு நாளில் கட்சியை விட்டு ஓடி பட்டம் தாணுபிள்ளையை தன் தலைவனாக ஏற்றுக்கொண்டார். **நேசமணியோ பொதுக்குழுவின் முடிவுக்குக் கட்டுப்பட்டு கட்சியில் தொடர்ந்து செயல்பட்டார்.**

திருவிதாங்கூர் தமிழர்கள் வாழ்ந்த பகுதிகளான தேவிகுளம், பீருமேடு தாலுகா மக்கள் தமிழ்நாட்டுடன் சேரவேண்டும் என கோரிக்கை வைத்தனர். உடனே அரசு அங்கு போலீஸ் அட்டூழியத்தைக் கட்டவிழ்த்து விட்டது. அங்குள்ள நிலைமையை நேரில் சென்று ஆய்வு நடத்தவும் மக்களுக்கு ஆறுதல் சொல்லவும் நேசமணியை அனுப்புவது என்று கட்சி தீர்மானமிட்டது. கட்சிகட்டளைக்கு அடிபணிந்து அங்கு சென்ற நேசமணியையும் அவர் தோழர்களையும் மலையாள போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். இதுவே தி.த.நா.கா. –வின் இறுதிக் கட்டப்போராட்டத்தின் துவக்கமாக அமைந்தது.

நேசமணி சிறையில் அடைப்பட்டதும் தமிழர்கள் வாழந்த பகுதிகள் எங்கும் சாத்வீக போராட்டம் ஆரம்பமானது. பாரதப்பிரதமர், பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் தி.த.நா.கா. தலைவருக்கு ஒரு கடிதம் எழுதி போராட்டம் வேண்டாம் என கேட்டுக்கொண்டார். கடிதத்தை பத்திரிகைகளில் வெளியிடவும் நேரு கேட்டுக்கொண்டார். மாநில மறு சீரமைப்பு ஆணையத்தின் அறிக்கை வந்ததும் பரிந்துரைகளைப் பரிசீலனை செய்து திருவிதாங்கூர் தமிழ் பகுதிகளை தமிழகத்துடன் இணைக்கலாம் என்று உறுதிமொழியும் தந்திருந்தார். கடிதம், சிறைசெல்லாமல் வெளியில் இருந்த திரு. A. குஞ்ஞன் நாடாரிடம் கிடைத்தது. **கடிதத்தை சிறையில் இருந்த தலைவர் நேசமணியிடம் காட்டி குஞ்ஞன் நாடார் முடிவெடுக்க முன்வரவில்லை.** ஜீவானந்தத்துடையவும் ம.பொ.சிவஞானத்துடையவும் வழி நடத்துதலில் குஞ்ஞன் நாடார் இயங்கினார். அவர்கள், நேசமணி கடிதம் கண்டதும் போராட்டத்தை பின்வலிக்கக் கூடும் என்று எண்ணியதால், குஞ்ஞன்நாடார் கடிதத்தை நேசமணியிடம் காட்டாமல் ஆகஸ்ட் 11,1954 போராட்டத்தைப் பிரகடனப்படுத்தினார். அதனால் தமிழ் பிரதேசங்களான கல்குளம் – விளவங்கோடு தாலுகா மக்கள் பட்டபாடுகள் அறிந்ததே. அத்துடன் நேருவின் வேண்டுகோளை மதிக்காததால் மத்திய அரசு வட்டாரங்களில் தி.த.நா.கா.–வுக்கு ஆதரவு குறைந்தது– பட்டம் தாணுபிள்ளைக்கு ஆதரவு பெருகியது. **சிறையில் இருந்து வெளி வந்த நேசமணி, குஞ்ஞன் நாடார் மீது எந்த குறையையும் கண்டுகொள்ளவில்லை. அனைத்துப் பொறுப்புகளையும் தானே ஏற்றுக்கொண்டார்.**

தமிழர் நலன்காக்க தி.த.நா.கா. என்ற அரசியல் கட்சியை நேசமணி ஏற்று எடுத்ததும், அரசியல் மேதாவித்தனம் தங்கள் கைவிட்டுப் போனதால் உயர் ஜாதிக்காரனான ஜீவானந்தம் நாகர்கோவில் நகரசபைத் திடலில் ஒரு கூட்டத்தைக் கூட்டி "நேசமணி

ஒரு கருங்கல், அதை விழுங்கி ஜீரணித்து வெளியே தள்ளுங்கள்" என்று முழங்கினார். பிற்காலத்தில் ம.பொ.சி. "ஜீவாவின் எதிர்பார்ப்புக்கு மாறாக நேசமணி தி.த.நா.கா. வை விழுங்கி ஜீரணித்து விட்டார்". என்று எழுதுகிறார். எனினும் வஞ்சம் தீர்க்க ஜீவானந்தம் காத்துக்கிடந்தார். அந்த வாய்ப்பு நேசமணி கைதாகி சிறையில் அடைபட்டுக் கிடந்த போதுக் கிட்டியது.

தி.த.நா.கா கட்சியின் வேண்டுகோளை ஏற்று நேசமணியும் அவர் தோழர்களும் தேவிகுளம் சென்றனர். அங்கு அவர்கள் தடையை மீறி சிறை சென்றனர். அதன்பின் தி.த.நா.கா. முன்னணி தலைவர்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தேவிகுளம் சென்று தடையை மீறி சிறைபுகுந்தனர். **தேவிகுளம் சென்று தடையை மீறி சிறை செல்ல மறுத்த குஞ்ஞன் நாடார் வெளியில் இருந்து கட்சிப் பொறுப்புகளைக் கவனித்துக்கொண்டிருந்தார். இந்த தருணத்தை ஜீவானந்தம் பயன்படுத்திக் கொண்டார். குஞ்ஞன்நாடாரைத் தூண்டிவிட்டு விடுதலைதினம் அனுசரிக்க வைத்தார். ம.பொ.சி.–யின் எச்சரிக்கையையும் மீறி ஆகஸ்ட் 11,1954 –ல் விடுதலை தினம் அனுசரிக்கப்பட்டது. நடந்தது என்ன? துப்பாக்கிச்சூடு, தொடர்ந்து கல்குளம் விளவங்கோடு தாலுகாக்களில் சுமார் 8 மாதகால சுடுகாடு அனுபவங்கள். அன்றையதின அராஜகங்கள் அனைத்தையும் முன்னின்று அரங்கேற்றிவிட்டு ஜீவானந்தனின் தோழர்கள் அனைவரும் மறைவிடம் தேடி ஓடி ஒழிந்து தப்பித்துக் கொண்டார்கள். ஏன் தோழர் ஜீவானந்தமும்தான். போலீஸ் கைகளில் அகப்பட்டு அவர்களுக்கு இரையானவர்கள் அப்பாவி மக்களும் குஞ்ஞன் நாடாரும்தான். சிறையிலிருந்து வெளியே வந்த நேசமணி குஞ்ஞன் நாடாரை எந்த குறையும் கூறவில்லை.** எல்லா நிகழ்வுகளுக்கும் அவரே பொறுப்பு ஏற்றுக்கொண்டார். இவரன்றோ

தலைவன்? ஆதரவுதர வந்த தோழர்களின் தோழமையைக் குறித்து நேசமணி பின்னாளில் சொல்லியதைக்கேளுங்கள்:

*"அறப்போர் ஆரம்பித்தது, தமிழகத்தில் உணர்ச்சிப் பிரவாகம் பொங்கியது. அந்த உணர்ச்சிக் கடலிலே மிதந்து செல்லும் நப்பாசையுடன் எத்தனையோ கட்சிகளும் தலைவர்களும் இங்கே வந்தார்கள், பேசினார்கள். விண்ணதிரப் பேசினார்கள். ஆனால் விளவங்கோட்டிலே வெடி சப்தம் கேட்டதும் தி.த.நா.கா. வைத் தவிர இங்கு வேறு யாரையுமே காணவில்லையே. தமிழர்கள் அறிய மாட்டார்களா இதை? போருக்குப்பின் இங்கு என்ன நடந்தது, தலைவர்கள் சிறைக்கம்பிக்குள்ளே அடைக்கப்பட்டார்கள். எண்ணற்ற இளைஞர்களின் எல்லுகள் நொறுக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள், மனையிழந்து, மக்களையும் – நல்லாளையும் பிரிந்து, நாடுவிட்டு ஓடினார்கள். நூற்றுக்கணக்கான குடும்பங்கள் சிதைக்கப்பட்டன. அன்னைமார் அழுத கண்ணீர் ஆறாக ஓடியது. மனைவிமார்களின் கதறல் விண்ணை பிளந்தது. தொழில் இல்லை. உணவில்லை. வியாபாரமில்லை. சுடுகாடாக பாலைவனமாகக் காட்சி அளித்தது திருவிதாங்கூர் தமிழகம். இதற்குப் புகல் சொல்லித் தீர வேண்டுமே. யாரைக்கண்டது இந்த நாட்டில். வெத்துப் பேச்சுகள் அன்று தேவைப்படவில்லை. காரியம் அவசியமாக இருந்தது. யார் வந்தார்கள் இந்த நாட்டிலே?" **A.நேசமணி,** தினமலர், 25–2–1955.*

தி.த.நா.கா போராட்டங்கள் தீவிரமடைந்த வேளைகளில் தலைவன் பல வோதனைகளைச் சந்திக்க வேண்டி வந்தது. கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களும், திராவிடமுன்னேற்றக் கழகத் தோழர்களும், தமிழரசுக்கழகத்தோழர்களும் தி.த.நா.கா. அமைத்த மேடைகளில் பங்கு கொண்டு முழங்கியது உண்டு. அவர்களுடன் இணைந்து போராட பலமுறை தி.த.நா.கா. வுக்கு அழைப்பு விடுத்தது உண்டு. **அவர்களுடன் இணைந்தால் தி.த.நா.கா.வின் ஏக கொள்கையான "திருவிதாங்கூர்**

**தமிழர்கள் வாழும் பகுதிகள் பிரிந்து தமிழ் நாட்டுடன் இணைய வேண்டும்" என்பது அடிபட்டு, கடை நிலைக்குத்தள்ளப்பட்டுப் பின், எந்த முக்கியத்துவமும் பெறாமல்மாய்ந்து போகும் என்பது நேசமணியின் அரசியல் ஞானம்.** அதனால் அவர் அவர்களுடன் இணைந்து போராடுவதை தவிர்த்தார். நேசமணியின் இந்த ஞானம் தி.த.நா.கா. –வில் உள்ள மற்ற முன்னணித்தலைவர்களிடம் இல்லாதிருந்தது. அதனால் மோசம் போனவர்களைக் காண்போம்:

நாயர் சேவா சங்கத்தின் தலைவர், மன்னத்து பத்மநாபன் அவர்கள் தலைமையில், காங்கிரஸ் கட்சியில் கிறிஸ்தவர்களின் ஆதிக்கத்தைத் தணிக்க ஏற்படுத்தப்பட்ட அமைப்பு, இந்து மகாமண்டல். இதன் பல துணைத்தலைவர்களில் ஒருவர் திரு. பா. தாணுலிங்கம் அவர்கள். தென் திருவிதாங்கூரில், கிறிஸ்தவரான நேசமணி தலைமையில் தி.த.நா.கா. இயங்கி வந்ததால் நாயார்களின் செல்வாக்குமங்கி, காங்கிரஸ் கட்சி தடம் தெரியாமல் போய் விட்டது. அதனால் **தாணுவிங்கத்தைப் பயன்படுத்தி இந்து – கிறிஸ்தவன் பிரிவினையை உண்டாக்கி, நேசமணியின் அரசியல் பலத்தை அழிக்க முயன்றனர்.** அம்முயற்சியில் தாணுலிங்கம் தமிழர்கள் மத்தியில் அவமானச் சின்னம் ஆனது மட்டுமே மிச்சம்.

திரு. என். சேம் நாத்தானியேல் அவர்கள் தி.த.நா.கா. தலைவர் ஆகுமுன் பட்டம் தாணுபிள்ளையுடன் இணைந்து காங்கிரஸ் கட்சியில் பணியாற்றிக் கொண்டிருந்தவர் என்பது மட்டுமல்ல, இணைந்து சிறைவாசமும் அனுபவித்தவர். முன் அரசியல் உறவை பயன்படுத்தி **பட்டம் தாணுபிள்ளை நேசமணியின் அரசியல் செல்வாக்கைக் குறைக்கத் திட்டமிட்டு நத்தானியேலை தி.த.நா.கா. கட்சியிலிருந்து இராஜினாமா செய்ய வைத்தார்.** நேசமணியை எதிர்த்துத் தேர்தலில் போட்டி போட வைத்தார். தோல்வியுற்ற நத்தானியேல் அரசியல் துறவறம் பூண்டார் .

ஒரு கிறிஸ்தவ நாடாரான நேசமணியின் தலைமையில் திருவிதாங்கூர் தமிழர் வாழும் பகுதிகளை மீட்க **தி.த.நா.கா. வீரநடை போட்டுச் சென்று கொண்டிருந்ததை உயர் ஜாதிக்காரனான ஜீவானந்தந்தால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை.** நேச மணிவெளியில் இல்லாத நிலையில் குஞ்ஞன் நாடாரின் உள்ளுக்குள்ளால் உறைந்து கிடந்த தலைவராகும் ஆசையை முதலாக்கித் தன் வலையில் சிக்க வைத்தார். விளைவு என்ன? பல ஆண்கள் மாண்டனர் – பல பெண்கள் விதவைகளாயினர் – பல பிள்ளைகள் அனாதைகளாயினர் – பல அப்பாவிகள் முடமாயினர் – கல்குளம், விளவங்கோடுதாலுகாக்கள் சுடுகாடாயின.

நடந்து முடிந்த குமரி மாவட்ட விடுதலைப் போராட்ட வரலாறு நமக்குக் கற்றுத்தரும் பாடம் என்ன? நம் **மானம் – சுதந்திரம் – சுயமரியாதை** ஆகியவைகளை காக்க நம்மை நாம்தான் ஆள வேண்டும். **அன்னியனின் ஆட்சி அல்லது ஆலோசனைகள் நம்மை மீண்டும் அடிமைப்படுத்தும்.** இன்று நம்மாவட்டத்தில் நடப்பதோ அன்னியனின் ஆலோசனையும் அன்னியனின் ஆட்சியும். **இளந்தோட்டம் கு. சுகுமாறன் அவர்களின் எங்கள் விடுதலைப்போர் என்ற இந்த நூல் குமரி மாவட்ட பெரும்பான்மை இனமக்கள் விழித்தெழுவும் சுயமாக சிந்தக்கவும் அவர்களை அவர்களே ஆளவும் தயார்படுத்த உதவும் என்பதில் ஐயமில்லை.**

நாகர்கோவில் **டாக்டர். டி. பீட்டர்,**
1 ஜன. 2011 **தலைவர்**
**கன்னியாகுமரி வளர்ச்சி ஆய்வுமன்றம்**

# அணிந்துரை

நிகழ்கால சம்பவங்களே வருங்கால வரலாறு. இந்த சம்பவங்களை உலகிற்கும் இளம் தலைமுறைக்கும் கொண்டு வருவதுதான் வரலாற்று ஆய்வு.

திருவிதாங்கூர் – கொச்சி சமஸ்தானத்தின் நாஞ்சில் நாடு என்று அறியப்பட்ட இன்றைய கன்னியாகுமரி மாவட்டத்தின் மறைந்த வரலாற்று உண்மைகளை மிக தெளிவாக வரலாற்று ஆய்வாளர் இளந்தோட்டம் கு. சுகுமாறன் அவர்கள் இந்நூலில் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மாவும் அவருக்குப் பின் வந்த ராமவர்மாவும் தமிழர்களுக்கு விரோதமாக திணிக்கப்பட்ட 110 வகைவரிகளையும், பெண் கொடுமைகளையும்,தோள் சீலை போராட்டம் பற்றியும் விரிவாக விளக்கியுள்ளார் நூல் ஆசிரியர்.

குமரித்தந்தை மார்ஷல் நேசமணி அவர்கள் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசை உருவாக்கியதற்கு முக்கிய காரணம், இந்தியா விடுதலை பெற்றும் குமரி தமிழர்களுக்கு மலையாளிகளிடமிருந்து விடுதலை கிடைக்காததால்தான் அதற்காக திரு. நேசமணி அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள், சந்தித்த சாவால்கள் பற்றியும், நெருக்குதல் குறித்தும் ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

குமரித்தந்தை நேசமணியின் ஞானம், அறிவு, புத்திக்கூர்மை, எழுத்தாற்றல், வீரம், துணிச்சல் போன்றவைகள் அவர் சந்தித்த வழக்குகள், அவருக்கு அரசர் அளிக்க முயன்ற அன்பளிப்பும், தி.த.நா.கா–வை உடைக்கும் முயற்சி மற்றும் கிருபலானி வீட்டு முன்பு தர்ணா, அதன் பின் பட்டம் தாணுபிள்ளையின் வீழ்ச்சி மற்றும் திரு. நேசமணியின் ராஜ தந்திரம், வெற்றியின் இரகசியங்கள் ஆகியவை இந்நூலில் காணப்படுகின்றன.

குமரித் தந்தை நேசமணிக்கு எதிராக செயல்பட்ட திரு. காமராஜ், திரு. ம.பொ. சிவஞானம், திரு. பட்டம் தாணுபிள்ளை மற்றும் பல் வேறுபட்ட அரசியல் தலைவர்கள் குறித்தும், ஆதரவாக செயல்பட்ட பாரதப் பிரதமர் நேரு, திரு. ராஜ கோபாலாச்சாரியார், திராவிட கழக நிறுவனர் ஈ.வெ.ரா. பெரியார், திரு. லால் பகதூர் சாஸ்திரி போன்ற பல தலைவர்கள், தொடரபான சம்பவங்களையும் ஆசிரியர் தெளிவாக வெளிக் கொண்டு வந்துள்ளார்.

"எங்கள் விடுதலைப் போர்" பல வெளிவராத வரலாற்று உண்மைகளை வெளிக்கொண்டு வந்துள்ளது இளந்தோட்டம் அவர்களின் தனிச்சிறப்பாகும்.

குமரி மாவட்டம் எவ்வாறு உருவானது, எதற்காக உருவாக்கப்பட்டது, யாரால் உருவாக்கப்பட்டது, இது உருவாகுவதற்கு கல்குளம் – விளவங்கோடு நாடார் சமுதாயம் தந்த விலை என்ன? என்பவைகளைக் குறித்து தெளிவாகவும், விரிவாகவும் தந்துள்ளார் நூலாசிரியர். எண்பது வயதான இவர் தொடக்க காலத்தில் இந்த இயக்கத்தோடு இணைந்து இருந்துள்ளதால் பல மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிச்சமிடுவதற்கு அவரால் முடிந்துள்ளது என்றே கூற வேண்டும். இந்த போராட்டங்களைக் குறித்து அறிந்து கொள்ள இயலாத இன்றைய நாடார் சமுதாய மக்களுக்கு இது ஒரு காலக் கண்ணாடியாக விளங்குகிறது. அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய நூலாகும். இந்நூல் ஒரு நாவல் போன்று, ஒரு தொடர் போன்று நிகழ்ச்சிகளை கோர்வையாக தந்திருப்பது ஆசிரியரின் ஆழ்ந்த ஞானத்தைக் காட்டுவதாக உள்ளது. எனவே "முதியோர் பேசட்டும், வயது சென்றவர்கள் ஞானத்தை அறிவிக்கட்டும்" என்று விவிலியம் கூறுவது போன்று அமைந்துள்ளது இந்த சிறப்புமிக்க நூல். இன்னும் பல வரலாற்று ஆய்வு நூல்கள் படைப்பதற்கு ஆசிரியர் முன்வரவேண்டும் என்று வேண்டுகிறேன்.

தியாகி **C. குமாரதாஸ்**

**தலைவர்**

குமரி மாவட்ட விடுதலைத் தியாகிகள் தலைமைச் சங்கம்

# நூன் முகம்

"எங்கள் விடுதலைப் போர்" என்றவுடன் எவருடைய விடுதலைப் போர் என்று வினவத் தோன்றுகிறதல்லவா? ஆம், இது எங்கள் இறுதி விடுதலைப்போர் ஆகும். ஒரு ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் சமூக சமுதாய அரசியல் மற்றும் பொருளாதார விடுதலை வேண்டி நடத்தப்பட்ட இறுதிப்போர் ஆகும். 1947 முதல் 1956 வரை தென்திருவிதாங்கூரில் சான்றோர் (நாடார்) சமுதாயம்- கிறிஸ்தவ நாடார்களும், இந்து நாடார்களும்-இணைந்து திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் என்ற போர்வையில் நடத்தப்பட்ட போரையே "எங்கள் விடுதலைப் போர்" என்று குறிப்பிடுகிறேன். இந்தப் இறுதி போரின் வெற்றியின் அடையாளமே இன்றைய கன்னியாகுமரி மாவட்டம். தானைத் தலைவன் குமரித்தந்தை மார்ஷல் அ. நேசமணி அவர்களின் லட்சியப் போர்தான் இந்த நீண்ட போர். மலையாளிகளின் ஆதிக்கப் பிடியி-ருந்து, தென்திருவிதாங்கூர் தமிழர்களாகிய நாடார் மக்களை விடுவித்து, தாய்த் தமிழகத்துடன் இணைத்த வரலாற்றை விவரமாகவும், விரிவாகவும் இந்த நூ-ல் தரப்படுகிறது. முக்கியமாக இளைய சமுதாயம் அறிந்து கொள்வதற்காக இந்நூலைத் தருவது எனது கடமை எனக் கருதி மகிழ்ச்சியடைகிறேன்.

விடுதலையைப் பெறுவதற்கு நாடார் சமுதாயம் பல இன்னல்களை ஏற்க வேண்டி வந்தது. எவ்வளவோ உயிர்ப-கள், போலீஸ் அத்து மீறல்கள், சிறைபிடிப்புகள், சிறைக் கொடுமைகள், மக்களவை நடவடிக்கைகள், நீதிமன்ற வழக்குகள், நிதி நெருக்கடிகள் போன்ற அனைத்தையும் விளவங்கோடு மற்றும் கல்குளம் மக்கள், குறிப்பாக நாடார் மக்கள் மட்டுமே எதிர்கொண்டனர். இவ்விரு தாலுகா மக்கள் சுமார் 188 நாட்கள் நரக வாழ்க்கை வாழ்ந்த பிறகே மைசூர் உயர்நீதிமன்றத்தில் இவர்களுக்கு விடுதலை கிடைத்தது. இந்த துயர வரலாற்றை அன்று எவரும் பதிவு செய்யாததால் சந்தர்ப்பவாதிகளான உயர்ஜாதியினர் அதை மறைக்கவும், திரிக்கவும், திருடவும் முயலுகின்றனர். நாங்கள் தான் "முத-ல்", "தொடக்கத்தில்", என்றெல்லாம் பொய் வரலாறுகளைப் புனைந்தனர். இதில் முதற்கை எடுத்தவர், கன்னியாகுமரி மாவட்ட 'gazetteer' ஐ தமிழக அரசின் சார்பில் தயார் செய்து 13-01-1995-ல் வெளியிட்ட திரு. M. கோபால கிருஷ்ணன் ஆவார். அவரைத் தொடர்ந்து அறிவர். ற்றி. பழனி வரை இத்தொழிலை தக்க முதற்நிலை ஆவணங்களின் தாங்க-ன்றி தொடர்ந்தனர்-தொடர்கின்றனர். இத்தருணத்தில் மார்ஷல் எ. நேசமணியின் வலது கரமாகவும், இடது

கரமாகவும் நின்று போர்களத்தில் செயல்பட்ட திரு. எ. அப்துல் ரசாக் ''நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்'' என்ற தி.த.நா.கா. போராட்ட வரலாற்றை பதிவு செய்தார். இதற்கு முன்கை எடுத்து, அந்நூலை பதிப்பித்த பெருமை அறிவர் மு. ஆல்பன்ஸ் நத்தானியேல், எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி. அவர்களையேச் சாரும். எமது நன்றிகலந்த பாராட்டுக்களை அவருக்கு காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

எனது இந்நூலும் திரு. எ. அப்துல் ரசாக்கின் நூலை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது என்றாலும், அவர் சாடை மாடையாக எழுதியிருக்கின்ற சில நிகழ்ச்சிகளின் பின்னணி மற்றும் உண்மைகளை அப்படியே வெளிச்சமிட்டுக் நான் காட்டியுள்ளேன். ஏனெனில் இந்த விசயங்கள் அனைத்தும் நான் அறிந்தவைகள் ஆகும். 1947-ல் இருந்து இந்த இயக்கத்தில் எனக்கு ஈடுபாடு உண்டு. 12-02-1948 அன்று மலையாளிப் போலீஸ் மங்காட்டில் திரு. தேவசகாயம் நாடாரையும், 14-02-1948 அன்று கீழ்குளத்தில் திரு. செல்லைய்யன் நாடாரையும் சுட்டுக் கொன்றதை கண்டித்து குன்னத்தூரில் கண்டனக்கூட்டம் நடந்தது. நானும் சில பள்ளி நண்பர்களுடன் தொடுவட்டியில் இருந்து தி.த.நா.கா கொடியை பிடித்து ஊர்வலமாக அங்கே சென்றோம். அன்று தொட்டு 1956 நவம்பர் முதல் நாள் வரை இந்த இயக்கத்தில் எனக்கு ஈடுபாடு உள்ளதால் பல உண்மைகளை நேரடியாக அறிந்தவன் என்ற நிலையில், அவைகளை இந்நூல் வழி வெளிப்படுத்தியுள்ளேன்.

இன்றைய தலைமுறையினருக்கு இந்த நிஜ வரலாறுகளை சொல்ல வேண்டும் என்ற ஒரு குறிக்கோளுடனும் இந்நூலை நான் எழுதியுள்ளேன். உண்மைகளை புரிந்த பிறகாவது இன்றைய சான்றோர் சமுதாய மக்கள் தங்கள் மனதில் பதித்த தவறான கருத்துக்களை திருத்திக்கொள்வர் என்று உறுதியாக நம்புகிறேன்.

இந்நூலை எழுதுவதற்கு பல நண்பர்கள் எனக்கு ஊக்கம் தந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் அறிவர் டி. பீட்டர் அவர்களும், அன்னாரது மனைவி அறிவர் திருமதி ஐவி பீட்டர் அம்மையாரும் ஆவர். தவிரவும் இந்நூலுக்கு விரிவான அணிந்துரையும் அவர் தந்துள்ளார். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. குமரி மாவட்ட விடுதலைத் தியாகிகள் தலைமைச் சாங்கத் தலைவர். தியாகி C. குமாரதாஸ் அவர்களும் இந்நூலுக்கு அணிந்தரை வழங்கி என்னைச் சிறப்பித்துள்ளார்கள். அன்னாருக்கும் எனது நன்றி.

இந்நூலுக்கு அட்டையை வடிவமைத்து அச்சேற்றி அன்பளிப்பாக அளித்த "சமுதாயச் சிந்தனை" மாத இதழின் ஆசிரியர் டி. பீட்டர் அவர்களுக்கு உளம் கனிந்த நன்றி. எனது இத்தகைய பணிகளுக்கு நிதியுதவி புரிந்து வருகின்ற குலசேகரம் Dr. S. ஜஸ்டின் பொன்தாம்சன் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

தொடக்க நிலையில் இருந்து இந்நூலை சரிபார்த்து இலக்கணப் பிழை மற்றும் எழுத்துப் பிழைகளை திருத்தி நூலுக்கு சிறப்பு சேர்த்த எனது நண்பரும் பேராசிரியரும், நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி முன்னாள் முதல்வருமான திரு. S. ஜெய்சிங், அவர்களுக்கும் எனது நன்றி. 11-8-1954 அன்று புதுக்கடையில் மலையாளப் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டி-ருந்து உயிர் தப்பிய பைங்குளம் திரு. பேரின்பநாயகம் அவர்கள் பல செய்திகளை எனக்குத் தந்தார்கள். அன்னாருக்கும் எனது நன்றி.

நூலை அச்சேற்றுவதற்கு முன்பு Text-யை கணிணி அச்சு செய்து நல்ல முறையில் வடிவமைத்துத் தந்த திருமதி மு. கிறிஸ்டல்பேபி அவர்களுக்கும் எனது நன்றி. தவிரவும் இந்த நூலை சீரிய முறையில் அச்சேற்றி உரிய காலத்தில் தயாரித்துத்தந்த நாகர்கோவில் பெனியேல் அச்சக உரிமையாளர் திரு. டி. ஃபெடரிக், D.P.T. அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. இந்த அச்சகத்தில் பணியாற்றுகின்ற அனைத்து தொழிலாள சகோதர சகோதரிகளுக்கும் எனது நன்றி.

இது வரையிலும் வெளிவராத சில உண்மைகளை இந்நூ-ல் தந்துள்ளேன். இதனால் எந்த நபரையும் அல்லது சமுதாயத்தையும் அல்லது அமைப்புகளையும் சிறுமைபடுத்த வேண்டும் என்பது எனது நோக்கமல்ல. இதனால் யாருக்காவது மனத்தாங்கல் எழுமாயின், அக்கருத்துக்களை தக்க சான்றுகளுடனே மறுப்பதாயின் அவைகளை திருத்திக்கொள்வதற்கு நான் தயங்கமாட்டேன். எனக்குத் தெரிந்த அனைத்து உண்மைகளையும் பதிவு செய்து சமுதாயத்தின் இளவல்களுக்குத் தரவேண்டிய மாபெரும் பொறுப்பை செவ்வனே நிறைவேற்றியுள்ளேன் என்ற மன நிறைவோடு இதை நிறைவு செய்கிறேன்.

நாகர்கோவில் - 3. **இளந்தோட்டம் கு. சுகுமாறன்**
12-01-2011. ஆசிரியர்

# எங்கள் விடுதலைப் போர்

## 1. 200 ஆண்டுகளுக்கு முன் :

15.08.1947-ல் இந்தியா ஒரு சுதந்திர நாடாயிற்று. மக்கள் பிரதிநிதிகள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர். எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்ற நிலை உருவாகியிருந்தது. அதனால் மக்கள் மகிழ்ந்திருந்தனர். ஆனால் தென் திருவிதாங்கூரில் மட்டும் பெருவாரியான நாடார் மக்கள் அவ்வாறு மகிழ்ந்திருக்கவில்லை. காரணம் மலையாளி அரசு அத்தகைய ஒரு நல்லாட்சியை தமிழ் மக்களுக்குத் தருவதற்கு மனமில்லாதிருந்தது. 07.01.1948 அன்று சுமார் 300-க்கும் மேற்ப்பட்ட மலையாள தனிப்பிரிவு போலீசார் தென்திருவிதாங்கூர், விளவங்கோடு வட்டம், மடிச்சல் என்ற சிற்றூரில் அனைத்து வீடுகளிலும் புகுந்து ஆண், பெண், முதியோர் ஆகியோரை மிருகத்தனமாக அடித்து உதைத்தனர். இதற்கு காரணம் நாயர் சமுதாயத்தார் நாடார் சமுதாயத்தின் மீது கொண்டிருந்த காழ்ப்புணர்வு மட்டுமே. இவர்கள் அனைவரும் குமரித் தந்தை மார்ஷல் எ. நேசமணியின் தமிழர் விடுதலை இயக்கமான “திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ்” அபிமானிகள். அடுத்த நாள், அதாவது 08.01.1948 அன்று சில இயக்கத் தோழர்களுடன் திரு.எ.நேசமணி அவர்கள் இந்த மடிச்சல் ஊருக்குச் சென்று அங்கே கண்ட கோரக் காட்சிகளைக் குறித்து பத்திரிகைகளுக்கு அறிக்கை தருகிறார். காண்க:

> “I visited Madichal and the surrounding villages on 8th January 1948. I had an occasion to witness heart – rending scenes reminiscent of what our fore fathers suffered a hundred and fifty years ago at the hands of the Nairs and a Nair government”.
>
> ***(A. Nesamony – Inside Travancore Tamil Nad – 1948 – Page 16)***

திருவிதாங்கூர் வரலாற்றில் 1948-ல் இருந்து 150 வருடங்கள் பின்னோக்கிப் பயணம் செய்தால் அது மன்னர் பாலராமவர்மாவின் (1798-1811) ஆட்சி காலத்தில் சென்று நிற்கும். இவரது ஆட்சிக் காலத்தில்தான் தலக்குளம் வேலுத்தம்பி என்பவர் திருவிதாங்கூருக்கு தளவாயாக (01.02.1801 to 08.04.1809) இருந்தார். இவர் தலக்குளம் நாயர் தறவாட்டைச் சேர்ந்த ஒரு பெரும் நிலக்கிழார் ஆவார். தென் திருவிதாங்கூர் தமிழர்கள் மீது குறிப்பாக நாடார் சமுதாயத்தின் மீது இவர் கட்டவிழ்த்து விட்ட கொடுங்கோன்மைகளைக் கருத்தில் கொண்டு, திரு. நேசமணி இந்தக் கால அளவைக் குறிப்பிட்டார் என்று கருதலாம். ஆனால் இச்சமுதாயத்தின் துயரங்கள் மன்னர் மார்த்தாண்டவர்மாவின் ஆட்சிக் காலத்தில் (1729-1758) தொடக்கம் கண்டது என்பது வரலாற்று உண்மை.

“திருவிதாங்கூர்” என்றொரு நாடு உருவானதே 1750-ல் தான். அதற்கு முன்பு “வேணாடு” என்றொரு குறுநில நாடாகவே இது இருந்தது. இந்நாடு கொல்லம் தொட்டு திருவனந்தபுரத்திற்கு வடக்கு திற்பாப்பூர் வரை வியாபித்திருந்தது. இந்நாட்டின் தலைமையிடம் கொல்லம் ஆகும். வேணாடு, இரண்டாம் சேரப் பேரரசின் ஒரு குறு நிலமாகவும் இருந்தது. சேரர்களுக்கும், சோழர்களுக்கும் கி.பி. 998 முதல் 1102 வரை நடந்த நூற்றாண்டுப் போரில் சேர நாடு சிதறிப் போயிற்று. அதற்குப் பிறகே வேணாடு ஒரு சுதந்திர நாடாயிற்று. சேர நாட்டின் முடிவுக்குப் பிறகு உருவான அரசியல் திருப்பங்களால் சேர நாட்டில் எஞ்சிய அரச குடும்பமும், வேணாட்டின் அரச குடும்பங்களும், ஆய்நாட்டின் அரச குடும்பங்களும் ஒருங்கிணைந்து திருமுதாங்கோட்டை தலைமையிடமாகக் கொண்டு (இன்றைய கேரளபுரம்) “திருமுதாங்கோடு” என்ற பெயரில் ஆட்சி நடத்தினர். இந்த திருமுதாங்கோடே பிற்காலத்தில் அகண்ட திருவிதாங்கூர் (மன்னர் மார்த்தாண்டவர்மா காலத்தில்) ஆனது. மன்னர் மார்த்தாண்ட வர்மா (1729-1758) வேணாட்டின் அரச பதவியில் அமருவதற்கு அவரது உற்ற தோழனான அனந்தபத்மநாபன்

நாடாரும், மற்றும் 108 களரி ஆசான்களும் (நாடார் ஆசான்கள்) துணை நின்றனர். இவர்களது துணையால் மட்டுமே அன்று மார்த்தாண்ட வர்மனுக்கு எதிராக அரசு கட்டிலுக்கான உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பப்புத்தம்பி மற்றும் இராமன் தம்பிமார்களையும், அவர்களுக்குத் துணையாக நின்று செயல்பட்ட எட்டு வீட்டுப் பிள்ளைகள் மற்றும் மாடம்பிகளையும் (அனைவரும் நாயர் நாடு வாழிகளும், பிரமுகர்களுமாவர்) சம்காரம் செய்து அரியணை ஏற்றப்பட்டார்.

**i. *வரிச்சுமைகள்* :**

ஆயினும் தென் திருவிதாங்கூர் தமிழ் மக்களின் துயரம், குறிப்பாக நாடார் மக்கள் மேல் ஏற்றப்பட்ட பல்வேறு நுகங்கள் இந்த மன்னரால் தான் உண்டாயிற்று. நாட்டு விரிவாக்கத்தால் உருவான நிதி நெருக்கடியை நிவிர்த்தி செய்வதற்கென முதன் முதலாக இத்தமிழ் மக்கள் மீது தலைவரி (Poll Tax) என்ற ஆட் கொல்லி வரியைச் சுமத்தினார் மார்த்தாண்ட வர்மா.

> “Head Tax (Thalavari) was imposed in AD 1751 (M.E.926) by Ramyyan Dalava (Prime Minister) when king Marthanda Varma was the ruler. To replenish the treasury exhausted by the constant wars waged by rulers a tax was levied on the lower castes between the age 16 to 60. ***(C.R. Mitra -Sree Narayanaguru & Social Revolution – 1979 Page 87)***

இவருக்குப் பிறகு பதவிக்கு வந்த மன்னர் ராமவர்மா (தர்மராஜா) காலத்திலும் யுத்த வரியும், சொத்து வரியும் மக்கள் மீது மீண்டும் திணிக்கப்பட்டன.

நாட்டு மன்னரைத் தொடர்ந்து ஜன்மிகளும், நாடுவாழிகளும் பல்வேறு வரிகளை அவர்களின் காராளர்களிடமிருந்து வசூலிக்கத் தொடங்கினர். சமுதாய வரலாற்று ஆசிரியரான எ. சிரீதரமேனன்

தருகின்ற விவரப்படி, வரியில்லாத நிகழ்ச்சிகள் திருவிதாங்கூரில் இல்லையென்றே கூறலாம்.

> “The feudal levies extracted by the landlords from the tenants were innumerable. The latter had to make payments for the conduct of marriages and pay taxes on houses, looms, oil mills, boats, nets, etc. The construction of two storied or tiled houses, riding in Palanquins, using head gear or umbrella with handle, growing mustaches, etc, required specific permission from the chieftain on payment of a prescribed fee. Even the use of certain types of fine clothes and ornaments was allowed by the chieftain on payment of a prescribed fee. The chieftain received Kazhacha or presents from the tenants on such occasions as weddings, births, deaths, opening of new palaces, festivals, etc. ***(Sreedhara Menon – Social and Cultural History of Kerala – Page 78)***

இதைவிடக் கொடுமையானவை பெண்களின் நீண்ட தலைமுடிக்கும், மார்பகங்களுக்கும் (Breast) விதிக்கப்பட்ட வரிகளாகும்.

> “Another Tax levied on the backward classes was the breast tax. Young ladies aged between 16 and 35 had to pay this tax”. ***(C.R. Mitra – Sree Narayanaguru and Social Revolution – 1979 – Page 87)***

ஆனால் இந்த வரிகளிலிருந்து நாயர்களும், பிராமணர்களும், மாப்பிள்ளை இனத்தார் மற்றும் கொங்கணி பிராமணர்களும் விலக்கப்பட்டிருந்தனர்.

> “Nairs, Mapillas and Konkanies were exempted”.

> “In the beginning the Brahmins were totally exempted from taxation perfectly in accordance with the injunctions of the moral code” ***(The Manu). (Ibid – Pages 87 to 88)***

இத்தகைய வரிகளையெல்லாம் மக்களிடத்திலிருந்து வசூல் செய்வதற்காக நாயர் பிரதானிகளை அரசு நியமித்திருந்தது. வறுமையில் வாடி வந்த இந்த அவர்ணர்களிடத்திலிருந்து வரிகளை வசூல் செய்வதற்கு பல்வேறு முறைகளை இவர்கள் கையாண்டனர். தென் திருவிதாங்கூரில் குறிப்பாக நெய்யாற்றின்கரை, விளவங்கோடு, கல்குளம், குளச்சல், அகஸ்தீஸ்வரம் போன்ற அதிகாரங்களில் பெருவாரியாக வாழ்ந்த மக்கள் நாடார் மக்களேயாவர். மக்கள் தொகையில் இவர்கள் 80 விழுக்காடாவர். மற்ற சமூகங்களான நாயர்கள், பிராமணர்கள், வெள்ளாளர்கள், பறையர்கள், புலையர்கள் மற்றும் மீனவர்கள் சிறுபான்மையினர் ஆவர். ஆயினும் நாயர்களும், பிராமணர்களும், வெள்ளாளர்களும் மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி வன் கொடுமைகள் புரிந்து வந்தனர்.

### ii. *சமுதாய வன்கொடுமைகள்* :

தவிரவும் இந்து சமுதாயத் தொடரில் முதன்மை இடத்திலிருக்கும் பிராமணர்கள் (நம்பூதிரிகள்), நாயர்கள் போன்றோர் தீண்டாமை, காணாமை, நடவாமை போன்ற சமுதாயக் கட்டுப்பாடுகளை, இந்துசமயக் கீழ் சாதியினருக்கு விதித்திருந்தனர்.

"The caste rules operated in the most irrational manner. The triple social evil of untouchability, unapproachability, and unseeability was observed by people at all levels of Hindu Society…. The prescribed distance for some of the castes was as follows:-

| | | |
|---|---|---|
| Kammalas | - | 24 ft |
| Ezhavas | - | 36 ft |
| Kanakkan, etc | - | 48 ft |
| Pulayan | - | 64 ft |
| Ullatan | - | 72 ft |

(A. Sreedhara Menon – Social, Cultural History of Kerala – Page 66 & 68)

ஆனால் Rev: Samuel Mateer, சற்று வேறுபாட்டுடனான unapprochability யைத் தருகிறார்.

> "A Nair, for example, may approach, but must not touch a Namboodiri Brahmin. A Shanar must remain thirty six paces off, and a Pulaya slave must stay at ninety six paces …. a Shanar must remain twelve steps away from a Nair, a Pulayan sixty six steps and so on". (Land of Charity – Page 32)

இவைகளுக்கு புறம்பாக நாஞ்சில் நாட்டு வெள்ளாப் பண்ணைகள் கடைப்பிடித்து வந்த முறைகள் வன்மத்தனம் நிறைந்ததாகக் காணப்படுகின்றன.

> "Some historians especially the communists, state that in many parts of Kerala custom prevailed that a poor tenant when married, his better half should be dedicated in the first night for the sexual gratification of the Land Lord". ***(C.R. Mitra – Sree Narayanaguru – Page 83)***

வரி தராதவர்களின் நீண்ட கூந்தலில் அம்மிக் குழவியை கட்டித் தொங்கவிடுவர். இவ்வாறு வன்கொடுமைத் தண்டனை களையெல்லாம் நாடார் சமூகத்தார் மீது திருவிதாங்கூர் அரசு கட்டவிழ்த்து விட்டிருந்தது. சுமார் 110 விதமான வரிகளை இவ்வினத்தார் மீது சுமத்தி அவர்களின் வாழ்க்கையை அலைக்கழித்தனர் மலையாளி நாயர்களும், அவர்களது அரசும். இக்கொடுமைகளிலிருந்து விடுதலை வேண்டி பல்லாண்டு காலம் ஏங்கிக் கிடந்தது இச்சமுதாயம். ஆனால் அவர்களை அன்று விடுவிப்பதற்கு யாரும் களம் இறங்கவில்லை, முன் வரவில்லை.

இதை விடப் பெரிய கொடுமை என்னவெனில், "ஊழியம்" என்ற கொத்தடிமை முறையாகும். நாடார் சமூகத்தைச் சார்ந்த ஆண்களும், பெண்களும், குழந்தைகளும். மேட்டுக்குடியினருக்கு (பிராமணர்கள், நாயர்கள், வெள்ளாளர்கள்) ஊதியமில்லாது,

அவர்கள் ஆணையிடுகின்ற வேலைகள் அனைத்தையும் மறுத்துரைக்காமல், வீட்டுப் பணிகள் மற்றும் தோட்டப் பணிகளைச் செய்ய வேண்டும். இந்தப் பணிக்கு ஊதியம் கொடுக்கப்படமாட்டாது. மத்தியானம் ஒரு வேளை கஞ்சி கொடுப்பார்கள். இதனால் காலை உணவு, இரவு உணவுக்கு வழியில்லாமல் இவர்களின் குடும்பம் பட்டினிச் சாவுகளை சந்திக்க வேண்டும் என்பதே விதி. இந்த பட்டினிப்பிடியிலிந்து விடுபடுவதற்காக பல நூற்றாண்டு காலம் இச்சமுதாயம் ஏங்கிக் கிடந்தது. இதிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கு அன்று யாரும் முன் வரவில்லை. எனவே அவர்களின் அட்டூழியங்களுக்கு அளவே இல்லாமல் போயிற்று. தங்கள் அடிமைகளை மிருகங்களை விடக் கேவலமாகவும், கொடூரமாகவும் நடத்தினர். நாஞ்சில் நாட்டு வெள்ளாளர்களின் கொடுங்கோன்மை குறித்து பெயர் அறியப்படாத ஒரு நிமிட கவி இவ்வாறு எழுதுகிறார்.

> “தாழக்குடியில் பைரவனும், தமிழ்த் தேரூரில் சந்திரனும், களம் பெருத்த நல்லூர் – குறும்பன் அணஞ்ச பெருமாளும் நாளையிவர்கள் தலை தெறிக்கின் – நன்றாய் வாழும் நாஞ்சில் நாடே”. ***(பார்க்க ஆசிரியரின், சேரர் வரலாறும், மக்கள் வாழ்வியலும் – பக்கம் – 474)***

இந்த பைரவனின் வயல் வேலைக்குச் ஒருநாள் செல்லாமலிருந்த நிறைமாத கர்ப்பிணிப் பெண் அடிமையை இழுத்து வந்து ஏரில் ஒரு பக்கம் பூட்டி வயல் உழுதனர். இக்கொடுமை தாங்காது அப்பெண்மணி சுருண்டு விழுந்து உயிர் நீத்த நிகழ்ச்சி நாஞ்சில் நாட்டு வெள்ளாளர்களின் கடின நெஞ்சுக்கு சான்றாகும். (அதே புத்தகம் - பக்கங்கள் 474 - 475)

திருவனந்தபுரத்தை அடுத்த திருமலை அரசுத் தோட்டத்தில் பணியாளனாகிய தேவசகாயம் நாடார் துணிந்து, அதிகாரிகளிடம் “வேலைக்கு கூலி வேண்டும்” என்று குரல் எழுப்பினார். திருவிதாங்கூர் வரலாற்றில் வேலைக்குக் கூலி வேண்டும் அதுவும் பணமாக

வேண்டும் என்று முதற்குரல் எழுப்பிய பெருமை இந்த தேவசகாயம் நாடாருக்கே உரித்தானது. ஆனால் கூலிக்குப் பதிலாக அவர் உயிர் பறிக்கப்பட்டது. ***(பார்க்க ஆசிரியரின் – திருவிதாங்கூரில் சாதனை படைத்த சான்றோர்கள் – பக்கம் 16)***

## 2. நுகத்தடிகள் உடைந்தன :

இத்தகைய கொடுமைகளுக்கெல்லாம் விடிவு காலம் வராதா என்று காலம் காலங்களாக கலங்கி நின்றவர்களுக்கு அன்று விடுதலை கிடைத்தது. ஆம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க நாட்களில் தென் திருவிதாங்கூர் மயிலாடியில் சீர்திருத்தக் கிறிஸ்தவ மிஷனரி கனம் றிங்கல்தௌபே ஐயர் 1806-ல் கால் பதித்தார். (25.04.1806) சீர்திருத்தச் சமயப் பணியுடனே ஆங்கிலக் கல்வியையும், தமிழ் கல்வியையும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அவர் முதன் முறையாக அளித்தார். இவரைத் தொடர்ந்து றெவறண்டு சார்லஸ் மீடு ஐயர் காலத்தில் நாடார் மக்கள் கடலலை என சாரைசாரையாகச் சீர்திருத்த கிறிஸ்தவத்தை வரித்துக் கொண்டனர். இதனால் அவர்களுக்கு மேலே குறிப்பிட்டிருக்கின்ற வரிகளிலிருந்தும் சமுதாய இடுக்கண்களிலிருந்தும் நிரந்தர மீட்புக் கிடைத்தது. இந்த விடுதலையின்பால் இம்மக்கள் கல்வியிலும், பொருளாதாரத்திலும், சமுதாய அந்தஸ்திலும் உயர்வடைந்தனர். இந்த விடுதலைகளின் விவரங்கள் குறித்து விரிவாக அறிவதற்கு விரும்புகிறவர்கள் அறிவர் திருமதி. ஐவி பீட்டர் மற்றும் அறிவர். டி. பீட்டர் அவர்களால் எழுதப்பட்ட “சமயத் தொண்டர்களும், சமுதாய மறுமலர்ச்சியும்” என்ற நூலைப் படித்து தெளிவடைந்து கொள்ளலாம்.

இவர்கள் அனுபவித்து வந்த கொடுமைகளுக்கு எல்லாம் மேலான கொடுமை, மக்களின் ஆடை அலங்காரங்களுக்கு இருந்த தடையாகும். தாழ்த்தப்பட்ட சமுதாய ஆண்களும் பெண்களும் முட்டுக்கு கீழ் நீளுகின்ற ஆடை அணியக்கூடாது. பெண்களைப் பொறுத்தமட்டில் இடுப்புக்கு மேல், ஆடை அணிந்து மார்பகங்களை

மறைக்கக் கூடாது. இது கொடுமையில்லையா? நம்பூதிரிகள் முன்பு நாயர்களும், வெள்ளாளர்களும் மார்புகளை மறைக்காமல் தான் நிற்க வேண்டும் என்று மனுவை முன் நிறுத்திக் கூறுவர். இவர்கள் அனைவர் முன்பும் தாழ்த்தப்பட்டவர்கள் மேலாடை அணிந்து நிற்கக் கூடாது. பெண்கள் இடுப்பில் தண்ணீர் குடம் ஏந்திச் செல்ல தடையிருந்தது. தண்ணீர் குடத்தைத் தலைமேல் வைத்து இரண்டு கைகளால் தாங்கிப் பிடித்து சுமந்து செல்ல வேண்டும். அப்போது தான் இளம் நங்கையரின் கொங்கைகளை அவர்களால் கண்டு ரசிக்க முடியுமாம். இவ்வாறு தாழ்த்தப்பட்ட மக்கள் மானங்கெட்ட வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்தனர் என்பதற்கு இவைகள் அனைத்தும் சான்றுகளாகும்.

இத்தகைய இழிவு நாகரீகங்களை எதிர்த்து திருவிதாங்கூரில் முதல் குரல் கொடுத்து, மறுமலர்ச்சிப்போர் நடத்தியது தென் திருவிதாங்கூரில் வாழ்கின்ற சீர்த்திருத்த கிறிஸ்தவ நாடார்கள் மட்டுமே. உடை என்பது ஒருவருக்கு தன்னம்பிக்கையைக் கொடுக்கும் விஷயம் என்பதால், மிஷனறிகளின் பின் துணையுடன் அதை அணிந்து கொண்டனர் நாடார் குலப்பெண்கள். இதை அணிவதற்கு அரசின் முன் அனுமதியோ, உயர் சமுதாயத்தின் இசைவோ அவர்கள் கேட்கவில்லை. தவிரவும் மிஷனறிகள் அளித்த ஆங்கிலக் கல்வியால் வேலை வாய்ப்புகள் பல பெற்ற நாடார்கள் பொருளாதாரத்திலும் வளர்ந்து மேல் சாதியினருக்கு ஊழியம், விருத்தி போன்ற இலவச வேலைகள் செய்வதையும், அவர்களுக்கு அடி பணிந்து செல்வதையும் துணிந்து நிறுத்திவிட்டனர்.

> தங்களையும் மிஞ்சும் அளவிற்கு நாடார்கள் வளர்ந்து விட்டதைக் கண்டு எரிச்சலடைந்த மேல் சாதியினர் “நேற்று வரை நம்முடே வீட்டின்றே வடக்கு புறத்து வந்து பட்டையில் கஞ்சி வாங்கிக் குடிச்ச ஈ சாணான்மார் இன்று நம்மை சோத்தியம் செய்யுந்நதை சகிக்கான் வையா. அது கொண்டு இவரையும், அவன்மார்க்கு ஊக்கம்

தருந்ந மிசினறி கழுவேறிகளையும், அவன்மாருடே பள்ளிக்கூடங்களையும் சார்ச்சுகளையும் தீயிட்டு எரிக்கணும்". (மலையாளம், தமிழில்)

இத்தகைய சிந்தனை தான் இந்தக் கலகத்துக்கு முக்கிய காரணம் என்று திருவிதாங்கூருக்கு ஆங்கில அரசின் பிரதிநிதியாக அன்று இருந்த ஜெனறல் கல்லன் பிரபு மதிராசி அரசு முதன்மை செயலருக்கு எழுதுகிறார்:-

"...... I was frequently visited by large number of proprietors, complaining bitterly that they lost the services of their slaves on Sundays and that slaves had in other respects proved very refractory. Another subject of irritation has been the exception on the part of all shanars attached to the Mission of Ooliyam duties on Sundays, and from work connected with Hindoo festivals or places of worship".

***(Letter of W. Cullen, the Resident dated 16.02.1859 to Thomas Pycroft, Chief Secretary to Govt. (Madras presidency) appendix 14 Liberation of the Oppressed by Dr. D. Peter – Page 152)***

எனவே உயர் இனத்தவர்கள் என்கின்ற நாயர்கள், நம்பூதிரிகள், வெள்ளாளர்கள் போன்றோர், சாணார் பெண்கள் நாகரீக உடை அணிந்து பகிரங்கமாக சந்தைவெளிகளுக்கும், தேவாலயங்களுக்கும் சென்றமையால் அவர்களின் றவிக்கையையும், மேலாடையையும் பிடித்திழுத்து கிழித்தனர். இதனால் தென் திருவிதாங்கூரில் நாயர்களுக்கும், சாணார்களுக்கும் சமுதாயப் போர் தொடங்கிற்று. 1822-ல் தொடங்கப்பட்ட இந்த உரிமைப் போர் 1859-ல் வெற்றி பெற்றது. இந்த போராட்டத்தை திருவிதாங்கூரில் 'சாணார் லகளை' அல்லது 'People's Revolt' அல்லது 'தோள் சீலைப் போராட்டம்' அல்லது "சான்றோர் மக்கள் புரட்சி" என்று

வரலாற்று ஆசிரியர்கள் வர்ணித்தனர். இதனால் கிறிஸ்தவ நாடார்கள் சமுதாய விடுதலை அடைந்தாலும், மேல் சாதியினரின் நெருக்குதல்களால் இவர்களது துயரங்கள் மீண்டும் தொடர்ந்த வண்ணமிருந்தன. வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் இவர்கள் முட்டி மோதிக் கொண்டனர். இது குறித்து மேலும் விவரங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றால் தலித் பந்து N.K.ஜோஸ் எழுதிய **"சாந்நார் லகள"** என்ற மலையாள நூலைப் படித்து தெளிவடைந்து கொள்ளுங்கள். இந்நூலைப் ஆசிரியர் "திருவிதாங்கூரில் சான்றோர் மக்கள் புரட்சி" என்று தமிழாக்கம் செய்துள்ளார்.

### 3. சுதந்திர திருவிதாங்கூர் :

காலச் சுழற்சியால் இந்தியாவுக்கு தன்னாட்சி அளிக்கப்படும் என்று பிரீட்டிஷ் அரசு ஆரூடம் கூறியது. அதனைத் தொடர்ந்து திருவிதாங்கூர் அரசும் தன் எதிர்காலத்தைக் குறித்து தீர்க்கமாக ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்தது. இந்தியா சுதந்திரம் அடைந்து விட்டால் திருவிதாங்கூர் அத்துடன் இணையாமல், தனி சுதந்திர நாடாக நின்று செயல்படும் என்று 18.07.1947 அன்று அது பிரகடனப்படுத்தியது. தவிரவும் இந்தியாவில் இசுலாமிய மன்னர்களான ஐதராபாத் நிஜாமும், மற்றும் பரோடா சுல்தானும் போப்பால் நவாபுடனும் திருவிதாங்கூரும் கூட்டுச் சேர்ந்து பாகிஸ்தானுடன் பிரதிநிதி உறவு ஏற்படுத்துவது என்ற நிலையும் உருவாக்கப்பட்டது. திருவிதாங்கூர் மன்னரின் இந்த நிலையை அனைத்திந்திய முஸ்லீம்களும், அனைத்து இந்தியா இந்து மகா சபையும் வரவேற்றது.

> "In a telegram dated June 20 (1947) sent to Sir C.P, Jinnah informed him as follows: Pakistan will be glad to have your representative and will be ready to establish relationship with Travancore which will be of mutual advantage".

"Paradoxical as it might be, V.D. Savarkar, President of the All India Hindu Maha Saba, in a telegram of the same date (June 20, 1947) addressed to Sir C.P extended his full support to Travancore's decision to declare independence". ***(Prof. A. Sreedhara Menon – Triumph and Tragedy in Travancore – 2001 – Page 244)***

'தெய்வத்தின்றே நாட்டை' மன்னர் சித்திரைத் திருநாளும், சர்.சி.பி. இராமசுவாமி ஐயரும் இசுலாமியர்களுடன் சம்பந்தம் வைத்துக் கொள்வது என்ற நிலைக்கு இந்து மகா சபைத் தலைவர் ஆதரவளித்ததை யாராலும் அன்று சீரணிக்க இயலவில்லை.

இந்த நிலையில் இந்தியா 1947 ஆகஸ்டு 15-ம் நாள் சுதந்திரமடைந்தது. வேறு வழியின்றி திருவிதாங்கூர், 1947 செப்டம்பர் 4-ம் நாள் இந்திய ஐக்கியத்தில் இணைந்தது. இதைத் தொடர்ந்து திருவிதாங்கூர் ஸ்டேட் காங்கிரஸ் தலைவராக இருந்த பட்டம் தாணுபிள்ளை திருவிதாங்கூருக்கு மூளையாக இருந்து செயல்படத்தொடங்கினார். அவர் நாயர் சமுதாயத்தைச் சார்ந்தவர் ஆகையால் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது குறிப்பாக நாடார் சமுதாயத்தின் மீது குருதிவழிப்பகை கொண்டவராகக் காணப்பட்டார். இருப்பினும் SIUC-சபைக்கு புனரமைப்பு கமிட்டியில் உறுப்பினர் நிலை வழங்குவதற்கு எண்ணம் கொண்டு தாணுபிள்ளை திரு. நேசமணிக்கு அழைப்பு விடுத்தார். அழைப்பு கிடைத்ததும் நேசமணி உடனே ஓடி வருவார் என்று அவர் நினைத்திருக்க வேண்டும். ஆனால் அழைப்பு கிடைத்த அடுத்த கணமே நேசமணி அதை நிராகரித்து விட்டார். ***(நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம், A.A. ரசாக் – பக்கம் – 53)***

## 4. தமிழர்களுக்குத் தனி அமைப்பு :

தமிழர்களின் நலம் காத்திட உருப்படியான அரசியல் கட்சி எதுவும் அவ்வமையம் இல்லாதிருந்த நிலையில், நாகர்கோவில் வக்கீல்

சங்கத்தில் மதிப்புமிக்க வழக்கறிஞர் திரு. சிதம்பரம்பிள்ளை, அதே சங்கத்தில் முன்னணி வழக்கறிஞராக விளங்கிய திரு. எ. நேசமணியை, திருவிதாங்கூர் தமிழர்களின் துயர் துடைக்க வருமாறு அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பை ஏற்ற திரு. நேசமணி 1947 செப்டம்பர் திங்கள் 8 ஆம் நாள், நாகர்கோவில் கிறிஸ்தவ வளாகத்தில் அமைந்திருந்த “ஆலன் நினைவு மண்டபத்தில்” தமிழர்களின் ஆலோசனைக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு, “திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ்” என்ற அரசியல் அமைப்பை உருவாக்கினார். திரு. நேசமணியின் தலைமையில் இந்த இயக்கம் புயல் வேக வளர்ச்சியடைந்தது. மலையாளிகளுக்கும், மலையாள அரசுக்கும் சிம்ம சொப்பனமாக அமைந்தது இந்த இயக்கம். திருவிதாங்கூர் தமிழ் பிரதேசங்களின் தனி மாகாணம் அமைத்தே தீருவோம் என்ற மக்களின் கோஷம் வானைப் பிளந்தது. இதை பட்டம் தாணுபிள்ளையால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

சுதந்திரத்துக்குப் பிறகு நாட்டின் முதல் தேர்தல் 1948 சனவரி 30 ஆம் நாள் என்று நிர்யணயிக்கப்பட்டது. தேர்தல்களம் சூடு பிடித்தது. அரசியல் கட்சிகள் அனைத்தும் களத்தில் இறங்கின. திருவிதாங்கூரைப் பொறுத்தமட்டிலும் மலையாளிகளை பிரதிநிதிகரித்து திருவிதாங்கூர் சமஸ்தான காங்கிரசும், தமிழர்களைப் பொறுத்தமட்டில் திரு. நேசமணியின் தலைமையில் இயங்கி வந்த திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசும் களத்தில் இறங்கின.

திருவிதாங்கூரில் 1941 மக்கள் தொகை கணக்குப்படி 9 தாலுகாக்களில் தமிழர்கள் பெருவாரியாக வாழ்ந்திருந்தனர்.

| | | தமிழர்கள் | மலையாளிகள் |
|---|---|---|---|
| 1) | தோவாளை | 42,448 | 698 |
| 2) | அகஸ்தீஸ்வரம் | 1,76,874 | 4,931 |
| 3) | கல்குளம் | 2,05,944 | 36,100 |

| | | | |
|---|---|---|---|
| 4) | விளவங்கோடு | 1,61,217 | 46,023 |
| 5) | செங்கோட்டை | 52,432 | 1,677 |
| 6) | பீர்மேடு | 31,911 | 31,748 |
| 7) | தேவிகுளம் | 53,394 | 2,282 |
| 8) | நெய்யாற்றின்கரை | 14% | *86% |
| 9) | சிற்றூர் | 95% | 5% |

***குறிப்பு: நெய்யாற்றின் கரையைப் பொறுத்தமட்டில் தமிழ் வம்சா வழியினர் 75% இருந்தும் அவர்களை மலையாளிகள் என்று சர்தார் கே.எம். பணிக்கர் உள்ளிட்ட மாகாணங்கள் புனரமைப்புக் குழு தவறாகத் தீர்மானித்தது. அங்கு வாழ்கின்ற தமிழர்கள் (குறிப்பாக நாடார்கள்) தமிழ் பள்ளிக்கூடங்கள் இல்லாமையால் தமிழுக்குப் பதிலாக மலையாளம் கற்க வேண்டியதாயிற்று. இதனால் அவர்களை மலையாளிகள் என்று கணக்கில் கொண்டனர். ஆனால் அவர்களின் தாய்மொழி தமிழேயாகும். இந்நிலை இன்றும் தொடர்கிறது.***

இந்த சூழ்நிலையில் தமிழர்களுக்கு களம் இறங்கிச் செயல்படுவதற்கு வைர நெஞ்சம் படைத்த ஒருவர் தேவைப்பட்டார். அவரே மார்ஷல் நேசமணி. "எது வந்தாலும் நேசமணி பார்த்துக் கொள்வார்" என்ற ஒரு மனத்திடம் மக்களிடம் உருவாயிற்று. அவரால் அதை உருவாக்குவதற்கு முடிந்தது. அது போலவே ஆபத்து வருகிறது என்ற போதெல்லாம், மக்கள் ‘ஏ. நேசமணி ராஜாவே’, ‘எங்கள் அப்பச்சியே’, என்று கூவித் தவித்தனர். அப்போதெல்லாம் எப்படியோ அவரும் அங்கே தோன்றினர்!. ***(நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம் – எ. எ. ரசாக் – பக்கம் 62,63)***

## 5. 1948 - தேர்தல் களம் :

இத்தருணத்தில் காந்தியடிகள் ஒரு நீசனின் குண்டடிப்பட்டு கீழே சாய்ந்தார். இதனால் தேர்தல் 1948 பெப்ரவரி 8-ம் தேதிக்கு மாற்றப்பட்டது. திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசுக்கு எதிராக

பட்டம் தாணுபிள்ளை (முதலமைச்சர்) யின் மலையாளி அமைப்பான திருவிதாங்கூர் சமஸ்தான காங்கிரசும் தனது வேட்பாளர்களை களமிறக்கி ஆங்காங்கே பிரச்சார பீரங்கிகள் முழங்கின. திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசும் தனது வேட்பாளர்களை நிறுத்தியது. இரு கட்சிகளும் ஆங்காங்கே மோதிக் கொண்டன. சமஸ்தான காங்கிரசுக்கு ஆதரவு இல்லாத நிலையில் தமிழர்களை அரசு இயந்திரங்கள் பயமுறுத்தும் வகையில் மலையாள போலீசார் இடையில் நுழைந்தனர். அவர்களின் அட்டூழியங்கள் கணக்கிலடங்கா. "மக்கள் சரமாரியாக உயிரை கையில் பிடித்துக் கொண்டு ஊர் ஊராக ஓடினார்கள். அவர்கள் மிருகத்தனமாக தாக்கப்பட்டனர். இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலருக்கு துப்பாக்கிக் காயங்கள். பல குடிசைகள் தீயிடப்பட்டன. இரணியல், கருங்கல், தொடுவட்டி, புதுக்கடை, பாகோடு, மடிச்சல், குலசேகரம், மணலிக்கரை, மங்காடு முதலிய ஊர்களில் ஆயுதம் தாங்கிய போலீஸ் படையினர் அவிழ்த்து விடப்பட்டனர். பெண்கள் தாக்கப்பட்டனர், மக்கள் மிகவும் இழிவான நிலையில் நடத்தப்பட்டனர். நிலைமையை நேரில் கண்ட நேசமணி அலறினார். 150 ஆண்டுகளுக்கு முன்பாக நடத்த நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன என்று குமுறினார். பாண்டியிலிருந்து பலர் வந்தனர். காமராஜரும் வந்தார். சமஸ்தான காங்கிரசோடு சமரசம் பேசிப் பார்த்தார். திருவிதாங்கூர் தென் தாலுக்காக்களை ஒன்றாகச் சேர்த்து ஒரு தனி ரெவன்யூ டிவிஷன் உடனடியாக அமைப்பது என்ற அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் நடந்தன. தொடர்ந்து அவரும் சமஸ்தான காங்கிரஸ் தலைவர் பட்டம் தாணுபிள்ளையும் மீண்டும் சென்னையில் கூடி ஒரு முடிவுக்கு வரப் போவதாகச் சொல்லிவிட்டுப் போனார். முடிவு ஏற்படவில்லை. சென்னையில் அவர்கள் கூடவும் இல்லை" முடிவும் ஏற்படவில்லை. ***(அதே புத்தகம் – பக்கங்கள் 63, 63)***

மலையாள அரசும் அதன் காவல்துறையும், நிர்வாக இயந்திரங்கள் அனைத்தும் கல்குளம், விளவங்கோடு தாலுகா வாழ் தமிழர்கள் குறிப்பாக நாடார் சமுதாய மக்களை மட்டுமாக குறி வைத்து தங்களது அடக்கு முறையை அவிழ்த்து விட்டனர். இதன்

முக்கிய நோக்கம், இவர்களுக்கிடையே மரண பீதியை உருவாக்கி அவர்களையெல்லாம், குறிப்பாக நாடார் மக்களை தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, தாணுபிள்ளையின் சமஸ்தான காங்கிரசுக்கு சாதகமாக ஓட்டு வங்கியை திருப்பிவிட்டு, திரு. நேசமணியின் கீழ் இயங்கி வருகின்ற திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் வேட்பாளர்களை தோல்வி அடையச் செய்ய வேண்டும் என்பதேயாகும். அதனால்தான் 12.02.1948 அன்று மங்காட்டில் தேவசகாயம் நாடாரையும், 14.02.1948 அன்று கீழ்குளத்தில் செல்லையன் நாடாரையும் சுட்டுக் கொன்றனர். ***(A. Nesamony – Inside Travancore Tamil Nad – Page 26)***

இருப்பினும் தென் தாலுகாக்களில் போட்டியிட்ட 15 தி.த.நா.கா. வேட்பாளர்களில் 14 பேர் வெற்றிவாகை சூடினர். இவர்களை எதிர்த்து நின்ற ஸ்டேட் காங்கிரஸ் வேட்பாளர்கள் தங்கள் வைப்புத் தொகையை இழக்க வேண்டியதாயிற்று. தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டை, நெய்யாற்றின்கரை தொகுதிகளில் போட்டியிட்ட தி.த.நா.கா. வேட்பாளர்கள் வெற்றி பெறவில்லை. 120 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில் காங்கிரசுக்கு 97 உறுப்பினர்களும், தி.த.நா.காங்கிரசுக்கு 14 உறுப்பினர்களும், முஸ்லீம் லீகிற்கு 8 உறுப்பினர்களும், சுயேட்சையாக ஒருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இத்தேர்தலைத் தொடர்ந்து பட்டம் தாணுபிள்ளை 12.03.1948 அன்று முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார். அவர் மக்கள் பிரதிநிதியென்ற நிலையை மறந்துவிட்டு முன்னாள் திவான் சர்.சி.பி. இராமசுவாமி ஐயரைப் போன்று ஆட்சி செய்யத் தொடங்கினார். இவர் முதலமைச்சர் ஆனதும், நாயர் சமுதாயம் பெரிய அளவில் விழா எடுத்துக் கொண்டாடினர். வட திருவிதாங்கூரில் சர்.சி.பி.யை எதிர்த்த பல உயிர்களைக் காவு கொண்ட புன்னப்பரா - வயலார் கைதிகளை விடுதலை செய்வோம் என்ற காங்கிரசின் தேர்தல் வாக்குறுதியை காங்கிரஸ் முதன்

மந்திரியான பட்டம் தாணுபிள்ளை இப்போது நிறைவேற்றவில்லை. இதனால் அவர்களது எதிர்ப்பை சந்தித்து, பட்டம் பதவி விலக நேர்ந்தது. அவர் பதவி இழந்தார். அவரை காப்பாற்றுவதற்கு தி.த.நா. காங்கிரஸ் மறுத்துவிட்டது. இதனால் நாயர் சமுதாயம் நாடார் சமூகத்திடம் வன் பகை கொண்டது.

பட்டம் தாணுபிள்ளையின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, வட திருவிதாங்கூர் காங்கிரஸ் வாதியான T.K. நாராயணபிள்ளை 08.10.1949 அன்று பிரதம மந்திரியானார். இவர் முஸ்லீம் லீக் கட்சியுடனும், தி.த.நா. காங்கிரசோடும் சமரசம் செய்து கொள்ள தீவிர முயற்சி எடுத்துக் கொண்டார்.

புதிய பிரதமமந்திரி திரு.டி.கே.நாராயணபிள்ளை தீவிர ஐக்கிய கேரளவாதியாகையால் அதற்கு முன்னோடியாக திருவிதாங்கூர் – கொச்சி இணைப்புக்கு என முழு முயற்சியில் ஈடுபடத் தொடங்கினார். நான்கு மொழிக்கூட்டு மதராஸ் மாநிலத்தில் அமைச்சராக இருந்த மாதவ மேனனும் இந்த முயற்சியில் அவருக்கு தீவிரமாகத் துணை நின்று செயல்பட்டார். இதன் முன்னோடியாக மலபார், பாலக்காடு பகுதிகளிலிருந்து மதராஸ் மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களையும், கொச்சி-திருவிதாங்கூர் சட்டமன்ற உறுப்பினர்களையும் ஒன்று கூடி வரச் செய்வதற்காக, ஐக்கிய கேரளகவுன்சில் தலைவர் திரு. கேளப்பன் நாயர் அழைப்பு விடுத்தார். திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு வந்தது.

ஆலுவாயில் 1949 பிப்ரவரியில் கூடின இந்த கூட்டுக் கூட்டத்தில் திருவிதாங்கூரும், கொச்சியும், மதராஸ் மாநிலத்தில் உட்பட்டிருக்கும் மலபாரும் இவைகளை சேர்ந்து கிடக்கும் மலையாளப் பிரதேசங்களையும் கொண்டு ஐக்கிய கேரள மாநிலம் அமைய வேண்டும் என்ற தீர்மானம்

விவாதத்துக்கு வந்தது. இது திருவிதாங்கூர் அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என்று பட்டம் தாணுபிள்ளை எதிர்ப்பு தெரிவித்தார்.

இதற்கு திருத்தம் கொண்டு வந்து பேசிய திரு.எ.நேசமணி, "அரசியல் சட்டத்துக்கு பொருந்துமோ, விரோதமோ, அதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். ஆனால் திருவிதாங்கூரிலுள்ள தமிழ்ப்பிரதேசங்களை விட்டு விடுங்கள்" என்று அறை கூவல் விடுத்தார். அவர் கொண்டு வந்த திருத்தம் "தமிழ் பிரதேசங்கள் நீங்கலாக" என்பதே. இதையே மலையாள நாளேடுகள் "பீரங்கிக்கு உள்ளே வெடி வைத்து தகர்க்கிறார் நேசமணி" என்று வக்கணை பேசின. தென் திருவிதாங்கூரில் தமிழர்கள் (நாடார் சமுகத்தார்) பட்டபாட்டையும், கெட்ட கேட்டையும் மிகவும் உருக்கமாக எடுத்துரைத்தார் திரு. நேசமணி. இதற்கு பதிலளிக்கின்ற முறையில் முன்னாள் அமைச்சர் திரு. சி. கேசவன், நேசமணி எடுத்துக்காட்டிய அடக்குமுறை அட்டூழிய கொடூரங்களையும், கொடூர நடவடிக்கைகளையும் அப்படியே ஒப்புக் கொண்டு விட்டு, அவை அனைத்துக்கும் திரு.பட்டம் தாணுபிள்ளையே பொறுப்பு என்று கூறி இதிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார். 'மதராஸ் மாநிலத்திலிருந்து மலபார் பிரிந்து ஐக்கிய கேரளத்தோடு இணைய உரிமை பெறும்போது திருவிதாங்கூர் தமிழ் பகுதிகளும் ஐக்கிய கேரளம் அமையும் போது பிரிந்து சென்று தாய் தமிழகத்துடனே இணைவது நியாயம்தானே' என்று காங்கிரஸ் தலைவர் பட்டாபி சீதாராமய்யா கருத்து வெளியிட்டார். இக்கருத்தால் முதலமைச்சர் அவர் மீது கடும் கோபம் கொண்டார்.

இதற்கு பதிலடி கொடுப்பது போன்று, ஐக்கிய கேரள கவுன்சில் தலைவர் திரு. கேளப்பன் முயற்சியால் மதிராசியில் (வேண்டுமென்ற நோக்குடன்) வைத்து திருவிதாங்கூர் அமைச்சரவை உறுப்பினர்கள், கொச்சி அமைச்சரவை அங்கத்தினர்கள், மதிராசி

அமைச்சர் மந்திரி மாதவமேனன், மளையாள மொழி பேசும் சட்டசபை அங்கத்தினர்கள், கட்சி பிரமுகர்கள், இந்தியாவெங்கும் பதவியில் இருந்த மலையாளி அலுவலர்கள் அனைவரையும் வரவழைத்து, 1949 சனவரி 16 மற்றும் 17 தேதிகளில் "அகில மலையாளிகள் மாநாடு" நடத்தப்பட்டது. தலைமை தாங்கிய "மாத்ரு பூமி" ஆசிரியர் திரு. கேசவமேனன், "திருவிதாங்கூர் கொச்சி நாடுகள் முழுமையாகவும், மலபார் மாவட்டமும், நீலகிரி, கூடலூர் முதலிய தமிழ் பகுதிகளும் சேர்த்து, கன்னியாகுமரி தொட்டு காசர்கோடு வரையில் உள்ள பிரதேசங்களை உள்ளடக்கிய "ஐக்கிய கேரளம் அமைப்போம்" என்று வீரம் பேசினார். ஆனால் இதற்கு எதிராக ஐக்கிய தமிழகம் அமைப்போம் என்று குரல் கொடுக்க மதராஸ் மாகாணத்தில் ஆளும் கட்சியோ, மற்ற கட்சிகளோ முன் வரவில்லை. ஈ.வே.ரா.வால் நடத்தப்பட்டு வந்த திராவிடக்கழகமும் அதன் பொது செயலாளர் அண்ணாத்துரையும் இதைக் கண்டு கொள்ளவில்லை. சில தாவரப் பிரதேசங்கள் தமிழ் நாட்டில் இருந்தால் என்ன? அங்கே இருந்தால் என்ன? என்ற மனோபாவத்தில் பெரியார் இருந்து விட்டார்.

## 6. குமரியில் எல்லை மாநாடு :

ஆனால் தமிழரசுக் கழகத்தலைவர் திரு. ம.பொ., சிவஞான கிராமணியாருக்கு மட்டும் இது உறுத்தலை உருவாக்கிற்று. அவர் மட்டும்தான் அன்றைய பச்சைத் தமிழன் (நாடார்) அரசியல்வாதியாக, இருந்தார். எனவே சோர்வுற்று இருந்த தமிழர்களுக்கிடையே ஒரு உத்வேகத்தை உருவாக்கும் எண்ணம் கொண்டு, தொல்காப்பியத்திலிருந்து "வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறும் நல்லுலகு" என்று கூறிக்கொண்டார். ஆனால் மதராஸ் மாநகரில் ஐக்கிய தமிழகம் அமைப்பு ஒரு மந்த நிலையில் இருப்பதை திரு. நேசமணி கண்டு கொண்டார். அதே சமயம் தெலுங்கர்கள் மட்டும் ஆந்திர மாநிலம் அமைப்பதில் மும்முரமாக இருந்தனர். ஆந்திராவின் தலைநகராக சென்னைப் பட்டணம் வர

வேண்டும் என்ற குறிக்கோளுடன் அவர்கள் செயல்பட்டு வந்தனர். சென்னையை ஆண்டது ஒரு சென்னா ரெட்டி. அவன் ஒரு தெலுங்கன். அவன் பெயரில்தான் சென்னைப் பட்டணம் அமைந்துள்ளது. அது மருவிதான் இன்று "சென்னைப் பட்டணம்" ஆயிற்று. எனவே 'சென்னைப் பட்டணம் மமதே' என்ற கோஷம் உச்சத்தில் எழுந்தது. அதைத் தொடர்ந்து 'மதுரை நமதே' என்றும் உரத்த குரல் கேட்டது. மதுரையையும் வடுகர்தான் ஆண்டனர். இதற்கு மறுப்பு தெரிவிக்க அன்று எவரும் முன் வராததால், ம.பொ.சி களம் இறங்கி, சென்னையை காப்பதற்காக வட எல்லை மாநாடு ஒன்றை 05.11.1949-ல் நடத்துவது என்று நிச்சயித்து விட்டார். திரு. நேசமணிக்கும் அழைப்பு வந்தது. மாநாடு குறிப்பிட்ட வேளையில் நடந்தது. "மதராசில் ரொட்டிப் பண்டங்களை விற்க வந்த செட்டிகளை பெருநகர் சிப்பந்திகள் பார்த்துக் கொள்வார்கள். குமரி எல்லையை காப்பதற்கு நாம் ஆயத்தமாகிறோம். அதற்காகவே மாவீரன் நேசமணி நம்மை கையோடு அழைத்துப் போக வந்திருக்கிறார்" என்று போர் முழக்கம் செய்தார்.

இதைத் தொடர்ந்து 06.01.1950 இல் கன்னியாகுமரியில் ஒரு எல்லை மாநாடு கூட்டப்பட்டது. திருவிதாங்கூர் தமிழ் பிரதேசங்களை தாய் தமிழகத்துடன் இணைப்பதற்கான ஒரு விழிப்புணர்வை உருவாக்குவதற்காகவே இந்த மாநாடு கூட்டப்பட்டது. இந்திய அரசியல் நிர்யண சபை உறுப்பினர் திரு. கிருஷ்ண பாரதி தலைமையில் கவிமணி தேசிகவினாயகம் பிள்ளை துவக்க உரையாற்றினார். துவக்க உரையைத் தொடர்ந்து திரு. எ. நேசமணி வரவேற்புரையாற்றினார். தமிழர்கள் மேல் மலையாள அரசு நடத்திய அடக்கு முறைகளையும், கொடுமைகளைக் குறித்தும் புள்ளி விவரங்களுடன் விவரமாக எடுத்துக் கூறி சபையோரின் பேராதரவை ஈர்த்தார். தமிழர்களிடமிருந்து மலையாளி அரசு வசூலித்து வந்த அளவில்லாத வரிகளின் விவரங்களைக் கூறி, அதன் சுமையால் நாடார் மக்கள் அடைந்த

பொருளாதாரச் சீரழிவை எடுத்துரைத்தார். இந்த வரிகள் மட்டுமே நாடார் சமுதாயத்தின் வறுமைக்கு அடிகோலியது என்பதை புள்ளிவிவரங்களுடன் அவர் எடுத்துரைத்தார். தமிழ் மக்களுக்கு தமிழ் கல்வி அளிப்பதை மலையாளி அரசு தவிர்ப்பதையும், தங்களது மலையாள மொழியைத் திணிப்பதற்கு தமிழ் பள்ளிக்கூடங்களை மலையாள மொழி பள்ளிக்கூடங்களாக மாற்றி வருவதையும் புள்ளி விவரங்களுடன் சுட்டிக் காட்டினார். முதல் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இடம் பெற்றிருந்த நீர்பாசன திட்டங்களை தமிழர் வாழும் பகுதிகளில் செயல்படுத்துவதை மலையாள அரசு தவிர்த்து வந்தது. குறிப்பாக பெருஞ்சாணி அணையை முழுமையடையவிடாது தடுத்தல். சிற்றாறு பட்டணம் கால்வாய் திட்டம், நெய்யாறு இடதுகரை கால்வாய் திட்டம், குழித்துறை மேல் நீரேற்றுத் திட்டம் போன்ற பாசன வசதித் திட்டங்களை கிடப்பில் போட்டதையெல்லாம் சுட்டிக் காட்டினார். இதற்காக திட்டத்தில் ஏற்பளிக்கப்பட்ட நிதியைக்கூட இங்கே செலவு செய்யாமல் வடதிருவிதாங்கூர் திட்டங்களுக்காக திசை திருப்பியதையும் எடுத்துரைத்தார். அதனால் தென் திருவிதாங்கூர் திட்டங்களை நழுவவிட்டது மலையாள அரசு. தமிழ் விவசாயிகளிடமிருந்து தங்களது விளை பொருளான நெல் மற்றும் கப்பைக் கிழங்கு (மரச்சீனி கிழங்கு) கட்டாயமாக அடிமாட்டு விலைக்கு அரசு எடுத்துச் சென்றதையும், தமிழர்களுக்கு குறிப்பாக தமிழ்மொழி கற்றவர்களுக்கு அரசுப் பணிகள் தராததைக் குறித்தும் விளக்கிச் பேசினார். தவிரவும் தமிழர்களால் தங்களுக்கு (மலையாளிகளுக்கு) தொல்லைகள், அனுதினம் கூடி வருவதாக பொய் பிராதை டெல்லி அரசுக்கு அனுப்பி, அவர்களின் அனுதாபத்தைப் பெறுவதற்கு மலையாளிகள் முயற்சிக்கின்றனர் என்பதையும் விளக்கிக் கூறினார். அதனால் தமிழர்கள் தங்களது மானம், மரியாதை, பாதுகாப்பு, தன்மானம், மொழி மற்றும் கலாச்சாரங்களை பாதுகாத்திடும் பொருட்டு, தாய்

தமிழகத்துடன் இணைவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை ஆணித்தரமாக அங்கே எடுத்துரைத்தார். “கேரளம் கடலிலிருந்து பொங்கி எழுந்து வந்ததென்றும், அதனால் அது கடவுளின் சொந்த நாடு என்றும் கதை கூறுகின்ற மலையாள அன்பர்கள் எங்கிருந்து வந்தனர்? என்று கேட்கிறோம் என்று மறுகேள்வி எழுப்பினார். இராவணனின் விதவைகள் குடியேறி பிராமணரோடு கலப்பு மணம் செய்ததிலிருந்தா? என்று நாங்களும் கதை சொல்லிக் கேட்டுக் கொண்டிருக்க எங்கள் பண்பாடு இடம் தருவதில்லையே! என்று நேசமணி எதிர்ப்புக் கணை வீசினார். முடிவாக, இவைகளை பெறும்வரை வேண்டுமானால் கடைசி மூச்சு இருக்கும்வரை மலையாள அரசை எதிர்த்து போராட்டம் நடத்திட வேண்டும் என்று அறை கூவல் விட்டார். ***(Dr. D. Peter & Dr. Ivy Peter – Liberation of the Oppressed a Continuous Struggle – Pages 77 to 79)***

வரலாற்று அடிப்படையில் 14-ம் நூற்றாண்டு வரை தென் தாலுகாக்கள் தமிழ் மன்னர்களாகிய பாண்டிய அரசர்களது அதிகாரத்திற்குட்பட்டவை, கல்குளம் தாலுகாவில் பறளியாற்றில் கட்டியிருக்கும் ‘பாண்டியன் அணை’ இதற்கு அத்தாட்சி, பாண்டியன் அணைக்கட்டும், கால்வாயும் எட்டு நூற்றாண்டுகளுக்கு முன் கட்டியவைகளாகும். ***(அதே உரை – பக்கம் – 14)***

இம்மாநாட்டின் முடிவாக ஒரு தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். ஐக்கிய கேரள கவுன்சில் போன்று தமிழ் நாட்டிலுள்ள பல கட்சிப் பிரமுகர்களைக் கொண்ட ஒரு “ஐக்கிய தமிழகக் கவுன்சில்” நிறுவப்பட்டது. அதன் கன்வீனராக திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. சாம் நத்தானியேல் அமர்த்தப்பட்டார். இந்த கவுன்சில், மாநாடு கலைந்தது போன்று கலைந்து சென்றது. பிற்பாடு ஒரு நாள் கூட அது கூடவில்லை. செந்தமிழ் நாட்டுத் தலைவர்கள் இதை மறந்து விட்டனர்.

## 7. திரு - கொச்சி இணைப்பு :

01.06.1949-ல் திருவிதாங்கூர் – கொச்சி இணைப்புக்குப் பிறகு இரு மந்திரிசபைகளும் ஒன்றுபட்டு, அதில் அங்கம் வகித்த அமைச்சர்கள் அனைவரும் அவ்வாறே இந்த கூட்டு மந்திரிசபையின் அமைச்சர்கள் ஆயினர். இப்பொழுது கொச்சிக்கு மூன்று அமைச்சர்களும், திருவிதாங்கூருக்கு ஒன்பது அமைச்சர்களுமாக மொத்தம் பன்னிரண்டு அமைச்சர்கள் இருந்தனர். இவர்களுக்கு முதலமைச்சராக காங்கிரஸைச் சார்ந்த டி.கே. நாராயண பிள்ளை இருந்தார். கொச்சிக்கு மூன்று தானா? என்ற விரக்திக் குரல் எழுந்தது. கொச்சிக்காரர்களை சமாளிக்க வேண்டிய நிலை வந்தது முதலமைச்சருக்கு. அவர்கள் காலை வாரிவிட்டால்? மந்திரி சபை கவிழ்ந்து விடும் அபாயமும் இருந்தது. இதிலிருந்து காத்துக் கொள்வதற்கு 16 உறுப்பினர்களைக் கொண்ட தி.த.நா. காங்கிரசை இழுத்துக் கொண்டு மந்திரி சபையை காத்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் முதன் மந்திரி டி.கே. நாராயண பிள்ளை சென்னைக்குப் பறந்தார். திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ்காரர்களுக்கும், திருவிதாங்கூர் ஸ்டேட் காங்கிரஸ் அமைச்சரவைக்கும் சமரசத் தீர்வு உருவாக்குவதற்காக தமிழ்நாட்டு அமைச்சர்களின் மூத்த அமைச்சரான திரு. பக்தவல்சலத்தின் உதவியை நாடினார் திரு. நாராயணபிள்ளை. அவரும் இதற்கு இசைவு தந்தார். பாளையங்கோட்டையில் சமரசக் கூட்டம் கூட்டலாம் என்று முடிவாக்கப்பட்டது.

## 8. பாளையங்கோட்டை சமரசம் :

05.10.1950 அன்று பாளையங்கோட்டையில் திட்டமிட்டபடி கூட்டம் நடந்தது. தி.த.நா.கா-வுக்கும் அழைப்பு வந்தது. தலைவர் திரு.சாம் நத்தானியேல், பொதுத் தலைவரும் அசம்பிளிக் கட்சித் தலைவருமான திரு.நேசமணி, துணைத் தலைவர் திரு.சிவராமன்பிள்ளை மற்றும் செயல் கமிட்டி உறுப்பினர்கள்

அனைவரும் பாளை சென்றனர். திருவிதாங்கூர்-கொச்சி பிரதமர் (முதலமைச்சர்) திரு.நாராயணபிள்ளையும், சக அமைச்சர் திரு.வேலாயுதன் நாயரும் வந்திருந்தனர். திரு.நேசமணியின் மறைவுக்குப் பிறகு ஒன்றும் தெரியாதவர்கள் போன்று நாடகமாடிக் கொண்ட திரு.காந்திராமன், திரு. பி.எஸ். மணி, திரு. ப. தாணுலிங்க நாடார் ஆகியோரும் இந்த கூட்டத்தில் இருந்தனர்.

இந்த கூட்டத்தில் 6 முடிவுகள் எடுக்கப்பட்டன. அவைகளில் முக்கியமான மூன்று முடிவுகள் கீழ்தரப்படுகின்றன.

1. தென் தாலுகாக்கள் நான்கையும் சேர்த்து ஒரு புதிய வருவாய் கோட்டம் அமைத்தல்.

2. திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் அசம்பிளி (சட்டமன்றம்) கட்சி திருவிதாங்கூர்-கொச்சி காங்கிரஸ் அசம்பிளி கட்சியுடன் இணைந்து மந்திரிசபைக்கு ஆதரவாக இருத்தல் வேண்டும்.

3. மொழிவழி மாகாணம் அமையும்போது திருவிதாங்கூர் தமிழ் பிரதேசங்கள் தாய்த் தமிழகத்தோடு இணைவதற்காக சட்ட சம்மதமுள்ள அனைத்து நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ள இந்த புதிய ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கு உரிமையுண்டு.

இதில் மூன்றாவது சரத்துதான் மிகவும் முக்கியமானது ஆகும். மலையாளி ஆதிக்கத்திலிருந்து நிரந்தரமாக ஒன்பது தமிழ் பிரதேசங்களும் பிரிந்து தாய் தமிழகத்துடன் இணைந்து கொள்ளலாம் என்று இதனால் கேரள அரசு பூரண சம்மதம் தந்துள்ளது. இதனடிப்படையில் நிகழ்வுகள் நடத்திருக்குமேயானால் ஒன்பது தமிழ் தாலுகாக்களும், அதாவது அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு, நெய்யாற்றின்கரை, செங்கோட்டை, பீர்மேடு, தேவிகுளம் மற்றும் சிற்றூர் திருவிதாங்கூரிலிருந்து பிரிந்து தாய் தமிழகத்துடன் எச்சிரமமுமின்றி வந்து இணைந்திருக்கும். இந்த ஒப்பந்தங்களை அன்று

தி.த.நா.காங்கிரஸ் பொதுக் கமிட்டி ஏற்றிருக்குமேயானால், 1954 ஆகஸ்டு 11-ம் நாள் நடந்த துயர நிகழ்ச்சிகள் யாவும் தவிர்த்திருக்க முடிந்திருக்கும். தவிரவும் இன்றைய நெய்யாறு இடதுக்கரைச் கால்வாய் பிரச்சனை, நெல்லைமாவட்டம் செண்பகவல்லி தடுப்பு அணைப் பிரச்சனை, உடுமலைப்பேட்டைத் தாலுகா அமராவதி அணைப் பிரச்சனை, பாம்பாறு அணைப் பிரச்சனை, முக்கியமாக முல்லை – பெரியாறு அணைப் பிரச்சனை போன்ற நதி நீர்ப் பிரச்சனைகள் எழுந்திருக்காது. ஏனெனில் இவைகள் அனைத்தும் தமிழகம் இழந்த நெய்யாற்றின்கரைக் தாலுகா, செங்கோட்டையில் இழந்த முக்கால் பாக நிலம், தேவிகுளம், பீர்மேடு மற்றம் சிற்றூர் போன்ற இடங்கள் தமிழகத்துக்கு சிரமமின்றி கிடைத்திருக்கும். போராட்டங்களின் குறிக்கோளும் இதனால் நிறைவேறியிருக்கும்.

ஆனால் இதற்கு உலை வைத்தனர் ஒரு கூட்டம் நாஞ்சில் நாட்டு வெள்ளாம்பிள்ளை அரசியல்வாதிகள். அதற்கு காரணம் உண்டு. திருவிதாங்கூர்-கொச்சி காங்கிரஸ் அசம்பிளி கட்சியுடன் சேர்ந்து டி.கே. நாராயணபிள்ளை அரசுக்கு ஆதரவு அளித்தால் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசுக்கு அமைச்சரவையில் ஒரு இடம் கிடைக்கும் என்ற நிலை உருவாயிற்று. இந்தப் பதவிக்கு தி.த.நா.காங்கிரஸ் சட்டமன்ற கட்சித் தலைவரான திரு. எ. நேசமணிக்குத்தான் தார்மீகமாக அந்தப் பதவி வந்து சேரும். அத்தகைய பதவி ஏதும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு, குறிப்பாக ஒரு நாடாருக்கு சென்றுவிடக்கூடாது என்பதே இந்த வெள்ளார்களின் நோக்கமாக இருந்தது. எனவே இதைத் தடுப்பதற்கு அவர்கள் கண்ட ஒரே வழி இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவதை எவ்வாறாவது தவிர்த்து விட வேண்டும் என்ற வஞ்சக சிந்தனை கொண்டு, அதை முறியடிப்பதற்கான வியூகம் அமைத்தனர்.

மேற்படி திட்டம் தி.த.நா. காங்கிரஸ் செயல் கமிட்டியின் ஆலோசனையோடு உருவானதால், அதை பொதுக் கமிட்டியின் ஒப்புதலுக்காக தலைவர் திரு. சாம்நத்தானியேல் வைத்து

தெளிவுரையாற்றி, கமிட்டியின் அங்கீகாரம் வேண்டினார். உடனே பொதுச் செயலாளர் திரு.ஆர்.கே.ராம், எம்.எல்.எ. தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். இவர் வெள்ளாளர் சமுதாயத்தைச் சார்ந்த அரசியல்வாதி. உடனே திரு. எ. அப்துல் ரசாக் (A.A. ரசாக்) எழுந்து உரிமைப் பிரச்சனை ஒன்றை எழுப்பினார். அதன்படி செயல் கமிட்டியில் இடம் பெற்றிருந்த திரு. ஆர்.கே. ராமுக்கு இதை எதிர்த்துப் பேசுவதற்கு தார்மீக உரிமையில்லை என்று குறிப்பிட்டார். இதனால் எந்த முடிவுமின்றி கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

அடுத்த பொதுக்குழு கூட்டம் 06.10.1950 அன்று இடலாக்குடியில் ஒரு கம்பெனி வீட்டு மாடியில் கூடிற்று. பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் அழைத்து வரப்பட்டனர். ஒருவர் ஊன்றுகோலுடன் வந்தார். இன்னொரு பண்ணையாரை கட்டிலில் தூக்கி வந்திருந்தனர் வெள்ளாளர் அணியினர். தீர்மானத்தை தோற்கடிக்க வேண்டும் என்ற ஏகசிந்தையுடன் திருவாளர்கள் பி.எஸ்.மணி, ஆர்.கே.ராம். டி.டி.டானியல், ப.தாணுலிங்க நாடார் போன்றோர் முன்னின்று செயலாற்றினர். தீர்மானத்தை முன்பு எதிர்த்துப் பேசிய பொதுச் செயலாளர் திரு.ஆர்.கே.ராம் இப்போது எதுவும் பேசவில்லை. ஆனால் அப்பணியை நிறைவேற்றும் பொருட்டு அங்கே வந்தார் ஒரு கல்லூரி மாணவரான திரு. எம். சங்கரலிங்கம். இவரைத் தொடர்ந்து பலர் ஆதரித்தும், எதிர்த்தும் பேசினர். முடிவாக தீர்மானம் ரகசிய ஓட்டெடுப்புக்கு விடப்பட்டது. படுக்கையும் கட்டிலுமாக வந்த அந்த நாஞ்சில் நாட்டுப் பண்ணையார் தனது எதிர் வாக்கை பதிவு செய்துவிட்டு, உயிரைவிட்டார். ஒரு வாக்கு வித்தியாசத்தில் தீர்மானம் தோற்றுப் போயிற்று. இதனால் பாளையங்கோட்டை உடன்படிக்கை நிறை வேறவில்லை. ஒரு தமிழனுக்கு குறிப்பாக நாடாருக்கு வரவிருந்த அமைச்சர் பதவி நழுவிச் சென்றது. தங்களுக்குக் கிடைக்காத அமைச்சர் பதவி வேறு எவருக்கும் கிடைக்கக் கூடாது என்ற வஞ்சகத்தில் வெள்ளாளர்கள் வெற்றி பெற்றனர். இந்த வஞ்சகம் இன்றும் நிலைத்து நின்று வருகிறது. தமிழ்நாட்டில் எந்த அரசியல் கட்சி ஆட்சி அமைத்தாலும் அதில் குமரி மாவட்டத்திற்கு

ஒதுக்கப்படுகின்ற அமைச்சர் பதவி சிறுபான்மை வெள்ளாளர்களுக்கே கிடைத்துக் கொண்டிருப்பதன் தொடக்கமே இந்த நிகழ்ச்சியின் பின்விளைவேயாம்.

## 9. தலைவர் ராஜினாமா :

தலைவர் கொண்டு வந்த இந்த பிரச்சனை மீது எதிர்த்துப் பேசுவதற்கு தி.த.நா.கா. பொதுக்குழு உறுப்பினர் அல்லாத மாணவர் திரு.சங்கரலிங்கத்தை பேச அனுமதித்ததுதான் இது தோற்றுப் போவதற்கு முதல் காரணமாக இருந்தது. இந்த அறியாமையைச் செய்த தலைவர் திரு.சாம்நத்தானியேல் உடனடியாக தனது பதவியை தானாகவே முன்வந்து 6-10-1950-ல் ராஜினாமா செய்து விட்டு, திரு. சங்கரலிங்கத்தை கட்சிக்குத் தலைமையேற்று நடத்திச் செல்லும்படி வேண்டிக் கொண்டு கட்சியை விட்டு வெளியேறிவிட்டார். பாளையங்கோட்டை சமரசத் திட்டத்தின் தோல்வி, தமிழக மக்களின் தோல்வியாகும். அத்தோல்வியின் எதிரொலிதான் கேரளத்துடனான அனைத்து தண்ணீர் பிரச்சனைகளுக்கும் மூல காரணமாக இன்று அமைந்து விட்டது. இதை கருத்தில் கொண்டு தான் திரு. சாம் நத்தானியேல் தனது பதவியைத் துறந்தார். எனவே தமிழகத்தில் இன்று காணப்படுகின்ற அனைத்து தண்ணீர் பிரச்சனைகளுக்கும் மூலகாரணம் நாஞ்சில் நாட்டு வெள்ளாள மக்களேயாவர். இதை தமிழக அரசியல்வாதிகள், இன்று போர்கொடியேந்தித் திரிகின்ற வடுகர்கள் புரிந்து கொள்வது நல்லது. இத்தகைய பெரும் துரோகத்தை தமிழர்களுக்கு இழைத்து நிற்கின்ற நாஞ்சில் நாட்டாருக்குத்தான் வடுகர்களான தமிழக அரசு சிறப்புகளை அளித்து வருகின்றது. ஆனால் குமரித்தந்தை எ.நேசமணி அவர்கள் தமிழர் மற்றும் தமிழ்நாட்டின் விவசாயிகள் நலன் காத்திட அயராது உழைத்தார். ஆனால் அவருக்கு சிறப்புத் தர தமிழர்கள் முன் வரவில்லை. இவர்களுக்குப் பிறகு தமிழர்களுக்குப் பெரும் தீங்கைத் தந்தவர் பெருந்தலைவர் காமராசர் ஆவார் என்பதையும் பிற் பகுதியில் விளக்கவுள்ளோம்.

## 10. புதிய தலைவர் தேர்தல் :

திரு.சாம்நத்தானியேல் பதவி விலகலுக்குப் பிறகு புதிய தலைவர் தேர்தல் நடந்தது. தலைவராகுவதற்கு பலர் ஆசைப்பட்டனர். ஆனால் நேசமணியிடம் அணுகுவதற்கு யாருக்கும் மன ஊக்கம் வரவில்லை. ஆயினும் நாஞ்சில் நாட்டார்கள் இப்பதவியை பிடித்து விட வேண்டும் என்று ஒளிமறைவில் ஆடி ஓடினர். நாயர் சர்வீஸ் சொசைட்டி தலைவர் திரு.மன்னத்துபத்மனாபன் மற்றும் செயலர் திரு. R.சங்கரால் தொடங்கப்பட்ட இந்து மண்டல சபையில் திரு. ப. தாணுலிங்கநாடார் பல துணைத் தலைவர்களில் ஒருவராகச் செயல்பட்டார். மலையாளிகளான இவர்களது திட்டப்படி தி.த.நா. காங்கிரசில் எப்படியாவது ஒரு விரிசலை உண்டு பண்ண வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் திரு.பா.தாணுலிங்கநாடாரை தி.த.நா.கா. தலைவர் பதவிக்கு திரு.நேசமணி பிரேரித்த வேட்பாளருக்கு எதிராக நிறுத்தினர். திரு.தாணுலிங்கநாடாரை திரு. பி.எஸ்.மணி, திரு.T.T.டானியல், திரு.காந்திராமன், ஸ்ரீ.வி.தாஸ் மற்றும் சில பண்ணையர்கள் ஆதரித்தனர். தலைவர் திரு.நேசமணி, அன்று தி.த.நா.கா-வின் துணைத்தலைவராக இருந்த இரணியல் பி. இராமசுவாமி பிள்ளையை தலைவர் பதவிக்கு முன் மொழிந்தார். திரு.சிவராமபிள்ளை வழிமொழிந்தார். வாக்கெடுப்பு நடந்தது. 47/22 என்ற கணக்கில் திரு. பி. இராமசுவாமிபிள்ளை வெற்றி பெற்றார். இது மண்டலத்துக்காரர்கள் எதிர்பார்த்தது போன்று தாணுலிங்கம் கோஷ்டியினர் தி.த.நா.காவில் இருந்து வெளியேறி தனியாக, The Travancore Tamil Nadu Congress (T.T.T.N.C) என்ற ‘வண்டி’ காங்கிரஸை உதயமாக்கினர். இந்து, கிறிஸ்தவன் என்ற பிரிவினைவாதமும் முதன் முதலாக தென் திருவிதாங்கூர் மக்களிடையே அரசியல் களத்தில் இதனால் உதயமாயிற்று. இதற்கு விதை ஊன்றியவர்கள் வெள்ளாம்பிள்ளைகள் என்றாலும் நீர் ஊற்றி முளை கட்ட வைத்தவர்கள் மலையாளி நாயர்கள் ஆவர்.

## 11. முதல் பொதுத் தேர்தல் :

இந்தியா சுதந்திரம் அடைந்து குடியரசு (26.01.1950-ல்) ஆன பிறகு இந்திய நாட்டில் நடத்தப்பட்ட முதல் பொதுத்தேர்தல் 1952 சனவரித் திங்கள் நான்கு மற்றும் ஐந்தாம் நாட்களில் இரண்டு கட்டங்களாக நடக்கும் என தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதனைத் தொடர்ந்து அரசியல் கட்சிகள் சுறுசுறுப்படைந்தன. நாகர்கோவில் பாராளுமன்றத்திற்கு இருமுனைப் போட்டி இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. தி.த.நா.காங்கிரஸ் ஒரு பக்கமும், திரு - கொச்சி சமஸ்தான காங்கிரஸ் மறுபக்கமும் வேட்பாளர்களை நிறுத்தலாம் என்று அரசியல் நோக்கர்கள் கணித்தனர். ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாக நான்கு முனை போட்டி உருவாயிற்று. தி.த.நா.கா. சார்பில் திரு.எ.நேசமணி குடம் சின்னத்தில் போட்டியிட்டார். அவரை எதிர்ப்பதற்கு அஞ்சி திரு - கொச்சி சமஸ்தான காங்கிரஸ் முன் வரவில்லை. ஆனால் தி.த.நா.காவில் இருந்து பிரிந்து சென்ற இந்து மண்டலத் துணைத் தலைவர் திரு.ப. தாணுலிங்கநாடாரை வண்டிச் சின்னத்தில் எதிர் வேட்பாளராக களம் இறங்கினர். இவரைத் தவிர ஸ்டேட் காங்கிரஸ் அபிமானி திரு.எம்.சிவதாணுபிள்ளை சுயேட்சையாக சைக்கிள் சின்னத்தில் போட்டியிடத் துணிந்தார்.

எல்லாவற்றையும் விட ஆச்சரியம் என்னவென்றால், நேற்று வரை தி.த.நா.காங்கிரஸ் தலைவராக இருந்தவரும், அக்கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டவருமான சாந்தசொரூபி திரு.சாம்நத்தானியேல், தமிழ் மக்களின் குறிப்பாக நாடார் மக்களின் ஜென்ம விரோதி என்று அவரால் விவரிக்கப்பட்டவருமான நாயர் பிராதானியும், தற்சமயம் பிரஜா சோஷியிலிஸ்டு கட்சித் தலைவருமான பட்டம் தாணுபிள்ளையின் கூடாரத்திற்குச் சென்று அக்கட்சி சார்பாக ஆலமரச் சின்னத்தில் போட்டியிட்டதாகும். இவரது தடம் மாறுதலைக் குறித்து திரு. அப்துல் ரசாக் இவ்வாறு குறப்பிடுகிறார்:

“இடைச் செருகல் போல் நத்தானியேல் பெயர் இந்த பட்டியலில் எப்படி வந்தது என்று மற்ற 3 வேட்பாளர்களும் அதிசயப்பட்டார்கள். எந்த விதமான முன்னறிவிப்பும் இல்லாமல், திரு.T.S. ராமசுவாமி பிள்ளையின் முயற்சியால், கடத்துப் பொருள் போல திரு.நத்தானியேல் பெயர் திருவனந்தபுரத்தில் இரவோடு இரவாக ஒத்துக் கொள்ளப்பட்டு ஆலமரச் சின்னமும் வழங்கப் பட்டுவிட்டது. குமரி எல்லை மாநாட்டில் முடிவு செய்யப்பட்ட ஐக்கியத் தமிழக கவுன்சிலின் கன்வீனர் நத்தானியேல் எப்படி பட்டம் தாணுபிள்ளையின் குடை குஞ்சரத்திற்குள் வந்தார் என்பது திகைப்பு. அன்றியும் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் (குடம்) தரப்பில் வெளியான தேர்தல் பிரகடனத் தயாரிப்புக் கமிட்டியில் இவர் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறார். இவர் கையெழுத்துப் போட்ட அந்தப் பிரகடனப் பத்திரிகையில் **மை உலரும் முன்பே** இவர் எப்படி அதே பிரகடனப் பத்திரிகையை எதிர்த்து நிற்க முன் வந்தார் என்பது மேலும் ஆச்சரியத்தை அதிகரித்தது”. ***(நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம் – பக்கம் – 137)***

தேர்தல் முடிவுகள் 09.01.1952 பிற்பகலில் வெளியிடப்பட்டன. தவிரவும் இந்த முடிவுகள் மத்திய அரசின் Gazette-ல் 14.01.1952 அன்று பிரசுரமாயின. அதை திரு. கொச்சி அரசு தனது கெஜட்டில் 30.01.1952-ல் மறு பிரசுரமாக்கியது. தேர்தல் செலவுக் கணக்கை திரு. நேசமணி, அரசுக்கு 26.02.1952 அன்று சமர்ப்பித்தார். ***(Travancore – Cochin Gazzettee dated 05.08.1952, Trivandrum)***

இந்த தேர்தல் முடிவுப்படி நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதியில் தி.த.நா.கா. (குடம்) வேட்பாளர் **திரு. நேசமணி பிரமாண்ட** மெஜாரிட்டியுடன் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து நின்ற மூன்று வேட்பாளர்களும் பெற்ற கூட்டு வாக்குகளின் எண்ணிக்கையை விட மேலும் பதினேழாயிரம் வாக்குகள் அதிகம் பெற்று இவர் வெற்றி பெற்றதில் ஆச்சரியம் இல்லை." ***(எ.எ. ரசாக் – நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம் – பக்கம் – 138)***

ஆனால் திரு. நேசமணியின் இந்த அபார வெற்றியை வெள்ளாம்பிள்ளை திரு.சிவதாணு பிள்ளையால் சீரணித்துக் கொள்ள முடியவில்லை. எனவே அவர் தேர்தல் ஆணையத்துக்கு 30.08.1952 அன்று 1952-140 ஆம் எண்ணாக தேர்தல் வழக்கு தாக்கல் செய்தார். திரு. நேசமணியிடம் தோல்வி கண்டு வைப்புத்தொகை இழந்த இவர் ஏன் தேர்தல் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். திரு. நேசமணி பாராளுமன்றம் செல்வதைப் பொறுத்துக் கொள்ள வெள்ளாம்பிள்ளைக்கு இயலவில்லை. அதனால் அவரை எப்படியாவது தோற்கடித்து விட வேண்டும் என்பதே இவரது நோக்கமே தவிர அதனால் இவருக்கு சல்லிக்காசு கூட லாபம் வராது என்று நன்றாகவே அறிந்திருந்தார். ஆனாலும் திரு. நேசமணிக்கு எந்த பதவியும் கிடைத்துவிடக் கூடாது என்பதே வெள்ளாம்பிள்ளையின் நோக்கம். தவிரவும், பாளையங்கோட்டை சமரசத்திட்டத்தை வெள்ளாம்பிள்ளைகள் தந்திரமாகத் தோற்கடித்ததன் உள்நோக்கமும், திரு. நேசமணிக்கு திரு. கொச்சியில் அமைச்சர் பதவி கிடைத்து விடக்கூடாது என்ற காழ்ப்பு உணர்வுதான். இது நாஞ்சில் நாட்டு வெள்ளாம்பிள்ளைகளுக்கு நாடார் மக்கள் பால் கொண்டிருக்கின்ற குருதிவழி காழ்ப்புசிந்தனையின் பிரதிபலிப்பாகும்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் திரு.நேசமணியை திருவிதாங்கூர் திவான் சர்.சி.பி. இராமசுவாமி ஐயரின் கையாள் என்று அபாண்டம் சுமத்தினர் இந்த வெள்ளாம் பிள்ளைகள். இதற்கும் காரணமுண்டு. திருவிதாங்கூர் அரசாங்கத்தில் முக்கிய பதவிகளில் இருப்பவர்கள் சவர்ணச் சாதியைச் சார்ந்த நாயர்களும், வெள்ளார்களும் ஆவர். அவர்ண சமுதாயத்தைச் சார்ந்த எவருக்கும் அன்று அரசு பணி கிடைத்ததில்லை. ஆனால் சர்.சி.பி. ராமசுவாமி ஐயர் திருவிதாங்கூர் திவான் ஆன பிறகு இந்த உயர் சாதி முறையை மாற்றி ஏனைய அவர்ண சாதியினருக்கும் குறிப்பாக கிறிஸ்தவர்கள், இசுலாமியர்கள், ஈழவர்கள், பறையர், புலையர் போன்றோருக்கு அரசுப் பணிகள் கிடைப்பதற்காக 1935 சனவரித்

திங்களில் அரசுப் பணி தேர்வாணயத்தை (Public Service Commission) நிறுவினார்.

"The Civil Service in Travancore had for long been the exclusive preserve of the upper caste Hindus. The Avarnas and the members of the religious minorities (Christian & Muslim) not being given their fair share of representation in the services… In January 1935 a Public Service Commission was appointed with the object of ensuring fair quota of jobs for the aggrieved communities in the Public Services". ***(Prof. A. Sreedara Menon – Triumph & Tragedy in Travancore – Page 71)***

இதனால் திருவிதாங்கூர் நாட்டு பிரஜைகளுக்கு சாதி மத பேதமின்றி, அரசுப் பணியில் விகிதாச்சாரம் கிடைத்தது. இதனால் நாயர்கள் மற்றும் வெள்ளார்களின் ஏகபோக உரிமை முற்றிலும் ஒழிந்தது. தவிரவும் திரு. நேசமணியின் முயற்சியால் SIUC கிறிஸ்தவர்களை சர்.சி.பி.இராமசுவாமி ஐயர் பிற்படுத்தப்பட்டவர்கள் என அறிவித்து, தனி இட ஒதுக்கீடு அளித்தார். இதனால் திரு. நேசமணியை இந்து சவர்ணர்கள் (நாயர்களும், வெள்ளாம்பிள்ளைகளும்) சர்.சி.பி.யின் அடிவருடி என்று வர்ணித்து அவர் மீது காழ்ப்பு உணர்வு கொண்டனர். எனவே அவரின் தேர்தல் வெற்றியை சீரணிக்க இயலாத வெள்ளாம்பிள்ளை திரு. சிவதாணுபிள்ளையும் தேர்தல் வழக்குப் போட முன்வந்தார். ஆனால் வழக்கு தோல்வியில் முடிந்தது.

திருவிதாங்கூர்-கொச்சி முழுவதும் தேர்தல் முடிவுகள் வெளியாயின. மொத்தம் 108 உறுப்பினர்களைக் கொண்ட இந்த புதிய சட்டமன்றத்துக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவே தேர்தல் நடத்தப்பட்டது. தேர்தலில் பல கட்சிகள் போட்டியிட்டன. இதில் காங்கிரசின் நிலை 44 ஆக தாழ்ந்து விட்டது. இதற்கு முந்திய 178 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தில் அதன் பலம் 118 ஆக இருந்தது. இடதுசாரி ஐக்கிய முன்னணி கட்சிகளின்

எண்ணிக்கை 34. சோஷியலிஸ்டுகள் 12, கட்சி சார்பற்ற சுயேட்சைகள் (திரு. குஞ்சன் நாடாரையும் சேர்த்து) 10, திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் (குடம், நேசமணி தலைமையில்) 8, திரு. தாணுலிங்க நாடாரின் போட்டி தி.த.நா.கா. (வண்டி) வுக்கு பட்டை நாமம். அதாவது:

| | | |
|---|---|---|
| 1. | காங்கிரஸ் (காளை சின்னம்) | - 44 |
| 2. | இடதுசாரிகள் ஐக்கியம் | - 34 |
| 3. | சோஷியலிஸ்டுகள் (பட்டம் தாணுபிள்ளை) | - 12 |
| 4. | சுயேட்சைகள் | - 10 |
| 5. | தி.த.நா.கா. (நேசமணி) | - 8 |
| 6. | வண்டி தி.தி.த.நா.கா. (ப. தாணு லிங்க நாடார்) | - 0 |
| 7. | நியமன உறுப்பினர் | - இல்லை |
| | **மொத்தம்** | **- 108** |

அமைச்சரவை அமைப்பதற்கு குறைந்தபட்சம் கட்சிக்கு 55 உறுப்பினர்கள் தேவைப்படுகின்ற நிலையில் எக்கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனவே தொங்கு அமைச்சரவைதான் பதவியேற்க வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று அல்லது சட்டசபையைக் கலைத்து விட்டு மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும். இதற்கு சில கட்சிகள் இசையவில்லை. பெருவாரி இடங்களைப் பெற்ற தனிக் கட்சியான காங்கிரஸ் கட்சியை அமைச்சரவை அமைப்பதற்கு இராசப் பிரமுகர் அழைப்பு விடுத்தார். ஆனால் அழைப்பை காங்கிரஸ் கட்சி ஏற்கவில்லை. இதற்கு மாறாக, கூட்டு அமைச்சரவை அமைப்பதற்காக எவரும் முன்னின்று நடபடிகள் மேற்கொள்ளாத நிலையில், திரு. நேசமணி முன்கை எடுத்தார். தேர்வு பெற்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்தார். கன்னியாகுமரியில் கூடி திரு. கொச்சி அரசியல் நிலைமையைக் குறித்து விவாதித்து அரசு அமைப்பது குறித்தும், ஜனநாயக நாடுகளில் கடைபிடிக்கப்பட்டு வருகின்ற மரபுகளைக்

குறித்தும் விளக்குவதற்கு ஏற்புடையதாக இருக்கும் என்று திரு. நேசமணி அனைவரையும் அழைத்தார். கூட்டம் 12.03.1952-ல் திட்டமிட்டபடி கூடியது. கூட்டத்திற்கு காங்கிரஸ் (காளை) வர மறுத்து விட்டது. சோசியலிஸ்டுகள் இருவரை (தோவளை மற்றும் அகஸ்தீஸ்வரத்தில் தேர்வு பெற்றவர்கள்) மட்டும் பார்வையாளர்களாக அனுப்பி வைத்தனர். ஐக்கிய முன்னணித் தலைவர்கள் T.V.தாமஸ் (கம்யூனிஸ்டு) தலைமையில் கலந்துக் கொண்டனர். சுயேட்சை உறுப்பினர்களும் வந்திருந்தனர். தி.த.நா.கா உறுப்பினர்கள் அனைவரும் திரு. நேசமணியின் தலைமையில் கலந்துக்கொண்டனர். திரு.நேசமணி தலைமையேற்று, விளக்கவுரையாற்றினார். கூட்டத்தில் கூட்டு மந்திரிசபை ஒன்றை அமைக்கலாம் என்று ஒத்துக் கொள்ளப்பட்டது.

ஆனால் பொது செயல் திட்டம் ஒன்று வேண்டுமே என்ற பிரச்சனை எழுந்த உடனே திரு. T.V. தாமஸ் ஐக்கிய முன்னணி முன்பே வகுத்திருந்த செயல் திட்டத்தை கூட்டத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தார். சோஷியலிஸ்டுகளின் திட்டமும் எடுத்து வைக்கப்பட்டது. நாட்டு மன்னர்களுக்கு அளிக்கப்படுகின்ற மானியத்தொகை, தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் வகுத்துத் தந்த கிராம புனர் நிர்மாணத்திட்டம் தவிர மற்றவை ஐக்கிய முன்னணி திட்டங்களைப் போன்றே இருந்தன. “புன்னப்பரா வயலார்” படுகொலைகளில் தண்டிக்கப்பட்டிருந்த ஆயுள் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற ஐக்கிய முன்னணியினரின் கோரிக்கையில் சோஷியலிஸ்டு கட்சித் தலைவர் திரு. பட்டம் தாணுபிள்ளைக்கு உடன்பாடு இல்லை. இதனால்தான் அவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. தி.த.நா.கா. (குடம்) தேர்தல் பிரகடனத்தில் சொல்லப்பட்டிருந்த அணைக்கட்டுகள், பட்டணம் கால்வாய், நெய்யாறு இடதுகரைக் கால்வாய், சிற்றாறு அணை, குழித்துறை லிப்ட் இறிகேஷன் போன்ற முக்கியப் பாசனத்திட்டங்கள், அநியாயத் தீர்வையான மணியம்கரம் போன்ற

பிராந்திய பிரச்சனைகள் இதில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதை "21 அம்சத்திட்டம்" என்று நாமக்காரணம் செய்யப்பட்டது.

ஆனால் இந்தத் திட்டம் நிறைவேறவில்லை. இந்தக் கூட்டம் நடந்த மூன்றாவது நாள் ராஜப் பிரமுகர் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு.எ.ஜே.ஜாண் அவர்களை அழைத்து அமைச்சரவை அமைக்கும்படி கேட்டுக்கொண்டார். வெற்றி பெற்ற அரசியல் கட்சிகளில் அதிக இடங்களை காங்கிரஸ் (44) பெற்றிருந்தமையால் முன்னுரிமை, அக்கட்சிக்கே என்ற முறையில் ராஜப் பிரமுகர் அக்கட்சி தலைவர் திரு.எ.ஜே.ஜாண் அவர்களை அழைத்தது நியாயமானதே. ஆனால் வெகுவிரைவில் சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய கடமை அவர்களுக்கு இருந்தது.

இந்த சூழ்நிலையில் பாராளுமன்ற மேல்சபைக்கு தேர்தல் வந்தது. தி.த.நா.கா.வுக்கு 8 உறுப்பினர்கள் இருந்த நிலையில், காங்கிரஸ் கட்சியின் உபரி வாக்குகளின் துணையுடன் ஒருவரை தேர்ந்தெடுக்கலாம் என்ற நிலை உருவானதால் அந்த இடத்துக்கு A.A. ரசாக்கை திரு. நேசமணி நிறுத்தினார். அவர் வெற்றி பெற்று பாராளுமன்ற மேல்சபை உறுப்பினர் ஆனார். இப்போது தி.த.நா.கா.வுக்கு திரு.கொச்சி சட்டசபையில் 8 உறுப்பினர்களும், பாராளுமன்றத்தில் ஒரு உறுப்பினரும், பாராளுமன்ற மேலவையில் ஒரு உறுப்பினரும் இருந்தமையால் அதன் அந்தஸ்து பார்லமென்றறிக் கட்சியாக அரசியல் களத்தில் உயர்ந்து விட்டது.

## 12. தொங்கு அமைச்சரவை :

108 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தில் 44 உறுப்பினர்கள் மட்டுமே உள்ள காங்கிரஸ் கட்சி, திரு.எ.ஜே. ஜாண் தலைமையில் அமைச்சரவையை துணிந்து அமைத்தது. சட்டசபை எதிர் வரிசையில் 64 உறுப்பினர்கள் அமர்ந்திருந்தனர். இவரது பெரும்பான்மையை விரைவில் நிரூபித்திட வேண்டிய கட்டாய

சூழ்நிலையில், மேலும் 11 உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்தால்தான் அமைச்சரவை நம்பிக்கை ஓட்டெடுப்பில் பிழைக்கும். இல்லையேல் குற்றுயிராக வீழ்ந்துவிடும். "கரணம் தப்பினால் மரணம்" என்ற சூழ்நிலையில் முதல் மந்திரி ஜாணுக்கு ஆதரவு திரட்டும் பணியில் பலர், குறிப்பாக சுறியானி கிறிஸ்தவப் பிரமுகர்கள் களம் இறங்கினர்.

இந்த நிலையில் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்காது என்று பட்டம் தாணு பிள்ளையின் தலைமையிலான சோஷியலிஸ்டு கட்சியும், சோஷயலிஸ்டு கட்சியின் ஆதரவு தேவையில்லை என்று காங்கிரஸ் கட்சியும் ஜம்பமடித்துக் கொண்டனர். சோஷியலிஸ்டு கட்சிக்கு சட்டசபையில் 12 உறுப்பினர்கள் உண்டு. இந்த கட்சியையும் சேர்த்து ஐக்கிய முன்னணிக் கட்சிக்கு 34 உறுப்பினர்கள் இருந்தனர். ஸ்திரத் தன்மையற்ற அந்த அரசியல் சூழ்நிலையில்தான் 12.03.1952 அன்று கன்னியாகுமரியில் திரு.எ.நேசமணி அழைத்துக் கூட்டிய ஆலோசனைக் கூட்டத்திற்கு கம்யூனிஸ்டு கட்சியினர் அனைவரும் கலந்து கொண்டமையால், திரு.நேசமணி கம்யூனிஸ்டுகளுடன் இணைந்துவிட்டார் என்றொரு தவறான எண்ணம் காங்கிரஸ்காரர்களிடம் புகைந்து கொண்டிருந்தது. இருப்பினும் இவரது உதவியை நாடுவதற்கு காங்கிரஸ் முயற்சி எடுப்பதற்குத் தயங்கவில்லை.

இச்சூழ்நிலையில், இந்தியக் குடியரசின் முதல் பாராளுமன்றக் கூட்டம் டில்லியில் 13.05.1952-ல் கூட்டப்பட்டது. அதில் கலந்து கொள்வதற்காக திரு. நேசமணி முன் கூட்டியே புறப்பட்டுவிட்டார். இவரைத் தொடர்ந்து மேலவை உறுப்பினராக தேர்வு பெற்றிருந்த திரு. அ. அப்துல் ரசாக்கும் 10.05.1952 காலையில் டெல்லி சென்றடைந்தார். திரு. நேசமணி 12.05.1952 அன்று காலையில் டில்லி வந்துவிட்டார். சம்பிரதாயப்படி இரு சபைகளும் கூட்டாக நடந்து முடிந்த பிறகு திரு.கொச்சி எம்.பியான திரு. கே.பி.மாதவன்நாயரும், காங்கிரஸ் பொதுச்சபையின் பொதுச்

செயலர்களில் ஒருவராகிய திரு. மல்லையாவும் திரு.எ.நேசமணியை சந்தித்துப் பேசினார்கள். திரு. கொச்சியில் காங்கிரஸ் அமைச்சரவை அமைவதற்கு தி.த.நா.கா. சட்டமன்ற உறுப்பினர் 12 நபர்களின் உதவியை அவர்கள் கேட்டனர். இதைக் குறித்து திரு. நேசமணி திரு. அப்துல் ரசாக்கிடம் ஆலோசனை கலந்தார். திரு. அப்துல் ரசாக் இந்த ஆலோசனைக்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஏனெனில் இந்த ஏற்பாடு 12.03.1952 அன்று கன்னியாகுமரியில் திரு.நேசமணியால் கூட்டப்பட்டு எடுக்கப்பட்ட சில முடிவுகளுக்கு எதிரானது என்று சுட்டிக்காட்டினார்.

ஆனால் திருவனந்தபுரத்தில் திடீரென ஒரு நிகழ்ச்சி அரங்கேறியது. 1952 மே 24-ம் தேதி திரு. சிதம்பரநாதன் நாடார் ராஜ பிரமுகர் அரண்மனையில் (அன்று திருவிதாங்கூர் மன்னர் ஸ்ரீ சித்திரை திருநாள் மகாராஜாதான் திரு.கொச்சியின் ராஜபிரமுகராக – கவர்னராக இருந்தார்) காலை 11 மணி அளவில் வன இலாகா மற்றும் வருவாய்த்துறை அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார். அவர் விரும்பியதால் திரு. அனந்தன் பிள்ளை என்ற இடைநிலை அலுவலர் ஒருவரை அவருக்கு அந்தரங்கச் செயலாளராக நியமிக்கப்பட்டார். அவர் தமிழனுக்கு தமிழனாகவும், மலையாளிக்கு மலையாளியாகவும் செயல்பட்டார். இவர் பூர்வீகம் நாஞ்சில் நாடு ஆகும். இவர் நல்லவர், வல்லவர் என்றாலும், பழி வாங்கும் குணமுடையவரும், தனது காரியங்கள் நிறைவேறுவதற்காக எதையும் செய்திடத் துணிந்தவர் என்பதும் நிஜம். (வெள்ளாம்பிள்ளைச் சமுதாயக்குணம் இதுதானே!)

அன்று திரு.பி.எ.காசீம் என்பவர் வருவாய்த்துறையில் இரண்டாவது உறுப்பினர், நேர்மையானவர், செயல்வீரர். இவர் மீது திரு. அனந்தன் பிள்ளைக்கு என்ன வஞ்சகமோ, கோபமோ தெரியாது. ஆனால் அமைச்சர் திரு. சிதம்பரநாதனுக்கு இவரைப் பற்றி எதுவும் அறிந்து கொள்வதற்கான முழு சந்தர்ப்பம் இன்னும் கூடி வரவில்லை. அலுவல் காரணமாக உறுப்பினர் வெளியூர் செல்வதற்காக புறப்பட்டுக்

கொண்டிருக்கும்போது, அமைச்சர் ஒரு விளக்கத்திற்காக அவரை அழைத்திருக்கிறார். ஆனால் அழைப்பை மதித்து அவர் அமைச்சரை வந்து கண்டு விளக்கம் தரவில்லை. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார் திரு. அனந்தன் பிள்ளை. உறுப்பினர் மீது உடனடியாக குற்றப்பத்திரிகை தயாரித்து, ஒரு ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டு விட்டது. இதை அமைச்சரவையும், இலாகா அலுவலர்களும் சீரணித்துக் கொள்ளவில்லை. இவ்வாறு பல தரக்குறைவான செயல்களுக்கு அமைச்சர் ஆளாகிவிட்டார். ஆயினும் பல தமிழர் பிரச்சனைகளுக்கு நிவாரணமும் அளித்துள்ளார். வட மாவட்டங்களில் உள்ள சில தமிழர்களின் பிரச்சனைகளையும் தான் கையிலெடுத்து தீர்வுகண்டது உண்டு. பல தமிழர்களுக்காக சக அமைச்சர்களிடமிருந்தும் சில பிரச்சனைகளுக்கு தீர்வும் கண்டுள்ளார்.

இருப்பினும் தமிழ் பிரதேசங்களில், குறிப்பாக தென் தாலுகாக்களில் எரிந்து கொண்டிருந்த பல பொதுப் பிரச்சனைகள் தூங்கிக் கொண்டுதான் இருந்தன. அவைகளில் முக்கியமானவைகளான சிற்றாறு,- பட்டணம் கால்வாய், குழித்துறை (விளத்துறை) நீரேற்றுத் திட்டம், நெய்யாறு இடதுகரைக் கால்வாய் திட்டம், தமிழ் பிரதேசப் புனரமைப்புத் திட்டம், சிதைவுண்ட தமிழ் கல்வி நிலையங்கள் புனரமைப்புத் திட்டங்கள் போன்ற பல திட்டங்கள் ஆழ் உறக்கத்தில்தான் இருந்தன. தவிரவும் இவரது அதிகார வரம்பிற்குள் இருந்த தமிழ் பிரதேசங்களான தேவிகுளம், பீர்மேடு பகுதிகளில் மலையாளிகள் குடியேற்றங்கள் மேலும் தீவிரமடைந்தன.

> “அப்படி வேகமாக நடந்தால்தான் அந்த மலைப் பிரதேசத்தில் நிலைத்திருந்த தமிழ் பெரும்பான்மை பலம் முறிவுண்டு சிதறும். திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் பிரதிநிதி ஒருவர் அமைச்சரவையில் இருந்தும் இந்த குடியேற்ற வேகத்தைத் தடை செய்ய முடியவில்லை என்று பல அரசியல் வட்டாரங்கள் ஆச்சரியப்பட்டன. அங்கு வாழ்ந்த தமிழர்களோ கொதித்தார்கள். ஒரு தமிழ்

மந்திரியின் மேல் நோட்டத்திலா தங்களுக்கு இத்தனை கொடுமைகள், வழக்குகள் என்று ஆத்திரம் அடைந்தார்கள்!”.

***(எ. அப்துல் ரசாக் – நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம் – பக்கம் 169-170)***

ஆனால், அமைச்சர் திரு.சிதம்பரநாதனுக்கு இவைகளைத் தடுத்து நிறுத்துவதற்கான தார்மீக பலம் அமைச்சரவையில் இருந்து கிடைக்கவில்லை. காங்கிரஸ் ஆட்சி நடந்து கொண்டிருந்த திருவிதாங்கூர் – கொச்சியில், தி.த.நா.கா-வும் சேர்ந்து அமைச்சரவையில் அங்கம் பெற்றது என்றாலும் அது ஒட்டு உறுப்பினர் நிலை மட்டும் ஆகும். அதனால் தமிழ் அமைச்சரின் பிடிப்பு முழுவதாக அரசாங்கத்தில் இல்லை என்பதால் அவருக்கு கொள்கை ரீதியான செயல் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இயலவில்லை. அதனால் தென்தாலுகா பாசனத் திட்டங்கள், தேவிகுளம், பீர்மேடு மலையாளிகள் குடியேற்றம் போன்ற முக்கிய பிரச்சனைகளில் அமைச்சர் சிதம்பரநாதனுக்கு "சொல்" வைத்துக்கொள்வதற்கு இயலவில்லை. எனவேதான் இந்த அமைச்சரவையில் தான் தொடர்வதால் தமிழர்களுக்கு எத்தகைய நன்மையும் இல்லை என்பதை உணர்ந்து கொண்ட அவர், இது குறித்து விவரமாக, லீடர் திரு. நேசமணிக்கு கடிதம் எழுதினார். தவிரவும், திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் திருவிதாங்கூர்-கொச்சி காங்கிரஸ் சட்டசபை கட்சியில் செயல்படுவதைத் திருவனந்தபுரம் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி (மலையாளிகளால் நிரம்பப் பெற்ற) விரும்பவில்லை. எனவே தனது பதவியை துறப்பது என்ற நிலைக்கு தமிழ் அமைச்சர் வந்துவிட்டார்.

இந்த வேளையில் திருவிதாங்கூர் அரசு, 1953 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் நகராட்சித் தேர்தலை நடத்துவது என்ற அறிவிப்பை வெளியிட்டது. இதைக் கேட்டதும், திருவனந்தபுரம் மாவட்ட காங்கிரஸ்காரர்கள் துவண்டு போயினர். ஏனெனில் அக்கட்சியினர் ஸ்தாபன முறையில் கட்சியை வலுப்படுத்துவதை விட்டு விட்டு, தி.த.நா.கா. அமைச்சரை குறை கூறுவதிலேயே

தங்களது பணியை விரயம் செய்து கொண்டிருந்தனர். தேர்தல் அறிவிப்பு வெளியானதும் யாது செய்வது என்று தயங்கியவர்கள், திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசுடன் தேர்தல் உடன்பாடு செய்து கொள்ள எண்ணினர். எட்டு பேரைக் கொண்ட ஓட்டு அங்கத்தினர்களில் ஒருவர்தான் தி.த.நா.கா. தலைவர் திரு. இராமசுவாமிபிள்ளை. அதன் துணைத் தலைவர்தான் அமைச்சர் ப. சிதம்பரநாதன்நாடார். இவர்கள் மட்டும் தேர்தல் கூட்டுக்கு இசைவு தந்துவிட்டால் தேர்தல் ஒப்பந்தம் ஆகிவிடுமா? அதற்குரியவர் இசைவு தர வேண்டாமா? டில்லி வாழ் மலையாளப் பிரமுகர்கள் இதனிமித்தம் திரு. அப்துல் ரசாக்குடனும், திரு.எ.நேசமணியுடனும், திருவனந்தபுரம் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் வேண்டுகோளுக்கு இணக்கம் தெரிவிக்குமாறு வற்புறுத்தினர். ஆனால் தி.த.நா.கா. பொதுக்குழு வேறுவிதமாக இதனை அணுகியது. அதன் தீர்மானத்தின் அடிப்படையில் தி.த.நா.கா. தேர்தல் கூட்டு ஏதும் வைத்துக் கொள்ளாமல் தனித்தே நகர்மன்றத் தேர்தலை சந்திப்பது என்று முடிவு எடுத்தது. அதற்கு காரணம் உண்டு. 1952 அக்டோபர் மாதம் 8-ம் நாள் மார்த்தாண்டத்தில் வைத்துக் கூடிய தி.த.நா.கா பிரதிநிதிகள் மாநாடு ஸ்தாபன சம்பந்தமாக ஒரு தீர்மானம் எடுத்திருந்தது. அதனடிப்படையில், திருவிதாங்கூர்-கொச்சி தமிழ் பிரதேசங்களுக்கென ஒரு தனிப் பிரதேச காங்கிரஸ் (P.C.C.) கமிட்டி அமைக்க வேண்டுமென்றும், அந்த அடிப்படையைத் தவிர்த்து வேறு எந்த அடிப்படையிலும் தி.த.நா.கா, காங்கிரசோடு இணையாது என்றும் தீர்மானிக்கப்பட்டது. எனவே அத்துடனே தேர்தல் ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை. நகர்மன்றத் தேர்தல்கள் முடிந்துவிட்டன. மாநிலத்தின் வட பாகங்களில் காங்கிரசுக்கு அமோக வெற்றி கிடைத்தது என்றாலும் தென் திருவிதாங்கூரில் அதற்கு ஒரு இடம் கூட கிடைக்கவில்லை. ஏன், தலைநகரான திருவனந்தபுரம் மாநகராட்சியைக் கூட கைப்பற்ற அதனால் முடியவில்லை. அதை சோஷியலிஸ்டு கட்சித் தலைவர் பட்டம் தாணுபிள்ளை தட்டிச்

சென்றுவிட்டார். ஆயினும் வட மாவட்ட வெற்றிகளைக் கொண்டு, மீண்டும் சட்டசபைத் தேர்தல் வருவதானால் 70 இடங்களையாவது காங்கிரஸ் பிடித்துவிடும் என்று பல நோக்கர்கள் ஆருடம் கூறினர்.

கார்ப்பரேஷன் தோல்விச் சுரம் கண்டிருந்த காங்கிரஸ்காரர்கள், தங்களது வெறுப்பை தி.த.நா.கா.-வினர் மீது, குறிப்பாக தமிழ் அமைச்சர் மீது ஏவினர். காங்கிரஸ் கட்சியில் அசோசியேட் உறுப்பினர்களாகச் சேர்ந்திருக்கின்ற தி.த.நா.கா. உறுப்பினர்கள் ஒனறில் ஸ்தாபனத்தில் உழைக்கும் உறுப்பினர்களாகச் சேர வேண்டும் அல்லது அவர்களை காங்கிரஸ் கட்சியிலிருந்தும், அமைச்சரவையில் இருந்தும் வெளியேற்றி விட வேண்டும் என்று அறை கூவல் விடுத்தது திருவனந்தபுரம் காங்கிரஸ் கமிற்றி. இதன் மீது இறுதி முடிவு எடுப்பதற்கு இயலாமல் தவித்தது பிரதேச காங்கிரஸ். அதன் தலைவர் திரு. மாதவன் நாயரும் என்ன செய்வதென்று அறியாமல் குழம்பி நின்றார்.

## 13. தந்தை வீடு திரும்புதல் :

தகப்பன் வீட்டைவிட்டு, அடுத்தவன் பசப்பு மொழிகளை நம்பி ஓடிப் போனவர்கள் இப்பொழுது அரசியல் அனாதைகளாக, வெளியில் தலைகாட்ட முடியாமல் முக்காடிட்டு முடங்கிக் கிடந்தனர். மீண்டும் தகப்பன் வீடு திரும்புவதற்கான முயற்சியில் இறங்கினர். ஆனால் திரு.நேசமணியை நேரில் சந்தித்து மன்னிப்பு கேட்டு, திரும்பவும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்பதற்கு இவர்களுக்கு மனத் தெம்பு இல்லை. அவரைச் சென்று பார்ப்பதற்கு இவர்கள் கூச்சப்பட்டனர், பயந்தனர். அதனால் முதலில் திரு.அப்துல் ரசாக்கையும், பிறகு திரு.ஆர்.பொன்னப்பன் நாடாரையும் அணுகினார்கள். இந்த முயற்சி திரு.தாணுலிங்கம் மற்றும் அவர் பிரதம தொண்டர் பி.எஸ். மணி ஆகியோரின் வேண்டுதல் பெயரில் நடந்தது. திரு. தாணுலிங்கநாடார், திரு. பொன்னப்ப நாடாரைப் பலமுறை நேரில் சென்று பேசியுள்ளார். ஆனால் யாரும் திரு.நேசமணியிடம் இது பற்றிக் கூறவில்லை. அவர்களும் கூறுவதற்கு அஞ்சினர்.

டெல்லியில் பட்ஜெட் கூட்டம் 1952 மார்ச் மாதத்தில் கூட இருந்தது. அதனால் திரு.நேசமணி நாகர்கோவில் வந்து விட்டார். திரு.எ.அப்துல்ரசாக் டெல்லியில் தங்கிவிட்டார். இதற்கிடையில் அமைச்சர் திரு.ப.சிதம்பரநாதன், திரு. கொச்சி அரசு அலுவல் நிமித்தம் டெல்லி சென்றார். அவர் திரு.ரசாக்கை சந்தித்து ஓடிப் போனவர்களின் வருகை முயற்சியைக் குறித்த விவரங்களை அவரிடத்தில் எடுத்துரைத்தார். அமைச்சர் திரு.சிதம்பரநாதனுக்கு ஓடுகாலிகளை மீண்டும் சேர்த்துக் கொள்வதில் எதிர்ப்பு இருந்தது. திரு.அப்துல் ரசாக்குக்கும் இதில் இணக்கமில்லை. திரு.ப.தாணுலிங்கம் குழுவை மீண்டும் சேர்த்துக் கொள்வது வருங்காலங்களில் பல சிக்கல்களை உருவாக்கிவிடும் என்பதை அவர் திரு.நேசமணிக்கு முன்பொரு வேளையில் விளக்கியிருந்தார். இருப்பினும் 1953 மார்ச் 29-ம் நாள் பழைய பலதர கும்பல் தி.த.நா.கா.-வில் இணைந்து விட்டதாக அறிக்கை வெளியிடப்பட்டது. இது எவ்வாறு நடந்தது என்று பலர் ஆதங்கப்பட்டனர். “தேர்தலில் கைப்பொருள் இழந்து நலிவுற்று நின்ற தாணுலிங்கத்தின் மீது அனுதாபம் கொண்ட திரு. நேசமணியின் நண்பர்களான ரெவரென்டு ஜேம்ஸ்-ம் திரு. நல்ல தம்பி நாடாரும் அவரை கூட்டிச் சென்று திடீரென திரு. நேசமணி முன் நிறுத்திவிட்டார்கள். தன் எதிரே கண்கலங்கி நின்ற தாணுலிங்கத்தை ஏறெடுத்துப் பார்த்தார் திரு. நேசமணி. அவரும் கண் கலங்கியிருப்பார். அவருடைய நெஞ்சத்திலும் ஈரம் அதிகம் உண்டு என்பது எனக்குத் தெரியும். பெரும் படைத்தலைவன் அலெக்சாண்டர் போரஸ் மீது பரிவுணர்வு காட்டினான் அல்லவா! அதே பாணியில் திரு.நேசமணியும் அவர்மீது பரிவுணர்வு காட்டிவிட்டார். ஆனால் திரு.தாணுலிங்கம் போரஸ் அல்ல என்பதை நான் நேசமணிக்கு எழுதிய கடிதத்தில் அப்போதே எடுத்துக் காட்டியிருந்தேன். இதை ஒத்துக் கொள்வதற்கு அவருக்கு 10 ஆண்டுகள் பிடித்தன. 1962-ல் அவரே இதை நெருங்கிய பல நண்பர்களிடம் சொல்லி முறையிட்டிருக்கிறார்”. ***(அப்துல் ரசாக் – நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம் – பக்கம் – 181)***

திரு. தாணுலிங்கம் மீண்டும் தி.த.நா.கா.-வில் வந்து உறைந்த பிறகு, திரு.குஞ்சன் நாடாரும் அதை முன்னுதாரணமாகக் கொண்டு திரு.நேசமணியைக் கண்டு அபயமிட்டு தி.த.நா.கா.-வில் 1953 ஏப்ரலில் வந்து சேர்ந்து கொண்டார். இதனால் தி.த.நா.கா.-வின் பலம் சட்டசபையில் 9 ஆக உயர்ந்தது.

## 14. அமைச்சர் ராஜினாமா :

மார்த்தாண்டம் கூட்டத்தில் நிறைவேறப்பட்ட தனிப் பிரதேச காங்கிரஸ் கமிட்டி கோரிக்கைக்கு காங்கிரஸ் மேலிடம் எவ்வித முடிவும் எடுக்கவில்லை. அதற்கென குறிக்கப்பட்டிருந்த காலக்கெடு 1953 செப்டம்பர் ஆகும். அது நெருங்கி வந்து கொண்டிருந்தது. மேலிடத்திலிருந்து எவ்விதத் தகவலுமில்லையாதலால், தொடர்ந்து மேல் நடவடிக்கை எடுப்பதற்காக தி.த.நா.கா.-வின் பொதுக்குழுவை அழைத்துக் கூட்டப்பட்டது. இதை மலையாள காங்கிரசார் ஏளனம் செய்தனர். அமைச்சரவையில் இருந்து தி.த.நா.கா. வெளியேறுவதாவது! நடக்கக் கூடியதா? என்று காங்கிரஸ் தலைவர் திரு. மாதவன் நாயர் கேலி செய்தார். அத்தகைய ஒரு முடிவுக்கு வந்தாலும், தமிழ் அமைச்சரும், அவரது கூட்டாளிகளில் சிலரும் சட்டசபையை விட்டு விலகமாட்டார்கள் என்று ஆணித்தரமாக பேசப்பட்டது. இதை டில்லியிலும் காங்கிரஸ் வட்டாரங்கள் நம்பின. ஆனால் திரு.ஜாண் மந்திரிசபையை காப்பாற்ற வேண்டும் என்ற சிந்தனையுடைய ஒரு சட்டமன்ற உறுப்பினர் அன்றும் தி.த.நா. காங்கிரசில் இருந்தார். அவர்தான் திரு. சைமன், எம்.எல்.ஏ. தி.த.நா.கா-வில் ஏற்பட்டிருந்த பிளவு தற்பொழுது நீங்கி ஒன்றாக இயங்கி வரவிருந்த வேளையில் மீண்டும் ஒரு பிளவை உருவாக்குவதற்கு இவரதுகூட்டம் முயற்சித்து வந்தது. இந்த குழப்பமான சூழ்நிலையில், தி.த.நா.கா. பார்லமென்றறி கட்சித் தலைவர் திரு.எ.நேசமணி டெல்லியில் அகப்பட்டுவிட்டார். இந்தச் சூழ்நிலையில்

தி.த.நா.கா பொதுக்குழு கூட்டத்தை தலைவர் P.ராமசுவாமி பிள்ளை 1953 செப்டம்பர் 13-ம் தேதி கூடுவதற்காக நாள் குறித்துவிட்டார். இத்தருணத்தில், நிலைமைகள் சீர்கெட்டு வருவதை உணர்ந்த திரு.டி.ஞானசிகாமணி 02.09.1953-ல் திரு. நேசமணிக்கு கடிதம் எழுதி, அவரை உடனடியாக நாகர்கோவில் வர வேண்டும் என்று வேண்டினார்.

> "Sri Chidambaranathan Nadar met me today and apprised me of the contents of the letter sent to him. He was in a mood to tender his resignation forth with without any kind of hesitation, but I insisted that he must wait until after the meeting is over.
>
> The Assembly is meeting on the 22nd September and you will certainly be here before this. The question of Mr. Chidambaranathan Nadar leaving the cabinet without bringing down the whole ministry is to be considered in the light of the developments that are taking place just now and so it is of utmost importance that we all put our heads before any direction is given by you". ***(Dr. D. Peter – Liberation of the Oppressed – Page 205)***

திரு.நேசமணி, இக்கடிதம் கிடைத்த உடனே திரு.அப்துல் ரசாக்கிடம் ஆலோசனை கலந்து, ஒரு நீண்ட அறிக்கை தயாரித்து அன்றைய பொதுச் செயலாளர் திரு.பொன்னப்பநாடாருக்கு அனுப்பிவைத்து அக்கடிதத்தை பொதுக்குழுவில் படித்துக்காட்டப் பணித்திருந்தார். அவ்வாறு அக்கடிதம் அங்கே படிக்கப்பட்டது. இதனால் அமைச்சர்குழாமை தாங்கிநின்றவர்கள் எதிர்பார்த்த எதிர்ப்பு பிசுபிசுத்துப் போயிற்று. இரணியல் தீர்மானத்தின் அடிப்படையில் தி.த.நா.கா பிரதிநிதி அமைச்சர் பதவியை உடனே ராஜினாமா செய்துவிட்டு வெளியேறி விட வேண்டும் என்று கூட்டம்

முடிவெடுத்தது. இதன் அடிப்படையில் அமைச்சர் திரு.சிதம்பரநாதன்நாடார் 15.09.1953 அன்று தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு திரு. ஜாண் அமைச்சரவையில் இருந்து வெளியேறினார். இவரைத் தொடர்ந்து தி.த.நா.கா சட்டசபை உறுப்பினர்கள் 9 பேரும் சட்டசபை காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறினர். திரு. நேசமணியிடமிருந்து வந்த அறிக்கை மட்டும் அந்த கூட்டத்தில் படிக்கப்படாமலிருந்திருந்தால், பொதுக் குழு இந்த முடிவை எடுத்திருக்குமா என்பது சந்தேகமே? ஒட்டாத உறவு உருப்படாது என்பார்கள். அது இங்கே நடந்தாயிற்று.

## 15. திரு. காமராசரின் இயலாமை :

புதுடில்லியில் இருந்து திரு. நேசமணியும், திரு. அப்துல் ரசாக்கும் ஊர் திரும்புவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையில், பாராளுமன்ற மத்திய கூடத்தில் வைத்து மதிராசி காங்கிரஸ் தலைவர் திரு. காமராசரை சந்திக்க நேர்ந்தது. அமைப்பு சார்பாக திரு.கொச்சி காங்கிரசுடன் ஏற்பட்டிருந்த சிக்கலைக் குறித்து அவர் விவாதித்தார். காங்கிரஸ் நிர்வாகக் கமிற்றி உறுப்பினர் என்ற நிலையில் திரு. காமராசர் சில விளக்கங்களைத் தெரிவித்துள்ளார்.

> “சமீபத்தில் திருத்தப்பட்ட காங்கிரஸ் விதிகளின் படி ஒரு மாநிலத்தில் ஒரே சமயத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட பிரதேசக் கர்ங்கிரஸ் கமிட்டிகள் அமைப்பதற்குத் தடையில்லையென்றும், விசேஷ காரணங்கள் காட்டி காங்கிரஸ் காரியக் கமிட்டியின் அனுமதி மட்டுமே பெற வேண்டும்” என்றும் அவர் விளக்கியுள்ளார். ***(A.A. ரசாக் – பக்கம் – 185)***

இதைக் கேட்ட திரு. நேசமணி, இப்பிரச்சனையை அவரே தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். ஆனால் இப்பிரச்சனையை திரு. காமராசர் பெரிய பிரச்சனை என்று

கருதாமல் விட்டுவிட்டார். மலையாளி காங்கிரசாரின் பேராதிக்கத்தில் அகப்பட்டு தி.த.நா.கா-வினர் உழலட்டும் என்று எண்ணியிருப்பார் போலும்.

1953 செப்டம்பர் 22-ம் நாள் திரு. கொச்சி சட்டமன்றம் கூடியது. எதிர் கட்சிகள் சார்பில் தாக்கலாகியிருந்த இரண்டு நம்பிக்கையில்லாத தீர்மானங்களும், மற்றும் அமைச்சரவை சார்பில் தாக்கலாகியிருந்த நம்பிக்கைக்கோரும் தீர்மானமும் அவையின் முன் விவாதத்துக்கு வைக்கப்பட்டிருந்தன. அமைச்சரவை தாக்கல் செய்திருந்த நம்பிக்கைக்கோருகின்ற தீர்மானம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு காரசாரமான விவாதங்கள் நடந்து கொண்டிருந்தன. அன்று நடுப் பகலில், திடீரென திரு.காமராசர் புதுடில்லியில் இருந்து விமானத்தில் திரு.நேசமணியுடன் திருவனந்தபுரம் வந்தார். அவருடன் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. லால் பகதூர் சாஸ்திரியும் வந்திருந்தார். மூவரும் விமானத்திலேயே நிலைமையைக் குறித்து பேசியுள்ளனர். அதற்குப் பிறகு திரு.காமராசர் தி.த.நா.கா சட்டமன்ற உறுப்பினர்களை, செங்கோட்டை கரையாளர் வீட்டிற்கு அழைத்து அவர்களிடமும் தனியாகப் பேசினார். திரு.நேசமணியும் அக்கூட்டத்தில் சென்று கலந்துகொண்டார். திரு.கொச்சி காங்கிரசுடனே இணைந்து செயல்படுவதற்கு திரு. நேசமணிதான் மனமில்லாது இருக்கிறார், மற்றவர்கள் அதற்கு இணக்கமாகவே உள்ளனர் என்ற நினைப்பில்தான் திரு.காமராசர் தி.த.நா.கா சட்டமன்ற உறுப்பினர்களை தனியாக அழைத்துப் பேசுவதற்கான காரணம் ஆகும். ஆனால் அது தவறான கணிப்பு என்று சீக்கிரமாக அவரே புரிந்து கொண்டார். கட்சி ஒட்டுமொத்தமாக ஒரே கருத்தையே வலியுறுத்தியது. எனவே திரு. காமராசர் கூறுவார்.

“ஸ்தாபன இணைப்பு சம்பந்தமான பிரச்சனையை விரைவில் முடிவு செய்வதாகவும், அதுவரை காத்திருக்காமல் இப்பொழுதே மந்திரி சபையை ஆதரிக்குமாறும் திரு. காமராசர் கேட்டுக்கொண்டார்”. “இல்லையெனில் நம்பிக்கைத் தீர்மானம்

ஓட்டுக்கு வரும்போது நடுநிலை வகித்திட வேண்டும்" என்றும் சாமர்த்தியமாக யோசனை பகர்ந்தார்".

இதில் அமைந்து இருந்த கெட்டிக்காரத்தனம் என்ன என்று நமது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விசித்திரமாகத் தெரிந்தது. அவர்கள் திருப்பிக் கேட்டனர்;

"... இந்த வேளையில் தி.த.நா.கா கோரிக்கை சாவதானமாகக் காங்கிரஸ் மேலிடத்தில் நிச்சியிக்கப்படுமென்றால், திருவனந்தபுரம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தீர்மானம் என்னவாகும்" என்ற நியாயமான கேள்வியை திரு. காமராசரிடம் திருப்பிக்கேட்டார்கள். அவருக்கு இதற்கு சரியான பதில் கூற முடியாமல் டில்லி திரும்பி விட்டார். அவர் பறந்து கொண்டு இருக்கும் போதே அமைச்சரவை கோரிய நம்பிக்கைத் தீர்மானம் ஆறு வாக்குகளில் தோல்வியைக் கண்டது. உடனே திரு. ஜாண் மந்திரிசபையும் ராஜினாமாவை ராஜப்பிரமுகரிடம் சமர்ப்பித்து விட்டது".

எதிர் கட்சி அணிகளில் மாற்று அமைச்சரவை அமைப்பது குறித்து ஆலோசனைகள் நடந்து கொண்டு இருந்த வேளையில், அன்று இரவே ராஜப்பிரமுகர் சட்டசபையை கலைத்து ஆணை பிறப்பித்தார். முன்னாள் இரயில்துறை அமைச்சர் திரு. லால் பகதூர் சாஸ்திரி எதற்காக திருவனந்தபுரம் வந்து மௌனமாக இருந்தார் என்பதை அப்போதுதான் எதிரணியினர் உணர்ந்துக் கொண்டனர். சட்டசபை கலைக்கப்பட்டுவிட்டாலும், அமைச்சர்கள் பதவிகளில் நீடித்தனர். அதுவும் ஆறு மாதங்களுக்கு.

## 16. அசுரன் மீண்டும் அரியணையில் :

சட்டசபைக்கு மறு தேர்தல் 1954 சனவரி – பிப்ரவரி மாதங்களில் நடப்பதாக அறிவிக்கப்பட்டது. இடதுசாரி கட்சிகளான கம்யூனிஸ்டு, புரட்சி சோஷியலிஸ்டுகள், கேரள சோஷியலிஸ்டுகள், பிரஜா சோஷியலிஸ்டுகள் ஆகியவைகள் ஒரு அணியில் நின்று காங்கிரஸ் கட்சியை எதிர்ப்பதற்கு களம் இறங்கினர். இதை தகுந்த

முறையில் எதிர்கொள்வதற்கு வேண்டி தி.த.நா.கா காங்கிரஸ் துணையை பெறுவதற்கான முயற்சியில் காங்கிரஸ் மேலிடம் மீண்டும் இறங்கியது. அதற்கென காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர்களான திரு.லால் பகதூர் சாஸ்திரியும், திரு.மல்லையாவும் கன்னியாகுமரி வந்து திரு.நேசமணியையும் மற்றும் பிரமுகர்களையும் சந்தித்து பேசினர். அவர்கள் திரு.காமராசர் பல்லவியையே திரும்பத் திரும்ப எடுத்து வைத்தனர். திருவிதாங்கூர் தமிழ்ப் பிரதேசங்களை தமிழ்நாடு காங்கிரஸ் அதிகார வரம்பிற்குள் கொண்டு வரும் பிரச்சனையைத் தேர்தலுக்குப் பிறகு சாதகமாக பைசல் செய்யலாம் என்றும், அதற்கிடையில் திருவிதாங்கூர் தமிழ்த் தொகுதிகளில் வேட்பாளர்களைத் தேர்வு செய்து நிறுத்தும் பொறுப்பை மட்டும் சென்னை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு.காமராசரிடம் விட்டு விடுவதற்கு தி.த.நா.கா முன் வர வேண்டும் என்ற யோசனையை இவர்கள் முன் வைத்தனர். திருவிதாங்கூர் தமிழ் பிரதேசங்களை சென்னை தமிழ்நாடு காங்கிரஸ் வரம்பிற்குள் கொண்டு வருவதற்கு முன்பே, இப்பகுதிகளுக்கான வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் உரிமையை அதன் தலைவர் திரு.காமராசரிடம் விட்டுவிட வேண்டுமாம்? நல்ல யோசனை! அவ்வாறு நடப்பதானால், திருவிதாங்கூர் தமிழ் பிரதேசங்களை தாய் தமிழகத்துடனே சேர்ப்பது என்ற வேண்டுகோள், அதன் ஆயிரம் பிரச்சனைகளுடன் ஆயிரத்தி ஒன்று என்றாகி, முடிவில் கடலில் கலக்கிய காயம் போன்றதாகிவிடும் என்பதை நன்கு அறிந்ததால், இதற்கு தி.த.நா.கா இசைவு தரவில்லை. மார்த்தாண்டம் தீர்மானப்படி, ஸ்தாபன முறையில் தங்களது கோரிக்கையை ஏற்று, உடனடியாக திரு.கொச்சி தமிழ் பிரதேசங்களுக்கு ஒரு தனி பி.சி.சி-க்கு காங்கிரஸ் பொதுக்குழு ஏற்பு அளித்தால்தான் இந்த ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியும் என்று திட்டவட்டமாக கூறப்பட்டது. ஆனால் இந்த ஏற்பாட்டுக்கு காங்கிரஸ் பிரதிநிதிகள் ஒத்துக் கொள்ளவில்லையாதலால் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இதனால் திரு.காமராசர் தி.த.நா.காங்கிரசார் மீது, குறிப்பாக திரு. நேசமணி மீது தீராக் கோபம் கொண்டார்.

## 17. திரு. காமராசரின் மலையாளி மோகம் :

சட்டசபைத் தேர்தலில், திருவிதாங்கூர் தமிழ்த் தொகுதிகளுக்கும், திரு.கொச்சி காங்கிரஸ் சார்பில் வேட்பாளர்களை, திரு. காமராசரின் அறிவுரையின் அடிப்படையில் நிறுத்தினர். இந்த மலையாளி காங்கிரஸ் வேட்பாளர்களின் வெற்றிக்காக திருவிதாங்கூர் தமிழ் பிரதேசங்களில் திரு.காமராசரும் அவர்களது பேச்சாளப் பீரங்கிகளும் முகாமிட்டு அதி தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். எதற்காக? இங்குள்ள தமிழ்ப் பிரதேசங்கள் தாய்த் தமிழகத்தோடு இணைய வேண்டுமென்று ஆறு தலைமுறைகளுக்கு மேலாக ஆர்ப்பரித்து வந்திருக்கும் தமிழ் சமுதாயத்தின் எதிர்காலத்தை திருவிதாங்கூர் -கொச்சி காங்கிரஸ் கட்சியின் (மலையாளிகள்) குதிகால் கரண்டையோடு கட்டி விடுவதற்காக! பரந்த தமிழகத்தின் தானைத் தலைவராக தன்னைப் பாவித்துக் கொண்ட காமராசரே நேசமணியைப் பழித்துக் கூறி குறைத்துக் காட்டும் படலத்துக்குத் துவக்க உரையாற்றினார். வடிவீஸ்வரத்தில் நடந்த கூட்டத்தில் 'நேசமணி எந்த யுத்தக்களத்திற்குப் போனார்? மார்ஷல் பட்டம் அவருக்கு ("அவனுக்கு" என்று தான் பேசினார்) எவன் கொடுத்தான்? விலைக்கு வாங்குவதற்கு அது என்ன கடைச்சரக்கா? என்றெல்லாம் இகழ்ந்து பேசினார். மதராஸ் கார்ப்பரேஷன் வக்கீல் T. செங்கல்வராயன், 'நேசமணிக்கு குடியரசுச் சட்டம் மூன்றாவது ஆர்ட்டிக்கிள் சம்பந்தமாக பாடம் கற்பிக்க முன் வந்தார். அவர் வளர்ப்பு மகள் அனந்தநாயகி அம்மாள், "தம்பி நேசமணிக்கு" தங்கள் எதிர்ப்பை தாள முடியுமா என்று கேட்டு வைத்தார். (அந்த அம்மாளுக்கு திரு. நேசமணியின் மூத்த மகளின் வயது கூட இருக்காது! - அந்த நிலையில் திரு. நேசமணியை "தம்பி நேசமணி" என்று கூறி ஏளனப்படுத்தினார். அவளுக்கு "என்ன கொழுப்பு" என்று மக்கள் பேசத் தொடங்கினர். விளைவு காமராசரின் பின் துணையுடன் தமிழர் பிரதேசங்களில் களம் இறக்கி விடப்பட்ட 14 மலையாளி காங்கிரஸ் வேட்பாளர்களும்

குப்புற வீழ்ந்துவிட்டனர். தமிழர்கள் கொண்ட கவலையால் அவர்கள் வீழ்ந்து விட்டனர். திரு.கொச்சி காங்கிரஸ் இங்கே வெற்றி பெறுகின்ற ஒவ்வொரு தொகுதியும் ஐக்கிய கேரளத்துக்கு – குமரி தொட்டு காசர்கோடுவரை அடிமைப்பட்டு விடுமே என்று தமிழர்கள் கவலைப்பட்டனர். அதன் விளைவுதான் திரு.கொச்சி மலையாளி காங்கிரசின் தோல்வி. இது பெருந்தலைவருக்குத் தெரியவில்லையே! அதற்கான மதியூகம் அவருக்கு இருக்கவில்லை.

தேர்தல் முடிவுகள் வெளியாயிற்று. கலைக்கப்பட்ட சட்டமன்றத்தில் 9 பேரைக் கொண்ட தி.த.நா.கா கட்சி இப்போது அதன் பலம் 12 ஆக உயர்ந்துவிட்டது. திரு.கொச்சி காங்கிரஸ் கட்சியின் பலம் முன்னைவிட குன்றிப் போயிற்று. தமிழ் பிரதேசங்களில் அதை உயர்த்திப் பிடிப்பதற்கு திரு. காமராசரால் இயலவில்லை. திரு. நேசமணியின் மேல் மக்களுக்கு இருந்த பிடிப்பின் பிரதிபலிப்பே இந்த தேர்தல் வெற்றி. 108 பேரைக் கொண்ட முன் சட்டசபையில் 44 இடங்களைக் பெற்றிருந்த திரு.கொச்சி காங்கிரஸ் கட்சி, இப்போது 117 உறுப்பினர்களைக் கொண்ட புதிய சட்டசபையில் அது 45 இடங்களைப் பிடித்தது ஆகையால் காங்கிரஸ் கட்சிக்கு தனித்து நின்று ஆட்சி அமைக்க இயலாமற் போயிற்று. மேலிடத்திலிருந்து அமைச்சரவை அமைக்க முற்பட வேண்டாம் என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பனம்பள்ளி கோவிந்த மேனனுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

ஆகையால் வெறும் 17 பேரைக் கொண்ட பிரஜா சோஷியலிஸ்டு கட்சிக்கு காங்கிரஸ் ஆதரவு அளித்தது, அக்கட்சி தலைவர் திரு. பட்டம் தாணுபிள்ளை இரண்டாவது முறையாக திரு.கொச்சிக்கு முதலமைச்சர் ஆனார். இவரைத் தோளில் தூக்கி சுமந்தனர் காங்கிரஸ்காரர்கள் என்பதே சரியானது ஆகும். காங்கிரஸ் கட்சியின் ஆதரவோடு 16.03.1954 அன்று சோஷியலிஸ்டு கட்சி அமைச்சரவை அமைத்தது. இவ்வாறு தமிழனின் பகைவன், அவர்களின் குருதியைக் குடித்த அசுரன்

மீண்டும் அரியணை ஏறினான். அதனால் நாயர் சமுதாயம் மீண்டும் குதூகலம் அடைந்தது. அங்காங்கே வாண வேடிக்கைகளும் வெற்றி ஊர்வலங்களும், வரவேற்பு நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடந்தன.

இத்தேர்தல் திரு. காமராசருக்கு பெரும் தலைகுனிவை உருவாக்கிவிட்டது. அதனால் தி.த.நா.கா தலைவர் திரு. நேசமணியை அவர் முறைத்துக் கொண்டார். நேசமணியின் செல்வாக்கை கடுகளவேனும் சரிப்பதற்குக் இவரால் இயலாததைக் கண்டு மலையாளிக் காங்கிரசர் வியப்படைந்தனர். ஆனால் திரு.காமராசர் சும்மா இருக்கவில்லை. அவர் முதலமைச்சர் ஆன பிறகு, அகஸ்தீஸ்வரத்தில் பல நாடார் பிரமுகர்களை நேசமணிக்கு எதிராக களம் இறக்கினார் என்பது இன்று வரை இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு இறக்கிவிட்டவர்களில் முக்கியமானவர் சாமித்தோப்பு திரு. பாலகிருஷ்ணன் நாடார்.

## 18. இரண்டாம் குருச்சேத்திரம் :

குறைக்கால காங்கிரஸ் மந்திரிசபை தொடங்கி வைத்து முற்றுப் பெறாத பல திட்டங்களையெல்லாம் சிரமேற்கொண்டு முடித்து வைப்பதில் சோஷியலிஸ்டு அரசு முன்னார்வம் காட்டியது. இத்திட்டங்கள் அனைத்தும் வட திருவிதாங்கூர் - கொச்சி பிரதேசங்களில் அடங்கியவைகள் ஆகும். தென் திருவிதாங்கூரில் அதாவது திருவனந்தபுரத்துக்குத் தெற்கே, குறிப்பாக தமிழ் பிரதேசங்களில், கடந்த கால வரவு செலவு திட்டங்களில் உட்படுத்தப்பட்டு அமல் செய்யப்படாமல் வேண்டுமென்றே விட்டு விட்ட திட்டங்கள் இப்பொழுதும் அதேபோன்று உதாசீனம் செய்யப்பட்டன. காங்கிரஸ் கட்சிக்கு (மலையாளிகள்) தேவிகுளம், பீர்மேடு மலைத் தோட்டங்களில் நேர்ந்த தோல்விகளுக்கு வஞ்சம் தீர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை பி.எஸ்.பி. அரசு உருவாக்கிக் கொடுத்தது. தமிழர்களை, தமிழ்நாட்டுத்

தொழிலாளர்களை அப்பிரதேசங்களில் இருந்து விரட்டுகின்றப் பணியை பி.எஸ்.பி. அரசு தீவிரப்படுத்தியது. அரசு இயந்திரங்களை, குறிப்பாக காவல்துறையை முடுக்கிவிட்டு, தமிழ் தலைவர்கள், தொழிலாளர்த் தலைவர்கள், சங்க உறுப்பினர்கள் போன்றோர் மீது பொய் பிராதுகளை காவல்துறையினர் புனைந்து மலை அடிவாரங்களிலுள்ள நீதிமன்றங்களுக்கு அலைய வைத்து அலைக்கழித்தனர். இதனால் தமிழர்கள் இடம் பெயர்ந்து போகத் தொடங்கினர். இவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதற்கு தாய் தமிழக அரசியல் வட்டாரத்தினரும் முன் வராத நிலையில் தி.த.நா.கா தலைவர்கள் களமிறங்க திடம் கொண்டனர்.

முதலாம் ஐந்தாண்டு திட்டத்தில் (1951-1955) வருடந்தோறும் உட்படுத்தப்பட்டு வந்த பெருஞ்சாணி அணைத் திட்டம், நெய்யாறு இடதுகரை காய்வாய் வெட்டுதல் போன்ற விவசாய மேம்பாட்டுத் திட்டங்கள் முடக்கி வைக்கப்பட்டிருந்தன. இத்திட்டங்களுக்கான பட்ஜெட் நிதியை முடக்கிவிட்டு, அந்நிதியை வடதிருவிதாங்கூரில் புதிய திட்டங்களுக்குக் திருப்பியதை, மீண்டும் பட்ஜெட் திட்டங்களுக்கு திருப்பிவிட வேண்டும் என்ற கோரிக்கை மனு ஒன்று 31.03.1954 அன்று முதலமைச்சர் திரு. பட்டம் தாணு பிள்ளைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

கண் துடைப்பிற்காக மட்டும் சிற்சில திட்டங்களை பட்ஜெட் கோரிக்கைளில் உட்படுத்திவிட்டு அப்பால் பாராமுகமாக இருந்து விட்டு அவைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையை மனப்பூர்வமாக நழுவ விடுவதும், வழக்கமாகி வந்திருக்கிறது. அதுபோல அல்லாமல் முன் பட்ஜெட் கோரிக்கைகளில் உள்ளிட்ட திட்டங்களையாவது உடனடியாக "தரையிலே காட்ட முன் வர வேண்டும்" என்றும், தவறினால் வேறு முறைகளில் அவைகளின் கைகாரியத்திற்காகத் தாங்கள் செயல்பட வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டுவிடும்" என்றும் குறிப்பிட்டிருந்தனர். இந்த மனுவில் பார்லமென்ற்றுக் கட்சி உறுப்பினர்கள் பதினான்கு பேரும் கையொப்பமிட்டிருந்தனர்.

இதைக் கண்ட முதலமைச்சர் பட்டம் தாணுபிள்ளை நிதானமிழந்து விட்டார். அவர் ஒரு முதல் அமைச்சருக்குரிய நிதானத்தில் அது குறித்து விவாதித்து முடிவு எடுத்திருக்கலாம். அதைச் செய்வதற்கு மனமில்லாது, தலைவர்களுக்கு எதிராக சில வக்கணைச் சொற்களை கையாண்டுவிட்டு "என்னே பீஷணிப்படுத்துகை யாணோ? ஏது அக்கிரம பிரயத்னமாயாலும் ஞான் அதனே அடிச்சமர்த்தும்?" என்று உணர்ச்சி வசப்பட்டு பேசிவிட்டார்.

தேவிகுளம், பீர்மேடு தேயிலைத் தோட்டங்களை உருவாக்கியவர்கள் தமிழர்கள் மட்டுமே. மலையாளிகளுக்கு அதில் எவ்வித பங்களிப்புகளும் இல்லை. எனவே அவ்விடங்களில் தமிழ் வழி மக்கள்தான் பெரும்பான்மையினர். தமிழர்கள் அங்கே சிறுபான்மையினர் என்று காண்பித்தாக வேண்டும். மாநிலங்கள் புனரமைப்பு கமிஷன் திரு.கொச்சிக்கு 1954 மே அல்லது ஜுன் மாதங்களில் வர உள்ளது. இதற்கு முன்பாக தமிழர்களை அங்கிருந்து விரட்டி விட வேண்டும் என்பது மலையாளி காங்கிரஸ் கட்சியின் திட்டம். அதை செயல்படுத்துவதற்காக பி.எஸ்.பி. அரசு முன்கை எடுத்துச் செயல்படத் தொடங்கியது. தமிழர்கள் என்றால், அதிலும் குறிப்பாக நாடார் மக்கள் என்றால் திரு. பட்டம் தாணுபிள்ளைக்கு காஞ்சிரம்பழம். திரு. நேசமணி அவர்களே இதை திட்டவட்டமாகக் கூறுகிறார்:

> "Sri Pattam Thanupillai is a Malayalee and he cannot brook the sight of a Tamilian crossing his path. He is a Nair who thirsts for the blood of a Nadar, his opponent. He has drunk enough of it, not once but twice". ***(His letter to the President of Indian National Congress 30th Aug 1954)***

நாடார்கள் என்றாலே பிறப்பு எதிரிகள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் நாயர் தலைவர்கள், தி.த.நா.கா. அமைப்பை நாடார்களின் அமைப்பு என்றுதான் எண்ணினர். பி.எஸ்.பி. அரசின்

இரக்கமற்ற அடக்குமுறையை தி.த.நா.கா.-வும், இந்திய தோட்டத் தொழிலாளர் சங்கமும் கூட்டாக கண்டித்தனர். கடையடைப்பு, வேலை முடக்கங்கள் போன்ற சாத்வீக போராட்டங்களை அவர்கள் இணைந்து செய்தனர். இதனால் பொது இடங்களில் வைத்து தலைவர்கள் தாக்கப்பட்டனர். தேவிகுளம், பீர்மேடு தி.த.நா.கா. அமைப்புத் தலைவர் திரு. சுப்பையா நாடார், அமைப்புச் செயலர் திரு.துரைப்பாண்டி நாடார் (வண்டிப் பெரியாறு) தொழிற்சங்க செயலர் திரு.ஆர்.குப்புசாமி நாடார் போன்றோரை மூணாறு கடைவீதியில் வைத்து கைது செய்து, கைவிலங்கிட்டு கடைத் தெரு வழியாக இழுத்து சென்று அவமதித்தனர். இருப்பினும் இவர்கள் சோர்ந்து போகாமல் காவல் துறையினரின் அத்து மீறிய அடக்குமுறைகளை மேலும் தீவிரமாக எதிர்த்தனர். இதைப் போன்ற நிகழ்ச்சிகள் மலைப் பிரதேசங்களில் முக்கிய இடங்களான பீர்மேடு, வண்டிப்பெரியாறு, குமுளி, கட்டப்பனை, மூணாறு போன்ற தமிழர்கள் நெருக்கமாக வாழ்கின்ற இடங்களில் எல்லாம் நடந்தன. இதனால் உருவான போலீஸ் அடக்கு முறைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கென மதுரை மாவட்டத்திலுள்ள குக்கிராமங்களுக்கு தமிழர்கள் ஓடிச் சென்று மறைந்து வாழ்ந்தனர். எங்கும் மரண பயம் குடிகொண்டிருந்தது.

## 19. தேவிகுளத்தை நோக்கி :

21.03.1949 – லேயே திருவிதாங்கூர் தமிழ்ப் பிரதேசங்களை மதிராசி மாகாணத்துடன் இணைத்து விட வேண்டும் என்று, திருவிதாங்கூர் சட்டமன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கின்ற 15 பேரும் கூட்டாக, மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்திருந்தனர். இந்த வேளையில் மொழி வழி மாகாண புனரமைப்புக் கமிஷன் 1954- மே மாத இறுதிக்குள் திரு.கொச்சி வருவதாகவும் இருந்தது. எனவே அவர்கள் தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை சந்திப்பதற்கு உகந்த இடம் அல்ல என்று காட்டுவதற்காக பி.எஸ்.பி. மலையாளி அரசு மலைப் பிரதேசங்களில் பதற்ற நிலையை வேண்டுமென்றே உருவாக்கினர்.

இந்த பதற்றமான சூழ்நிலையில், திரு.எ.நேசமணியும், திரு. எ.எ.ரசாக்கும் வண்டிப் பெரியாறு, வண்டன்மேடு வழியாக மூணாறு சென்று மக்களை சந்தித்து ஆறுதல் கூறி போலீஸ் அட்டூழியங்களைக் கண்டித்து பொதுக் கூட்டங்களில் உரையாற்றினார்கள். மக்கள், கூட்டங்களில் நேரடியாக வந்து கலந்து கொள்வதற்கு அச்சமுற்று எட்டி நின்று உரைகளைக் கவனித்தனர். மக்கள் பீதியால் துவண்டு போயிருந்தனர் என்பதையே இது கோடிட்டுக் காட்டியது.

அப்பட்டமாக, கருதிக் கூட்டிச் செய்யப்பட்ட இந்த போலீஸ் அத்து மீறல்களின் நோக்கம் என்னவெனில், துன்பத்துக் குள்ளாக்கப்பட்டவர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட துன்பங்களையெல்லாம் பிறருக்குச் சொல்லி, அம்மலை நாடு முழுவதும் மக்களிடையே பீதியை உருவாக்க வேண்டும் என்பதாகும் என்று திரு. எ. நேசமணி எடுத்துரைத்தார். அரசின் இந்த நெறி தவறிய நோக்கங்களை அவர் வன்மையாக கண்டித்தார். அவரைத் தொடர்ந்த திரு.எ.அப்துல் ரசாக், போலீஸ் ஜவான்கள் தங்களுக்குத் தோன்றுகின்ற முறையில் நடந்து விதி மீறல்கள் நடைபெறும் போது அது பொதுமக்களுக்கு மட்டுமல்லாதது போலீஸ் ஜவான்களுக்கும் ஆபத்துகளை விளைவித்துவிடும் என்று மேலும் எடுத்துரைத்தார். அவர்களது இந்த பேச்சுகளினால் மலையாள செய்திப் பத்திரிகைகள் பெரும் சலசலப்பை உண்டு பண்ணி விட்டன. "நேசமணியும் அவரது குழுவினரும் தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களில் உள்ள போலீஸ் நிலையங்களையெல்லாம் பிடித்துக் கொள்வதற்கு திட்டமிடுகிறார்கள்" என்று விமர்சித்து செய்தி வெளியிட்டன. இச்செய்திகளை மற்ற பத்திரிகைகள் மறு பிரசுரம் செய்து, பெரும் பரபரப்பை உருவாக்கின. அவர்கள் மலைநாடு சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு 1954 ஏப்ரல் மாதம் 8-ம் நாள் ஊர் திரும்பினர். அனைத்து மலையாளி பத்திரிகைகளும் இவர்களது பேச்சை, அரசாங்கத்துக்கு எதிராக தொடுக்கப்பட்ட 'ஒரு வெல்லுவிளி' (அறை கூவல்) என்று வர்ணித்தன. ஆனால் "கேரள கௌமுதி" என்ற பத்திரிகை மட்டும்

‘எந்தா நேசமணி இங்ஙனே ஆயி போயி’ என்று வக்கணை செய்தது. எப்படியும் இவர்களது மலைநாட்டு சுற்றுப் பயணத்தால் மக்கள் மீண்டும் தைரியம் கொண்டனர். ஆனால் பட்டம் அரசோ அச்சத்தில் உறைந்து கிடந்தது.

## 20. மாநிலங்கள் புனரமைப்புக் கமிஷன் :

1953 டிசம்பர் மாதம் 22-ம் நாள் இந்தியா பாராளுமன்றத்தில் பிரதமர் பண்டித நேரு அவர்கள், இந்தியாவில் அன்று நிலவியிருந்த உறுப்பு நாடுகளின் புனரமைப்புக்காக ஒரு பொறுப்பாண்மைக் குழு (Commission) அமைக்கப்படும் என்று அறிக்கை விடுத்தார். இந்தியா தனது சுதந்திரத்துக்காக போராடி வருகின்ற வேளையில், நாட்டு மக்களின் பேராதரவைப் பெறும் நோக்குடன், இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்கள் பல வாக்குறுதிகளைக் கொடுத்தனர். அவைகளில் முக்கியமானது நாடுகள் புனரமைப்புக் குறித்த வாக்குறுதியாகும். இந்தியா 1947 ஆகஸ்டு மாதம் 15-ம் நாள் சுதந்திரமடைந்தது. 1950 சனவரித் திங்கள் 26-ம் நாள் ஒரு குடியரசாக மலர்ந்தது. அதைத் தொடர்ந்து 1953 டிசம்பரில் மாநிலங்கள் புனரமைப்புப் பணிகளுக்காக குழு ஒன்றை இந்திய அரசு நிறுவியது.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து உள்துறை அமைச்சகம் 29.12.1953 அன்று எண் 53/69/53 Public ஆணையில் ஒரு பொறுப்பாண்மைக் குழுவை நியமித்தது. இந்த ஆணையத்தின் நோக்கம்.

“The Commission will investigate the conditions of the problem, the historical background and existing situation and the bearing of all important and relavant factors there on”. ***(Introductory note to the SR Commission Report – 1955)***

இந்த ஆணையில் திரு.எஸ்.பசல் அலியின் தலைமையில் திருவாளர்கள் ஹெச். என். குன்சுரு மற்றும் கே.எம்.பணிக்கர் ஆகியோரை உறுப்பினர்களாக நியமித்தது. திரு.பி.சி. சவுத்திரி

என்பவர் அதன் செயலாளராகச் செயல்பட்டார். இந்த மூவர் குழுவில் உறுப்பினராக இருந்த சர்தார்.கே.எம்.பணிக்கர் அவர்கள் கேரள நாட்டைச் சார்ந்தவரும், மலையாளியும் ஆனதால் அவர் நாட்டின் நலன்களைப் பேணுவதில் கண்ணும் கருத்துமாக இருந்து செயல்பட்டார். இக்குழுவின் தலைவராக உள்ள திரு.எஸ்.பசல்அலி அவர்கள் பீகாருக்கு நெருக்கமானவர் என்ற முறையில் அதன் அண்மை மாகாணங்களான மேற்கு வங்கம் மற்றும் ஒரிசாவுடன் பீகார் மாகாணத்துக்குமிடையே எல்லைப் பிரச்சனை கடுமையாக நடந்து வந்தமையால் அந்த விவகாரங்களில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருந்து நல்ல வழிகாட்டினார். ஆனால் சர்தார். கே.எம்.பணிக்கர் அவர்கள் கேரள நாட்டு விவகாரங்களில் இருந்து ஒதுங்கியிருக்கவில்லை. மாறாக அவரது செல்வாக்கை அங்கே முழுமையாகப் பயன்படுத்தி கேரளத்தின் நன்மையில் கவனமாகச் செயல்பட்டார். தமிழ்நாட்டு நலன்களை பாதுகாப்பதற்காக இந்த குழுவில் தமிழர் எவரும் இடம் பெறவில்லை. இத்தருணத்தில் மதிராசி மாகாண முதலமைச்சராக திரு.சி.ராஜகோபாலாச்சாரியாரும், தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சித் தலைவராக திரு. கு. காமராசரும் இருந்தனர். 13.04.1954 அன்று திரு.காமராசர் தமிழகத்தின் முதலமைச்சராக பதவி ஏற்றுக் கொண்டார்.

மாநிலங்கள் புனரமைப்புக் கமிஷன் பொது மக்களிடத்திலிருந்தும், பொது அமைப்புகளிடமிருந்தும், மற்றும் அது சார்பாக ஆர்வமுடையவர்களிடமிருந்தும் கருத்துக்களைக் கோரியது. இக்கருத்துரைகள் 1954 ஏப்ரல் 24-ம் தேதிக்கு முன்பாக அவர்களுக்கு கிடைத்திருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது. திருவிதாங்கூர்-கொச்சி சட்டசபையில் 12.07.1954 அன்று முதலமைச்சர் திரு.பட்டம் தாணுபிள்ளையிடம், செங்கோட்டை சட்டநாத கரையானர் கேள்வி ஒன்றை எழுப்பினார். மாநிலங்கள் புனரமைப்புக் குழுமத்திடம் அரசு ஏதாவது கருத்துரைகள் தாக்கல் செய்ததுண்டா? என்று வினவினார். ‘இல்லை’ என்று முதலமைச்சர்

பதிலளித்தார். மனு அளிக்காததற்கு காரணங்கள் உண்டு. அதாவது தெற்கே கன்னியாகுமரி தொட்டு வடக்கே காசர்கோடு வரை அடங்கியிருக்கின்ற பிரதேசங்களை உள்ளடக்கிய ஐக்கிய கேரளம் அமைவதை திரு. பட்டம் தாணுபிள்ளை விரும்பவில்லை. மதராசி மாகாணத்தில் அடங்கியிருக்கின்ற மலபார் பிரதேசங்களை ஐக்கிய கேரளத்தில் சேர்த்துக் கொள்வதற்கும் அவர் விரும்பவில்லை. அதைப்போல திரு.கொச்சியில் உள்ள தமிழ் பிரதேசங்களை மதிராசி மாகாணத்திற்கு விட்டுக் கொடுக்கவும் அவருக்கு இசைவு இல்லை. தென் திருவிதாங்கூர் இல்லாத கேரளம் பட்டினிக் கேரளம் ஆகும் என்பது அவருடைய சித்தாந்தம்.

ஆனால் அவர்களின் சார்பில், அரசின் கருத்துக்களை உள்ளடக்கிக் கொண்டு திருவிதாங்கூர்-கொச்சி காங்கிரஸ் காரர்களும், ஐக்கிய கேரள இயக்கத் தலைவர்களும், திரு.கொச்சி சட்டசபை மலையாளி உறுப்பினர்களும் ஒருங்கிணைந்து ஒரு நீண்ட கருத்து மனுவை புனரமைப்புக் குழுமத்துக்கு அனுப்பி வைத்தன. அம்மனுவில் முக்கியமாக

1. A Tamilian majority cannot continue for all time to be the arbiter of the destinies of the people of Kerala.
2. The competition among linguistic groups transcends all party alignments and endangers its efficiency and usefulness.
3. It will not do to have language as the guiding factor for purpose of demarcation. It is on the economic and cultural set up of the people consequent on geography, that the life and growth of a people depend
4. Kerala, a unique geographical entity.

i. Immigration from Tamil Nadu entered and settled in the Southern Taluks.

ii. Most of the Tamil population in the Taluks of Shenkottai, Peermed and Deviculam consitutte emigrant plantation labour.

iii. The so called Tamil population in South Travancore is at present bi-lingual.

iv. Most of the early Vellala settlers have fully adopted the Malayalee usages and customs including even the matriarchal family law.

v. Great irrigation projects costing crores of rupees have been undertaken in South Travancore.

vi. A great part of the land owners are still Malayalees.

vii. South Travancore has all along been part of Kerala.

viii. These Southern Taluks are geographically as in economic and cultural interests part and parcel of Kerala.

கேரளவாதிகளின் இந்த வாதங்களுக்கு எல்லாம், வரலாற்றின் அடிப்படையிலும், இயல்பின் அடிப்படையிலும், புள்ளி விவரங்களின் அடிப்படையிலும், புவியியல் அடிப்படையிலும் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் முக்கியமாக திரு. நேசமணி அவர்கள் விளக்கம் கொடுத்தார். இந்த விளக்கங்கள் எல்லாம் மாகாண புனரமைப்புக் குழுமத்துக்கு உரிய காலத்தில் அனுப்பி

வைக்கப்பட்டன. இந்த விளக்கங்களின் முழு விவரங்களை அறிவதற்கு விரும்புகிறவர்கள் அறிவர். டி. பீட்டர் மற்றும் அறிவர். திருமதி. ஐவி பீட்டர் எழுதி வெளியிட்ட "Liberation of the oppressed, a continuous struggle" என்ற ஆய்வு நூலை (பக்கங்கள் 211 முதல் 219 வரை) படித்தால் தெளிவடைந்து கொள்ளலாம்.

## 21. தேவிகுளம் தினம் கடைப்பிடித்தல் :

தி.த.நா.காங்கிரஸ் பார்லமென்றறி உறுப்பினர்கள் திரு.கொச்சி முதலமைச்சர் திரு. பட்டம் தாணுபிள்ளைக்கு 31.03.1954 அன்று அளித்திருந்த இறுதி எச்சரிக்கை மனுவின் கெடு 30.06.1954-ல் முடிவடைய உள்ள நிலையில், 06.06.1954-ல் விளவங்கோடு தாலுகா மாங்கரையில் முதற் விளக்கக்கூட்டம் கூடிற்று.

ஸ்தாபன அமைப்பு காரியங்களுக்காக சென்னை தமிழ்நாடு காங்கிரஸ் உறவும் இல்லை. திரு.கொச்சி பிரதேசக் காங்கிரஸ் அமைப்பில், தமிழ் பிரதேசங்களுக்கு என தனிப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி அந்தஸ்தும் இல்லை. அதே வேளையில் தேவிகுளம், பீர்மேடு மலைகளிலிருந்து பட்டம் தாணுபிள்ளை அரசின் நெருக்குதலால் உயிருக்காக தப்பித்து ஓடுகின்ற தோட்டத் தொழிலாளிகளை அங்கேயே தடுத்து நிறுத்துவதற்கான வழியும் இல்லை. இவைகளுக்கெல்லாம் ஒரே காரணம், சென்னை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலிருந்து ஆதரவுக் கரம் கிடைக்காததேயாகும். எனவே யாரையும் நம்பி பிரயோசனம் இல்லை என்ற முடிவுக்கு வந்து விட்டார் திரு.எ.நேசமணி. "நமது காலே நமக்குத்துணை" என்ற கோட்பாட்டுக்கு அவர் வந்து விட்டார்.

இதனால் 06.06.1954 அன்று மாங்கரையில் முதற்போர் முழக்கம் செய்தார் திரு.நேசமணி. வரவிருக்கின்ற நிகழ்வுகளை யெல்லாம் முன் கோடிட்டுக் காட்டிவிட்டார்.

"தர வேண்டியதைத் தராமலும், செய்ய வேண்டியதைச் செய்யாமலும், முரண்டு பிடிக்கும் ஒரு சர்க்காரை வழிக்குக்

கொண்டு வருவதற்கு மக்களுக்கு உரிமையுண்டு. அதற்கான சக்தியும் அவர்களுக்கு உண்டு. பல உபாயங்களும் உண்டு. அவைகளில் ஒன்றுதான் வரி கொடாமை. இங்கே நாம் தொடங்கும் கிளர்ச்சியின் எதிரொலி தேவிகுளம் பீர்மேடு மலைமேட்டிலும் இருக்கும். அது போல அங்கே நடந்து கொண்டிருக்கும் அட்டூழியத்திற்குக் கண்டனக் குரல் இங்கேயும் எழுப்ப வேண்டும்.... ஆகவே அடுத்து வரும் சில மாதங்களில் நமக்கு சங்கடங்களும், சச்சரவுகளும் ஏற்படலாம். சிரமப்படாமல், தியாகம் செய்யாமல், மறுக்கப்படும் உரிமைகளை மீட்க முடியாது. அவைகளை நாம் சந்தித்தே ஆக வேண்டும்" என்று முதல் முழக்கமிட்டார்.

அங்கே கூடியிருந்த மக்கள் அனைவரும் இதைச் சிரமேற்கொண்டதற்கு அடையாளமாக "சந்திப்போம்... எத்தகைய தியாகத்தையும் செய்வோம், செய்வோம்" என்று உரத்த குரலில் பதில் அளித்தனர்.

இதற்கிடையில் தேவிகுளம், பீர்மேடு மலைப் பிரதேசங்களில் காவல்துறையினரின் அத்துமீறல்களும் அட்டூழியங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. ஆயுதப்படையைச் சார்ந்த ஜவான்கள் தென் இந்திய எஸ்டேட் தொழிற்சங்க ஊழியர்கள், பிரமுகர்கள், தி.த.நா.கா.அரசியல் அனுதாபிகள் போன்றோரை எக்காரணமுமின்றி கைது செய்து சாலை வழியாக இழுத்துச் சென்று அவமானப்படுத்தினர். வேறு சிலரை அன்பாகவும், பாசமுடனும் பேசி அழைத்தச் சென்று நையப்புடைத்து சிறையில் அடைத்தனர். பரிந்து பேசி அழைத்துச் சென்று நாட்கணக்கில் பட்டினியிட்டு, பரிதவிக்கவும் விட்டனர். தலைவர்களை கைது செய்து தரையிலே படுக்க வைத்து பட்டினியிட்டனர். வாலிப வீரர்களை கைவிலங்கிட்டு மாடுகளைப் போன்று கடைத் தெருக்களில் இழுத்துச் சென்று பகிரங்கமாக நையப்புடைத்தனர். சிலரை நிர்வாணமாக்கி லாத்தியால் மர்மஸ்தானங்களில் இடித்து மரண நோவு கொடுத்தனர். நாகரீக மனிதன் செய்யத்தகாத கொடுமைகளையெல்லாம் இந்த

மலையாளி போலீஸ்காரர்கள் தமிழர்கள் மீது இழைத்தனர். இந்த துயரச் செய்திகள் அனைத்தும் நாகர்கோவில் தலைமையகத்துக்கு வந்த வண்ணமிருந்தன.

எனவே 19.06.1954 அன்று தி.த.நா.கா. காரிய நிர்வாகக் குழுவை கூட்டி தேவிகுளம், பீர்மேட்டுப் பகுதிகளில் நிலவுகின்ற அச்சநிலையை போக்கும் பொருட்டு, 1954 ஜுன் 30-ம் தேதியை 'தேவிகுளம் தினமாக' அனுசரிக்க வேண்டும் என்று தீர்மானம் எடுத்தனர். இதை நிறைவேற்றும் பொருட்டு ஆறு நபர்களைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டது. குழு உறுப்பினர்கள் :

1. பி. ராமசாமி பிள்ளை
2. எ. குஞ்சன் நாடார்
3. ஆர். பொன்னப்ப நாடார்
4. ப. தாணுலிங்க நாடார்
5. எ.எ. ரசாக்
6. தலைவர். எ. நேசமணி

திரு.தமிழ்நாடெங்கும் தேவிகுளம்-பீர்மேடு வட்டாரங்களில் நிலவுகின்ற போலீஸ் அடக்குமுறைகளுக்கு எதிராகக் கண்டன ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் இந்தக் குழுவினர்களின் தலைமையில், 1954 ஜுன் 30-ம் தேதி நடத்தப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால் தேவிகுளம் வட்டாரத்தில் விளக்கக் கூட்டங்களை ஜுலை 4-ம் தேதி வைத்துக் கொள்வதற்கு ஏற்பாடாயிற்று. அதற்காக தலைவர் நேசமணியும், எ.எ. ரசாக்கும் 03.07.1954 அன்று சுமார் 2 மணியளவில் மூணாறு சென்றடைந்தனர். அவர்களுடன் திரு.ப.சிதம்பரநாத நாடாரும் சென்று இணைந்து கொண்டார்.

## 22. நேசமணி கைது :

மூணாறு கட்சி அலுவலகத்தில் இவர்கள் சென்றடைந்த உடனே முன் தேதியிட்டு அங்கே ஒட்டப்பட்டிருந்த 144 தடை உத்தரவை அவர்களுக்கு காட்டினர். இந்தத் தடை உத்தரவின் நோக்கம் ஜுன் 30-ம் தேதி நடைபெறுகின்ற கூட்டங்களை தடை செய்ய வேண்டும் என்பதல்ல. ஜுலை 4-ம் தேதி மூணாறில்

நடத்தப்பட உள்ள விளக்கக் கூட்டத்தையும், கண்டன ஊர்வலத்தையும் தடை செய்ய வேண்டும் என்ற ஏக நோக்கத்துடன்தான், முன் தேதியிட்டு ஜுலை 3-ம் நாள் இதை ஒட்டியதின் உள்நோக்கம். இந்தத் தடை உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மனுவுடன் ஹைரேன்ஞ்சு கமிஷனர் திரு.பி.சி.அலெக்சாண்டரை திரு.எ.எ.ரசாக்கும், திரு.சிதம்பரநாதனும், நேரில் சென்று மனு கொடுத்து விவாதித்தனர். ஞாயிற்றுக் கிழமை கண்டன நாள் கடைபிடிக்கப்படும் என்று அவர்கள் திடமாகக் கூறினர். திரு.அலெக்சாண்டரும் சும்மா வாழாவெட்டியாக இருக்கவில்லை.

மூன்று ஆறுகள் முட்டி மோதிக் கொண்டு ஓடுகின்ற அந்த சந்திப்பு கரையோரப் புல்வெளி மேடுதான் தடையை மீறப் போகின்ற இடம். அந்த இடத்தில் மக்கள் இல்லையென்றாலும், சுற்றிலும் உயர்ந்து நிற்கின்ற மலை முகடுகளில் மக்கள் வெள்ளம் குவிந்து நின்று ஆரவாரம் செய்தது. கோரிக்கை தின ஆர்பாட்டத்துக்கு தேர்வு செய்யப்பட்டிருந்த இடத்தில் கவச அணிகளும், காக்கி உடைகளும்தான் குவிந்து கிடந்தன. ஹைரேஞ்சு அதிகாரி திரு. அலெக்சாண்டரும் சீருடையில் அங்கே நின்று கொண்டிருந்தார். அருகாமை மண்திட்டில் ஏறி நின்று முதலாவதாக திரு. நேசமணி முழங்கத் தொடங்கினார்.

“இங்கு ஆட்சியிலிருப்பது ஒரு ஜன வஞ்சக சர்க்கார்” என்ற வாசகத்தை முடிப்பதற்கு முன்பாக திரு. அலெக்சாண்டர் விரைந்து வந்து அவரை கைது செய்தார். அவரைத் தொடர்ந்து எ. அப்துல் ரசாக், திரு. நேசமணி விட்ட இடத்திலிருந்து “அந்த சர்க்காரை நாம் சட்டை செய்ய வேண்டியதில்லை” என்று முடித்ததும் அவரும் கைதானார். அவரைத் தொடர்ந்து திரு. ப. சிதம்பரநாதன் ஒரு புதிய வாக்கியத்தை தொடங்கினார். “அந்த சர்க்காரை நாம் எதிர்ப்போம்” என்றதும் அவரும் கைதாகி விட்டார். 06.06.1954 அன்று மாங்கரையில் அறைகூவலாக “முதல் சக்தியாக இருப்பேன்” என்ற வீர முழக்கம் மூணாறில் 04.07.1954 அன்று தொடங்கிற்று. கைது செய்யப்பட்ட மூவரையும்

கோட்டையம் மாவட்ட மாஜீஸ்ட்ரேட் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். 05.07.1954-க்கு (திங்கள் கிழமை) விசாரணையை வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி, இடைக்கால ஏற்பாடாக கோட்டையம் காவல் நிலையத்தில் அவர்களை வைத்தனர். அவர்களே இரவு உணவும் அளித்தனர். திரு.அலெக்ஸான்டரும் அங்கே உடனிருந்தார். ஓர் அறையில் இருந்து நிறைமாத கர்ப்பிணிப் பெண் ஒருவரை வெளியே கொண்டு செல்வதும், உள்ளே அழைத்து வருவதுமாக காவல்துறையினர் இருந்தனர். அறையில் அலறலும், அதட்டலும் கேட்டுக் கொண்டேயிருந்தது. இரவு ஒரு மணி அளவில் ஒரு ஆண் மகவை ஈன்றெடுத்தாள் அப்பெண். உடனே காவல் ஜவான்கள் அந்த குழந்தைக்கு பெயர் சூட்டிவிட்டனர் "நேசமணி ஜெனிச்சு" என்று அவர்கள் கூறி ஏளனம் செய்தனர்.

அடுத்தநாள், அதாவது 05.07.1954 அன்று மூவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். மூவரும் செய்த குற்றம் என்ன என்பதை திரு. நேசமணி நீதிமன்றத்தில் விளங்கக் கூறவே அவர்களுக்கு ஆறு வாரம் சாதாரணச் சிறைத் தண்டனை அளித்து நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. அடுத்த நாள் (06.07.1954) திருவனந்தபுரம் மத்தியச் சிறைக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

தலைவர். எ. நேசமணியும், எ. அப்துல்ரசாக்கும் மற்றும் பி. சிதம்பரநாதன் நாடாரும் மூணாறில் கைது செய்யப்பட்டச் செய்தி தென் தாலுகாக்களில் காட்டுத் தீயென பரவியது. மக்கள் கொந்தளித்தனர். தலைவர்கள் மூணாறு விரைந்தனர். அடுத்த நாள் மூணாறு காவல் நிலையம் முன்பாக அவர்கள் வந்து கூடினர். திரு.பொன்னப்ப நாடார், திரு. குஞ்சன் நாடார், திரு. எம். சைமன், வி.கே. ராஜாபிள்ளை மற்றும் ஊர் பிரமுகர்கள் அங்கே கோட்டயத்தில் வந்து கூடினர். கட்சித் தலைவர் என்ற நிலையில் திரு. எ. நேசமணி, பொதுச் செயலர், திரு. ஆர். பொன்னப்ப நாடாரை அழைத்து, தி.த.நா.கா. பொதுக்குழுவை அழைத்து எடுக்க வேண்டிய மேல்

நடவடிக்கையை தீர்மானித்துக் கொள்ளுங்கள் என ஆலோசனை கூறினார். உடனே திரு சைமனும், திரு. ராஜா பிள்ளையும் தலைவரிட்ம், 'திரு. குஞசன் நாடாரை நிதானமாகச் செயல்படச் சொல்லுங்கள்' என்று வேண்டிக் கொண்டனர். திரு. குஞ்சன் நாடார் நிதானம் தவறி, தன்னிச்சையாகவும், தீவிரமாகவும் செயல்படும் தன்மையுடையவர் என்று அவர்கள் அறிந்திருந்தனர் என்பதால் இந்த வேண்டுகோளை வைத்தனர். இதற்கிடையில் ஹைரேஞ்சு கமிஷனர் திரு. அலெக்சாண்டர் அங்கு வரவே, பேச்சைத் தொடர முடியாமல் நிறுத்திக் கொண்டனர். போலீஸ் வண்டி இவர்களுடன் திருவனந்தபுரம் நோக்கிச் சீறிப் பாய்ந்தது.

## 23. அரசின் சமரச முயற்சி :

திரு. எ. நேசமணியும் மற்ற தலைவர்களும் கைதாகி சிறை சென்று, சிறை வாசத்தின் கடுமையை உணர்ந்த நிலையில் அவர்கள் அரசுடன் சமரத்துக்கு வந்து விடுவார்கள் என்று பி.எஸ்.பி. அரசு தப்புக் கணக்குப் போட்டது. பி.எஸ்.பி. அரசும், பட்டம் தாணுபிள்ளையும் இந்திய தேசியக் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு.மாதவன் நாயரை, திரு. நேசமணியைச் சந்தித்து சமரசத்திற்கு முயற்சி செய்யுமாறு தூது அனுப்பினர். திரு.மாதவன் நாயர் திரு.எ.நேசமணியை சிறைச் சாலை தலைமை கண்காணிப்பாளர் அறையில் சந்தித்தார். திரு.மாதவன் நாயருடன், தி.த.நா.காங்கிரஸ் பொதுச் செயலாளர்களில் ஒருவராகிய திரு.ஞானசிகாமணியும் வந்திருந்தார். தேவிகுளம்– பீர்மேடில் இயல்புநிலை திரும்புவதற்குத் தேவையான எந்த நிபந்தனைகள் முன் வைத்தாலும் அதை நிறைவேற்றுவதற்குத் தான் முன்கை எடுக்கப்படும் என்ற உறுதி மொழியை வைத்தார் திரு. மாதவன் நாயர். இதற்குப் பதிலாக, தேவிகுளம்-பீர்மேடில் அரசு அட்டூழியங்களை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதியை உருவாக்கிட வேண்டும் என்றும், தென் திருவிதாங்கூர் தமிழ் பிரதேசமான விளவங்கோடு தாலுகாவில் பட்டணம் கால்வாயை

தரையில் காட்ட வேண்டும் என்றும், இங்கே கைவிடப்பட்ட நெய்யாறு இடதுகரைச்சானல், குழித்துறை நீரேற்றுத் திட்டம் மற்றும் சிற்றார் அணை போன்ற மூன்று திட்டங்களுக்கு பட்ஜெட்டில் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள நிதியை வாபஸ் செய்யாமல் திட்டங்களுக்கு செலவு செய்திட வேண்டும் என்றும் வலியுறுத்தினார் திரு.நேசமணி. இவைகளை சற்றும் எதிர்பாராத திரு. மாதவன் நாயர் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் கண் பிதுங்கி நின்றார். மேலும் சமரசப் பேச்சைத் தொடர முடியாமல் திரு.மாதவன் நாயர் மௌனமாக சிறைச்சாலையை விட்டு வெளியேறினார்.

## 24. தி.த.நா. காங்கிரசில் குழப்ப நிலை :

திரு. எ. நேசமணியும் மற்ற இரு தலைவர்களும் மூணாறில் கைது செய்யப்பட்டு பூஜப்புரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டதைத் தொடர்ந்து தென் திருவிதாங்கூர் தமிழர்களிடையே பெரும் கொந்தளிப்பு நிலை உருவானது. தொண்டர்களும், அபிமானிகளும், என்ன நடந்தது என்று அறிவதற்கு நாகர்கோவில் தி.த.நா.கா. தலைமை அலுவலகத்திற்கு படையெடுத்தவண்ணமிருந்தனர். இது குறித்து என்ன தொடர் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்ற நிச்சயம் எதுவுமில்லாமல் நாகர்கோவில் தலைவர்கள் தொடர்ந்து குழப்பத்திலிருந்தனர். சிலர் குற்றம் கண்டுபிடிப்பதில் ஆர்வம் கொண்டனர். யாரைக் கேட்டுக்கொண்டு, அல்லது யாரின் அறிவுரையின் நிமித்தம் மூணாறில் தடையை மீறினார்கள் என்று ஒரு கூட்டம் ரோட்டறிக் கூட்டாளிகள் ஈனச்சுரம் எழுப்பினார்கள். இந்த சங்கத்தினர் பொதுவாக அரசு உயர் அதிகாரிகள், பெருவணிகர்கள், வழக்கறிஞர்கள், ஆங்கில மொழி ஆர்வலர்கள், மேற்படிப்பு புள்ளிகள் போன்ற மேட்டுக்குடி கனவான்களாகிய பி.இராமசாமிபிள்ளை, எ.எம். சைமன், என்.எ. நூர்முஹமது மற்றும் ஒரு அரசு பள்ளிக்கூட ஆசிரியரும் அடங்குவர். தி.த.நா.கா. பொதுச்

செயலாளரும், ரேஷன் வியாபாரத் தொடர்புடையவருமான திரு.வி.கே.ராஜா பிள்ளை மற்றும் எம்.கே. பாவா போன்றோரும் இதில் இருந்தனர். இவர்களின் குற்றச்சாட்டு, மூணாறில் இருந்து திரு.நேசமணி ஓடி நாகர்கோவில் வந்து இவர்களையெல்லாம் கலந்து ஆலோசித்து விட்டு மீண்டும் மூணாறு சென்று தடையை மீறியிருக்க வேண்டும் என்ற தோரணையில் இந்த பிரமுகர்கள் சலசலத்தனர். உணர்ச்சியால் கொந்தளிப்பாக இருந்த தொண்டர்கள் தலைவர் திரு.பி.இராமசுவாமி பிள்ளையின் இந்த நிலையைக் குறை கூறினர். மேற்கொண்டு என்ன செயல்முறையைக் கையாளலாம் என்று தீர்மானிப்பதற்குத் தயங்குகின்ற பி. இராமசுவாமிபிள்ளை மீது பொதுக் கமிட்டியினர் நம்பிக்கை இழந்து விட்டனர்.

## 25. சர்வாதிகாரக் குழு அமைப்பு :

நிறுவனத் தலைவரை ஓரம் கட்டக் கூடாதென்று பொதுச் செயலர்கள் திரு. ஆர். பொன்னப்ப நாடார் மற்றும் திரு. ப. தாணுலிங்க நாடார் கருத்துக் கூறியதால் திரு. பி. இராமசாமி பிள்ளையை முதல் சர்வாதிகாரியாக 06.08.1954 அன்று அமர்த்தி அன்னாருடன் சேர்ந்து வேறு ஐவரையும் சர்வாதிகாரிகளாக அமர்த்தினர். அவர்கள் முறையே ப. தாணுலிங்கநாடார், அ. குஞ்சன் நாடார், ஆர். பொன்னப்பநாடார் மற்றும் அ. காந்திராமன் ஆகும். இவர்கள் ஒருவருக்குப் பின் ஒருவராக போராட்ட சர்வாதிகாரி பொறுப்பை நிறைவேற்றுவர். இவர்களின் தலைமையில் தேவிகுளம்-பீர்மேட்டுப் பகுதிகளில் அமல்படுத்தப்பட்டுள்ள தடை ஆணையை மீறுவர். மேலும் 19 பேரைக் கொண்ட ஒரு நீண்ட போராட்டக் குழு பட்டியலையும் தயாரித்தது. இவர்கள் பணகுடியில் கூடி 30 பேரைக் கொண்ட சர்வாதிகாரிப் பட்டியலை தயாரித்தனர்.

அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் ஊரில் இருந்தனர் என்றாலும் மூணாறு புறப்படுவதற்கு யாரும் முன் வரவில்லை. ஏனெனில் முதல் சர்வாதிகாரியான பி.இராமசாமிபிள்ளைக்கு

மற்றவர்களை முறைப்படுத்த இயலவில்லை. யாரும் முன் வர தயங்கிய நிலையில் உடல் நலம் குன்றியிருந்த எம்.வில்லியம், எம்.எல்.ஏ. மூணாறுக்குச் செல்ல முன் வந்தார். அவர் தலைமையில் சென்ற ஜாதா மூணாறில் சென்று தர்ணாவில் கலந்து கொண்டமையால், கைதாகி திருவனந்தபுரம் சிறை சென்று, திரு.எ.நேசமணி குழுமத்துடன் சேர்ந்து கொண்டனர். அடுத்து திரு. இராமசாமிபிள்ளை தர்ணாவுக்குச் செல்ல முன் வந்தார். ஆனால் அவர் ஒரு எம்.எல்.ஏ - யின் துணையைக் கேட்டார். அதற்கு திரு.குஞ்சன்நாடார் இணங்காததால் திரு.இராமசாமிபிள்ளை முயற்சியிலிருந்து விலகிக் கொண்டார். ஆகையால் அவரது இடத்தில் புறப்படுவதற்கு முன் வந்தார் திரு.பொன்னப்ப நாடார்.

திரு. பொன்னப்பநாடார். 23.07.1954 அன்று புறப்பட்டு மூணாறு சென்று கைதாகி 26.07.1954 அன்று திருவனந்தபுரம் மத்திய சிறைக்கு வந்து சேர்ந்தார். வேறு எவரும் முன் வராததால் 26.07.1954 அன்று திரு. இராமசாமி பிள்ளை புறப்பட்டார். தான் இல்லாத நேரத்தில் அவரின் பதிலியாகச் செயல்படுவதற்கு திரு.சைமன், எம்.எல்.ஏ.யை அதிகாரப்படுத்தினார். ஆனால், திரு.குஞ்சன் நாடார் அதை சேட்டை செய்யாமல், சர்வாதிகாரப் பொறுப்பை தானே எடுத்துக் கொண்டார். மூணாறுக்குப் புறப்பட்ட முதல் சர்வாதிகாரி அங்கே செல்லாமல் பாலாய்க்குச் சென்று கைதாகி அங்கேயே சிறையில் இருந்தார் என்று பிறகு தெரிய வந்தது. தடை உத்தரவு இல்லாத பாலாயில் அவர் ஏன் கைதாக வேண்டும்? 1955 ஆகஸ்டு 1-ம் நாள் அதற்கு என்ன காரணம் என்று அவரே பதில் கூறினார்.

> "என்னை எல்லோரும் மறியலுக்குப் போகாத ஒரு கோழை என்று வர்ணித்தார்கள். அதனால்தான் நான் போக வேண்டி வந்தது".

என்று கூறி சமாளித்தார். இருப்பினும் அவர் மூணாறுக்குப் போகவில்லை. முறையை கழிப்பது போன்று இருந்தது அவரது மறியல் புறப்பாடு.

## 26. குஞ்சன் நாடாருக்கு நெருக்குதல் :

திரு. குஞ்சன் நாடார் பொறுப்புக்கு வந்த பிறகு ஜாதாக்கள் நாகர்கோவிலிருந்து மட்டும் புறப்படாமல் தக்கலை, மார்த்தாண்டம் போன்ற பல்வேறு முனைகளிலிருந்தும் மூணாறுக்கு புறப்பட்டுச் சென்றன. அவர்களில் சிலர் மத்திய சிறைக்கு வந்து விட்டனர். இருப்பினும் திரு.குஞ்சன் நாடாருக்கு நிறைய நடைமுறை சிக்கல்களும், எதிர்ப்புகளும் உருவாகிவிட்டன. திரு.இராமசாமி பிள்ளை விட்டுச் சென்ற அலுவலக மேலாளர் திரு.குஞ்சன் நாடாருடன் ஒத்துழைக்கவில்லை. அதனால் அவருக்குப் பதிலாக திரு.ஜே.ஜேம்ஸ் அமர்த்தப்பட்டார். இரண்டாவதாக அவருக்கு பணமுடையை உருவாக்கிவிட்டனர் திரு.இராமசாமிப்பிள்ளை குழுமத்தினர். ஐவர்கள் அடங்கிய ஆக்ஷன் கவன்சிலில் பணப்பொறுப்பு சைமன் கோஷ்டியிடம் இருந்தது. திரு.இராமசாமிப்பிள்ளை மூணாறுக்கு புறப்படும் போது பணப்பொறுப்பு திரு.இராஜாபிள்ளையிடமும், அவருக்குப் பிறகு திரு.கிறிஸ்டோபரிடமும் விடப்பட்டிருந்தது. இதன் மறைமுக நோக்கம் திரு.குஞ்சன் நாடாருக்கு பண உதவி கிடைக்காமல் தடைபட வேண்டும் என்ற நோக்கத்தோடே செய்த ஏற்பாடாகும். இவர் தி.த.நா.கா. வில் இணைவதற்கு முன்பு நெய்யாற்றின்கரையில் திருவிதாங்கூர் ஸ்டேட் காங்கிரஸ் பிரமுகராக பல காலம் பணியாற்றினார். அவ்வமையம் அங்கே இந்து நாடார், கிறிஸ்தவ நாடார் என்ற பிரிவினைவாதம் எழுந்தது. இதை களைந்து அவர்களிடையே சமய வேற்றுமையின்றி ஒருங்கிணைப்புக்கு என பல கிறிஸ்தவ நாடார்கள் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டனர். ஆனால் இந்த ஒற்றுமைக்கு எதிராக திரு.குஞ்சன் நாடார் செயல்பட்டார்.

> "More over certain Nadar leaders of the State Congress like A. Kunjan Nadar, K.P. Nadar and Padbhanabhan Nadar opposed the attempt to Nadar solidarity, in the name of religion". ***(Aspects of South Indian History – Dr. D. Daniel – Travancore State Congress Versus Nadar's Solidarity Move 1939-1940– Page 281)***

தவிரவும் இவர் தி.த.நா.கா-வின் தலைவர் ஆகிவிட வேண்டும் என்ற குறிக்கோளிலும் செயல்பட்டு வந்தார். இது குறித்து திரு.நேசமணிக்கு கடிதங்களும் எழுதினார். இதனால் கட்சிக்குள் பெரிய எதிர்ப்பு இவருக்கு உண்டாயிற்று. மற்றவர்களை மதிக்காமல் தன்னிச்சையாக நின்று செயல்படும் தன்மையுடைவராகவும் காணப்பட்டார். இதனால் திரு.குஞ்சன்நாடார் செயல் இழந்து பொது நோக்கான தர்ணாவை தடம் மறிக்கவும், அழிக்கவும் இக்கோஷ்டியினர் முனைந்தனர்.

திரு. கிறிஸ்டோபரிடம் சேர்ந்த பணத்தையும் அவர் திரு. இராஜாபிள்ளையிடம் கொடுத்துவிட்டார். சுருங்கக் கூறுவதாயின் இவர்களிடத்தில் சேர்ந்த பணம் திரு.குஞ்சன் நாடார் வசம் வரவில்லை. ஆனாலும் தர்ணா போராட்டங்கள் எந்த தடங்கலுமின்றி, முன்பை விட வேகமாக நடத்தி வந்தார் திரு.குஞ்சன். கூடுதல் ஜாதாக்களையும், பொதுக்கூட்டங்களையும், பஞ்சாயத்து தலைவர்களையும், நகர்மன்ற தலைவர்களையும் மறியலில் ஈடுபடச் செய்தார். அன்றைய சூழ்நிலையில் இந்த வேகம் திரு.குஞ்சன் நாடாரால்தான் உருவாயிற்று. அவருக்குத்தான் பிரச்சார வலுவும், பணவலுவும் இருந்தன.

## 27. பன்முகமாக்குவதற்கும் முயற்சி :

'குஞ்சனை கவிழ்ப்பது' என்ற ஒரே குறிப்கோளில் செயல்பட்டு வந்த திரு. சைமன் அதில் வெற்றி பெற முடியவில்லை. எனவே அவர் கோஷ்டியினர் "அவர் வேகமாகப் போகிறார், நேசமணியை விட வளர்ந்து விட்டார்" என்ற பொய் புரளியை கிளப்பிவிட்டு, போராட்டத்தை பன்முகப்படுத்த முயன்றனர். இதற்கிடையில் :

திரு. நேசமணி விடுதலையாகி வெளியில் வரும்போது திருவனந்தபுரம் மத்தியச் சிறை வாசலில் அவருக்கு 144 வெள்ளைக் கார்களில் சென்று வரவேற்பு அளித்திட வேண்டும் என்றும்,

அன்பளிப்பாக ரூ.25,000/- அவரிடம் அளித்திட வேண்டும் என்றும் கூறி மீண்டும் பண வசூலில் இறங்கினர் சைமன் கோஷ்டியினர். சுமார் ஒரு வாரம் பொறுமையோடு காத்திருந்த திரு. குஞ்சன் நாடார், திரு. இராஜா பிள்ளையிடம் வசூல் கணக்கு கேட்டு நோட்டீஸ் அனுப்பினார். அதையும் உதாசீனப்படுத்திவிட்டு, குஞ்சனை ஒதுக்குவதற்காக போராட்டத்தை பன்முகமாக்கும் முயற்சியில் அக்கூட்டம் இறங்கியது. இதை ஒரு சர்வ கட்சி இயக்கமாக மாற்றுவதற்கான முயற்சியில் அவர்கள் இறங்கினர். இந்த முயற்சியில் அவருடன் சைமன், நூர்முகமது, சந்தனராஜ், பாவா முதலானோர் ஒத்துழைப்பு அளித்தனர்.

திரு.அண்ணாதுரை, திரு.ம.பொ.சிவஞானகிராமணியார், திரு.ப.ஜீவானந்தம் ஆகியோரின் கூட்டுப் பொறுப்பில் போராட்டத்தை தொடர்ந்து நடத்தப் போவதாக அறிக்கையும் வெளியிட்டனர். இந்த திட்டத்துக்கு ஆதரவு கேட்டு திரு.அண்ணாதுரை, திரு.குஞ்சன் நாடாரை அவரது வீட்டில் சந்தித்து பேசினார். இந்த முயற்சி ஒன்றிரண்டு தெருக் கூட்டங்களோடு முற்று பெற்றுவிட்டது. அவர்களுக்கு மூணாறு மறியலுக்குச் செல்லும் திட்டம் ஏதும் இல்லை. களத்தில் எஞ்சி நின்ற கட்சி கம்யூனிஸ்டுகள் மட்டுமே.

## 28. கம்யூனிஸ்டுகளின் ஆர்பாட்டங்கள் :

ஐக்கிய தமிழகம் அமைப்பதற்கு பெரிய எதிரி பண்டிதர் ஜவஹர்லால் நேரு (இந்திய பிரதமர்) என்றும், அவரை விட்டு விட்டு முதலமைச்சர் பட்டம் தாணுபிள்ளைக்கு எதிராகப் போராடுவதில் எந்த விவேகமும் இல்லையென்றும் கம்யூனிஸ்டுகள் வர்ணித்தனர். இவர்களது இத்தகைய வருணனை பொது மக்களிடம் விலை போகவில்லை. அஞ்சல் அலுவலகங்களில் மறியல் செய்வதற்கு வந்த கம்யூனிஸ்டுகளை மக்கள் தடுத்தனர். எனவே அவர்கள் திட்டம் பிசுபிசுத்துவிட்டது. கூட்டு மறியலுக்கு திரு. குஞ்சன் நாடார் இசைவு தரவில்லை. இந்த வேளையில் உட்பூசல் காரணமாக சைமன்

கோஷ்டியினர் கம்யூனிஸ்டுகளுக்கு மறைமுக ஆதரவு அளித்தனர். அவர்களது நோக்கம் திரு. குஞ்சன் நாடாரை கவிழ்த்து விட வேண்டும் என்பது மட்டுமே.

## 29. கம்யூனிஸ்டுகளின் சதி :

கம்யூனிஸ்டு தலைவர்களில் அன்று முன்னணியில் இருந்தவர் தோழர் ப. ஜீவானந்தம் ஆவார். இவருக்கு சொந்த ஊர் பூதப்பாண்டி என்றாலும், தனது 12-வது வயதில் வீட்டை விட்டு வெளியேறி தமிழகத்திற்குச் சென்று அரசியலில் பிரபலமானவர் அவர்.

“நான் நாகர்கோவிலிலிருந்த போது, தி.த.நா.காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான திரு.குஞ்சன் நாடார் பி.எ. பி.எல். அவர்கள், தனது இல்லத்தில் எனக்கும், கம்யூனிஸ்டு தலைவர் ப. ஜீவானந்தம் அவர்களுக்கும் ஒருநாள் பகல் விருந்தளித்தார்.

“அப்போது தெற்கெல்லைக் கிளர்ச்சி பற்றி விவாதித்தோம். ஆகஸ்டு 11-ல் (1954) திருவிதாங்கூர் சமஸ்தானம் முழுவதும் கம்யூனிஸ்டு கட்சியின் செல்வாக்கிலுள்ள தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தம் செய்யப் போவதாகவும், அதே நாளில் தென் திருவிதாங்கூரிலும் தமிழர்கள் அரசுக்கு எதிராக ஒரு பெரிய ஆர்பாட்டத்தை நடத்தினால், காங்கிரஸ் கட்சியின் ஆதரவோடு பட்டம் தாணுபிள்ளையின் தலைமையில் நடைபெறும் பிரஜா சோசியலிஸ்டு கட்சியின் ஆட்சியை கவிழ்த்து விடலாமென்றம், ஜீவா கூறினார். கம்யூனிஸ்டு கட்சியின் திருவிதாங்கூர் சமஸ்தானக் கிளையால் அனுப்பப்பட்டே ஜீவா இந்த ஆலோசனையைச் சொன்னார். எனக்கு இந்த யோசனை பிடிக்கவில்லை. கம்யூனிஸ்களின் தொழிற்சங்கப் போராட்டம் வர்க்கப் பிரச்சனை. தெற்கெல்லைக் கிளர்ச்சியோ இனப்பிரச்சனை. இந்த இரண்டுக்குமிடையே முரண்பாடு இல்லையென்றாலும், திருவிதாங்கூரில் தொழிற்சங்க இயக்கத்தை நடத்தும் கம்யூனிஸ்டுகள் அவ்வளவுபேரும் மலையாளிகள்! அவர்கள், தெற்கெல்லைக் கிளர்ச்சி நடத்துவோரிடம்

நல்லெண்ணமில்லாதவர்கள். அவர்களுக்கு ஆதரவு காட்டி பட்டம் தாணுபிள்ளை ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி நடத்துவது சாத்தியமில்லை என்று நான் ஜீவாவிடம் கூறினேன்.

“கம்யூனிஸ்டுகளை நம்பிப் போராட்டத்தில் ஈடுபடுவதும் எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால், நான் சென்னை திரும்பிய பின்னர் திரு. குஞ்சன் நாடார், ஜீவாவின் வலையில் விழுந்து விட்டார். அப்போது திரு. நேசமணி சிறையில் இருந்தார்”. ***(அதே புத்தகம் – பக்கம் – 731 – 732)***

உட்பூசலையும் கம்யூனிஸ்டு சூட்சியையும் கவனத்தில் கொள்ளாமல் திரு. குஞ்சன் நாடார் "விமோசன நாள்" போராட்டத் திட்டத்தை அறிவித்தார். அதன்படி 1954 ஆகஸ்டு 9-ம் நாளை விமோசன நாள் என்று அறிவித்தார். இந்த வேளையில் கம்யூனிஸ்டு ஆதரவு தொழிலாளர் யூனியன் ஆகஸ்டு 11-ம் நாள் திருவிதாங்கூர் - கொச்சி முழுவதும் பொது வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அரசுக்கு தாக்கீது கொடுத்திருந்தனர். இந்த 9-ம் நாள் கம்யூனிஸ்டுகளுக்கு ஒத்து வரவில்லையாதலால், விமோசனை நாள் போராட்டத்தை ஆகஸ்டு 11-க்கு தள்ளிப் போட திரு.குஞ்சன் நாடாரை தோழர் ப. ஜீவானந்தம் நெருக்குதல் கொடுத்தார். திரு. நேசமணி வெளியில் இல்லாத நேரத்தில் கிளர்ச்சியில் புரட்சிகரமாறுதல்களைச் செய்து விட வேண்டும் என்று திரு. குஞ்சன் நாடார் எண்ணியிருப்பார் போலும். அதனால் தி.த.நா.கா. தனித்து நின்று தர்ணா போராட்டம் செய்வதை விட, கம்யூனிஸ்டுகளுட்ன் இணைந்து நின்று போராட்டம் நடத்தினால் அதன் தாக்கம் பெரிதாக இருக்கும் என்று அவர் மனக்கோட்டை கட்டியிருப்பார். அதனால் தோழர் ப.ஜீவானந்ததின் வேண்டுகோளுக்கு இணங்கி விமோசன நாள் (Deliverance Day) போராட்டத்தை திரு. குஞ்சன் நாடார் நிச்சயிக்கப்பட்ட ஆகஸ்டு 9-ம் நாளிலிருந்து, ஆகஸ்டு 11-ம் நாளுக்கு மாற்றியமைத்தார். இந்த மாறுதலை திரு. சைமன் குழுவினரும் ஆதரித்தனர். தவிரவும் 9-ம் நாளில் விமோசனநாள்

அறப்போர் முழு வெற்றி பெறாமல் போய்விடுமோ என்ற அச்சமும் திரு. குஞ்சன் நாடாருக்கு உண்டாயிருந்தது. ஏனெனில் கட்சியில் உட்பூசல் வலுவாக இருந்ததால் ஆகஸ்டு 9-ம் நாள் எதிர் கோஷ்டியினர் ஒத்துழைப்புத் தர மறுத்துவிட்டால் போராட்டம் பிசுபிசுத்துவிடும் என்று அவர் அஞ்சினார். எனவே விமோசன நாள் (விடுதலை நாள்) போராட்டத்தை ஆகஸ்டு 11-ம் நாளுக்கு மாற்றி வைத்து அறிக்கையும் வெளியிட்டார் திரு. குஞ்சன் நாடார்.

ஆனால் நடந்தது என்ன? திரு.ம.பொ.சி. ஆரூடப்பட்டது போன்று, கம்யூனிஸ்டுகள் (மலையாளி) திரு. குஞ்சன் நாடாரின் காலை வாரிவிட்டனர். ஆகஸ்டு 11-ம் நாள் நடக்கவிருந்த பொது வேலை நிறுத்தத்தை கம்யூனிஸ்டுகள் ரத்து செய்து விட்டனர். அதுவும் ஆகஸ்டு 10-ம் தேதி இரவுதான் இந்த 'ரத்து'ச் செய்தியை அவர்கள் வெளியிட்டு திரு. குஞ்சன் நாடாரை திக்கு முக்காட வைத்து விட்டனர். தோழர் ஜீவாவும் தனது கையை விரித்து விட்டார். போலிட் பியூறோ (என்ன பியூறோவோ) எடுத்த முடிவை மாற்றுவது என்பது முடியாத காரியம் என்று அவர் கூறியிருக்க வேண்டும். இந்த இக்கட்டான சூழ்நிலையில் 11-ம் தேதி 'விடுதலை நாள்' கடைப்பிடிக்காமல் இருப்பதற்கு இயலாத நிலை திரு.குஞ்சன் நாடாருக்கு உருவாயிற்று.

## 30. பிரதமர் நேருவின் கடிதம் :

முதல் சர்வாதிகாரி திரு. பி. ராமசாமிபிள்ளை, தென் திருவிதாங்கூரில் நிலவி வந்த அரசியல் அசாதாரண நிலைமைகளைக் குறித்து விளக்கியும், உகந்த நடவடிக்கை வேண்டியும் பிரதமர் நேருவுக்கு தந்தி அனுப்பியிருந்தார். அதற்கு 09.07.1954 அன்று பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்கள் சுருக்கமாக பதில் எழுதியுள்ளார். மாநிலங்கள் புனரமைப்புப் பிரச்சனை குறித்து ஆய்ந்தறிவதற்கு ஒரு உயர்மட்ட குழு அமைத்திருப்பதாகவும், அதன் பரிந்துரைகளின் அடிப்படையில்தான் மாநிலங்கள் புனரமைப்புகள் செய்யப்படும் என்றும்

விளக்கியிருந்தார். அதற்கு முன்பாக இது நிமித்தம் தான் ஏதும் செய்வதற்கில்லை என்றும் வருத்தத்துடன் பதில் எழுதியிருந்தார். தவிரவும் ஜூலை 28-ம் தேதி பண்டிதர் நேரு, பி. இராமசாமி பிள்ளைக்கு அனுப்பிய இன்னொரு கடிதம் திரு.குஞ்சன் நாடாரிடம் கிடைத்திருந்தது. அந்த கடிதத்தை உள்ளூர் பத்திரிகைகளில் பிரசுக்குமாறு பிரதமர் நேரு அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார். ஆனால் அதை திரு.குஞ்சன்நாடார் பத்திரிகைகளில் பிரசுரிக்காமல் இருட்டடிப்பு செய்துவிட்டார். இதனால் பிரதமர் நேருவும் காங்கிரஸ் வட்டாரங்களும் தி.த.நா.கா மீது கடுங்கோபம் கொண்டனர். தவிரவும் நேருவிடமிருந்து வரப்பெற்ற கடிதங்களைக் குறித்து திரு. நேசமணியிடம் கூட சிறைக்குச் சென்று கூறவில்லை. கூறியிருந்தால் அதை அவர் பிரசுரித்து விட்டு பிரதமருக்கு தக்கதொரு பதிலையும் எழுதியிருப்பார். இவரது செயலினால் திரு. நேசமணி வீண் பழிக்கு ஆளானார். “நேரு எழுதித் கேட்டுக் கொண்ட பிறகும், அவர் எழுதிய கடிதங்களை நேசமணி பிரசுரிக்க மறுத்துவிட்டார்” என்பதே அந்த பழி. திரு நேசமணியிடம் ஏன் கடிதங்களை காண்பிக்கவில்லை என்று திரு.எ.எ.ரசாக் கேட்டதற்கு அவர் “அவரிடம் காட்டினால் கலங்கிப் போவார். அதனால்தான் காட்டவில்லை” என்று பி. இராமசாமி பிள்ளை பிறிதொரு சந்தர்ப்பத்தில் பதில் கூறினாராம். நல்ல வேடிக்கையல்லவா! வானமிடிந்து வீழ்ந்தாலும் அஞ்சா நெஞ்சன் திரு.நேசமணி கலங்குவாரா? என்ன!

## 31. சிறைக் கதவுகள் திறக்கப்பட்டன :

04.07.1954 அன்று மூணாறில் பட்டம் தாணுபிள்ளையின் பி.எஸ்.பி. அரசின் மக்கள் விரோதப் போக்கை கண்டித்து தடை மீறல் போராட்டம் நடத்தியதற்காக தலைவர் திரு.எ.நேசமணி, முன்னாள்அமைச்சர் திரு.அ.சிதம்பரநாதன் நாடார் மற்றும் ஜனாப் எ.எ. ரசாக் போன்ற மூவரும் கைதாகி 6 வார சிறைத் தண்டனை பெற்று திருவனந்தபுரம் மத்தியச் சிறைக்கு அனுப்பப்பட்டனர். இவர்களது தண்டனைக் காலம் ஆகஸ்டு 13-ம் நாள் தான் முடிவடைய வேண்டும். ஆனால் திரு. தாணுபிள்ளை அரசு

இவர்களது சிறை தண்டனை முடிவதற்கு மூன்று நாட்கள் முன்னதாக, அதாவது 09.08.1954 இரவு 10 மணிக்கு திடீரென இவர்கள் அனைவரையும் விடுதலை செய்தது. மூணாறில் கைதாகியிருந்த இரண்டு எம்பிக்கள், 9 சட்டமன்ற உறுப்பினர்கள், 3 நகராட்சித் தலைவர்கள், 4 பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதானிகள் உள்பட 410 நபர்கள் அனைவரையும் விடுதலை செய்தது. இதற்கு காரணம் என்ன என்று எவருக்கும் புரியவில்லை. 11.08.1954 அன்று விடுதலை நாள் போராட்டம் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் 09.08.1954 நள்ளிரவில் இவர்களை ஏன் விடுதலை செய்ய வேண்டும்? 09.08.1954 இரவின் சிறைக் கதவை திறந்து உள்ளே வந்த சிறைக் கோட்ட தலைமை கண்காணிப்பாளர் "சிறைக் கதவுகள் திறந்திருக்கின்றன! வாகனங்களும் காத்து நிற்கின்றன, உங்களுக்கு என் நல்வாழ்த்துக்கள்" என்று வாழ்த்துக் கூறினார்.

இது என்ன விபரீதம் என்று வியப்பில் ஆழ்ந்திருந்த வேளையில், விடுதலையான சிலர் "போராட்ட வேகம் தாள முடியாமல் தாணுபிள்ளை வழிக்கு வந்து விட்டார் என்று பெருமிதப்பட்டனர்". ஆனால் மதியூகி, நேசமணி "இதில் கண்ணுக்குப் புலப்படாத சூது ஒன்று ஒளிந்திருக்கிறது" என்றார்.

பல பாராட்டுக் கூட்டங்களில் கலந்து கொண்டு வீடு திரும்புவதற்கு இரவு வெகு நேரமாகிவிட்டது. விடிந்தால் விமோசன நாள் மறியல் (11.08.1954). 11-ஆம் தேதி காலை 9 மணிக்கு ஊர்வலம் ஆரம்பமாயிற்று. நாகர்கோவில் நகரத்தில் பாதுஷா பார்க்கிலிருந்து ஆரம்பமான பிரமாண்ட ஊர்வலம் தலைவர் திரு. எ. நேசமணியின் தலைமையில் நகரத்தின் முக்கிய வீதிகள் வழியாக வலம் வந்தது. அணிவகுத்து வந்த இந்த ஊர்வலத்தில் ஒரு முண்ணனி வீரராக வந்தார் கம்யூனிஸ்டு சட்டமன்ற உறுப்பினர் (சென்னை) தோழர் ப.ஜீவானந்தம். முதல் சர்வாதிகாரி திரு.ராமசாமிபிள்ளையை வழிமறித்து கூட்டுப் பொறுப்பு கேட்ட

ம.பொ. சிவஞானகிராமணிரையோ, இரண்டாவது சர்வாதிகாரி திரு.எ.குஞ்சன் நாடாரின் வீடு தேடிச் சென்று கூட்டுப் பொறுப்புக்கு இசைவு கேட்ட பேரறிஞர் அண்ணா அவர்களையோ இந்த ஊர்வலத்தில் காண முடியவில்லை. ஆனால் ஆச்சரியம் என்னவென்றால் திருமதி.றோசம்மாள் குஞ்சன் நாடாரும், திருமதி.கிருஷ்ணம்மாள் (பட்டம்) தாணுபிள்ளையும் வேறு சில தோழியர்களும் இந்த ஊர்வலத்தில் அணிவகுத்து வந்தனர். இந்த இரு பெண்மணிகளும் நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரித் தோழியர்களாகும். ஊர்வலம் அமைதியாக நகர்மன்ற திடல் அடைந்தது. அப்போது உச்சி வெயில் 12.30 மணி. தலைவர் திரு. எ. நேசமணி சில நிமிடங்கள் கூட்டத்தினரிடம் பேசினார்:

> “திருவிதாங்கூர் கொச்சி சட்டக் கூட்டிலிருந்து தமிழ் மக்கள் பிரிந்து போக வேண்டும்? எதற்கு? ஒரு தனி ராஜ்யம் அமைப்பதற்காகவா? இல்லை. சென்னை ராஜதானியிலுள்ள தமிழகத்தோடு இணைவதற்கு என்றால், அந்த தமிழகமும் இந்திய சர்க்கார் ஆணைக் கோட்டுக்குள்ளாகத்தான் இருக்கிறது என்பதை யாருக்கும் மறுக்க முடியாது. ஆகவே நாம் அதோடு சேருவதற்கும் அது நம்மை சேர்த்துக் கொள்வதற்கும் மத்திய சர்க்கார் அங்கீகாரம் வழங்க வேண்டும். இதை நெஞ்சில் வைத்துக் கொண்டுதான் விடுதலை கேட்கிறோம். விடுதலையும் உடனே கிடைக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆகவே நாம் உடனடியாகக் காலம் சுணங்காமல் பி.எஸ்.பி. சர்க்கார் வருதியிலிருந்து விடுபட கோரிக்கை எழுப்புகிறோம்”.

என்று முடித்தார். **"ஐக்கிய தமிழகத்தை அமைத்தே தீருவோம். அமைந்திடும் வரை போராடுவோம்"** என்ற கோஷம் முழங்க கூட்டம் அமைதியாக உச்சிவேளை 12.30 மணிக்கு முடிந்தது. ***(நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம் – பக்கம் 229 & 230)***

## 32. மார்த்தாண்டத்தில் நர வேட்டை :

11.08.1954 அன்று மூன்று இடங்களில் விடுதலை நாள் நிகழ்ச்சிகள் ஏற்பாடாகி இருந்தன. இவைகள் முறையே நாகர்கோவில், மார்த்தாண்டம் மற்றும் புதுக்கடை என்ற ஊர்களாகும். தலைவர் நேசமணியும் மற்றும் முக்கியமானவர்களும் சிறையில் அடைக்கப்பட்டிருந்தமையால், எஞ்சியவர்களை வைத்து விடுதலை நாள் நிகழ்ச்சி நிரல்கள் வகுக்கப்பட்டிருந்தன. இந்த திட்டப்படி சர்வாதிகாரி திரு.குஞ்சன் நாடார் நாகர்கோவில் நிகழ்ச்சியில் பங்கேற்றுவிட்டு, அதற்குப் பிறகு மார்த்தாண்டம் நிகழ்ச்சிகளில் கலந்து விட்டு, மாலை 3.30 மணியளவில் புதுக்கடையில் ஏற்பாடாகியிருந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றிவிட்டு, விமோசன நாள் நிகழ்ச்சிகளை முடித்து வைப்பதென ஏற்பாடு. இதனிடையே மார்த்தாண்டத்தில் நடந்த காலை நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைக்கவும் ஊர்வலத்தில் முன்னின்று நடத்தவும் திரு. ப. தாணுலிங்க நாடார் அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். அதன்படி தொடுவட்டி காந்தி மைதானத்தில் (இன்றைய சிறு பஸ் நிறுத்தம்) காத்து கூடிநின்ற மக்கள் வெள்ளத்தில் தயார் நிலையில் நின்றிருந்த 16 மறியல் வீரர்களுக்கு மாலை அணிவித்து, காலை 9.30 மணியளவில் ஊர்வலத்தை தொடங்கி வைத்து, அதற்கு தலைமையேற்று திரு. ப. தாணுலிங்க நாடார் முன்னின்று வழி நடத்திச் சென்றார். ஆனால் புதுக்கடையில் ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்யவில்லை.

நாகர்கோவில் நிகழ்ச்சியில் கலந்து விட்டு சர்வாதிகாரி திரு.குஞ்சன் நாடார், தனது காரில் தொடுவட்டி நிகழ்ச்சிக்கு விரைந்தார். சுமார் 2.00 மணியளவில் தொடுவட்டிக்கு 2 மைல்களுக்கு முன்பாக (பம்மம் அருகில்) செல்லும் போது சாலையில் ஒரு நெடிய ஆலமரம் குறுக்கே கிடந்து சாலை போக்குவரத்தை முற்றிலும் தடை செய்துவிட்டது. அதனால் அவர் திரும்பி குறுக்கு வழியாக (பள்ளியாடி வழி) கருங்கல் சென்று அங்கிருந்து பைங்குளம்

வழியாக புதுக்கடை செல்வதற்கு முயன்றார். அங்கேயும் சாலைத்தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்ததால் புதுக்கடை செல்லவும் அவரால் முடியவில்லை.

> “திட்டமிட்டபடி ஆகஸ்டு 11-ல் தென் திருவிதாங்கூரில் “விடுதலை நாள்” ஆர்பாட்டங்கள் நடைபெற்றன. இதில் ப. ஜீவானந்தம் உள்படக் கம்யூனிஸ்டு தமிழர்களும் கலந்து கொண்டார்கள். கம்யூனிஸ்டு பாணியில் சொல்வதானால் இந்த ஆர்பாட்ட ஊர்வலத்தில் அவர்கள்தான் “புரட்சி சக்தி” யாகத் திகழ்ந்தார்கள். திருவிதாங்கூர் முழுவதும் நடைபெறவிருந்த பொது வேலை நிறுத்தம் ஒத்திப் போடப்பட்டு விட்டதால், சமஸ்தான போலீஸ்படை முழுவதையும் தென்திருவிதாங்கூருக்கு அனுப்புவது பட்டம் தாணுவின் ஆட்சிக்கு சாத்தியமானது. தமிழர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டத்தில் கம்யூனிஸ்டுகளும் கலந்து கொள்கிறார்கள் என்பதால், வன்முறையை எதிர்பார்த்து அடக்குமுறைக்கு சமஸ்தான அரசு தன்னை முன் கூட்டியே தயார்படுத்திக் கொண்டது”.
> ***(ம.பொ.சிவ ஞானம் – எனது போராட்டம் – பக்கம் 733)***

ம.பொ.சி-யின் கருத்துப்படி ஆலமரம் குறுக்கே படுத்துக் கிடந்ததும், சாலைத்தடங்கல்கள் உருவாக்கியதும், தந்திக் கம்பங்கள் வெட்டி சாலைகளில் போட்டதும் இந்த தோழர்களின் வேலையென்பது மறுக்க முடியாத உண்மைகளாகும். இதனால்தான் அமைதியாக நடந்த சத்தியாக்கிரக ஊர்வலம் பேராட்டக்களமாக மாறியது.

திரு. தாணுலிங்க நாடார் தொடுவட்டியிலிருந்து மறியல் வீரர்களோடும் 5000 அதிகம் ஊர்வல மக்களோடும் காலை 11.00 மணியளவில் குழித்துறை சப்பாத்துப் பாதை வழியாக விளவங்கோடு தாலுகா அலுவலகம், மஜிஸ்டிரேட் கோடதி மற்றும் போலீஸ் நிலையங்கள் அடங்கி இருந்த வளாகத்துக்கு நேராக நடத்திச் சென்றார். இந்த ஊர்வலம் கோடதி வளாகம் நுழைவாயில்

சென்றடைந்தபோது அதன் பலம் 10,000 -த்துக்கும் மேலானது. இவ்வளவு பெருங்கூட்டத்தைக் கண்ட காவல்துறையினர் மிரண்டு தடியடியில் இறங்கினர். ஆனால் மறியல் வீரர்களோ தடியடியை ஏற்றுக் கொண்டு நகராமல் அங்கேயே நின்றனர். இதைக் கண்டு ஆவேசப்பட்ட கூட்டத்தினர் போலீசுடன் மோதினார்கள். எனவே போலீஸ்காரர்கள் அவர்களையெல்லாம் கைது செய்து எங்கோ பறந்தனர். இதனால் அரசு வளாக அலுவலகங்களில் போலீஸ் பாதுகாப்பு இல்லாமல் போயிற்று.

தடியடியால் கலைந்த பெருங்கூட்டத்தில் ஒரு பகுதியினர் பின் வாங்கி குழித்துறை பஸ் நிலையத்தைப் பார்த்தும், இன்னொரு பிரிவினர் சப்பாத்துப் பாலம் வழியாக மீண்டும் தொடுவட்டியைப் பார்த்தும் நகர்ந்தனர். புரட்சித் தோழர்களும் இதில் கலந்துவிட்டனர். தந்திக் கம்பங்கள் சாய்க்கப்பட்டன. சாலைத் தடைகளும் ஆங்காங்கே உருவாக்கப்பட்டன. கோர்ட் வளாக நுழை வாயிலில் காவல்துறையினர் கூட்டத்தினர் மேல் தடியடி நடத்தாமல், அவர்களை மறியல் செய்வதற்கு அனுமதித்துவிட்டு, பிறகு கைது செய்திருந்தால் அன்று இந்த துயர நிகழ்ச்சிகள் நடந்திராது. அங்கே நடந்த களேபரத்தில் ஜாதா தலைவர் திரு. ப. தாணுலிங்க நாடார் போலீசாரின் பார்வையில்படாமல் தப்பிவிட்டார். போலீஸ்காரர்கள் அவரை தேடிப் பார்ப்பதற்குள், மாலை மூன்று மணிக்குள்ளாக கருங்கல் வழி நாகர்கோவிலுக்கு அவர் வந்து விட்டார். ஆகையால் பகல் 1.30 மணியளவில் மார்த்தாண்டம், தொடுவட்டி ஆகிய இடங்களில் நடந்த அந்த துயர நிகழ்ச்சிகளை அவரால் நேரில் காண முடியவில்லை. அவ்விடங்களிலிருந்து அவர் தப்பி ஓடி நாகர்கோவில் வீட்டுக்கே வந்து மறைந்து கொண்டார். அவர் இந்து மண்டல துணைத் தலைவர் என்பதால் காவல்துறையினர் அவரை அப்போது தேடவில்லை.

தொடுவட்டியில் பகல் 1.30 மணி வரை நிலைமை அமைதியாகவே இருந்தது. போலீஸ் நரவேட்டை அதற்குப் பிறகுதான் ஆரம்பமாயிற்று. குழித்துறை தாலுகா அலுவலகத்திலிருந்து

தடியடியால் துரத்தியடிக்கப்பட்டவர்கள் எல்லாம் பின் திரிந்து ஒரு சாரார் குழித்துறை பஸ் நிலையத்திற்கும் இன்னொன்று மார்த்தாண்டம் நோக்கியும் நகர்ந்தனர். தாலுகா அலுவலகத்திற்கும், வாவுபலி மைதானத்திற்குமிடையில் இரு பக்கங்களிலும் வசிப்பவர்கள் அனைவரும் நாயர் சமுதாயத்தவர்கள் ஆவர். இந்த வீடுகளிலிருந்து கூட்டத்தினர் மீது கல்லெறி வந்தது. இதனால் ஆத்திரமடைந்த ஊர்வலக்காரர்கள் கல்லெறி வந்த வீடுகளை நோக்கிப் படையெடுத்தனர். ஆனால் நாயர் கூலிப்படையினர் தப்பி ஓடி விட்டனர். குழித்துறை பேருந்து நிலையம் அடைந்த கூட்டத்தினர் போலீசார் மீது கல்மழை பொழிந்தனர். அச்சமயம், மார்த்தாண்டம் அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து, போலீசுக்கு ஒரு அழைப்பு வந்தது. அவர்கள் கூட்டத்தினரை விட்டு விட்டு, அரசு பள்ளிக்கு விரைந்தனர்.

பள்ளி மாணவர்கள் வகுப்புகளை புறக்கணித்துவிட்டு விடுதலை தின கோஷங்கள் எழுப்பியவண்ணமிருந்தனர். பல மாணவர்களை போலீசார் மடக்கிப்பிடித்து கைது செய்தனர். ஆனால் சக மாணவர்கள் அவர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரி பள்ளி தலைமையாசிரியரை அணுகினர். தொலை நோக்கில்லாத அந்த தலைமையாசிரியர் அந்த மாணவர்களை வெளியேற்றும்படி போலீசை அழைத்து ஆணையிட்டார். இதைப் பார்த்த சுமார் 1500 மாணவர்கள் புற்றீசல் போன்று போலீசுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இவர்களை சமாளிப்பதற்கு போலீஸ் பலம் குறைவாக உள்ளதால், கூடுதல் போலீஸ் படை வேண்டி திருவனந்தபுரம் மற்றும் நாகர்கோவிலுக்கு அவசர வேண்டுகோள் விடுத்தனர். இதை அறிந்து கொண்ட ஊர்வலக்காரர்கள், போலீஸ் வருகையை தடுப்பதற்காக தந்திக் கம்பங்கள், மரங்கள் மற்றும் பாறாங்கற்கள் போன்றவற்றால் ஆங்காங்கே தடை உருவாக்கினர். சுமார் பிற்பகல் 1.30 மணிக்கு போலீஸ்காரர்கள், முன்னறிவிப்பு ஏதும் இன்றி கூட்டத்தைப் பார்த்து நேரடியாகச் சுட ஆரம்பித்தனர். ஐந்து இடங்களில் துப்பாக்கிச் சூடு

நடத்தினர். இதில் ஏழு பேர் குண்டடிப்பட்டு சுருண்டு விழுந்து இறந்தனர். பலருக்கு குண்டுக்காயம் ஏற்பட்டது. அநேகர் கைது செய்யப்பட்டனர். சிறை பிடிக்கப்பட்டவர்கள் அனேகர் குழித்துறை சிறைக்கோட்டத்தில் கொள்ளாமையால் திருவனந்தபுரம் சிறைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இதனிடையே, போலீஸ் அதிகாரிகளின் வேண்டு கோளுக்கிணங்கி நாகர்கோவிலில் இருந்து ஏராளமான போலீஸ் படை தொடுவட்டி காளைச் சந்தைக்கு (இன்றைய புதிய பேருந்து நிலையம்) விரைந்தது. அங்கேயும் அவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். கம்யூனிஸ்டு தலைவர் திரு. ஜி. எஸ். மணியை குறி வைத்து பல தடவை சுட்டனர். ஆனால் மயிர் இழையில் அவர் தப்பிவிட்டார். ஆனால் தலைச் சுமடு காய்கறி வியாபாரி மூதாட்டி ஒருவர் குண்டுக்குப் பலியானார். பிறகு இவர்கள் எல்.எம்.எஸ். வளாகத்தில் உயரமான இடத்தில் நின்று கொண்டு சாலையை நோக்கி இரண்டு சுற்று சுட்டனர். இங்கேயும் பலர் குண்டடிப்பட்டு வீழ்ந்தனர். பலர் இறந்தனர். பலர் மரண அடியை வாங்கிக் கொண்டு தலைமறைவாகி விட்டனர். குண்டடிப்பட்டு இறந்தவர்களின் சடலங்களையும், காயமுற்று குற்றுயிராகக் கிடந்தவர்களையும் போலீஸ் வண்டிகளில் அள்ளிப்போட்டுக் கொண்டு குழித்துறை காவல் நிலையத்திற்கு விரைந்தனர். இவர்களின் கதி என்னவாயிற்று என்று இன்றளவும் வெளியிடப்படவில்லை. இத்துடன் தொடுவட்டி மற்றும் மார்த்தாண்டம் பகுதிகளில் போர் ஓய்ந்து, அங்கே மரண அமைதி நிலவியது. சாலையில் செங்குருதி குழித்துறை ஆறுபோல் ஓடிக்கொண்டு இருந்தது.

தொடுவட்டியில் நடந்த துப்பாக்கிச் சூட்டின் ஓசை நாகர்கோவிலில் எட்டியது. தோழர் ப. ஜீவானந்தத்தின் காதுகளிலும் அது எட்டியது. உடனடியாக அவர் கடுக்கரைக்கு விரைந்தார். அங்கிருந்து காட்டுப் பாதை வழியாக பணகுடி சென்றடைந்தார். இவரது வரவை எதிர்நோக்கிய வண்ணம் கே.எல்.எஸ் சந்தானமும்

மற்றும் சில வெள்ளாம்பிள்ளைகளும் அங்கே காத்திருந்தனர். அந்தி மயங்கும் வேளையில் தோழர் அங்கே சென்றடைந்ததும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். விளவங்கோடு தமிழர்களை குறிப்பாக நாடார் மக்களை மலையாளி போலீசுக்கு காவு கொடுத்த நிகழ்ச்சிக்கு காரணகர்த்தாவாயிருந்த தோழர் ப. ஜீவானந்தத்தை அவர்களால் பாராட்டாமல் இருக்க முடியுமா? இந்த துயர நிகழ்ச்சியை கம்யூனிஸ்டு இயக்கமோ, அல்லது தோழர் ப. ஜீவானந்தமோ இன்றுவரை கண்டிக்கவுமில்லை, மக்களுக்கு அவர்கள் ஆறுதல் கூறவுமில்லை. ஆனால் இவரை வீரன் என்று அரசும் 'அவர்களும்' பாராட்டுகின்றனர். ஏனெனில் அவர் நாஞ்சில் நாட்டு உயர்குலத்தான் என்பதற்காக!

## 33. புதுக்கடையில் நரவேட்டை :

11.08.1954 – ல் நடைபெற்ற விடுதலை நாளை (விமோசன நாள்) முன்னிட்டு புதுக்கடையில் ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்யப்படவில்லை. ஆனால் அங்கிருந்த போலீஸ் அவுட்போஸ்டு அருகாமையில், முஞ்சிறை ஊரில் அமைந்திருக்கின்ற சார் பதிவாளர் அலுவலகம் முன்பாக மறியலுக்கும், புதுக்கடையில் மாலை பொதுக்கூட்டத்திற்கும் ஏற்பாடாகியிருந்தது. ஏன்? புதுக்கடையில் இந்த கூட்டம் என்பதற்கு விடையாக, அந்த ஊரை அடுத்த முஞ்சிறை, பைங்குளம், அம்சி மற்றும் பார்த்திபபுரம் போன்ற ஊர்களில் நாயர்களும், செல்வாக்கு மிக்க நாயர் பிரதானிகளும் அனேகர் உண்டு. புதுக்கடையை அடுத்த பைங்குளம் மற்றும் அம்சியிலும் நாயர்களின் ஆதிக்கம் ஓங்கியிருந்தது. புதுக்கடையில் வாணிய செட்டிகளின் ஆதிக்கமும் பிரசித்தி பெற்றது. தவிரவும், 1948-ல் பட்டம் தாணுபிள்ளையின் முதல் ஆட்சி காலத்தில் புதுக்கடையை அடுத்த மங்காட்டில் தேவசகாயம் நாடாரையும், தேங்காபட்டணம் அருகில் கீழ்குளத்தில் செல்லையயன் நாடாரையும் சுட்டுக் கொன்றனர். புதுக்கடை ஊர் மேற்படி ஊர்களுக்கெல்லாம் நடுநாயகமானதும், முக்கிய தினச்சந்தையும்

ஆகும். எனவே தமிழர்களின் முக்கியத்துவத்தைப் பிற சாதியினருக்கு எடுத்துக்காட்டுவதற்காகவே, புதுக்கடையில் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடாயிற்று. இவர்களுக்கு தி.த.நா.காவின் செல்வாக்கை வெளிப்படையாக பறைசாற்றுவதற்காகவே இங்கே பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

திட்டப்படியே முதல் சர்வாதிகாரி நாகர்கோவில் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, சுமார் 2.00 மணியளவில் தொடுவட்டி தர்ணாவை ஊக்குவித்துவிட்டு, மாலை 5.00 மணிக்கு புதுக்கடை பொதுக்கூட்டத்தில் கலந்து சிறப்புரையாற்றும் வகையில் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. ஆனால் அன்றைய சூழ்நிலையில் மார்த்தாண்டத்துக்கோ, புதுக்கடைக்கோ வந்து கூட்டங்களில் பங்கேற்க அவருக்கு முடியவில்லை. முஞ்சிறை சார்பதிவாளர் அலுவலக மறியல், மாலைக் கூட்டத்திற்கு வேண்டிய தொண்டர்கள் சீரமைப்பு பணிகள் போன்றவற்றைக் கவனிப்பதற்கு இரணியல் இளம் வழக்கறிஞர் திரு. சி. கோபாலகிருஷ்ணன் பொறுப்பில் விடப்பட்டிருந்தது. காலையில் மறியல் போராட்டம் எவ்வித அசம்பாவிதங்களும் இல்லாமல் நடந்தது. அதற்குக் காரணம் அங்கே காவல்துறையினரின் பந்தோபஸ்து போடப்படவில்லை. அதனால் அங்கு அசம்பாவிதம் எதுவும் உருவாக்கப்படவில்லை.

புதுக்கடையில் மாலையில் பொதுக்கூட்டம் என்று விளம்பரப்படுத்தப் பட்டுள்ளதால் மக்கள் பெருங்கூட்டம் அங்கே கூடிவிட்டது. ஆனாலும் அவர்கள் அமைதி காத்தனர். கூட்டம் ஒரு தனியார் இடத்தில் ஏற்பாடாகியிருந்தது. இந்த இடம் புதுக்கடை சவரிமுத்து என்கிற கொச்சப்பாவு மற்றும்அன்புடையான் என்கிற அப்பாவு நாடாருக்குச் சொந்தமானதாகும். வேறு இடம் கிடைக்காததால் இதில் கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. பிரதான சாலையில் இருந்து ஒரு குறுகிய சந்து வழியாக உள்ளே சென்றால் சற்று விசாலமான இடம் ஆகும் இது. இந்த திடல் நான்கு புறமும் கைசாலை அமைத்து அதில் மரச்சீனி (ஏழிலைக்கிழங்கு) பயிர்

செய்யும் இடமாகும். தோற்றத்தில் வடநாட்டு ஜாலியன் வாலாபாக் சவுக்கத்தைப் போன்ற அமைப்புடையதாகும். ஜாலியன் வாலாபாக் சவுக்கத்தின் நடுவில் ஒரு பாழ் கிணறு இருந்ததைப் போன்று புதுக்கடை மைதானத்துக்குக் கீழ் பாகத்தில், வாணிச் செட்டிக்களின் தெருவிலும் ஒரு பாழ் கிணறு உண்டு. 1919 ஏப்ரல் 13-ம் நாள் பஞ்சாப் மாகாணத்தில் அமிர்தசரசில் ஜாலியன் வாலாபாக் சதுக்கத்தில் ஜெனரல் டயர் என்பவரின் தலைமையில் காங்கிரஸ் கூட்டத்தைப் பார்த்து, நுழைவாயிலை அடைத்த வண்ணம் ஒரு பற்றாலியன் ஜவான்கள் பல சுற்றுகள் சுட்டதில் மக்கள் தப்பித்துச் செல்வதற்கு வழியில்லாமல் குண்டடிபட்டுச் செத்து வீழ்ந்தனர். உயிர் துறந்தவர்களின் எண்ணிக்கை 400-க்கும் அதிகம். காயமுற்றவர்கள் சுமார் 2500. அங்கேயிருந்த பாழ் கிணற்றில் வீழ்ந்து இறந்தவர்களின் கணக்கு இல்லை. அதே போன்று, ஒரு குப்பியைப் போன்ற இடம் தான் இந்த புதுக்கடை மைதானமும்.

போலீஸ் ஜவான்கள் திரு. கோபாலகிருஷ்ணன் நேராக துப்பாக்கியை குறி வைத்த வண்ணம் அவரை நோக்கி வேகமாக விரைந்து வந்தனர். விபரீதத்தை உணர்ந்து கொண்ட திரு. கோபாலகிருஷ்ணன் உடனடியாகக் கூட்டத்தை முடித்துக் கொண்டு மக்களைக் கலைந்து செல்வதற்கு அறிவுரை வழங்கினார். மேடையை விட்டுக் கீழே இறங்கிய அவரையும், மற்றும் மூவரையும் மலையாளக் காவல்துறையினர் இழுத்துச் சென்று போலீஸ் வண்டியில் ஏற்றிக் கதவை மூடிவிட்டு, எவ்வித எச்சரிக்கையும் கொடுக்காமல் கூட்டத்தைப் பார்த்து சுட ஆரம்பித்தனர். வண்டி குழித்துறைக்கு நேராகப் போய்க் கொண்டிருந்தது. சுட்டுக் கொண்டே வண்டி நகர்ந்து கொண்டிருந்தது. வண்டி புறப்படும் முன்பே 24 சுற்று சுட்டனர். கூட்டம் அலறி அடித்துக் கொண்டு, வேறு வழியில்லாததால் சுவர் ஏறித் தாவி வாணியர் தெருவிலூடே உயிருக்காக சிதறி ஓடினர். இந்த சமயம் பார்த்து உள்ளூர் வாசிகளான வாணியர்கள் ஓடுகின்றவர்களை தடியாலும், உலக்கையாலும் கடுமையாகத் தாக்கினர். இந்த தாக்குதலில்

உயிர் நீத்தவர்களை அவர்கள் இழுத்துச் சென்று தெரு பாழ் கிணற்றில் வீசினர். போலீஸ் சுட்டதில் 4 பேர் இறந்ததாக அரசு கணக்கு சொன்னது. ஆனால் அங்கே பிறகு நிறுவப்பட்ட ஸ்தூபியில் 8 நபர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. படுகாயமுற்று பின்னால் இறந்தவர்கள் 18 நபர்கள். கைது செய்யப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டவர்கள் சுமார் 200 நபர். இரவு 8 மணியளவில் மயான அமைதி அங்கேயும் நிலவியது.

இறந்தவர்களின் சடலங்களை போலீசார் வண்டியில் எடுத்துச் சென்றனர். காயமுற்ற சிலரையும் பிடித்துச் சென்றனர். இவர்களையும், தொடுவட்டியில் இறந்தவர்களையும் சேர்த்து குழித்துறை சப்பாத்துக்கு மேல் ஆற்றுப் படுக்கையில் குவியலாகப் போட்டு பெட்ரோல் ஊற்றி எரித்தனர். பிணங்களைக் கூட உறவினர்களுக்கு கொடுக்கவில்லை மலையாள அரசு.

## 34. அரசு வஞ்சம் தீர்த்தது :

திரு. பட்டம் தாணுபிள்ளை முதன் முதலாக திருவிதாங்கூருக்கு 12.03.1948 அன்று வெகு விமரிசையாக பிரதமர் ஆக பதவி ஏற்றுக் கொண்டார். அப்பொழுது அவர் காங்கிரஸ் தலைவராகவும் செயல்பட்டார். காங்கிரசின் தேர்தல் வாக்குறுதியில், திருவிதாங்கூர் மன்னரின் திவானாக இருந்த சர்.சி.பி இராமசுவாமி ஐயரால் கைது செய்யப்பட்டு, சிறைச்சாலைகளில் ஆயுள் கைதிகளாக அல்லல்படுகின்ற புன்னப்புரா வயலார் விவசாயத் தொழிலாளர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவர் என்ற வாக்குறுதியை பட்டம் அரசு நிறைவேற்றுவதற்கு முன் வரவில்லை. இதனால் பட்டத்தின் மேல் நம்பிக்கை இழந்த காங்கிரஸ் அமைப்பு அவரை பதவியிறக்கம் செய்தது. இத்தருணத்தில் தி.த.நா.காங்கிரஸ் 14 உறுப்பினர்களும் பட்டம் தாணுபிள்ளைக்கு உதவியாக நிற்கவில்லை என்பதால் அவர் தமிழர்கள் மீது குறிப்பாக நாடார் மக்கள் மீது தீராப்பகை கொண்டார். இதனால் பட்டம் தாணுபிள்ளையைத் தலைவராகக் கொண்டிருக்கின்ற நாயர் சமுதாயம் நாடார் சமூகத்திடம் தீராப் பகைமை பாராட்டினர்.

11.08.1954 அன்று தொடுவட்டியிலும், புதுக்கடையிலும் விடுதலை தினம் அனுசரிக்கப்பட்டது. மார்த்தாண்டத்தில் பிற்பகல் 1.30 மணியளவிலும், புதுக்கடையில் பிற்பகல் 5.00 மணியளவிலும் துப்பாக்கிச் சூடுகள் நடந்தன. பலர் குண்டடிப்பட்டு இறந்தனர். அனேகர் குண்டு காயம் பட்டு பிற்பாடு இறந்தனர். பலர் ஊனமுற்றனர். மார்த்தாண்டம், புதுக்கடை ஆகிய இடங்களில் நடந்த நிகழ்ச்சிகளை நோக்கும் போது, பி.எஸ்.பி. அரசு மேற்கொண்ட அணுகுமுறை ஒரே மாதிரியாக இருப்பதைக் காண முடிகிறது. இவ்விடங்களில் தி.த.நா. காங்கிரசின் போராட்டங்களை முறியடிக்க அரசு போலீசாரை விட உள்ளூர் எதிர்ப்பு அணிகளையே அதிகம் நம்பியிருந்தது. புதுக்கடையில் வாணியச் செட்டிகளையும், குழித்துறை மற்றும் மார்த்தாண்டத்தில் நாயர்களையும் அது ஏவியிருந்தது. அதனால்தான் மறியலுக்கு வந்த வீரர்களை வழிமறித்து விரட்டுவதற்காக முன் கூட்டியே அவர்கள் திட்டம் தீட்டியிருந்தனர்.

16 மறியல் வீரர்களோடு தொடுவட்டியிலிருந்து புறப்பட்ட சுமார் 5000 பேர்களைக் கொண்ட ஊர்வலம் வெட்டு மணி சந்திப்பில் வந்ததும் அது கொள்ள முடியாத அளவிற்கு வலுத்துவிட்டது. சுமார் 10,000 வீரர்களாக அது பெருகிவிட்டது. இவர்களைத் தடுத்து நிறுத்துவதற்குத் துணிவில்லாத இணைப்பு எதிர்ப்பாளர்கள் பதுங்கி ஒதுங்கி நின்று கல்லெறியத் தொடங்கினர். கற்கள் ஆங்காங்கே வந்து விழுந்தன. அசந்த குரலில் ஆங்காங்கே ஊளைச் சத்தமும் கேட்டது. ஆனாலும் ஊர்வலம் எந்த சலசலப்பும் இல்லாமல் குழித்துறை நீதிமன்ற வளாகம் அடைந்தது. இவ்வளவு பெருங்கூட்டமாக அங்கே வருவார்கள் என்று காவல்துறையினர் எதிர்பார்க்கவில்லை. இவர்களை அரசு குண்டர்கள் வழியில் வைத்து மறித்து கலைத்துவிடுவார்கள் என்றும் அரசு வட்டாரங்கள் தப்புக் கணக்கு போட்டிருந்தனர். காவல்துறையினர் தடியடியில் இறங்கினர். அதனால் கூட்டத்தினருக்கு மேலே செல்ல இயலாததால், கூட்டம் பின்னோக்கி குழித்துறை பஸ் நிலையத்துக்கும், தொடுவட்டி

நோக்கியும் திரும்பியது. வாவுபலி ஜங்ஷனில் கூட்டம் திரும்பி வந்த வேளையில் அங்குள்ள அஞ்சல் அலுவலக வளாகத்தில் மறைந்திருந்த சில நாயர் ஊளையர்கள் மீண்டும் கல்லெறியில் ஈடுபட்டனர். கூட்டத்தில் ஒரு பிரிவினர் இவர்களைப் பார்த்து நகர்ந்தனர். வெகுண்டு போன நாயர் குண்டர்கள் உயிருக்காக தப்பி ஓடிவிட்டனர். இருப்பினும் கூட்டம் கலையாமல் அடக்கத்துடன் நகர்ந்து சென்றது. பி.எஸ்.பி. அரசும் அதன் காவல்துறையும் எதிர்பாராத அளவுக்கு கூட்டம். இணைப்பு போராளிகளுக்கு எதிராக ஏதும் அவர்களால் செய்ய முடியவில்லை. ஒருவேளை துப்பாக்கி பிரயோகம் இங்கே நடந்திருக்குமேயானால், இணைப்பு எதிர்ப்பு ஊளையர்கள் (நாயர்கள்) உட்பட அனேகர் பலியாகியிருப்பார்கள். ஆகவே மேலிடத்து ஆணைப்படி துப்பாகிச் சூடு அங்கே நடத்தப்படவில்லை. நடந்திருந்தால் நிலைமை வேறு விதமாக மாறியிருக்கும். பட்டம் தாணுபிள்ளையின் இன சன பந்துக்களும் அனேகர் செத்து மடிந்திருப்பர். மலம் பிஞ்சுக்கலைஞர்கள் அனேகர் கைலாசம் சென்றிருப்பர். அதனால் துப்பாக்கிச் சூட்டை அங்கே தவிர்த்தனர் மலையாளி காவல்துறை அலுவலர்கள். அதனால் அவர்களின் குரோதம் எல்லாம் அப்பாவி மக்கள் மீது பாய்ந்தது. நாடார் மக்கள் அனேகர் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாயினர்.

1919 ஏப்ரல் 13-ம் நாள் பஞ்சாப் அமிர்தசரசில் ஜாலியன் வாலாபாக்கில் ஆங்கிலேயர்கள் சுட்டதில் பல நூறு பேர் இறந்தனர். அத்துடனே அதன் தாக்கம் நின்று போயிற்று. தொடர்ந்து ஆங்கிலேயர்கள் மக்களை நரவேட்டையாடவில்லை. அது ஆங்கிலேயர்கள் ஆட்சியானதால் அவ்வாறு நடந்தது. ஆனால் சுதந்திர இந்தியாவில், மக்களாட்சி நடந்து வந்த திருவிதாங்கூரில் ஒரு ஜாலியன்வாலாவை மலையாளி பட்டம் தாணுபிள்ளையின் தலைமையிலான காங்கிரஸ்காரர்கள் உருவாக்கி அப்பாவி நாடார் மக்கள் மீது கண்மூடித்தனமாகச் சுட்டனர். 1954 ஆகஸ்டு மாதம் 11-ம் நாள் மார்த்தாண்டத்தில் பிற்பகல் 1.30 மணிக்கும்,

புதுக்கடையில் மாலை 5.00 மணிக்கும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் பலர் இறந்தனர். பலர் குண்டடிபட்டு, பின் நாட்களில் இறந்தனர். சிலர் படுகாயமடைந்தனர். இவர்களில் பெரும்பாலோர் நாடார் மக்களேயாவர்.

## 35. தொடுவட்டி துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்கள் :

1. திரு. எஸ். ராமையய்யன், மேக்கன்கரை, ஆயிரம் பிறை புத்தன்வீடு, நட்டாலம், விளவங்கோடு வட்டம்.
2. திரு. எ. பொன்னையய்யன் நாடார், அணைக்கரை, தேமானூர், ஆற்றூர், செங்கோடி அஞ்சல், கல்குளம் வட்டம்.
3. திரு. எம். பாலையய்யன் நாடார், கொச்சுக் காரவிளை, மணலி, சாரோடு, தக்கலை அஞ்சல், கல்குளம் வட்டம்.
4. திரு. எஸ் குமரன் நாடார், கோடிவிளை வீடு, தோட்டவாரம், குன்னத்தூர் கிராமம், புதுக்கடை அஞ்சல், விளவங்கோடு வட்டம்.
5. பெயர் தெரியாத ஒரு தாய், சந்தை வியாபாரம் செய்த நாடார் சமுதாயப் பெண் மூதாட்டி.
6. திரு. சி. பப்பு பணிக்கர், மரக்கறிவிளாகத்து புத்தன் வீடு, காளைச்சந்தை, தொடுவட்டி, மார்த்தண்டம் அஞ்சல், விளவங்கோடு வட்டம்.

## 36. புதுக்கடை துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்கள் :

1. திரு. எ. அருளப்பன் நாடார், வண்ணான்விளை வீடு, பைங்குளம் கிராமம், புதுக்கடை அஞ்சல், விளவங்கோடு வட்டம்.
2. திரு. என். செல்லையய்யா பிள்ளை, (செக்காலை) R.C.கிழக்குத்தெரு, புதுக்கடை அஞ்சல், விளவங்கோடு வட்டம்.
3. திரு. எஸ். முத்துசுவாமி நாடார், நாயக்கம் முள்ளுவிளை வீடு, சடையன் குழி, கிள்ளியூர் அஞ்சல், விளவங்கோடு வட்டம்.

4. திரு. எ. பீர்முகமது, புதிய வீடு, அம்சி, தேங்காபட்டணம் அஞ்சல், விளவங்கோடு வட்டம்.
5. திரு. முத்து கண்ணு நாடார், புதுக்கடை அஞ்சல், விளவங்கோடு வட்டம்.

## 37. 1948-துப்பாக்கிச் சூட்டில் உயிர் துறந்தவர்கள் :

1. எ. தேவசகாயம் நாடார், S.T. மங்காடு, விளவங்கோடு வட்டம் (12.02.1948)
2. பி. செல்லையயன் நாடார், பெரியவிளை, கீழ்குளம், விளவங்கோடு வட்டம் (14.02.1948).

ஆக பட்டம் தாணுபிள்ளை முதலமைச்சராக இருந்த இரண்டு காலகட்டங்களிலும் 13 தமிழர்களின் (பெரும்பாலும் நாடார்கள்) உயிரைப் பறித்து அவரது நாடார் குரோதத்தை நிறைவேற்றினார்.

அத்துடனே அவரது (தமிழர்) விரோதப் போக்கு நின்று விடவில்லை. தமிழர்கள் என்றால் யார்? என்று திரு. எ. நேசமணி கோடிட்டு காட்டுகிறார்.

"The Tamilian taps the palms for toddy and sweet juice and boils it into jaggry. He tills the soil and reaps the harvest. He is the sole manufacturer of salt. He has developed spinning and weaving as a cottage industry. The bleak and barren slopes of the hills have yielded to his pick-axe and spade and are covered with resplendent vegetation, food crops of various kinds. His hands built the Kodayar dam and dug the channels". ***(A. Nesamony – Inside Travancore Tamil Nad – 1948 – Pages 30 & 31)***

எனவே தென் திருவிதாங்கூரில் தமிழர் என்பவர் நாடார் மக்கள் மட்டுமேயாவார். இவர்கள் மீது மட்டும்தான் தாணுபிள்ளை போலீஸ் அட்டூழியங்களை அவிழ்த்துவிட்டது. ஒருமுறையல்ல. இரண்டுமுறைகள்.

## 38. துப்பாக்கிச் சூடு குறித்து முதலமைச்சர் :

துப்பாக்சிச் சூடு நடந்த அடுத்த நாள் அதாவது 12.08.1954 அன்று நாட்டின் முதலமைச்சர் என்ற நிலையில் மார்த்தாண்டம், தொடுவட்டி, குழித்துறை மற்றும் புதுக்கடை ஊர்களுக்கு விசாரணைக்காக, கூடுதல் போலீஸ் படையுடன் பட்டம் வந்தார். இறந்தவர்களின் குடும்பங்களுக்கு, குண்டடிப்பட்டு குற்றுயிராக கிடந்தவர்களுக்கு, போலீஸ் அடக்குமுறைகளுக்கு பயந்து தலைமறைவாக வாழ்கிறவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்க அவர் வந்தார் என்பதை விட, போலீஸ் இலாகாவை புகழ்வதற்காக மட்டும் அவர் வந்தார் என்று கொள்வதே பொருத்தமானது. போலீஸ்காரர்களுக்கு அவர் புகழ் பாடினார். போலீஸ்காரர்களுடன் ஒத்துழைத்த நாயர் பிரதானிகளை வெகுவாகப் பாராட்டினார். "ஆ கழுவேறிகளை எவிடெங்கிலும் வச்சு கண்டால், உடனே நம்முடே போலீசினை அறியிக்கணம். ஆ கழுவேறி சாணார்களை அடிச்சு ஒடுக்கணம், அதினு நாட்டுப் பிரதானிகளாய நிங்ஙள் சர்க்காரினு துணைநில்கணம்" என்ற வேண்டுகோளையும் பட்டம் விடுத்தார். இதனால் உற்சாகமடைந்த போலீசும் மலையாளி யாமான்களும் களம் இறங்கினர், "கண்டால் அறியுந்நவர்" என்ற புதிய முறையை போலீஸ்காரர்கள் கடைப்பிடிக்கத் தொடங்கினர். ஆட்களை அடையாளம் காட்டுவதற்காக போலீஸ் வாகனங்களில் இந்த நாயர் உளவாளிகள் இணைந்து பயணம் செய்து, தங்களுக்கு வேண்டாதவர்களையெல்லாம் அடையாளம் காட்டி, நாடார் மக்களை மட்டும் தாங்கொண்ணா துயரத்திற்கு உள்ளாக்கினர்.

## 39. வீட்டுக் காவலில் நேசமணி :

நாகர்கோவிலில் தண்ணீர் டேங்கிச் சாலையில் திரு. நேசமணி குடியிருந்த வீடு "பெல் ஹேவன்" என்ற சிறிய வீடு. அங்கே கண்ணீரும் கவலையுமாக பலர் தேங்கிக் கிடந்தனர். பெரும்பாலும் அவர்கள் பெண்கள், மூதாட்டிகள், நடு வயதைத் தாண்டியவர்கள், விளவங்கோடு கல்குளம்வாசிகள். ஒவ்வொருவருக்கும்

சொல்தவற்கு ஒரு சோகக் கதை உண்டு. சோகக் கதைகளைக் கேட்ட திரு. நேசமணி கண் கலங்கினார். இவர்களுக்கு என்ன பதில் சொல்வதென்று புரியாமல் கவலையுற்றார். ஆனால் தற்பொழுது நிலைமை மாறிவிட்டது. இப்பொழுது அவர் வீட்டுக்கு யாரும் சுதந்திரமாகப் போய் வர இயலாது, அவ்வளவு போலீஸ் கண்காணிப்பு. அவர் குடியிருந்த வாட்டர் டேங்கு சாலையில் யாரும் தன்னிஷ்டம் போல் நுழைந்து விட முடியாது, டதி பள்ளிக்கூடம் சந்திப்பில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அலியார் குஞ்சுவின் வீடு. அங்கே ஏராளம் போலீஸ்காரர்கள் முகாமிட்டனர். மேற்கு அற்றம் கண்கார்டியா - ஹோலிகிராஸ் சர்ச் போகும் சாலை சந்திப்பில் எ.எஸ்.பி. தலைமையில் போலீஸ் முகாம். தவிர இந்தச் சாலையில் இடைவிடாமல் போலீஸ் ரோந்து வந்து கொண்டிருந்தது. போலீஸ் கண்களுக்குத் தப்பாமல் யாரும் திரு. நேசமணியின் வீட்டிற்கு வந்து போக முடியாது. திரு. நேசமணியும், அவரது குடும்பமும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட நிலையில் இருந்தனர்.

இந்த நிலையில் இரவு சுமார் 8 மணியளவில் திரு. அப்துல் ரசாக், தலைவர் வீடு சென்று சேர்ந்தார். அங்கே திரு. குஞ்சன் நாடாரும், சிறிது நேரத்திற்குப் பிறகு முதல் சர்வாதிகாரி திரு. ராமசாமிபிள்ளையும் வந்து சேர்ந்தனர். இவர்களைத் தொடர்ந்து திரு.பொன்னப்ப நாடார், திரு.ப.தாணுலிங்க நாடார், திரு. சைமன், திரு. ராஜா பிள்ளை போன்றவர்களும் வந்து சேர்ந்தனர். போராட்டத்தை தொடர்வதா அல்லது ரத்து செய்து விடலாமா என்று ஆலோசனை நடந்தது. இங்கே கூடியிருந்தவர்களுக்கு, முந்தைய நாள் தொடுவட்டி, மார்த்தாண்டம், குழித்துறை மற்றும் புதுக்கடையில் என்ன நடந்தது என்பது முழுமையாகத் தெரியாது. தெரிந்திருப்பதற்கு நியாயமில்லை. ஏனெனில் அங்கெல்லாம் துப்பாக்கிச் சூடும், போலீஸ் அராஜகமும் நடந்த வேளையில் இவர்கள் யாரும் அங்கே இல்லை.

போராட்டத்தை ரத்து செய்யலாமா, அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாமா என்ற பிரச்சனை எழுந்தது. போராட்டத்தை

நிறுத்தி வைத்தால், தமிழர்கள் பயந்து விட்டார்கள் என்று ஏளனம் செய்வார்கள். தற்காலிகமாக நிறுத்தி வைத்தால், அரசு தரப்பினருக்கு அச்சம் இருக்கும் என்று திரு. ராமசாமி பிள்ளை யோசனை கூறினார். இதற்கு மாற்றுத் திட்டம் ஒன்றை திரு.குஞ்சன் நாடார் எடுத்துரைத்தார். அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க வேண்டாம், மறுநாள் காலையில் துப்பாக்கிச் சூடுகள் நடந்த இடங்களுக்குச் சென்று, நிலமையினை நேரில் கண்டறிந்து, அதற்குப் பிறகு ஒரு அறிக்கை விடுவது சிறந்ததாக இருக்கும் என்றார். ஆனால் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது என்று இரவோடு இரவாக தந்திகள் பறந்தன. இதனை முடித்துக் கொண்டு திரு. குஞ்சன் நாடார் வீடு போய் சேர்ந்தார். சற்று நேரத்திற்குள் போலீஸ் படையொன்று அவர் வீட்டுக் கதவை தட்டி உடைத்து உள்ளே புகுந்து திரு. குஞ்சன் நாடாரை வலுக்கட்டாயமாக கைது செய்து, இழுத்துச் சென்றது.

## 40. ம.பொ.சிவஞான கிராமணியின் திடீர் வருகை :

13.08.1954 காலை, திரு. எ. அப்துல் ரசாக் இடலாக்குடியில் தனது வீட்டில் இருந்தபோது, மாவீரன் திரு.ம.பொ.சிவஞான கிராமணியார் ஒரு குதிரை வண்டியில் வந்திறங்கியதைக் கண்ட அவர் ஆச்சரியத்தோடு அவரை வரவேற்றார். நாகர்கோவிலிருந்து மூன்று மைல் (5 கி.மீ) தூரம் உண்டு இவர் வீட்டுக்கு. இவர் வந்த நோக்கம் எது என்று தெரியவில்லை. நாகர்கோவிலில் 13.08.1954 அன்று ஏதோ முன்னேற்பாடு செய்யப்பட்ட பொதுக் கூட்டத்தில் சிறப்புரையாற்றுவதற்காக 12.08.1954 அன்றே நாகர்கோவில் வந்திருக்கிறார். இங்கே வந்த பிறகுதான் நடந்த துப்பாக்கிச் சூடையும், அதைத் தொடர்ந்த பதட்ட நிலையையும் அறிந்திருக்கிறார். அன்று மட்டும் நாகராஜா கோயில் அருகாமையில் ஒரு தங்கும் விடுதியில் தங்கிவிட்டு, அடுத்த நாள் காலையில் திரு.ரசாக்கைக் கண்டு பேசுவதற்காக அவரைச் சென்று சந்தித்திருக்கிறார். பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்த அவரது கழக கண்மணிகள் எவரும் அவரை வரவேற்பதற்கு வரவில்லை. ஒரு

வேளை அவர்கள் அனைவரும் பாண்டி நாட்டிற்குச் சென்று திரு.ப.ஜீவானந்தத்துடன் தலைமறைவாகியிருக்கலாம்.

சென்னைக்கு காலையில் திரும்பி விட வேண்டும் என்று தீர்மானித்து விட்டு, வந்தது வந்தாகி விட்டது. திரு. நேசமணியை கண்டு பேசிவிட்டு திரும்ப வேண்டும் என்ற எண்ணத்தோடு, சந்திப்புக்கு திரு. அப்துல் ரசாக்கின் உதவியை நாடி 5 கி.மீ பயணம் செய்து, அவர் வீட்டிற்கு வந்திருக்கிறார். நாகர்கோவிலில் அவர் தங்கியிருந்த விடுதியில் இருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் தான் திரு. நேசமணியின் வீடு உள்ளது. இவர் நேராகவே அங்கு சென்று திரு. நேசமணியை சந்தித்திருக்கலாம். அதை அவர் செய்யவில்லை. அது எதனால் என்று தெரியவில்லை. அதை விடுத்து ஐந்து கி.மீ. சென்று திரு. ரசாக்கை சந்திப்பானேன். அவருக்கு திரும்பிச் செல்வதற்கு திரு. நேசமணியின் உதவி தேவை. அது இல்லாமல் நாகர்கோவிலை விட்டுச் செல்வதற்கு அவரால் இயலாது, போக்குவரத்தும், தபால் தந்தி தொடர்புகளும் அந்த அளவிற்கு தென் திருவிதாங்கூரில் சீர் கெட்டுக் கிடந்தன. அவரது எண்ணம் எது என்பது தெரிந்திருந்தும், மாலை வரை தங்கியிருந்து நாகர்கோவில் நகர்மன்றத் திடலில் சில வார்த்தைகளை சொல்லிவிட்டு, தமிழர்களுக்கு ஆறுதலாகப் பேசிவிட்டு, செல்ல வேண்டும் என்று திரு. ரசாக் அவரை கேட்டுக்கொண்டார். “சந்தர்ப்பம் சரியில்லை” என்று சுருக்கமாக பதில் கூறி, சறுகிக் கொண்டார் திரு.ம.பொ.சி. தமிழ்நாட்டிலிருந்து இவரைப் போன்ற அஞ்சாநெஞ்சுடைய அரசியல்வாதிகள் இங்கே வந்து மலையாள அரசைக் கண்டித்துப் பேசினால் மக்களுக்கு தெம்பாக இருக்கும் என்ற எண்ணம்தான் திரு.ரசாக் அவரை வேண்டிக் கொண்டதின் நோக்கம். ஆனால் உள் பயத்தால் அவர் மறுத்துவிட்டார் என்பது தெளிவு. அவருக்கு தைரியத்தினால் ஒரு விறைப்பு! வேறென்ன?

“அதனை அவர் தட்டிக் கழித்துவிட்டார். உடனடியாகவே மார்ஷல் நேசமணியை சந்தித்துவிட்டு தென்காசிக்குச் செல்ல வேண்டுமென்றும், அதற்காக நான் உதவி செய்ய வேண்டும் என்றும்

என்னைக் கேட்டுக் கொண்டார். அவர் நிலை கண்டு நான் இரங்கினேன். நடுக்கம் அவர் நெஞ்சத்தில் நெளிந்தோடக் கண்டேன். சிரமத்தோடு நேசமணியிடம் அவரைக் கொண்டு சேர்த்தேன். பகைவருக்கும் இரங்கும் பண்புடைய அவர் இவரை வரவேற்று அன்புடன் விசாரித்தார். அவரும் அன்றைய நிலையில் இவரைப் போன்றவர்கள் கூட்டம் போட்டுப் பேசினால் பொருத்தமாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும் என்று கருத்துத் தெரிவித்தார். "வற்புறுத்த வேண்டாம்" என்று நேசமணியின் கரம் பற்றி இவர் கேட்டுக் கொண்டார். அவர் வற்புறுத்தவில்லை. தனியார் கார் ஒன்றை வருத்திக் கொடுத்து அவரை தென்காசிக்கு வழியனுப்பி வைத்தார்". ***(எ.எ. ரசாக் – நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம் – பக்கம் – 247 & 248)***

இதுதான் நடந்த உண்மை நிகழ்ச்சி. திரு. அப்துல் ராசக்கும், திரு. நேசமணியும் திரு.ம.போ.சி-யுடன் நேரில் நடத்திய நிகழ்ச்சிகளை திரு. அப்துல் ரசாக்கே எழுதி பதிவு செய்துள்ளார். ஆனால் இந்த சம்பவங்களை முற்றிலுமாக மறைத்து விட்டு, தன்னை மாவீரனாக்கும் முயற்சியில் திரு.மா.பொ.சி "எனது போராட்டம்" என்ற நூலில் இதைத் திரித்து எழுதி பதிவு செய்திருக்கிறார் என்றால் அவரது செயல் இழிச்செயல் ஆகாதா? இந்த நூல் திரு. நேசமணி அவர்கள் மறைந்து ஆறாண்டுகளுக்குப் பிறகு (திரு.நேசமணி 01.06.1968-ல் மறைந்தார்) அதாவது 26.05.1974-ல் எழுதுகிறார். திரு. நேசமணி உயிருடன் இருக்கும் போது இந்த தவறான செய்தியை வெளியிட ம.பொ.சி-க்கு வலு இல்லை என்பதை அவரே உறுதி செய்வதாக இது அமைந்துள்ளது. கூச்சப்படாமல் அவர் எழுதுகிறார்:

> "அன்பர் நேசமணியிடம் பேசுவதற்கு முன்பு நாகர்கோவில் நகர்மன்றத் திடலில் நகர தமிழரசு கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசினேன். முதல்வர் பட்டம் தாணுபிள்ளை ஆட்சியின் கொடுங்கோன்மையைக் கண்டித்துப் பேசினேன். அடக்கு முறைகளால் தெற்கெல்லைப் போர் ஓயாது என்றும், அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தேன்.

> எனது பேச்சின் விவரம் நான் அவரை சந்திக்கும் முன்பே கிடைத்திருந்தது. அதனால் போராட்டத்தை தொடர்ந்து நடத்துவதென்ற உறுதியுடன்தான் நான் தெற்கெல்லைக்கு வந்திருக்கிறேன் என்பதை உணர்ந்து கொண்டு, என்னை உடனடியாக சமஸ்தானத்திற்கு வெளியே அனுப்பி விடுவதில் போலீசாரை விடவும் அவர் (நேசமணி) அதிக அவசரம் காட்டினார்". ***(எனது போராட்டம் – ம.பொ.சி – 1974 – பக்கம் – 735)***

போலீசாரால் வழி மறிச்சான் முற்றுகையிட்டிருந்த நேசமணியின் இல்லத்திற்கு செல்வதற்கு கூட தெம்பில்லாத திரு. ம.பொ.சி. 5 கி.மீ சென்று திரு. அப்துல் ரசாக்கின் துணை கேட்ட இவர் நாகர்கோவில் நகர்மன்ற திடலில் மாபெரும் பொதுக்கூட்டம் நடத்தினாராம்! அவ்வாறு ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் 12.08.1954 அன்று நடந்திருந்தால் போலீஸ் ரிப்போர்ட் இருந்திருக்குமே. அது இல்லையே? ஏன்? தவிரவும் பட்டம் தாணு பிள்ளையின் போலீஸ் இவரை சும்மா விட்டு வைக்குமா? பொய் சொல்வதற்கும் ஒரு எல்லையில்லையா? இல்லாததை எழுதிவிட்டால் அது உண்மை என்றாகி விடுமா?

> ஆனால் ஒரு உண்மையை எழுதுவதற்கு அவர் தவறவில்லை. "நாகர்கோவிலிருந்து புறப்படுமுன் திரு.ப.ஜீவானந்தம் அவர்களை சந்திக்க முயன்றேன். அவர் தலைமறைவாகி விட்டார் என்று சொல்லப்பட்டது. புரட்சிக்கு மக்களைத் தூண்டி விடும் தலைவர்கள் தலைமறைவாகிவிடலாம். ஆனால் அவர்களை நம்பிப் புரட்சியில் ஈடுபட்ட மக்களெல்லாம் தலைமறைவாகிவிடுவது சாத்தியமில்லையல்லவா!? ***(அதே புத்தகம் – பக்கம் 735 & 736)***

தவிரவும்:

> "நெல்லையில் ஒரு நாள் தங்கி விட்டு சென்னை திரும்பிய பின்னர், முதல்வர் காமராசரைச் சந்தித்து, தென் திருவிதங்கூர் நிலைமையை விவரித்தேன். பிரதமரிடம்

தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பட்டம் தாணுவின் ஆட்சி நடத்தும் அடக்குமுறைக் கொடுமைகளை நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அவரை வற்புறுத்த வேண்டுமென்றும், கேட்டுக்கொண்டேன். திரு. காமராசர் எனக்கு நம்பிக்கைத் தரும் வகையில் பதிலளிக்கவில்லை. தெற்கெல்லைக் கிளர்ச்சி காரணமாகத்தான் இவ்வளவு நேர்ந்ததென்றும், அது தேவையற்ற கிளர்ச்சி என்றும் அவர் கூறினார்". ***(அதே புத்தகம் – பக்கம் 735 – 736)***

இந்தச் செய்தியால், திரு.காமராசருக்கு திருவிதாங்கூர் தமிழர்களின் போராட்டம் தேவையற்றது என்றும், அவர்கள் தாய்தமிழகத்துடன் வந்து இணைவதை அவர் விரும்பவில்லை என்றும் தெரிகிறது. திரு. காமராசரின் இந்த மனப்பான்மையால் தமிழக மக்கள் குறிப்பாக, மதுரை மேற்கு வாழ் தமிழ் விவசாயிகள் இன்று சந்தித்து வருகின்ற முல்லைப் பெரியாறு பிரச்சனைக்கு அவரே காரணமானார் என்பது சிந்தித்துப் பார்த்தால் புலனாகும்.

திரு. ம.பொ.சி. அடிக்கடிப் பேசுகின்ற 'தெற்கெல்லை' என்பது எது? திருவிதாங்கூர் தமிழ் பிரதேசங்களை அவர் குறிப்பிடுகிறார் என்று எண்ணுகிறேன். ஆனால் திருவிதாங்கூரின் தென் பிரதேசங்கள் பிரிட்டீஷ் இந்தியா அல்லது மதராசி மாகாணத்தின் தெற்கு எல்லையாக என்றும் இருந்ததில்லை. அதன் மேற்கு எல்லை என்றொரு பாகம் இருந்ததாக அவர் எங்கும் கூறவில்லை. செங்கோட்டை, தேவிகுளம் – பீர்மேடு தமிழகத்தின் மேற்கு பாகத்தில்தானே இருக்கின்றது. ஆனால் அவைகளை தமிழகத்தின் மேற்கு எல்லையென்று எவ்வாறு அவர் கருதவில்லையோ, அதே போன்றதுதான் திருவிதாங்கூரின் தென் பாகங்களும். எனவே இந்த பிரதேசங்களை 'தெற்கெல்லை' என்று அவர் குறிப்பிடுவது ஏற்புடையதல்ல. அந்த இடங்களை மீட்கும் பிரச்சனையும் இங்கே எழவில்லை. தென் திருவிதாங்கூர், செங்கோட்டை மற்றும் தேவிகுளம் – பீர்மோடு பகுதிகள் தமிழர்கள் பெருவாரியாக வாழ்கின்ற

திருவிதாங்கூர் நாடாகும். அங்கே வாழ்கின்ற தமிழர்கள் மானமுடனும், சுய மரியாதையுடனும் மலையாளிகளின் ஆட்சியில் வாழ முடியாது என்பதற்காகவே தி.த.நா. காங்கிரஸ், அப்பிரதேசங்களை பிரித்தெடுத்து அண்டை மாநிலமான தமிழகத்துடன் இணைப்பதற்காக போராடியது. தலைவர் திரு.நேசமணியின் தலைமையில் போராடி, தமிழர்களுக்கு வெற்றியும் கிடைத்தது. விடுபட்ட தமிழ் தாலுக்காக்களான செங்கோட்டையின் மேற்குப்பாகம், தேவிகுளம், பீர்மேடு மற்றும் சிற்றூர் போன்றவற்றை மீட்பதற்கு ம.பொ.சி.யாரோ அல்லது தமிழகத்தில் அன்றைய அரசியல் கட்சிகளான, திராவிடக்கழகமோ, தேசிய காங்கிரசோ அல்லது திராவிட முன்னேற்ற கழகமோ முன்வராததன் காரணமே அவைகள் அனைத்தும் தமிழகத்தின் தெற்கு எல்லையோ அல்லது மேற்கு எல்லையோ இல்லை என்பதால் மட்டுமே. எனவே, திருவிதாங்கூரை தமிழகத்தின் அன்றைய தெற்கு எல்லை என்று கொள்வது சரியானது அல்ல. திரு. நேசமணியின் அரும் பெரும் முயற்சியால் மட்டுமே திருவிதாங்கூரில் தமிழ் பேசப்படுகின்ற இடங்களான நான்கரை தாலுகாக்களை பிரித்து தமிழகத்துடன் இணைத்தார். அதை விடுத்து அவர் தெற்கு எல்லையை மீட்டுத் தந்தார் என்பதும், தமிழ் மொழிக்காகவும் இந்த நீண்ட போராட்டத்தை திரு. நேசமணி நடத்தினார் என்பதும் உண்மை அல்ல. சரியாகக் கூறுவதாயின் மானம் கெட்ட வாழ்வில் இருந்து தனது சொந்த இனமான நாடார் மக்களுக்கு விடுதலை வாங்கித் தந்தார் என்பதே இதன் உண்மை நிலை. வரலாற்றை ஆழ்ந்து அலசிப்பார்த்தால் இந்த உண்மை புலனாகும்.

ஒரு வேளை, இங்கே நடந்த துப்பாக்கிச் சூடு குறித்து தமிழ்நாடு காங்கிரஸ்காரர்களின் தவறான கணிப்பால் திரு. ம.பொ.சி. யும், அவ்வாறு கருதுகிறாரோ என்னமோ! திரு.ம.பொ.சி. தொடர்ந்து எழுதுகிறார்.

> "தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்" என்பது பழமொழி. ஆனால், தமிழ் காங்கிரசுக்குச் சதை கிடையாது.

அதனால், தென் திருவிதாங்கூர் தமிழர்களுக்கிழைக்கப்பட்ட கொடுமைக்கு எதிராக அது ஆடவே இல்லை. திரு.காமராசரை நான் கேட்டுக் கொண்டதன் பேரில், அப்போது த.நா.கா தலைவராக இருந்த திரு.எல்.எஸ்.கரையாளர் தென் திருவிதாங்கூருக்கு அனுப்பப்பட்டார். அவர் அங்கு நடந்தவற்றை விசாரித்தறிந்து த.நா.கா. செயற்குழுவிற்கு அறிக்கை தந்தார். அதிலே, "ஆகஸ்டு 11-ம் தேதி நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுக்கு "எல்லைக் கிளர்ச்சி" தான் காரணம் என்றும் அரசு அளவுக்கு மீறி அடக்கு முறையீட்டில் ஈடுபட்டதாக அங்குள்ள மக்கள் கருதுகிறார்கள்" என்றும் கரையாளர் குறிப்பிட்டிருந்தார். ஆம், அவர் கருதவில்லையாம்! தமிழகத்தின் முதல்வர் – தமிழினத்தின் பெருந்தலைவர்" என்ற முறையில் **திரு.காமராசர் தென் திருவிதாங்கூர் தமிழர்களுக்கு ஆறுதல் தரும் வகையில் ஒரு அனுதாப செய்தி கூடக் கூறவில்லை".** ***(அதே புத்தகம் – பக்கம் – 737 – 738)***

அன்று எந்தத் தமிழனுக்கு அவர் இரங்கவில்லையோ, அனுதாபப்படவில்லையோ, அதே தமிழன், கன்னியாகுமரித் தமிழன் அவருக்காக இரங்கினான். சொந்த மண்ணில், சொந்த இனத்தாரால் அடித்து வீழ்த்தப்பட்ட பெருந்தலைவர் காமராசரை, அரசியல் வாழ்வு இழந்து நின்ற அதே காமராசரை "இன உணர்வு நிமித்தம்" "குமரித் தந்தை" அவருக்காக பதவி விலக முன் வந்தார். ஆனால் காமராசர் அதை ஏற்கவில்லை. ஆனாலும் விதி விளையாடிற்று. குமரித் தந்தை அவருக்கு வழிவிட்டுச் சென்றார். அவரது வீட்டிலே தங்கி, நாகர்கோவிலில் போட்டியிட்டு, தமிழ் மக்களின், குறிப்பாக நாடார் மக்களின் பெருவாரி ஆதரவுடன் மீண்டும் அரசியல் வாழ்வு பெற்றார் பெருந்தலைவர் என்பது வரலாறு. அவர் நாகர்கோவில் தொகுதியில் இருந்து பாராளுமன்றத்திற்கு இரண்டுமுறை தேர்வு பெற்றார். இருப்பினும் இந்த மாவட்டத்துக்கு குறிப்பிடும் அளவுக்கு எத்தகைய வளர்ச்சிப் பணிகளையும் செய்திட அவரால்

இயலவில்லை. தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆக இருந்த போதும் இப்பகுதி மக்களுக்கு என்ன நன்மை செய்தார் என்பதை திரு.ம.பொ.சி அவர்கள் மேலே குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவரது ஆட்சிக் காலத்தில் தமிழன் இழந்தது மிக அதிகம். குமரி மாவட்டத்தில் மலையாளிகளுக்காக பத்மனாபபுரம் தமிழ் மன்னர்களின் அரண்மனையையும், கன்னியாகுமரியில் தமிழ் மண்ணையும் விட்டுக் கொடுத்தார். செங்கோட்டைத் தாலுகாவில் சாணார் கணவாய், ஆரியாங்காவு காணவாய் மற்றும் அச்சன்கோவில் ஆறு போன்ற ஜீவ நதிகள் உற்பத்தியாகி ஓடுகின்ற பெருவாரியான இடங்களையெல்லாம் கேரளத்துக்குத் தாரை வார்த்தார். இவரது உதாசீன மனப்பாங்கால் தேவிகுளம் பீர்மேட்டை இழந்தோம். சிற்றூர் பகுதியை இழந்தோம். ஆயினும் அவர் பெருந்தலைவர் ஆயிற்றே. புகழெல்லாம் அவருக்கு கிடைக்கிறது. 1684 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை திருவிதாங்கூரில் இருந்து வெட்டியெடுத்து தமிழகத்துடன் இணைத்த மாவீரன் நேசமணி இன்று சிறுமைப்பட்டு விட்டார். அவரை யாரும் கனம் செய்யவும் இல்லை. கவுரவிக்கவும் இல்லை. யார் எவ்வாறு சிறுமைப்படுத்தினாலும், வரலாறு அவரை “குமரித் தந்தை”யென்றே பதிவு செய்திருக்கிறது. வேறு எவரும் குமரித் தந்தையாக இருக்க முடியாது. வேண்டுமென்றால் “சித்தப்பா” அல்லது தத்துப்பிள்ளை மட்டுமே ஆக முடியும்.

## 41. போலீஸ் அட்டூழியங்கள் :

12.08.1954 அன்று முதலமைச்சர் பட்டம் தாணுபிள்ளை தென்திருவிதாங்கூரில் துப்பாக்கிச் சூடு நடந்த இடங்களை பார்வையிட்டு காவல்துறையை மட்டும் பாராட்ட வந்திருந்தார் அல்லவா! அவருடனே 1600 ஆயுதப்படை போலீசாரை அழைத்து வந்திருந்தார். தனது பாதுகாவலுக்காக அல்ல. தமிழர்களின் கை கால்களை மேலும் ஒடிப்பதற்காக – அவர்கள் இங்கே, இடத்துக்கு இடம் 100, 200, 300 என பிரிந்து ஆங்காங்கே முகாமிட்டனர். ஒரு படையெடுப்புக்குப் பிறகு என்ன நடக்குமோ, அதையெல்லாம்

இவர்கள் செய்தனர். கண்டதையெல்லாம் கொள்ளையிட்டனர். வீடுகளை சூறையாடினர். எதிர்த்தவர்களின் எலும்புகளை எண்ணினார்கள். போலீஸ் வண்டிகளில் இவர்கள் இரவு வேளைகளில் கூட சுற்றி வந்தார்கள். கடை வீதிகளில், அந்திக்கடைகளில், சந்தைகளில் கண்டவர்களையெல்லாம் தாக்கி கைது செய்தார்கள். கைது செய்யப்பட்டவர்களை எங்கே கொண்டு அடைத்தனர் என்று யாருக்கும் தெரியாது. இவர்களுக்கு வழிகாட்டியாக வசதியும் செல்வாக்கும் படைத்தவர்களை, அடையாளம் காட்டுவதற்காக உள்ளூர் நாயர் பிரதானிகள் இவர்களுடன் போலீஸ் வண்டிகளில் பயணம் செய்தனர். போலீஸ்காரர்களுக்காக இந்த நாயர் பிரதானிகள் வேவு பார்த்து தகவல் கொடுத்தனர். அதன் அடிப்படையில் நள்ளிரவில் வீடு புகுந்து மக்களை இழுத்துச் சென்றனர். அப்படித்தான் 14.08.1954 அன்று ப.தாணுலிங்க நாடாரையும் கைது செய்து விட்டனர். உள்ளூர் போலீஸ் இவரை கைது செய்யவில்லை. ஆனால் ஆயுதப்படை போலீசார் இவரை கைது செய்து சிறையில் அடைத்தனர். ஆயினும் அவருக்கு உடல் உவாதை தரவில்லை. அவரை எந்த சிறையில் அடைத்தனர் என்பது மர்மாக வைக்கப்பட்டிருந்தது.

துப்பாக்கிச் சூட்டில் குண்டடிபட்டு, ரகசியமாக சிகிட்சை பெற்று வந்தவர்களில் பலர் இறந்து விட்டனர். அவ்வாறு இறந்தவர்களில் ஒருவரை சிதை மூட்டினர். இன்னொருவர் அருளப்பன். அவரை அடக்கம் செய்தனர். இந்த செய்திகள் போலீசுக்கு கொடுக்கப்பட்டது. திரு.அருளப்பன் புதுக்கடை போலீஸ் சூட்டில் குண்டடிபட்டு இறந்தவர் என்று கூறி, அவருக்குப் பதிலாக அன்னாரின் தம்பியையும் சேர்த்து புதுக்கடை வட்டாரத்தில் 60 பேரை இவர்கள் கைது செய்தனர். இங்கே இறந்தவர்களில் இன்னொருவர் திரு.பீர்முகமது. தேங்காப்பட்டணத்துக்காரர். போலீசாரின் கண் தப்பிய இவரது உடலை அவரது சகோதரர் எடுத்து அடக்கம் செய்தார். அடக்கம் செய்யப்பட்டவர்களின் உடல்களை தோண்டி

எடுக்கப் போவதாக அங்குள்ள மலையாளிகள் வதந்தியை கிளப்பி அச்சத்தை மக்களிடையே உருவாக்கினர். தொடுவட்டியை சார்ந்த பார்சல் செல்லப்பன் குழித்துறை லாக்கப்பில் வைக்கப்பட்டிருந்தார். காலையில் உடல் நலத்துடன் நடந்து சென்றவர் அந்திப் பொழுதுக்குப் பிறகு குதிகால் உடைக்கப்பட்டு, உடல் முழுக்க சதைக்கப்பட்டு, நாலுகால்களால் தவழ்ந்து லாக்கப்புக்கு கொண்டு வரப்பட்டார். குழித்துறை லாக்கப்பில் அடைக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவர் செல்வந்தர் நல்லதம்பி நாடார். அவர் தலையில் கொட்டாம்புளி கொண்டு (Hammer) அடித்து தலையை நொறுக்கியதில் அவர் பல நாட்கள் மயக்கமுற்று கிடந்தார். மற்ற லாக்கப்புகளிலும் இதே கதைதான். நெய்யூர் ஆத்திவிளையைச் சார்ந்த சிங்கராயர் நாடாருக்கும் இதே கதிதான். அவரை உதைத்த வேகத்தில் முன் வரிசை பற்கள் உதிர்ந்தன. பைங்குளம் ஆழாங்குளம் வேலு என்பவரை நெஞ்சில் தோக்கு மூட்டால் இடித்து குற்றுயிராக்கி தூக்கி வீசினர். மேலும் நூற்றுக்கணக்கான நாடார் மக்கள் அடைந்த துயரங்களைக் குறித்து தெரிந்து கொள்வதற்கு அறிவர் டி. பீட்டரின் “குமரி மாவட்ட விடுதலை – கல்குளம் – விளவங்கோடு மக்கள் தந்த விலை (1948 & 1954)” என்ற நூலைப் படித்து தெரிந்து கொள்ளுங்கள். தேங்காப்பட்டணம், கீழ்குளம், கிள்ளியூர், இலவுவிளை, காப்புக்காடு, மணலி, கொற்றிகோடு, ஆற்றூர், மூலச்சல், கருங்கல், செல்லங்கோணம், பள்ளியாடி, குலசேகரம், மணலிக்கரை போன்ற நாடார் கேந்திரங்களில் இரவு பகல் என்று பாராமல் ஆயுதப்படை ஆட்களை வேட்டையாடியது. பைங்குளம் பஞ்சாயத்துத் தலைவர் திரு. தங்கையன், பஞ்சாயத்து உறுப்பினர் இன்னொரு தங்கையன், முக்காடு சிட்டி தங்கப்பன் போன்ற முன்னிலை தி.த.நா.கா தொண்டர்களை கைது செய்வதற்கு முக்காடு நாராயண பிள்ளை எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன. இவர்கள் தலைமறைவாகிவிட்டனர். இவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்கு ஆண்கள் அண்டை மாநிலமான தமிழகத்தில்

தஞ்சம் புகுந்தனர். பலர் அடர்ந்த காட்டுப் பகுதிகளுக்குள் சென்று பதுங்கி பட்டினி கிடந்தனர். காயமுற்ற பலர் நாகர்கோவிலிலும், நெய்யூரிலும் ரகசியமாக சிகிட்சை பெற்று வந்தனர். 1854-ல் வெள்ளையன் நாடார், தனது ஆதரவாளர்களான பன்னீராயிரம் தொண்டர்களோடு, தீக்காவடி சுமந்து, குமாரகோயில் சென்று, பூக்குழி இறங்கி கோயில் நுழைவு செய்து விட்டார். அன்று கோயில் நுழைவு நாடார்களுக்கும் மறுக்கப்பட்டிருந்த காலம். ஆகையால் இவர்களது நுழைவு முயற்சியை நாயர்களும், நாயர் குறுப்புகளும், பிராமணர்களும் மலையாள அரசும் தடுத்து நிறுத்திட முயன்றனர். அதனால் அங்கே கலவரம்மூண்டது. ஏராளம் உயிர்ச் சேதம் விளைந்தது. இதைத் தொடர்ந்து ஆங்காங்கே சாதிக் கலவரம் தொடங்கியது. திருவிதாங்கூர் நாடார்களின் உதவிக்காக திருநெல்வேலி, வள்ளியூர், பணகுடி, காவல்கிணறு, அஞ்சுகிராமம் போன்ற ஊர்களிலிருந்து, நாடார் மக்கள், ஆயுதங்களுடன் திருவிதாங்கூர் வந்தனர். இந்த நிகழ்ச்சியினை நினைவில் கொண்டு இப்பொழுதும், கன்னியாகுமரி, அஞ்சுகிராமம் தொட்டு ஆரல்வாய்மொழி வரையிலும் திருவிதாங்கூர் ஆயுதப்படை ரோந்து வந்தது. ஆனால் நாஞ்சில் நாட்டில் எத்தகைய சலசலப்பும் இல்லாததால் அங்கே எந்த வெள்ளாம்பிள்ளையும் கைதாகவில்லை. தவிரவும் அரசியலில் ஈடுபட்டிருந்த ஒரு சில வெள்ளாம்பிள்ளைகளும் சென்னைக்கும், நெல்லைக்கும் சென்று உறவினர்களிடம் மறைந்து வாழ்ந்தனர். அவர்களுக்கு நடிகர் என்.எஸ்.கிருஷ்ணன் மற்றும் டி.கே.எஸ்.சகோதரர்கள் அடைக்கலம் தந்து போஷித்தமையால் அவர்களை போலீஸ் படையினர் தேடவில்லை.

## 42. நேசமணியின் தனிமை :

போலீஸ் அட்டூழியங்களுக்கு அஞ்சி பலர் பாண்டி நாட்டுக்குச் சென்று தலைமறைவானர்கள் அல்லவா, அப்படிப் போனவர்களின் குடும்பங்கள் நேசமணியின் வீட்டிற்கு படையெடுத்தார்கள். திரு.நேசமணியும், திரு.அப்துல் ரசாக்கும்

பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகையால் அவர்களை போலீஸ்காரர்களால் கைது செய்ய முடியவில்லை. எனவே தலைவர் திரு.நேசமணியை மக்கள் தேடி வந்ததில் வியப்பொன்றுமில்லை. அப்படி தேடி வந்தவர்கள் பெரும்பாலும் நேர் அறிமுகம் இல்லாதவர்கள். அள்ளிக் கொடுக்க முடியாவிட்டாலும் முடிந்த அளவு ஆதரவு காட்டி, ஆறுதல் சொல்லி அனுப்பின அவர்களுக்கு ஆதரவு கூறுவதற்கு அவரைத் தவிர வேறு யார் இங்கே உண்டு தலைவர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். இரவு பகலாக இவரைத் தேடி வந்த அரசியல்வாதிகள், பொதுநலவாதிகள், தன்னலவாதிகள் எனப் பல திறப்பட்டவர்கள் இப்போதெல்லாம் இவர் வாழ்ந்த திசை நோக்கி தலைதானும் வைத்துப் படுக்கவில்லை. அந்த அளவுக்கு போலீஸ் நடவடிக்கைகள் தலை தூக்கி நின்றிருந்தது. இதோடு வெளிப்புறத் தொடர்பும் அவருக்கு இல்லாமல் போயிற்று. அவரது தொலைபேசியும் முடங்கிக் கிடந்தது.

சிறைகளில் அடைக்கப்பட்டவர்களை, லாக்கப்புகளில் துன்பம் அடைந்து வருகிறவர்களை வெளியே கொண்டு வர வேண்டும். இதற்கு நீதிமன்றங்களை நாட வேண்டும். அதற்கு ஆள் வேண்டுமே. வக்கீல்கள் வேண்டுமே. இந்த இக்கட்டான வேளையில் நண்பனோ, சீடனோ, மூத்தவனோ, இளையவனோ, எந்த வழக்கறிஞர் இவரைத் தேடி வந்தான்? யாரும் வரவில்லை. இந்த முறையிலும் இவர் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டார். ஆனால் இரு இளம் வக்கீல்கள் தங்களால் இயன்ற அளவு செய்வதற்கு முன் வந்தனர். ஒருவர் திரு. பக்ருதீன் ஆதம். மற்றவர் திரு. ஜேம்ஸ். இரண்டுபேருமே வக்கீல் தொழிலில் கற்றுக்குட்டிகள். ஆனாலும் துணிவோடு செயல்பட்டனர். நீதிமன்றம் ஏறி ஜாமீன் மனுக்கள் தாக்கல் செய்தனர். பயன் இல்லை. யாருக்கும் நீதிமன்றப் பாதுகாப்பு கிடைக்கவில்லை. உயர்நீதிமன்றம் வரையிலும் இதுதான் நிலைமை. ஆயினும் நேசமணி சோர்ந்து விடவில்லை. அவருக்கு பளிச்சென்று ஒரு யோசனை தோன்றிற்று.

## 43. அப்துல் ரசாக்கைத் தூது அனுப்பினார் :

திரு. அப்துல் ரசாக்கை அழைத்து "நாம் இங்கிருந்து செய்ய முடியாததை நீ வெளியே போனால் செய்ய முடியும்" என்று தீர்க்கத் தரிசனம் சொன்னார். ஆனால் இவர் எப்படி வெளியே போவது? வாகன வசதிகள் அனைத்தும் முடக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்த வேளையில் வெளிமாநிலத்திலிருந்து திரு.அப்துல் ரசாக்கைப் பார்ப்பதற்காக வந்த தனது உறவினர் காரில் ஏறி ஆரல்வாய்மொழி வழியாக திருவிதாங்கூரை விட்டு வெளியேறி, திருநெல்வேலி சென்று விட்டார். அன்று மாலையில் திருநெல்வேலி எம்.பி. திரு.பி.டி.தாணுபிள்ளையை சந்தித்து ஆலோசனை கலந்தார். திருநெல்வேலி மாவட்டக் காங்கிரஸ் தலைவர் திரு.கே.ற்றி.கோசல்ராமையும் சந்தித்துப் பேசினார். அவர்கள் இருவரும் உடனே எம்.எல்.எ.சங்கர்ரெட்டியாரைத் தொடர்பு கொண்டு ஆலோசனை நடத்தினர். கலவரம் நடத்த இடங்களை விரைவாக நேரில் வந்து பார்வையிட உள்ளதாக திரு.ரசாக்குக்கு உறுதியளித்தனர். அதன்படி அவர்கள் 17.08.1954 அன்று நாகர்கோவில் வந்து திரு. நேசமணியை சந்தித்து விவாதித்துவிட்டு, துப்பாக்கிச் சூடு நடந்த இடங்களுக்குச் சென்று விவரங்களை ஆய்வு செய்து, மறுநாள் பாரதப் பிரதமர் நேருவுக்கு தகவல் தந்தனர். அத்துடன் நிற்காமல் திரு. பி.டி. தாணுபிள்ளை அவர்கள் (திருநெல்வேலித் தொகுதி எம்.பி) டெல்லி விரைந்து, திரு.ரசாக்கை அங்கேயும் கண்டு, செய்ய வேண்டியதை செய்யத் தொடங்கினார்.

திருவிதாங்கூர் பி.எஸ்.பி. அரசு நடத்திய துப்பாக்கிச் சூட்டிற்குப் பிறகு, முதன் முதலாக திரு.நேசமணியை சந்தித்து விவாதித்தவர்கள் திருவிதாங்கூர் கம்யூனிஸ்டு தலைவர்களான திரு.டி.வி.தாமஸ், எம்.எல்.எ., திரு. ஸ்ரீகண்டன் நாயர் எம்.பி; திரு. பி.டி. புன்னூஸ், எம்.பி ஆவர். அவர்கள் திரு.நேசமணிக்கு ஆறுதல் கூறினாலும், பிரச்சனைக்கு ஏற்றமுறையில் தீர்வு

கூறவில்லை. தமிழ்நாட்டிலிருந்து அரசியல் பிரமுகர்கள் திரு. நேசமணியை சந்திப்பதற்கு முன்பாக வேதாரண்ணியம் உப்பு சத்தியாகிரகி திரு. மேகநாதன் என்பவர் நாகர்கோவில் வந்து இவரைச் சந்தித்தார். இவர் திரு. இராசகோபாலாச்சாரியாரின் உற்ற நண்பராவார். பல வட்டாரங்களில் பெரும் செல்வாக்குடைய இந்த மேகநாதன், விரைந்து வந்து நேசமணியை சந்தித்து விவாதித்ததால் நேசமணி மீண்டும் உற்சாகமடைந்தார். உடனடியாக இவர் மதராஸ் சென்று திரு. இராஜாஜியையும், அவர் வட்டாரங்களையும் சந்தித்து, திருவிதாங்கூர் தமிழ்நாட்டில் நடப்பவைகளைக் குறித்த விவரங்களை அவர்களுக்குத் தந்தார். இதன் விளைவாக 21.08.1954 அன்று முன்னாள் அமைச்சரும், பிரபல வழக்கறிஞருமான திரு.பாஷியம் ஐயங்காரிடமிருந்து திரு.நேசமணிக்குத் தந்தி வந்தது. அதில் தாமே நேரில் வந்து தி.த.நா.கா. கைதிகளுக்குத் தேவையான சட்ட ரீதியான காரியங்களை செய்வதாக உறுதி அளித்திருந்தார். இந்தச் செய்தியால் திரு. நேசமணி மேலும் ஆறுதல் அடைந்து பழைய திடமான நிலைக்கு வந்துவிட்டார். புத்துயிர் பெற்றார் என்றே கூற வேண்டும். இதனால் சாம்பலில் இருந்து போணிக்ஸ் பறவை போன்று மீண்டும் உயிர்த்தெழுந்து சிறகடிக்கத் தொடங்கியது. உயரப் பறப்பதற்கான அறிகுறிகள் அவரில் காணப்பட்டன.

சென்னைக்குச் சென்ற திரு. அப்துல் ரசாக் முதல் வேலையாகத் தமிழ்நாடு முதலமைச்சர் பெருந்தலைவர் திரு.காமராசரை சந்தித்து, நிலவரத்தை எடுத்துரைத்தார். திரு. நேசமணி அவருக்கு எழுதியிருந்த கடிதத்தையும் அவரிடம் தந்தார். எல்லாம் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்து விட்டு, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு.எல்.எஸ்.கரையாளரை சந்திக்குமாறு அறிவுறுத்தினார். அதற்குப் பிறகு பாராளுமன்ற உறுப்பினர் திரு. H.D. ராஜாவின் துணையுடன் மூதறிஞர் இராஜாஜியை சந்திக்கச் சென்றார். பல வழிகள் வாயிலாக

தென் திருவிதாங்கூரில் நடந்தவற்றையெல்லாம் தெரிந்து வைத்திருந்த மூதறிஞர் சட்டென தனது முடிவைத் தெரிவித்தார். "இனி பி.எஸ்.பி. மேலிடத்திலிருந்து என்ன வருகிறது என்பதைக் கொஞ்சம் பொறுத்திருந்து பாருங்கள்" என்று புன்முறுவலுடன் வந்தது பதில். இது திரு. ரசாக்குக்கு புதுத் தெம்பை அளித்தது.

பெருந்தலைவர் கூறியபடி காங்கிரஸ் தலைவர் திரு.எல்.எஸ். கரையாளர் 16.08.1954 அன்று திரு. ரசாக் தங்கியிருந்த இடத்துக்கு அவரைத் தேடி வந்து விட்டார். அவர் விரும்பியபடி திரு.சிதம்பரநாதனையும், நூர்முஹமதையும் அழைத்துக் கொண்டு திரும்பவும் முதலமைச்சர் திரு. காமராசரைச் சந்தித்தார். காவல்துறை அறிக்கைகள் முன் கூட்டியே அவருக்கு கிடைத்திருந்தன. திருவிதாங்கூரிலிருந்து தப்பியோடி தமிழகத்தில் தஞ்சமடைந்திருந்தவர்களுக்காக அகதிகள் முகாம் அமைக்க வேண்டி வருமோ என்ற ஆதங்கத்தை அவர்களிடம் வெளியிட்டார். இதற்கிடையில் திரு.எல்.எஸ்.கரையாளர் குறுக்கிட்டு, தென் திருவிதாங்கூரில் பதற்றமான இடங்களுக்கு ஒரு நல்லெண்ணக் குழுவை அனுப்பி வைத்தால் உசிதமாக இருக்கும் என்று ஆலோசனை பகர்ந்தார். அதன் அடிப்படையில், அவரது தலைமையில் 1954 ஆகஸ்டு 25-ல் ஒரு நல்லெண்ணக் குழு தென் திருவிதாங்கூரில் சுற்றுப் பயணம் செய்து நிலவரத்தை ஆய்வு செய்வது என்று உடனே தீர்மானமாயிற்று.

சென்னையில் முக்கிய தலைவர்கள் அனைவரையும் சந்தித்துவிட்டு, திரு. ரசாக் 17.08.1954 அன்று புதுடில்லி புறப்பட்டுச் சென்றார். அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் திரு.லால்பகதூர் சாஸ்திரியை சந்தித்து தேவிகுளம், பீர்-மேடு பகுதியில் செயல்பட்டு வந்த காங்கிரஸ் அமைப்பின் இரு சங்கங்களுக்கிடையே நடந்துவந்த தகராறைத் தீர்த்து வைப்பதற்கு மாற்றுக் கட்சியான பி.எஸ்.பி. அரசுக்கு என்ன ஆர்வம் வந்தது என்று கேள்வி எழுப்பினார். அவர்கள் டில்லி தலைமையகத்துக்கு அல்லவா வந்திருக்க வேண்டும், என்று

விளக்கம் அளித்தார். தவிரவும் அமைக்கப்பட்டிருக்கின்ற மாகாணங்கள் புனரமைப்பு கமிஷனை தேவிகுளம் பீர்மேடு செல்லவிடாமல் தடுக்க வேண்டும் என்பதும் பி.எஸ்.பி. அரசின் நோக்கமாகும். ஏனென்றால் கமிஷன் அங்கே சென்றால் தமிழர்கள் புத்துயிர் பெற்று தங்கள் விருப்பத்தை கமிஷனிடம் தெரிவித்துவிட்டால் அது மலையாளிகளுக்கு பெரும் இழப்பை உருவாக்கி விடும் என்பது பி.எஸ்.பி. அரசின் கணிப்பு. அதனால் கமிஷன் தேவிகுளம் – பீர்மேடு செல்வதை அரசு விரும்பவில்லை. திருவிதாங்கூர் காங்கிரஸ் கட்சியும் அதை விரும்பவில்லை. இந்திய தேசியக் காங்கிரசின் மலையாளக் கிளையும் அதை விரும்பவில்லை. ஆனால் அங்குள்ள தி.த.நா. காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் கமிஷனை அழைத்தார்கள். அரசு ஆலோசனையை புறம் தள்ளிவிட்டு கமிஷனால் அங்கே செல்வதற்கு இயலவில்லை. ஏனெனில் கமிஷனில் இடம் பெற்றிருந்த மலையாளக் கரையைச் சார்ந்த சர்தார் கே.எம். பணிக்கரை ஒதுக்கிவிட்டு மற்ற இரு உறுப்பினர்களும் அங்கே போவது கடினம். அதனால் கமிஷன் அங்கே போகாமலே தங்களுக்கு அரசு தெரிவித்தது போன்று தீர்ப்புக் கூறிவிட்டார்கள். தமிழன் நலன் பேணிட கமிஷனில் யாரும் இல்லை. இதை திரு.லால்பகதூர் சாஸ்திரியிடம் திரு.ரசாக் விளக்கினார். இதற்கு சாஸ்திரியார் எவ்வித பதிலும் அளிக்கவில்லையானாலும், பிரச்சனையை கவனமாக கேட்டுத் தெரிந்து கொண்டார் என்று கருதப்பட்டது.

## 44. மத்திய அரசின் வெறுப்பு :

"Because of a nail, the battle was lost" என்பார்கள். அது இங்கே நடந்து விட்டது. சில இரண்டாம் நிலைத் தலைவர்களின் தவறான செயல்களால் மத்திய உள்துறை அமைச்சகத்தின் அனுதாபத்தை தி.த.நா.காங்கிரஸ் இழக்க வேண்டியதாயிற்று. இந்த அனுபவத்தை திரு.ரசாக் டெல்லியில் உள்துறை அமைச்சகத்தை அணுகிய போது உணர்ந்துகொண்டார்.

மதராசியில் முக்கிய தலைவர்களை சந்தித்து நிலைமைகளை விளக்கிவிட்டு டெல்லி சென்றார் அல்லவா? (17.08.1954) காங்கிரஸ் செயலாளர் திரு.லால்பகதூர் சாஸ்திரியை சந்தித்துவிட்டு, 22.08.1954 அன்று உள்துறை அமைச்சர் திரு.கைலாசநாத் கட்ஜுவை சந்தித்தார். தென் திருவிதாங்கூர் நிலைமைகளைச் சுருக்கமாக விளக்கி ஒரு கோரிக்கையை அவரிடம் அளித்தார். அதனடிப்படையில் 23.08.1954 அன்று அமைச்சரை சந்திக்கும்படி திரு. ரசாக் மீண்டும் அழைக்கப்பட்டார். அந்த சந்திப்பில்தான் தி.த.நா. காங்கிரஸ், பிரதமர் ஜவஹர்லால் நேருவின் கடிதங்களை மதிக்கவில்லையென்றும், அதை உதாசீனப்படுத்திவிட்டனர் என்றும், அவர் கேட்டுக் கொண்டபடி அக்கடிதத்தை பத்திரிகைகளில் வெளியிடாமல் இருட்டடிப்புச் செய்து விட்டதைக் குறித்த ஆதங்கத்தை உள்துறை அமைச்சர் எடுத்துரைத்தார். இதற்குப் பதிலளிக்கும் விதமாக தி.த.நா.கா தலைவர் திரு.ராமசாமிபிள்ளை 13.08.1954 தேதியிட்ட விளக்கக் கடிதம் பற்றி திரு. ரசாக் குறிப்பிட்டார். “அது வெறும் கண்துடைப்பு வேலை மட்டும்” என்று கூறித் தள்ளிவிட்டார் உள்துறை அமைச்சர். ஆகையால் மத்திய அரசு நிலையில் ஒருதப்பு எண்ணம் உருவாகியிருந்தது வெட்ட வெளிச்சமாயிற்று. இதற்கு யார் காரணம். தி.த.நா.கா.வின் இரண்டாம் நிலைத் தலைவரான திரு.குஞ்சன் நாடார் தான் காரணம் என்பது உறுதி. பிரதமர் நேருவின் கடிதம் குஞ்சன் நாடார் கையில் கிடைத்திருக்கிறது. அதற்குப் பிறகு ராமசுவாமி பிள்ளையின் கையிலும் அடுத்த கடிதம் கிடைத்திருக்கிறது. இக்கடிதங்களை தலைவர் நேசமணியிடம் இருவரும் காட்டவில்லை. அவர் திருவனந்தபுரம் சிறையில்தான் இருந்தார். அவரிடம் சென்று இது குறித்து ஆலோசனை செய்வதற்கு திரு. குஞ்சன் நாடாருக்கு முடிந்திருக்கும். ஆனால் அவர் அதை செய்யாமல் அசட்டைச் செய்துவிட்டார். திரு.நேசமணியின் பார்வைக்கு இக்கடிதங்கள் சென்றிருந்தால் உடனடியாக அவர் தக்கதொரு பதில் எழுதி பிரதமரின் நம்பிக்கையை (Trust)

பெற்றிருக்கலாம். தவிரவும் பிரதமரை அவர் மதித்து பதில் அளித்திருப்பார். இவ்வாறு அறிவிலித்தனமாக அவர் செயல்பட்டிருக்கமாட்டார். இதனால் மத்திய அரசு, தி.த.நா.கா-வினர் மீது ஒருதவறான எண்ணம் கொண்டது.

இந்தச் சந்தர்ப்பத்தை திருவிதாங்கூர் முதலமைச்சர் திரு. பட்டம் தாணுபிள்ளை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார். திரு.நேருவின் கடிதத்தை அவர் பத்திரிகைகளில் பிரசுரித்து அவரின் நல்லெண்ணத்தைக் கவர்ந்து கொண்டார். இதனால் தான் மாகாணங்கள் புனரமைப்புக் குழுமத்தின் பரிந்துரையின் மீது நியாயமான வாதத்தைப் பாராளுமன்றத்தில் மூன்று நாட்கள் திரு. நேசமணி எடுத்து வைத்தும், மத்திய அரசின் பார்வை தமிழர்கள் மீது படாமலிருந்தது. இவர்கள் செய்த சிறு தவறின் பாதிப்பின் பெருந்தாக்கம், நம் மீது விழுந்தது. இதற்குக் காரணமானவர் திரு. குஞ்சன் நாடார் ஆவார்.

உள்துறை அமைச்சரைச் சந்தித்துவிட்டு திரு. ரசாக் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவை அவர் அலுவலகமான தெற்கு மண்டபத்தில் 26.08.1954 அன்று மாலை 4.00 மணிக்கு சந்தித்தார். தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டு பிரதமரிடம் பேசுவதற்கு முற்படும் முன்பாக, பிரதமர் எடுத்த எடுப்பிலேயே “நான் என்ன செய்ய வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார்.

> “இருளடைந்த பீதியும், பயமும் நிலவுகிறது என்றும், இந்த நிலைமைக்குக் காரணம் அபரிமிதமான போலீஸ் நடமாட்டமும், அவர்களுக்கு உளவாகச் செயல்படும் உள்ளூர் குண்டர்களும் தான் என்றும், இதை மட்டுப்படுத்தினால் பீதியால் அண்டை மாநிலத்தில் ஒதுங்கியிருக்கும் குடி மக்கள் வீடு திரும்புவார்கள் என்றும், போலீஸ் அத்துமீறல்களை விசாரிக்க பட்சபாதமற்ற ஒருவெளிமாநில ஹைகோர்ட் ஜட்ஜை நியமித்தால்

உண்மை புலனாவதோடு பொது மக்களுக்கும், அவர்களுக்கு இப்போது தேவைப்படும் பத்திர உணர்வு ஏற்படும் என்றும், அதற்கு அவர் உதவ வேண்டும் என்றும் புள்ளி விவரங்களோடு கேட்டுக்கொண்டேன்..... ஆனால் அவர் ஒன்று என்னைக் கேட்டார். அப்போது டில்லியில் வேறு அலுவல் நிமித்தம் தங்கியிருந்த திருவிதாங்கூர் கொச்சி அமைச்சர் பி.கே. குஞ்சு-வோடு இதை நான் பேசி முடித்துவிட்டால் என்ன என்று கேட்டார். "எனக்கு ஒரு மறுப்பும் இல்லை. ஆனால் எந்த முடிவுக்கும் வரும் அதிகாரம் அவர் கையில் இல்லை" என்று நான் மறுமொழி சொன்னேன்'. ***(எ.எ. ரசாக் – நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம் – பக்கம் 264 & 265)***

அதற்கு மேல் திரு. நேருவுக்குச் சொல்வதற்கு எதுவும் இருக்கவில்லை.

## 45. காவலை உடைத்தார் நேசமணி :

முன்பே திட்டமிட்டிருந்தபடி, 26.08.1954 அன்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு.எல்.எஸ்.கரையாளர் தலைமையில் ஒரு நல்லெண்ணக் குழு தென் திருவிதாங்கூருக்குச் சுற்றுப் பயணம் செய்து துயருற்றிருந்த மக்களை ஆங்காங்கே நேரில் சந்தித்து உண்மை நிலை புரிந்து கொண்டது இக்குழு நோயுற்றிருந்த கவிமணி தேசிக வினாயகம் பிள்ளையையும் அவரது இல்லத்தில் சந்தித்து விவரங்கள் தெரிந்து கொண்டது. திரு.கரையாளரின் அறிக்கை காங்கிரஸ் மத்தியில் பெரும் சலசலப்பை உருவாக்கிற்று.

இதுவரையிலும் வீட்டில் அடைபட்டுக் கிடந்த திரு.நேசமணி வீட்டுச் சிறையை உடைத்துக் கொண்டு வெளியேறிவிட்டார். விளக்கமான ஓர் அறிக்கையை அனைத்துப் பத்திரிகைகளுக்கும் அவர் அளித்தார். அதில் இறந்தவர்கள் 11, அபாயமான முறையில் ஊனமுற்றவர்கள் 300-க்கும் அதிகம் என்று அவர் கோடிட்டு காட்டியது போக, போலீஸ் லாக்கப்பில் வர்ம ஸ்தானங்களில்

அடிபட்டு நலிந்த உடல் நிலையில் குற்றுயிராக கிடக்கும் பலநூறு ஆட்களின் நிலைமையைப் பரிசோதித்து உரிய சிகிட்சை அளிப்பதற்காக ஒரு தனி மருத்துவ பரிசோதனைக் குழுவை நியமிக்க வேண்டுமென்றும், ஆகஸ்டு 11-ம் தேதியிலும் அதற்குப் பிறகும் நடந்த பல போலீஸ் அட்டூழியங்களை ஆராய்வதற்காக வெளி மாநில உயர்நீதிமன்ற ஜட்ஜ் தலைமையில் ஒரு நீதி விசாரணைக் கமிஷன் நியமிக்க வேண்டும் என்றும் வற்புறுத்திக் கேட்டிருந்தார். இந்த அறிக்கை டில்லியில் முக்கிய பத்திரிகைகளில் வெளியாயிற்று.

தவிரவும் பீதியில் உறைந்து கிடந்த தென் திருவிதாங்கூர் தமிழர்களை மீண்டும் தட்டி எழுப்பும்படியாக, ஓர் அறைகூவலையும் விடுத்தார். “நம்முடைய ஈட்டான் மிக அண்மையில் வந்து விட்டது. தளர்வோ, தயக்கமோ வேண்டியதில்லை. துயரத்தைத் துடைத்துக் கொண்டு துணிவுடன் முன்னேறி வாருங்கள். வீழ்ச்சியில்லை. வெற்றி நமதே” என்று ஊக்கம் அளித்து அறைகூவல் விட்டார்.

இந்த இரு அறிக்கைகளால் திருவிதாங்கூர்-கொச்சி காங்கிரஸ்காரர்கள் கலக்கமுற்றனர். பி.எஸ்.பி. சிறுபான்மை அரசுக்கு வெளியில் இருந்து கொண்டு ஆதரவு கொடுத்து வருகின்றவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்பதால், அவர்களுக்கு இந்தத் துயர சம்பவத்தில் சம பங்கு உண்டு என்ற தார்மீக உணர்வால் அவர்கள் பெரும் கலக்கமடைந்தனர். இது பி.எஸ்.பி அரசுக்கு பீதியை உருவாக்கிற்று. தமிழ் மக்கள் குறிப்பாக நாடார் மக்கள் மீண்டும் உறுதியுடன் செயல்பாட்டில் இறங்குவதற்கும், திரு. நேசமணியின் பின்னால் அணி திரளவும் உறுதி பூண்டனர். இதைக் கண்டு கொண்ட பி.எஸ்.பி. அரசு பெரும் பீதியடைந்தது.

## 46. *பி.எஸ்.பி. வட்டாரத்தில் அதிருப்தி :*

திரு. பட்டம் தாணுபிள்ளையின் பி.எஸ்.பி. அரசுக்கு மேலும் ஒருமரண அடி விழுவதை திரையில் காண முடிந்தது. அது அகில

இந்தியா பி.எஸ்.பி. (பிரஜா சோசியலிஸ்டு கட்சி) பொதுச் செயலாளர் திரு.ராம் மனோகர் லோகியாவின் கண்டன அறிக்கை அவரைச் சிறை வைத்திருந்த நைனிதால் சிறைச் சாலையில் இருந்து வெளி வந்தது. அவரது கருத்துப்படி திருவிதாங்கூர் பி.எஸ்.பி. அரசு தானாகவே முன் வந்து 1954 ஆகஸ்டு 26-க்கு முன் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று வற்புறுத்தியிருந்தார். அவருடைய கருத்துப்படி எந்த பி.எஸ்.பி. அரசுக்கும் மக்களைச் சுட்டுக் கொல்வதற்கு உரிமை கிடையாது. ஆகவே இங்கு நடந்த துப்பாக்கிச் சூடுகள் காங்கிரஸ் கட்சியை திருப்திப்படுத்துவதற்காக பட்டம் தாணுபிள்ளை செய்தார் என்றும் அவர் மேலும் குற்றம் சாட்டினார். சோசியலிஸ்டு கட்சி பெயரால் செயல்பட்டு வருகின்ற தாணுபிள்ளையின் அரசு மேலும் ஒரு நிமிடம் கூட பதவியில் நீடிக்கக் கூடாது என்றும் திரு. லோகியா அறிவித்து விட்டார்.

## 47. ஆட்சியைப் பிடிக்கும் திட்டங்கள் :

திரு.லோகியாவின் அறிக்கையைத் தொடர்ந்து பட்டம் தாணுபிள்ளையின் முதலமைச்சர் நாற்காலி ஆட்டம் கண்டது. இந்த நிலையில் காங்கிரஸ் தனது ஆதரவை விலக்கிக் கொண்டால் அரசை எவ்வாறு காப்பாற்றிக் கொள்ளலாம் என்ற வியூகத்தில் இறங்கினார் திரு. தாணுபிள்ளை. பதவியை துறப்பதற்கு அவர் தயாராக இல்லை. எனவே கணக்குக் கூட்டினார். பி.எஸ்.பி. கட்சியினர் 19 பேர் (சபாநாயகர் உட்பட) இடது முன்னணி கம்யூனிஸ்டு கட்சியினர் 39 பேர். மொத்தம் 58 பேர். 118 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தில் 60 உறுப்பினர்களின் துணையிருந்தால் ஆட்சியில் நீடிக்கலாம் என்று கணக்கிட்டு, மேலும் இரண்டு பேர் வேண்டுமே. 12 நபர்களைக் கொண்ட தி.த.நா.காங்கிரசிலிருந்து ஆசை காட்டி இருவரை இழுத்துவிட்டால் தான் ஆட்சியில் நீடிக்கலாம் என்பது அவரது இறுதிக் கணக்கு. ஆசைக்கு அடிபணிகின்றவர்கள் தி.த.நா காங்கிரசில் உண்டு என்ற எண்ணம், அவரிடம் எழுந்தது. தவிரவும் சில தி.த.நா.கா.

உறுப்பினர்களை நிரந்தரமாக சட்டசபைக்கு வரவிடாமல் தடுப்பதற்கும் திட்டம் வைத்திருந்தார். அதுவே ஆறு பேர்மீது தொடரப்பட்ட ராஜதுரோக குற்றச்சாட்டு கேசுகள். அதற்காக சிலருக்கு இரை வைத்தார். கம்யூனிஸ்டுகளுக்கு புன்னப்புரா – வயலார் ஆயுள் கால கைதிகள் விடுதலை என்ற இரையையும் வைத்தார் பட்டம்.

இத்தருணத்தில் காங்கிரஸ் வட்டாரமும் தங்களது கணக்குக் கூட்டலையும் தொடங்கினது. பி.எஸ்.பி. அரசுக்கு காங்கிரஸ் பின் துணை நல்கியதால் தானே தென் திருவிதாங்கூரில் பட்டம் தாணுபிள்ளை உருவாக்கிய ரத்தக் களரிக்கான தார்மீகப் பொறுப்பை தாங்கள் துடைக்க வேண்டி வந்தது. எனவே பி.எஸ்.பி. அரசுக்கு அளிக்கப்பட்டு வருகின்ற ஆதரவை உடனே திரும்பப் பெற்றுக்கொண்டு தங்களது தலைமையில் காங்கிரஸ் ஆட்சியை நிறுவவேண்டும் என்று அவர்களும் திட்டம் தீட்டினர். அங்கேயும் கணக்குக் கூட்டல் நடந்தது. காங்கிரஸ் உறுப்பினர்கள் 46. தி.த.நா.கா உறுப்பினர்கள் 12. இத்துடனே 2 சுயேட்சையினரையும் இழுத்துவிட்டால் மொத்தம் 60. ஆக ஆட்சியைப் பிடித்து விடலாம். தி.த.நா.காவினரை பிடிப்பதற்கான ஒரு அடவு அவர்களிடத்தில் உண்டு. அதுதான் தனி மாநில அந்தஸ்து கமிட்டி விவகாரம். அதை கொடுத்துவிட்டால் நிச்சயமாக நம்மை அவர்கள் ஆதரிப்பார்கள். ஆனால் திட்டங்கள் நிறைவேற வேண்டுமே? எவ்வாறு நிறைவேற்றலாம் என்று யோசித்தனர்.

இவ்விரு கட்சிகளும் நடத்துகின்ற கணக்குகளால் அரசு வட்டாரங்களில் ஒரு மந்த நிலை உருவாயிற்று. தென் திருவிதாங்கூரில் தாவளமடித்து, நாடார் மக்களை மட்டும் நரவேட்டையாடிக் கொண்டிருக்கின்ற மலையாளி போலீஸ் படையினரும் கணக்குக் கூட்டத் தொடங்கிவிட்டனர். அவர்களது பணி நீடிக்க வேண்டுமே. ஒருகால் பட்டத்தின் மாஞ்சா அறுந்து விட்டால் போலீசாரின் கதி என்ன? சட்டம் அவர்கள் மீது திரும்பிப்

பாய்ந்து விடுமோ என்ற அச்சம் அங்கே உருவாயிற்று. இதனால் அவர்களது கொடுமைச் செயல்களில் சற்று தளர்வு உண்டாயிற்று.

## 48. நேசமணியின் அறிக்கை :

காவல்துறையின் வீட்டு முற்றுகையால் அடைபட்டு முடங்கிக் கிடந்த திரு. நேசமணி ஒரு மார்ஷலின் நெஞ்சுரத்தோடு ஒரு புதுமையான அறிக்கையை வெளியிட்டார். அது என்ன புதுமையான அறிக்கை?".

> "காவல் துறையினர் மற்றும் மலையாள குண்டர்களால் இழைக்கப்பட்ட மர்ம அடிகளை வாங்கிக் கொண்டு போலீஸ் லாக்கப்களில் பதை பதைத்து கிடக்கும் பல தொண்டர்கள் நிலைமையைத் திறமையும், நேர்மையும் கொண்ட மருத்துவ நிபுணர்களைக் கொண்டு பரிசோதித்து அவர்களுக்கு உற்ற சிகிட்சையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தக்க தண்டனையும் வழங்க வேண்டும்" என்ற அறிக்கையை வெளியிட்டார்.

ஒரு மருத்துவ கமிஷனை அமைத்து பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிறப்புச் சிகிட்சையும், சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகள் மீது உகந்த சட்ட நடவடிக்கையும் வேண்டும் என்ற கோரிக்கையால் திருவனந்தபுரத்தில் போலீஸ் அதிகாரிகள் வட்டாரத்தில் பெரும் சலசலப்பும், பீதியும் உருவாயிற்று. இதனாலும் அவர்களது காட்டுதர்பாரில் தொய்வு ஏற்பட்டது. இந்த அறிக்கையைப் படித்துவிட்டு திருவனந்தபுரத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த "திருவனந்தபுரம் லெட்டர்ஸ்" என்ற ஆங்கில பத்திரிகை தலையங்கம் ஒன்றைத் தீட்டியது.

> "... மிகப் பயங்கரமான சூழ்நிலை ஒன்று தென் திருவிதாங்கூரில் உருவாகிக் கொண்டிருப்பதாக அவர் நடுக்கம் கொண்டார்.... ஆகஸ்டு 11 முதல் நடந்த போலீஸ் தாக்குதல்களை வஞ்சம் தீர்த்துக் கொள்ள ஒரு பெரிய

வன்முறைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், அதற்காக பெரும் பணம் திருவிதாங்கூருக்கு வெளியே திரட்டப்பட்டு அங்கேயே ஒரு வங்கியில் வைப்பு நிதியாகக் கட்டப்பட்டிருப்பதாகவும், வகுக்கப்பட்டிருக்கும் திட்ட நடவடிக்கைக்குரிய சென்னை மாநிலத்து போர் பரம்பரையினரைத் திரட்டுவதாகவும் .....” செய்தி வெளியாயிற்று. ***(அப்துல் ரசாக் – நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம் – பக்கம் 268 & 269)***

முன்பு கூறியது போன்று மலையாளிகளுக்கு, குறிப்பாக நாயர் பிரதானிகளுக்கு குமாரகோவில் நுழைவு போராட்ட நிகழ்ச்சிகளும், அதைத் தொடர்ந்து இங்கே நாடார் மக்களுக்கு உதவுவதற்காக பாண்டி நாட்டிலிருந்து ஆயுதமேந்திய நாடார் படைகள் வந்ததையும் நினைவில் எடுத்துக்கொண்டு இந்த “திருவனந்தபுரம் லெட்டர்ஸ்” தலையங்கம் எழுதியிருக்கலாம்.

ஆனாலும் உள்ளூரில் சில நிகழ்ச்சிகளை கண்டு, கூட்டிக் குறைத்து கணக்கு கூட்டினர் மலையாளிகள். மார்ஷல் நேசமணியுடன் இரவும் பகலும், அவர் போக்கிலும் வரத்திலும் பாதுகாவலர்களாக சில அறியப்படாத நபர்கள் இருந்தனர். அவர்களை எவரும் தற்பொழுது ஞாபகம் வைத்துக் கொள்ளவில்லை. அவர்களில் முக்கியமானவர் திரு.நேசமணியின் கார் ஓட்டியாகப் பணியாற்றிய திரு.செல்லைய்யன் ஆவார். அவர் கார் ஓட்டியாக இருந்தாலும் துப்பாக்கிசகிதம் தான் வண்டியை ஓட்டிச் செல்வார். அடுத்தவர் அன்னாரது தம்பி விழுமன் என்ற தங்கைய்யா. பிற்காலத்தில் ஈச்சன்காடு பகுதியில் குடியேறினார். மூன்றாமவர் கருப்பாயி என்ற கருமன். தக்கலை மணலியைச் சார்ந்தவர். அடுத்தவர் கூளையன் என்ற இராசய்யன். இவர் புலிப்பனத்தைச் சார்ந்தவர். அடுத்தவர் திரு.விக்டரும், திரு.சடையன் என்பவரும் ஆவர். இவர்கள் இருவரும் பள்ளியாடியைச்

சார்ந்தவர்கள். இந்த ஆறு பேரும் தலைவருடன் காரின் படிக்கட்டுகளில் நின்று எங்கு சென்றாலும் அவருக்குப் பாதுகாவலாகச் செல்வது வழக்கம். இவர்களை அறியாதவர்கள், மலையாளிகள் உட்பட, எவரும் அன்று இருக்க முடியாது. இணைப்புக்கு விரோதமாக அன்று செயல்பட்டுக் கொண்டிருந்த நாயர் பிரதானிகளையும், போலீஸ் அதிகாரிகளையும் வஞ்சம் தீர்ப்பதற்காக திரு.நேசமணியின் அனுமதியை இவர்கள் கோரினர். ஆனால் அவர்களுக்கு அனுமதி கொடுக்காமல், பொறுமையாக இருப்பதற்கு அறிவுரை வழங்கினார். ஆனால் நாயர் வட்டாரங்களில், தங்களைக் கூண்டோடு அழிப்பதற்காக ஒரு பெரும் புரட்சிக் கூட்டம் உருவாகி வருகிறது என்று அறிந்து அச்சமடைந்தனர். எனவே பல நாயர் தறவாடுகள் குடும்பசகிதம் குடி பெயர்ந்து திருவனந்தபுரம், கொல்லம், நெய்யாற்றின்கரை போன்ற ஊர்களுக்குச் சென்று ஒதுங்கிக் கொண்டனர். அன்று திரு. நேசமணி மட்டும் சற்று கண் சிமிட்டியிருந்தாரேயானால் குமரி மாவட்டத்தில் இன்று ஒரு நாயர் குடும்பம் கூட மிஞ்சியிருக்காது. அதைத் தடுத்தவர் திரு. நேசமணி ஆவார் என்று பல நாயர் தறவாட்டுக்காரர்கள் அன்று உணர்ந்திருந்தனர்.

இந்த நிகழ்ச்சிகளாலும், மலையாளிகள் அச்சமுற்றனர். அத்தகைய ஓர் எதிர் புரட்சி உருவாகிக் கொண்டிருந்தது உண்மையே. ஆனால் பாராளுமன்றத்தில், மாநில புனரமைப்பு குழுமத்தின் அறிக்கை மீது விவாதம் நடந்த வேளையில், சிறுபான்மையான மலையாளிகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் முகமாக, “மொழி வழி சிறுபான்மை அந்தஸ்து” அளிக்க வேண்டும் என்று வாதாடி, அதை அவர்களுக்கு வாங்கிக் கொடுத்தார். அந்த அந்தஸ்தால்தான் இன்று மலையாளிகள் குமரி மாவட்டத்தில் பல சிறுபான்மை கல்வி நிலையங்களை தொடங்கி நடத்துகிறார்கள். குலசேகரம் மூகாம்பிகை மருத்துவக் கல்லூரியும் இந்த சலுகையால் கிடைத்ததாகும். இன்றைய இளைய தலைமுறையினருக்கு இது

தெரிந்திருக்க நியாயமில்லை. ஏனெனில் இது குறித்து,இதற்கு முன்பு நாம் அவர்களுக்கு சொல்லவில்லை என்பதே.

## 49. பி. எஸ். பி. தலைமை :

பதவியை தக்க வைத்துக் கொள்வதில் பட்டம் தாணுபிள்ளையும், ஆட்சியை கைமாற்றி கொள்வதில் காங்கிரசும் மும்முரமாக செயல்பட்டுக் கொண்டிருந்த வேளையில், டெல்லியில் பி.எஸ்.பி. மேலிடத்தில் பல திடீர் திருப்பங்கள் உருவாயின. திரு – கொச்சியில் பி.எஸ்.பி. அரசை, அதாவது பட்டம் தாணுபிள்ளையின் அரசை பதவியிறக்கம் செய்வதில், அதன் பொதுச் செயலாளர் திரு.லோகியா உறுதியாக இருந்தார். கட்சித் தலைவர் திரு.கிருபலானியையும் அவர் வற்புறுத்தினார். திரு –கொச்சியில் பி.எஸ்.பி. அரசு பதவி விலகவில்லையெனில், தான் பதவியில் இருந்து விலகப் போவதாகவும் அறிவித்துவிட்டார். இதனாலும் பட்டம் தாணுபிள்ளை மசியாததைக் கண்ட திரு. லோகியா, அறிவித்தபடி 1954 செப்டம்பர் 15-ம் நாள் தனது பொதுச் செயலாளர் பதவியை ராஜினாமா செய்தார். தவிரவும் பி.எஸ்.பி. அரசு தென் திருவிதாங்கூரில் நடத்திய துப்பாக்கிச் சூடு மனிதநேயமில்லாத கொலைபாதகம் என்றும் வர்ணித்தார். இவரது ராஜினாமாவை ஏற்றுக்கொண்ட பி.எஸ்.பி தலைமை, உயர்நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்டு நீதி விசாரணை நடத்தும்படி பட்டம் அரசுக்கு ஆணையிட்டது. இதனைத் தொடர்ந்து திரு – கொச்சி உயர்நீதிமன்ற நீதிபதி கே.சங்கரனை ஓர் உறுப்பினர் விசாரணைக் கமிஷனாக அரசு நியமித்தது. இந்த நீதிபதியையே திருவிதாங்கூர் முன்னாள் திவான் சர்.சி.பி. ராமசுவாமிஐயர் பல வேளைகளில் விசாரணைக் கமிஷனாக நியமித்து, அரசுக்குச் சாதகமான அறிக்கைகளைப்பெறுவது இவரது வழக்கம். பொதுவாகக் கமிஷன்கள் அரசுக்குச் சாதகமாகவே அறிக்கைகள் தருவது இவரது வழக்கம். எனவே இந்த கமிஷனை நிராகரிக்கும்படி திரு.நேசமணி அறிக்கை விட்டார்.

## 50. நீதிமன்ற வழக்குகள் :

காவலில் வைக்கப்பட்டிருந்த சட்டமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பலதரப்பட்டவர்கள் சார்பில் கீழ் நீதிமன்றங்களில் ஜாமீன் கேட்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டும், அவைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டுவிட்டன. அவைகளை எதிர்த்து நாகர்கோவில் ஜில்லா நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. அன்று ஜில்லா நீதிமன்றத்தில் நீதிபதியாக திருமதி. அன்னாச்சாண்டி அம்மையார் இருந்தார்கள். இவர் நீதிநெறி தவறாதவர் என்ற புகழுக்குப் பாத்திரமானவர். இவர் முன்பு மேல்முறையீட்டு ஜாமீன் மனுக்கள் விசாரணைக்கு வந்தன. மனுதாரர்கள் சார்பாக சென்னைப் புகழ் வழக்கறிஞர் திரு.பாஷியம்ஐயங்கார் ஆஜராகி வாதாடினார். இவர்களுக்காக இவர் நீதிமன்றங்களில் இலவசமாக வாதிடுவார் என்று வாக்களித்திருந்ததை முன்னே கூறியிருக்கிறோம். இவரைத் தொடர்ந்து தைக்காடு சுப்பிரமணிய ஐயரும் வாதாடினார். திரு.பாஷியம் ஐயங்கார் மற்றும் தைக்காட்டு சுப்பிரமணிய ஐயரின் இடி முழக்க வாதங்களை ரசித்துக் கேட்டு கொண்டிருந்த நீதிபதி அம்மா, அனைத்து ஜாமீன் மனுக்களையும் தள்ளுபடி செய்தார். ஆனால் மாணவர்களுக்கு மட்டும் ஜாமீன் வழங்கினார்.

பன்னிரண்டு சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தி.த.நா.காங்கிரசில் இருவர் தேவிகுளம் – பீர்மேடு தொகுதிகளைச் சார்ந்தவர்கள் ஆவர். அவர்கள் மீது நீதிமன்ற வழக்குகள் இல்லை. திரு. சிதம்பரநாதன் நாடார் மீது வழக்கு உண்டு. ஆனால் அவரைக் கைது செய்யாமல் வெளியில் விட்டிருந்தனர். ஏனெனில் அவர் பக்கவாத நோயால் தாக்கப்பட்டு நாகர்கோவில் டாக்டர். மத்தியாஸ் மருத்துவமனையில் சிகிட்சை பெற்று வந்தார். மீதி ஒன்பது சட்டமன்ற உறுப்பினர்களில் ஏழு பேர் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள்

முறையே எ.குஞ்சன்நாடார், ப.தாணுலிங்கநாடார், எம்.வில்லியம், என்.எ.நூர்முகமது, டி.டி.டானியல், எ.எம்.சைமன் மற்றும் டி.அனந்தராமன் ஆவர். மற்ற இருவரில் ஒருவர் பி.இராமசுவாமிபிள்ளை, மற்றவர் ஆர்.பொன்னப்பநாடார். இவ்விருவர்கள் மீதும் பிடிவாரண்டு பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் கைது செய்யப்பட வில்லை. ஏனென்றால் அவர்கள் நேசமணியின் பாதுகாவலில் தமிழ்நாட்டில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தனர். தேசத் துரோகக் குற்றச்சாட்டு அவர்கள் மீது பதிவாகியிருந்தது.

கீழ் கோர்ட்டு தீர்ப்புகளுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. உயர்நீதி மன்றத்தின் நிலையும் என்னவென்று பார்த்துவிட வேண்டும் என்பது மக்களின் ஆர்வம். அதன்படி குடியரசு சட்டம் 226-ம் வகுப்பு அடிப்படையில் 13 மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. மனுதாரர்கள் சார்பில் தைக்காடு சுப்பிரமணி ஐயர் வாதிட்டார். சுதந்திரமாக இருக்க வேண்டியவர்கள் அடிப்படை உரிமைக்கு எதிராக சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், அவர்களை நீதிமன்றம் விடுவித்து விடுதலைக் கட்டளை (Writ of Habeas Corpus) பிறப்பிக்க வேண்டும் என்றும் வழக்கறிஞர் தைக்காடு சுப்பிரமணிய ஐயர் வாதத்தை இரண்டு நாள் தொடர்ந்தார். இதை எதிர்த்து அரசு தரப்பு வக்கீல் ஜோசப் மூரிக்கன் வாதாடினார். இருவரது வாதங்களையும் உன்னிப்பாக கேட்ட நீதிபதி அன்றே (08.09.1954) தீர்ப்புக் கூறாமல் 20-ம் தேதிக்குத் தள்ளி வைத்தார். எல்லோரும் எதிர்பார்த்தது போன்று 13 மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன. கைதிகள் அவரவர் சிறைச்சாலைகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

எனவே, திரு.கொச்சியில் கீழ்நிலைநீதிமன்றமான மஜிஸ்டிரேட் கோர்ட்டு முதல் உயர்நீதிமன்றம் வரை இவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது. இதனால் கைதிகளின் உற்றார் உறவினர்கள் கலக்கம் அடைந்தனர். அவர்களது

மனக்கிலேசத்தைத் தலைவர் நேசமணியிடம் முறையிட்டுப் புலம்பினர். இதனால் மார்ஷல் நேசமணி மனத் துயரம் அடைந்தார்.

## 51. அரசின் தூண்டில்ப் பொறி :

நீதிபதி சங்கரன் தலைமையில் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் அரசுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கும் என்ற முழு நம்பிக்கையில், திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசாரிடையே ஒரு பிரிவினையை உருவாக்குவதற்கான திட்டத்தை அரசு வகுத்தது. இந்த வகையில் கில்லாடியான அமைச்சர் பி.கே. குஞ்சுவிடம் அப்பொறுப்பு விடப்பட்டது. ஜாமீன் மறுக்கப்பட்டு சிறைகளில் வாடியவர்களில் முக்கியமானவர்களின் உறவினர்களை இவர் அணுகி அரசுடனே ஒரு சமரசத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான முயற்சியில் உடனடியாக இறங்கினார்.

திரு.கொச்சி உயர்நீதிமன்றம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கே ஜாமீன் வழங்காத நிலையில், வழக்கறிஞர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், நகர்மன்றத் தலைவர்கள் மற்றும் சாதாரண மக்களுக்கு ஜாமீன் கிடைக்குமா? உயர்நீதிமன்றத்தோடு இந்த சட்ட ரீதியான மேல்முறையீடுகள் முடிவடைந்துவிடும். அதனால் காவலில் இருப்பவர்களின் நிலமை என்னவாகும்? வழக்கு முடியும் வரை அவர்கள் சிறையில்தான் வாட வேண்டும். ஆனால் அரசு நினைத்தால் சில மணி நேரத்தில் இவர்களையெல்லாம் விடுதலை செய்ய முடியும். அதற்காக அவர்கள் அனைவரும் மன்னிப்புக் கேட்டு, அரசிடம் சமரசம் செய்ய வேண்டும் என்பதுதான் அமைச்சர் பி.கே.குஞ்சுவின் தூண்டில் இரையாக இருந்தது. இவருடன் “கேரள கௌமுதி” என்ற மலையாள நாளிதழின் ஆசிரியர் திரு. சுகுமாரன் நாயரும் துணை நின்றார்.

முதலாவதாக தக்கலையில் பிரபல நிலச்சுவான்தாரரான திரு.N.S.சாகுல் அமீதுக்கு (N.S. முதலாளி) தூண்டில் போட்டார். விசாரணைக் கைதியாக சிறையில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் திரு.நூர்முகமதின் மாமனார் ஆவார் இவர். தவிரவும் திருநெல்வேலியில் தலைமறைவாக இருந்த நகர்மன்றத் தலைவர் திரு.நைனாமுகமதின் தந்தையுமாவார். இவர் பி.கே.குஞ்சுவின் உறவினரும் கூட வழக்கறிஞர் பக்ருதீன் ஆதம் திரு.நேசமணியின் இளநிலையாளரும் ஆவார். இந்த ஆதம்தான் திரு.நேசமணியின் வழிகாட்டலில் காவல்நிலையங்கள் மற்றும் மஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் போன்றவற்றில் கைதானவர்கள் சார்பில் அங்கெல்லாம் சென்று வழக்குத் தொடர்பு வைத்திருந்தார். அமைச்சர் பி.கே.குஞ்சுவின் இந்த முயற்சிக்குப் பிறகு சிறையில் இருந்தவர்களுக்குச் சில சலுகைகள் கிடைத்தன. உபாதைகளும் சற்றுக் குறைந்தன.

அமைச்சர் திரு.பி.கே.குஞ்சு இசுலாமியர் வட்டாரத்தில் தனது செல்வாக்கை பயன்படுத்தி, சமரசத்திற்கு முயற்சி எடுத்து வந்த வேளையில், கேரள கௌமுதி சுகுமாரன் நாயர் இரணியல் ஸ்ரீதரன்பிள்ளை மூலமாக பி.ராமசாமிபிள்ளைக்கும் நெருக்குதல் கொடுத்தார். அடுத்ததாக சில பெண்கள் வட்டாரம் மூலமாக திரு.நேசமணியின் மனைவிக்கும் நெருக்குதல் சென்றது. இதில் அமைச்சர் மனைவியும், பக்ருதீன் மனைவியும் சேர்ந்து நேசமணியின் மனைவிக்கு நெருக்குதல் தந்தனர். இவ்வழிகள் மூலமாக திரு.நேசமணியை அரசிடம் சரணடையச் செய்வதற்கு பகீரத முயற்சிகள் நடந்தன.

## 52. தி.த.நா.கா-வை உடைக்க முயற்சி :

திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசில், அன்று பல உட்பூசல்கள் நிறைந்திருந்த நிலையில், அதை உடைப்பதற்கும், சாதி, மத, இன வாரியாகப் பிளவை உருவாக்கிவிடவும் அடுத்த

வியூகம் அமைக்கப்பட்டது. குஞ்சன் நாடார் கோஷ்டி, எம்.சைமன் கோஷ்டி, ப.தாணுலிங்கம் நாடார் கோஷ்டி என்று மூன்று கோஷ்டிகள் இரகசியமாக இயங்கி வந்தன. திரு.நேசமணி, திரு.எ.ரசாக் மற்றும் திரு. சிதம்பரநாதன் போன்ற முன்னணித் தலைவர்கள் மத்திய சிறையில் இருந்த வேளையில் இந்த உட்பூசல் கோஷ்டிகள் உருவெடுத்தன. திரு.நேசமணி வெளியில் வந்துவிட்ட நிலையில் இந்த கோஷ்டிப் பூசல்கள் மங்கிப் போயிற்று என்றாலும் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் ஆங்காங்கே தலைகாட்டத் தவறவில்லை. கட்சியை எவ்வாறேனும் உடைத்துவிட்டால், அதில் தேறுகின்ற சட்டமன்ற உறுப்பினர்களை ஐக்கிய முன்னணி பயன்படுத்தி ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வது என்ற திட்டமும் அரசு வகுத்திருந்தது. இதன் முதற்கட்டமாக நாடார்கள், மற்றவர்கள் என்று அதை இருகூறுகளாக்கிவிட்டு, பிறகு நாடார்களில் இந்துக்கள் – கிறிஸ்தவர்கள் என்று மீண்டும் கூறுபோட்டுவிட வேண்டும் என்ற கோணத்திலும் அமைச்சர் பி.கே.குஞ்சுவும், பத்திரிகையாளர் திரு.சுகுமாரன் நாயரும் செயல்படத் தொடங்கினர். ஆனால் அவர்கள் முயற்சி முழு வெற்றியடையவில்லை. காரணம் மார்ஷல் நேசமணியின் அபரிமித செல்வாக்கு. மக்கள் அனைவரும் இவர் பின்னால் எதைச் செய்வதற்கும் தயாராகக் காத்துக் கிடந்தனர். சாதி மத இன வேற்றுமை அங்கே தோன்றுவதற்கு அச்சப்பட்டது. அதனால் அமைச்சரின் ‘பாச்சா’ பலிக்கவில்லை.

## 53. நேசமணிக்கு லஞ்சம் :

அன்றும் சரி, இன்றும் சரி, அரசியல் நடத்துவதற்கு பணம் முக்கிய உட்கூறாகும். நேசமணிக்கு பணமுடை உண்டு. அவரது தொழில் வருமானம், மகளின் திருமணத்திற்காக சேமித்து கைக்கப்பட்டிருந்த பணமும் கட்சிக்காக கரைந்து போயிற்று. மேலும் பணத்துக்கு தனது சொத்துக்களை விற்பதற்குக் கூட ஏற்பாடு செய்தார். ஆனால் அன்னாரது பூர்வீக சொத்துக்கள்

பிரிக்கப்படாததால் அதை வாங்குவதற்கு யாரும் முன் வரவில்லை. சிறிது காலம் டாக்டர். மத்தியாஸ் உதவிகளைக் செய்து வந்தார். அதுவும் நின்று போயிற்று. எனவே பணமுடை அவரை வெகுவாக வாட்டியது.

அவர் சிறையில் இருந்தபோது, அவருடைய அபிமானிகள் சர்வாதிகாரிகளிடம் தாராளமாக நிதி வழங்கியுள்ளனர். தமிழகத்தில் பணம் பிரித்தவர்களும் உண்டு. அவ்வாறு கிடைத்த பணம் பலர் கைக்குப் போய் விட்டதாக திரு.பி.இ.ராமசாமிப்பிள்ளை கூறினார். இவருக்குப் பிறகு சர்வாதிகாரியாக இருந்த திரு.குஞ்சன் நாடாரும் அவ்வாறே சொன்னார். பலர் கைக்குப் போய்விட்டது என்று சொன்ன இராமசாமிப்பிள்ளைக்கு அந்த பலரில் வி.கே.ராஜாபிள்ளையையும், திரு.ஜி.கிறிஸ்டோபரையும் மட்டுமே குறிப்பிட முடிந்தது. தென்திருவிதாங்கூருக்கு வெளியே தமிழகத்தில் பணம் பிரித்தவர்களும் பணத்தை எவரிடத்திலும் கொடுக்கவில்லை. திரு.ஜி.கிறிஸ்டோபரிடம் விசரித்தபோது, நன்கொடையாக பலர் கணிசமாக பணம் தந்ததாகவும், அவைகளை அவ்வப்போது பொருளாளர் திரு.வி.கே.ராஜாபிள்ளையிடம் தான் கொடுத்ததாகவும் கூறினார். இதை சரிபார்த்து உறுதிப்படுத்துவதற்காக பொருளாளர் திரு. வி. கே. ராஜாபிள்ளையை விசாரிப்பதற்காக அழைத்துள்ளனர். ஆனால் அவர் விசாரணைக்காக வரவேயில்லை. கணக்கு கேட்டால் கசப்புதான் மிஞ்சும். இவ்வாறு தி.த.நா.கா- நிதிக்காக கிடைத்த பணம் முழுவதும் திரு.ராஜாபிள்ளை கைவழியாக சென்னையில் உருண்டோடியது. சில கூட்டாளிகளோடு சேர்ந்து சென்னையில் “ரவிசந்திரிகா” என்ற ஒரு படத் தயாரிப்புக்காக செலவு செய்யப்பட்டது திரு.எல்.எஸ்.கரையாளரின் கவனத்திற்கு வந்தது. அவருக்குத் தெரிந்ததால் திரு.நேசமணிக்கும் தெரிந்துவிட்டது. அளவுக்கு மிஞ்சிய பணம் பிரிந்த பிறகும், நேசமணிக்கு இப்பொழுது பணப்பஞ்சம் உருவாயிற்று. ஆனால் வெள்ளாம்பிள்ளை வி.கே.ராஜாபிள்ளை சுதாரித்துக் கொண்டார். அவர் சினிமாக்காரர்களுடன் உல்லாசமாக கைகோர்த்து

உப்பரிக்கை வாழ்க்கை அமைத்துக் கொண்டார். கிடைத்தவன் எடுத்துக் கொண்டான்; வளைத்தவன் பிழைத்துக் கொண்டான்" என்ற கதையாகிவிட்டது.

## 54. நேசமணியைக் குறைத்துக் கூறல் :

திரு. நேசமணி கையில் காசில்லாமல் வெறுமையாக நின்ற வேளையில் அவரது இனிய தோழர்களும், நண்பர்களும், அபிமானிகளும் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். தொண்டர்கள் அனைவரும் தேசாந்தரம் போய்விட்டனர். தி.தா.நா.கா-வின் முன்னாள் தலைவர் திரு.நத்தானியேலும், டெப்பூட்டி லீடர் திரு.சிவராமபிள்ளையும் மாற்றுத் தோழர் அணிக்குத் தாவி கையில் வாள் ஏந்தி திரு.நேசமணியை வீழ்த்துவதற்குக் கங்கணம் கட்டி களத்தில் குதித்துவிட்டனர். திருவிதாங்கூர்-கொச்சி இணைப்புக்கு எதிராகவும், திரு.நேசமணியின் ஆலோசனைகளுக்கு எதிராகவும் போர்க்கொடி ஏந்திய அதே நத்தானியேல், தனக்குப் பதிலாக நின்று செயல்படும்படி திரு.நேசமணியை கேட்டுக் கொண்ட அதே நத்தானியேல், இப்போது திரு.நேசமணி தமிழ் மக்களை வஞ்சித்து விட்டார் என்று மாற்றான் கூடாரத்து வாடையுடன் திரு.நேசமணியை குற்றம் சாட்ட ஆரம்பித்துவிட்டார். தேவையற்ற, அனாவசியமான, அக்கிரமமான ஒரு போராட்டத்திற்கு மக்களை திரு.நேசமணி இழுத்துத் தள்ளிவிட்டார் என்ற அபாண்டத்தையும் நாவுகூசாமல் அறிக்கையாக வெளியிட்டார். இதனால் மக்கள் திரு.நேசமணியை வெறுத்து ஒதுக்கிவிடுவர் என்பது பட்டம் தரப்பினரின் எதிர்பார்ப்பு. அந்நோக்கம் நிறைவேறிட திரு. நேசமணியின் மேல் சகதியை வாரி இறைப்பதற்கு ஒரு நத்தானியேலை சாதுரியமாக பயன்படுத்தினர் நாயர் தலைவர்கள். தன் விரலால் தன் கண்ணைக் குத்திக் கெடுக்கிறான் மேல் இனத்தான் என்ற நுட்பத்தை அறிவதற்கு நாகர்கோவில் சாணானுக்கு அறிவு வேண்டுமே! தவிரவும், திரு.நேசமணியை நம்பி மோசம் போக வேண்டாம் என்றும், காங்கிரஸ் மேலிடத்துக்கும் அறிக்கை அனுப்பிவிட்டார்.

இவைகளைக் கேள்விப்பட்ட மார்ஷலும், பெருந்தலைவரும் கூட திடுக்கிட்டுப் போனார்கள் என்றாலும் அவர் மீது ஆத்திரப்படவில்லை. ஏனெனில் திரு.சாம் நத்தானியேல் இன்று பி.எஸ்.பி வட்டாரத்தில் தமிழர்களின் எதிரிகளிடம் சிக்கிக் கொண்டு பிதற்றுகிறார் என்பது அனைவரும் அறிந்த கதைதான்.

இதனால் வைராக்கியம் கொண்ட மார்ஷல் முதலில் பி.எஸ்.பி. அரசின் சவாலை முறியடிக்க முடிவு செய்தார். பி.எஸ்.பி. கட்சித் தலைவர் திரு. கிருபலானி, பட்டம் தாணுபிள்ளையை தி.த.நா.கா-வோடு சமரசப் பேச்சுவார்த்தை தொடங்கும்படி வற்புறுத்தினார். மாறாக அவர் ஒரு நீதிக் கமிஷன் அமைத்ததோடு நின்றுவிட்டார். ஆனால் திரு.நேசமணி அந்தக் கமிஷனை நிராகரித்தார். இந்த கமிஷனால் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்காது என்பது திரு.நேசமணிக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். எனவே அத்துடனே ஒத்துழைப்பது கால விரையம் என்பது அவரது முடிவு. இதனால், திரு.நேசமணியை உடனே அழைத்துப் பேசும்படி பட்டத்தை பி.எஸ்.பி. கட்சி பொதுச் செயலாளர் திரு.அசோக்மேத்தா வலியுறுத்தினார். இதற்கு இணங்கி அவர் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முற்பட்டார். ஆனால் திரு.நேசமணியை நேரில் சந்தித்துப் பேசுவதற்கு அவர் முன் வரவில்லை. திரு.தாணுபிள்ளை கூச்சப்பட்டார். அவருக்கு குற்ற உணர்வு மேலோங்கி நின்றது. திரு.நேசமணிக்குப் பதிலாக தி.த.நா.கா. தலைவர் திரு.ப.ராமசாமி பிள்ளையையாவது அழைத்துப் பேசியிருக்கலாம். அதற்கும் அவர் முன் வராமல் தனது தூதுவராக பி.கே.குஞ்சுவை அனுப்பினார். ஆனால் இவரும் இருவரையும் பேச்சுவார்த்தைக்கு அழைக்கவில்லை. திரு. நேசமணியிடம் நேர்முகப் பேச்சுக்கு இவர்கள் தாக்குப்பிடிக்க முடியாது என்பது இவர்களுக்கு நன்றாகவே தெரியும். ஆகையால் மீண்டும் குஞ்சு அவர்கள் கேரள கௌமுதி திரு. சுகுமாரன் நாயரை இடைத்தரகராக அமர்த்திக் கொண்டார். ஆக நேரில் பேசி முடிக்க வேண்டிய ஒரு காரியத்துக்கு எத்தனை குறுக்கு வழிகள்? இந்த முயற்சிகள் ஏதும் பயன் பெறவில்லை.

இருப்பினும் தலைவர் எ.நேசமணி இரண்டு தடவை திருவனந்தபுரம் கனகக்குன்று அரண்மனை சென்று அமைச்சர் பி.கே.குஞ்சுவிடம் பேசியிருக்கிறார். இந்த அரண்மனைதான் ராஜ பிரமுகர் ஸ்ரீ சித்திரை திருநாளின் அதிகாரபூர்வ இருப்பிடம். கைதிகளிடம் பேசுவது போன்ற அதிகாரத் தோரணையில் குஞ்சு திரு.நேசமணியிடம் பேசியிருக்கிறார். எனவே காறி உமிழ்ந்து துப்பிவிட்டு நேசமணி வெளியேறிவிட்டார். ஆனாலும் மூன்றாவது முயற்சிக்கு தி.த.நா.க. தலைவர் பி.ராமசாமிபிள்ளை முன்கை எடுத்தார்.

இந்த பேச்சுவார்த்தைகள் மிகவும் ரகசியமாக நடந்து வந்தன. இத்தருணத்தில் திரு.அப்துல்ரசாக் டெல்லியில் பி.எஸ்.பி. தலைவர்களை மீண்டும் சந்தித்துக் கொண்டிருந்தார். பி.எஸ்.பி. தலைவர்கள் தாணுபிள்ளை அரசு பதவி விலகுவதையே விரும்பினர். இல்லையேல் அவர் காங்கிரஸ்காரர்களின் ஒரு கருவியாக செயல்பட்டு, மீண்டும் மக்களுக்கு துயரத்தை உருவாக்கிவிடுவார் என்று அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். அவர்களின் இந்த நிலைப்பாட்டை திரு.ரசாக் திரு.நேசமணிக்கு அறிவித்தார்.

## 55. நேசமணிக்கு மன்னரின் அன்பளிப்பு :

பணப்பஞ்சத்திற்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு திரு.நேசமணிக்கு வந்துவிட்டது. அதைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பும் அவருக்கு வந்துவிட்டது. அவருடைய பணமுடையை பக்கத்தில் இருந்து அறிந்து கொண்டவர் போல் திருவிதாங்கூர் முன்னாள் மன்னரும், தற்போது திருவிதாங்கூர் - கொச்சி ராஜபிரமுகருமான ஸ்ரீசித்திரை திருநாள் பாலராமவர்மாவின் தூதுவர் ஒருவர் இவரை அணுகி அன்பளிப்பு (லஞ்சம்) தருவதற்கு முன் வந்தார். ஆனால் ராஜபிரமுகர் திரு.நேசமணிக்கு ஏன் அன்பளிப்புத் தர வேண்டும்? இவருக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்? சம்பந்தம் இல்லாமலா இதற்கு அவர் துணிந்தார். தென் திருவிதாங்கூரில் உள்ள முக்கிய கோயில்களிலும், கோட்டை

கொத்தளங்களிலும், அரண்மனைகளிலும் அவரது உயரிய அந்தஸ்தும், அதிகாரங்களும் முன்பிருந்தது போலவே தொடர்ந்தன. ஆகவே தென்திருவிதாங்கூர் இல்லாத ஒரு கேரளத்தை அவரால் சீரணித்துக் கொள்ள இயலவில்லை. எனவே இந்தப் பிரிவினையை எவ்வாறேனும் தவிர்க்க வேண்டியது அன்றைய கட்டாயமாகிவிட்டது. அதற்காக அவர் எதைச் செய்வதற்கும் தயாரானார். தனது உயரிய அந்தஸ்தை விட்டுக் கொடுத்து லஞ்சம் கொடுப்பதற்கும் முன் வந்தார். திரு.நேசமணிக்கு கணிசமான ஒரு தொகையைக் அன்பளிப்பு என்ற போர்வையில் கொடுத்து, அவரை தன்வசப்படுத்தி, பிரிவினையை தவிர்ததுவிட வேண்டும் என்ற முடிவுக்கு மன்னர் வந்துவிட்டார். அதற்காக என்ன விலை கொடுக்கவும் அவர் முன் வந்தார். அதற்காக ராஜப்பிரமுகரின் முன்னாள் ஊழியர்கள், அதிலும் கிறிஸ்தவர்கள் அனுப்பப்பட்டார்கள். இப்படி அனுப்பப் பட்டவர்கள் திரும்பியே போய்விட்டார்கள். இதைத்தான் ஔவையார் “வறுமையில் செம்மை” என்று பாடினார். அதற்குச் சான்றாக விளங்கினார் மார்ஷல் எ.நேசமணி. அவருக்குப் பணமுடைதான். ஆனாலும் நேர்மையில்லாத முறையில் பணத்தைத் திரட்டுவதற்கு அவர் மறுத்துவிட்டார். ராஜப்பிரமுகரின் ஆள் சொல்லத் தயங்கிய விஷயத்தை மகாராஜாவின் பழைய விசுவாச அரசு ஊழியர் இருவரும், ஒரு உள்ளூர் பாங்கரும் துணிந்து நேரில் சென்று சென்னார்கள். ஒரு கூட்டு அன்பளிப்பு மோகினியாட்டம் போன்று கவர்ச்சியானது. இந்நாள் அரசியல்வாதிகளுடன் இவரை ஒப்பிட்டுப் பார்ப்பதாக இருப்பின் திரு.நேசமணி ஒரு “ஏமாளி” என்றே கூற வேண்டும். செம்மையை ஒரு புறம் வைத்துக் கொண்டு, மன்னரின் அன்பளிப்பை (50 லட்சம்) பெற்று கொண்டு வாழ்க்கையில், வி.கே.ராஜாபிள்ளையைப் போன்று செட்டில் ஆகியிருக்கலாம். அவ்வாறு செய்திருப்பாரேயானால் தென் திருவிதாங்கூரில் அன்றே (1954-ல்) ஒரு கோடீஸ்வராக B.M.W சொகுசு காரில் வலம் வந்து, ஒரு நிலச்சுவான்தாரராக, ஒரு

தொழில் அதிபராக, ஒரு எஸ்டேட் முதலாளியாக, மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரிகளை நிறுவிக் கல்வித் தந்தையாக, பெரும் அப்காரிகாண்டிராக்டராக விளங்கியிருக்கலாம். பிழைக்கத் தெரியாத அசடு ஆக இவர் இருந்து விட்டார். அந்நாளில் தங்கத்தின் விலை (1954-ல்) சவரன் ஒன்றுக்கு ரூ.79 – அணா 3 – பைசா 5 ஆக இருந்தது. அவ்வாறாயின் அன்று 62,893 சவரன் அதாவது 62.89 டண் தங்கம் வாங்கி வைத்திருக்கலாம். அவரது மகன் திரு.வில்சன் அப்பல்லோஸ் கொடுத்து வைக்கவில்லை!.

ஆனால் அவரோ “வறுமையிலும் செம்மை”யாக இருந்துவிட்டார். இல்லையெனில் அவரது பேயரனான திரு.ரஞ்சித் நேசமணி இன்று கேரள முழுவதிலும் நகைக்கடைகளாகக் குவித்து வைத்திருப்பார். 18 காரட் 20 காரட் என விற்று பல கோடிகளை மேலும் சேர்த்திருப்பார். "அதன் அன்றைய மதிப்பு ரூபாய் ஐம்பது லட்சம். அவரது அமைதியான கல்லறையைப் பார்த்து இப்போது குரைத்துத் திரியும் எந்த நாயும் அந்த அன்பளிப்புப் பொதியில் மோசம் போயிருக்கும். ஆனால் அவர் மோசம் போகவில்லை. வந்தவர்கள் வெட்கித்துத் திரும்பினர்". ***(அதே புத்தகம் – பக்கம் 281 – 282)***

## 56. கிருபலானி வீட்டு முன்பு தர்ணா! :

1954 அக்டோபர் 10-ம் நாள் திரு. ரசாக் நாகர்கோவில் வந்து திரு.நேசமணியைச் சந்தித்தார். திரு.நேசமணி ஒரு அதிர்வேட்டுத் திட்டத்தைத் தீட்டி வைத்திருந்தார். டாக்டர். லோகியா அபிப்பிராயப்படி, பி.எஸ்.பி. அரசு பதவி விலகுவதைத் தான் அவர்கள் விரும்புவதாகவும், அதற்காக பி.எஸ்.பி. வட்டாரத்தை வளைத்துப்பிடிக்க வேண்டும் என்றும் தனது திட்டத்தைச் சொன்னார். தென் திருவிதாங்கூரில் இருக்கின்ற நிலைமைகளை பி.எஸ்.பி. வட்டாரத்துக்கு ஆதாரங்களுடன் எடுத்துரைக்க வேண்டும் என்றும்,

அவர்களிடத்தில் ஒரு கொந்தளிப்பை உண்டு பண்ணிவிட வேண்டும் என்ற தனது திட்டத்தை திரு.நேசமணி விளக்கினார். இதன் முதற்கட்டமாக தென் திருவிதாங்கூரில் நடந்த கோர சம்பவங்களை எடுத்துக்காட்டுகின்ற சில படங்களை அச்சிட்டு, பி.எஸ்.பி. அணிகளுக்கும், அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கொடுத்துவிடுவது என்றும் உறுதியாயிற்று. எதுவானாலும் சரி, படங்களை ஒரு சிறு விளக்கத்தோடு ஆயிரக்கணக்கில் அச்சிட்டு வினியோகிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஏற்கனவே திட்டமிட்டிருந்த பிரகாரம் திரு.எ.நேசமணி 1954 நவம்பர் 6-ம் நாள் டில்லி சென்றுவிட்டார். ரயில் நிலையத்தில் வைத்தே "கிருபலானி வீட்டு முன் மறியல்" என்னவாயிற்று: பத்திரிகைகளில் செய்தி வரவில்லையே என்று திரு.ரசாக்கிடம் வினவினார். கடைசி நிமிடத்தில் குப்புசுவாமிக்கு மனமாற்றம் வந்துவிட்டது. அதனால் மறியல் நடக்கவில்லை என்று சொல்லி முடித்துவிட்டார் திரு.எ.ரசாக். "ஏன்? அவருக்கிந்த திடீர் மனமாற்றம்". வீரனுக்கு வீரன் வித்தியாசம் இல்லை என்பதை நிரூபிப்பதற்காக அவரும் மாறியிருப்பரோ? என்றார். வீரனுக்கு வீரன், "மாவீரன்" என்று அவர் குறிப்பிட்டது" ப. ஜீவா-வைத் தான் என்பது திரு.எ. ரசாக்குத் தெரியும்.

திரு. குப்புசாமி தேவிகுளம், மூணாறு பகுதி தி.த.நா.கா. செயல் வீரர் ஆவார். மறியல் போராட்டத்தின் போது சிலருக்கு சிறிது காலம் தண்டனை வழங்கப்பட்டிருந்தது. தண்டனை காலம் முடிந்து இப்பேர்பட்டவர்கள் பலர் விடுதலையாகி சிறையிலிருந்து வெளியில் வந்துவிட்டனர். அவர்களில் ஒருவர் திரு.காந்திராமன். தொண்டர்படைத் தளபதி. மற்றவர் திரு.துரைசாமி, அண்மைக்காலம் வரை இவர் திரு.கொச்சி காங்கிரசின் நாகர்கோவில் கிளையின் செயலாளராக இருந்தவர். தென் திருவிதாங்கூரில் நடந்த கிளர்ச்சியைப் பயன்படுத்தி தி.த.நா.கா-வில் இருந்து பட்டம் தாணுபிள்ளையின் சமஸ்தான காங்கிரசுக்கு

ஓடிப்போனவர். மீண்டும் தி.த.நா.கா-வில் வந்து இணைந்தார். இவர்கள் இருவரும் திரு.நேசமணிக்கு ஒரு யோசனை கூறினார்கள். அவர் யாருடைய யோசனையையும் கேட்கமாட்டார் என்றாலும் இந்த யோசனையில், உயிரோட்டம் இருப்பதாக எண்ணி அதற்கு ஒப்புதல் தந்தார். புதுடில்லியில் பி.எஸ்.பி. கட்சியின் நாடாளுமன்றத் தலைவர் திருமதி. சுசீதா கிருபலானி வசித்து வந்த வீட்டில்தான் பி.எஸ்.பி. தலைவர் ஆச்சாரியா கிருபலானியும் வசித்து வந்தார். அவர்களது வீட்டுமுன் “குத்தியிருப்புப் போராட்டம்” ஒன்றை நடத்தினால் பி.எஸ்.பி. வட்டாரத்தில் தென்திருவிதாங்கூர் சமாச்சாரம் இடிபோல் அவர்களைத் தாக்கும். அதன் விளைவாக பட்டம் தாணுபிள்ளைக்கு கடும் நெருக்குதல் ஏற்படும். அதற்கு அவர் பணிய வேண்டிய கட்டாயம் வரும். அதன் பயனாக தென் திருவிதாங்கூரில் போலீஸ் அட்டூழியங்கள் வாபசாகும். தவிரவும் சிறையில் அடைத்தவர்கள் விடுவிக்கப்படுவர் என்ற புதுமையான யோசனையாக அது இருந்தது.

ஆனால் அதை செயல்முறைக்கு கொண்டு வருவதில் பல நடைமுறைச் சிக்கல்கள் உண்டு. அதனால் திரு.ரசாக் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் இவர்கள் இருவரும் கடைசி வரை உறுதியுடன் நிற்கமாட்டார்கள் என்பது அவர் அறிந்த உண்மை. ஆனால் திரு.குப்புசாமி பொறுப்பேற்றுக் கொண்டதால், அவர்களை அழைத்துக் கொண்டு திரு.ரசாக் டில்லி புறப்பட்டார். இவர்கள்மேல் முழு நம்பிக்கையை வைத்து, 1954 அக்டோபர் 25-ம் தேதி திருச்சியில் வைத்து திரு.கிருபலானிக்கு கோரிக்கை மனுவும் அனுப்பியாகிவிட்டது. அதில் மூன்று கோரிக்கைகளை திரு.ரசாக் வலியுறுத்தியிருந்தார்.

i) மார்ஷல் நேசமணி கேட்டது போன்று வெளி மாநிலத்தைச் சார்ந்த உயர் நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டும்.

ii) அனைத்து நீதிமன்றத் தாவாக்களையும் வாபஸ் பெற வேண்டும்.

iii) காவலில் வைக்கப்பட்டிருந்த அனைத்து தலைவர்களையும், தொண்டர்களையும் விடுதலை செய்ய வேண்டும்.

இதனைத் தொடர்ந்து 1954 அக்டோபர் 30-ம் தேதி இவர்கள் நால்வரும் டெல்லி வந்து சேர்ந்தார்கள். திட்டமிட்டப்படி நவம்பர் ஒன்றாம் தேதி குத்தியிருப்பு தர்ணா செய்ய வேண்டும். அதற்கு முன்பு இவர்களை அழைத்துக் கொண்டு கிருபலானி தங்கியிருந்த இடத்திற்குச் சென்று, எங்கு எவ்வாறு தர்ணா செய்ய வேண்டும் என்பதைக் குறித்த அனைத்து தகவல்களும் தெரிவிக்கப்பட்டன. கிருபலானி வீட்டில் அவரோ, அவரது மனைவி திருமதி. சுசீதா கிருபலானியோ அன்று இல்லை. அவர்களது செயலாளர்கள்தான் இருந்தனர். இவர்கள் மூவரும் அங்கே நவம்பர் முதல் நாள் (1954 நவம்பர் 1-ம் நாள்) குந்தியிருப்பு தர்ணா என்று 31.10.1954 அன்றே பத்திரிகைகளுக்கும், காவல்துறைக்கும் அறிவிப்பு கொடுத்தாகி விட்டது. இதை பி.எஸ்.பி தலைவர் கிருபலானியின் செயலருக்கு அறிவிப்பு கொடுப்பதற்காக திரு.ரசாக் தீர்மானித்து, மாலை 5 மணிக்கு அறிவிப்பு கொடுப்பதற்காக ஆயத்தமானார். அவ்வேளையில் திரு.குப்புசுவாமி அவரை அணுகி வந்து “செயலருக்கு அறிவிப்புத் தர வேண்டாம்” என்று திரு. ரசாக்கை வேண்டினார். அதற்காக அவர் என்னென்னவோ சாக்குப் போக்குகளைச் சொன்னார். திரு.ரசாக் அதிர்ந்து போனார். திரு. குப்புசாமி கோஷ்டியினருக்கு பீதி ஜுரம் கண்டுவிட்டது. அதனால் தர்ணா திட்டம் கைவிடப்பட்டது.

இதையே திரு.நேசமணி “வீரனுக்கு வீரன் வித்தியாசம் இல்லை” என்று பேசியதின் பொருள். இப்பேர்பட்ட கோழைகளை வைத்துக் கொண்டுதான் தி.த.நா.கா-வை வீரமுடன் நடத்தி வந்தார் மார்ஷல் நேசமணி.

## 57. The Rule of Steel and Fire :

இனி "The Rule of Steel & Fire" புத்தகத்தை அச்சடிப்பதிலும் பெரும் சிக்கல்கள் எழுந்தன. எந்த அச்சகமும் இதை அச்சடித்துத் தருவதற்கு முன்வரும் என்பதில் ஆதங்கம் எழுந்தது. நாகர்கோவிலில் அன்று பிரபலமாக இருந்த இரண்டு அச்சகங்களும் தங்களது இயலாமையை வெளியிட்டன. அடுத்து தி.த.நா.காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினரின் அச்சகத்தையும் அணுகினர். திரு.நேசமணியும், திரு.ரசாக்கும். திருவிதாங்கூரில் அன்று சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு.எ.எம்.சைமன், நாகர்கோவில் வேப்பமூடு ஜங்ஷனில் M.S.M. Press என்ற பெயரில் அச்சகம் நடத்தி வந்தார். அந்த அச்சகம் இருந்த இடத்தில்தான் இன்று S. நல்ல பெருமாள் ஜவுளிக்கடை இயங்குகின்றது. அவரும் தனது இயலாமையின் கையை விரித்துவிட்டார். எனவே அதை டில்லியில் அச்சடிப்பது என்ற முடிவுடன் அவர்கள் டெல்லி விரைந்தனர். அங்கேயும் பல அச்சகங்கள் இதை அச்சடிக்க இணங்கவில்லை. கடைசியாக "நியூ ஏஜ் பிரிண்டிங் பிறஸ்" (New Age Printing Press) என்ற கம்யூனிஸ்டு பத்திரிகைப் பிறஸ் இதை அச்சடிப்பதற்கு ஏற்றுக்கொண்டது. ஆயிரக்கணக்கில் இந்த சிறிய புத்தகம் வெளிவந்துவிட்டது. இதை நாகபுரியில் நடந்த பி.எஸ்.பி. மாநாட்டில் வினியோகிக்க வேண்டும்.

இந்த பி.எஸ்.பி. மாநாட்டுக்கு தோவாளைத் தொகுதி பி.எஸ்.பி. கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. T.S. ராமசாமிபிள்ளை நிச்சயம் பங்கேற்க வருவார். அவர் மூலமாக இந்தப் புத்தகத்தை அங்கே வினியோகித்துக் கொள்ளலாம் என்ற ஆவலோடு அவரைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டார் திரு.ஏ.ரசாக். ஆனால் அவரை எங்கும் காணவில்லை. கடைசியாக அவரைத் திருவிதாங்கூர் அரங்கத்தில் காண முடிந்தது. அவரிடம் இதைத் தந்தபோது இரண்டொரு பிரதிகளை மட்டும் எடுத்துவிட்டு நகர்ந்துவிட்டார். இந்த விஷயம் குறித்து திரு.நேசமணி திரு.T.S. ராமசாமிபிள்ளையிடம் ஏற்கனவே

விரிவாக பேசியிருந்தார். தவிரவும் திரு.ரசாக்கும் அவருக்கு கடிதம் எழுதியிருந்தார். ஆனாலும் எதிர்பார்த்த ஒத்துழைப்பு அவரிடமிருந்து கிடைக்கவில்லை. எனவே திரு. ரசாக் மாநாட்டு முகப்புக்குச் சென்று சில பையன்களை அமர்த்தி அத்தனை புத்தகங்களையும் மாநாட்டுப் பிரதிநிதியினருக்கு வினியோகித்துவிட்டார். தமிழன் என்று மார்தட்டிக் கொண்டாலும், வெள்ளாம்பிள்ளைகளின் உள்ளார்ந்த ஒத்துழைப்பு இதன் பால் இல்லை என்பதை திரு. டி.எஸ்.ராமசாமி பிள்ளை செயல் வாயிலாக அறிய முடிகிறது அல்லவா?

மாநாடு தொடங்கிவிட்டது. தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் தொடக்க உரை ஆற்றினார். தெளிவில்லாது எதுவெல்லாமோ பேசினார். திரு.கொச்சி ஆட்சி, தென்திருவிதாங்கூர் துப்பாக்கிச் சூடு பற்றி ஒட்டியும், வெட்டியும், பொதிந்து ஆட்சியாளருக்கும், மற்றவர்களுக்கும் சாதக பாதகமில்லாமல் தெளிவற்று பேசி முடித்தார். அதன் பிறகு டாக்டர். லோகியா பேச்சை தொடங்கினார்.

> “எதிர்பார்த்தபடியே அவர் முன்வெளியிட்ட அறிக்கைகளின் அடிப்படையில் மிக சுருக்கமாவே பேசினார். அவருடைய வார்த்தைகள், உச்சரிப்பு, அழுத்தம், கட்சிக்கு அவர் விடுத்த எச்சரிக்கைகள் அனைத்தும் ஈட்டி போல் பாய்ந்தன. முடிவில், தாணுபிள்ளை சர்க்காரை ஒரு சோஷியலிஸ்டு சர்க்கார் என்று சொல்ல எந்த சோசியலிஸ்டும் வெட்கப்பட வேண்டும் என்று கூறி முடித்துவிட்டார்”. ***(அதே புத்தகம் – பக்கம் – 297)***

அவருக்குப் பிறகு முதலமைச்சர் திரு.பட்டம் தாணுபிள்ளை மேடையேறினார். “மாநில புனரமைப்பு கமிஷன் அறிக்கை வருமுன்பே அவர்கள் புரட்சியில் ஈடுபட்டு விட்டார்கள்” என்று தென் திருவிதாங்கூர் தமிழர்கள் மீது குற்றம்சாட்டினார். இரண்டு மாதங்களுக்கு முன்பு, எர்ணாகுளம் சட்டக்கல்லூரியில் நடந்த கூட்டத்தில் பேசிய திரு. தாணுபிள்ளை “ஓடி வாருங்கள், ஓடி

வாருங்கள்", என மலையாளிகளை அழைத்து, "மதராஸ் முதன் மந்திரி காமராஜரும், நிதி மந்திரி சுப்பிரமணியமும் திருவிதாங்கூர் கொச்சியிலுள்ள ஒன்பது தாலுகாக்கள் மீது படையெடுக்க போட்டிருக்கும் திட்டத்தை முறியடிக்க முன் வாருங்கள் என அழைத்தார்". ***(அதே புத்தகம் – பக்கம் – 298)***

இந்த அறைகூவலும், ஆவேசப் பேச்சும் தோவாளை சட்டமன்ற உறுப்பினர் டி.எஸ்.ராமசாமிபிள்ளைக்கு தெரியும். பட்டம் தாணுபிள்ளையின் இந்த பேச்சுக்கள் சரியானது அல்ல என்பதும் திரு.டி.எஸ். ராமசாமிபிள்ளைக்குத் தெரியும். மாநாட்டு மேடையில் அவர் தக்கதொரு பதில் தருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. மேடையில் டி.எஸ். இருந்தார். ஆனால் அவர் பேசவும் இல்லை. தாணுபிள்ளையின் பேச்சுக்கள் தவறானது என்று மறுக்கவும் இல்லை. டாக்டர் லோகியா கொடுத்த சூட்டோடு தாணுபிள்ளை தப்பித்துவிட்டார். திரு.டி.எஸ்.ராமசாமிபிள்ளை மாநாட்டுக்கு வரவில்லையா? என்று திரு.நேசமணி, திரு.ரசாக்கிடம் கேட்டுள்ளார். "வந்திருந்தார், ஆனால் பேசுவதற்கு முன்வரவில்லை" என்று திரு.நேசமணிக்கு பதில் தந்தார் திரு.ரசாக். "...தாணுபிள்ளை சர்க்கார் தமிழர் மீது எந்த அளவுக்கு வெஞ்சினம் கொண்டிருந்தது என்றும், நாடார் குலமக்களை ஒற்றைப்படுத்தி துன்பத்திற்குள்ளாக்கி வருகிறது என்றும், பொதுவாகத் திருவிதாங்கூர் தமிழகத்தில் பேச்சுரிமைக்கும், ஜனநாயக நடவடிக்கைகளுக்கும் வேட்டு வைக்கப்பட்டிருக்கிறது என்றும் பட்டியல் போட்ட ...." திரு.டி.எஸ்.ராமசாமிப்பிள்ளையா இவ்வாறு நடந்து கொண்டார் என்று மார்ஷல் ஆச்சரியப்பட்டார். அத்துடனே நாகபுரி மாநாட்டில் தமிழர்களின் நலன்கள் ஏமாற்றத்தில் முடிந்தன.

## 58. நேசமணியுடன் உடன்படிக்கை :

நாகபுரி மாநாட்டு வெற்றிக் களிப்போடு தலைநகர் வந்து சேர்ந்தார் முதலமைச்சர் திரு. பட்டம் தாணுபிள்ளை. இவரை இனி

பிடித்து நிறுத்துவது இயலாத காரியம் என்று காங்கிரஸ் வட்டாரங்கள் நினைத்தன. வலுவான கடிவாளம் போட்டால்தான் இந்த சண்டிக் குதிரையை வழிக்கு கொண்டு வர முடியும் என்ற எண்ணம் திரு.நேசமணியிடம் உருவாயிற்று. இதை திறன்பட தீரமுடன் செய்து முடிக்கும் வலிமை திரு.நேசமணிக்கு உண்டு. அவர் அதை செய்து முடிப்பார் என்று நம்பப்பட்டது. ஆனால் அதற்கு இடையூறாக பல உட்பூசல்கள் தி.த.நா.கா அமைப்பில் உருவாகி இருந்தன.

எனவே இந்த உட்பூசலை பயன்படுத்தி மூன்றாவது முறையாக திரு.நேசமணியை தன் வழிக்குக் கொண்டு வருவதற்காக, திரு.தாணுபிள்ளையின் ஆசியுடன் திட்டம் அரங்கேறியது. கட்சியில் உருவாகியுள்ள உட்பூசலை மேலும் தீவிரப்படுத்தி, திரு.நேசமணியை வழிக்குக் கொண்டு வருவது என்று அவர்கள் தீர்மானித்துவிட்டனர். இந்த முறையில் முன்பிருந்தே தி.த.நா.கா தலைவர் திரு.ராமசாமிபிள்ளை முயற்சி மேற்கொண்டவர் ஆவார். இச்சமயம் இம்முயற்சியில் போலீஸ் I.G.திரு.சந்திரசேகரன்நாயர் களம் இறங்கினார். திரு.ராமசாமிபிள்ளையுடன் இப்போது திருவாளர்கள் சைமன், வி.கே.ராஜாபிள்ளை மற்றும் திரு.சந்தனராஜும் இறக்கி விடப்பட்டனர். திருநெல்வேலியில் பல ஊர்களில் தஞ்சம் புகுந்திருந்த நாடார் அல்லாதவர்களை அணுகி அவர்களை தி.த.நா.கா-விலிருந்து தனிமைப்படுத்தி தங்கள் அணிக்கு கொண்டு வர ஒரு பகீரத முயற்சி எடுத்தனர். அரசியல் களத்தில் தொடர்ந்து பட்டம் தாணுபிள்ளை பெற்றிருந்த வெற்றியால் நாடார்கள் அல்லாத தலைவர்கள் சோர்ந்து தான் காணப்பட்டனர். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி புதிய ஒப்பந்தத்தை திரு.நேசமணியைக் கொண்டு ஏற்பளிக்கச் செய்வதற்காக அவரது ஜூனியர் திரு.பக்குரூதீன் ஆதத்தை அமர்த்திக்கொண்டார் கேரள கௌமுதி பத்திராதிபர் திரு.சுகுமாரன்நாயர். இந்த திருத்தி எழுதப்பட்ட ஒப்பந்தத்தை, தக்கலை சார்புசிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த நாடார் அல்லாத திருவாளர்கள் அனந்த

ராமன், நூர்முகமது, சைமன், கோபாலகிருஷ்ணன் ஆகியோருடன் ஆலோசனை கலந்து இத்திட்டத்தை வடிவமைத்துக் கொண்டார். முன்பு திரு.நேசமணியால் நிராகரிக்கப்பட்ட அதே ஒப்பந்தம். An old wine in a new jar?. அதன் வாசகம்:

> **"மார்த்தாண்டம், புதுக்கடை ஆகிய இடங்களில் ஆகஸ்டு 11-ல் நடந்த சில நிகழ்ச்சிகள் எதிர்பாராதவை, துர்ப்பாக்கியமானவை. வேறு அரசியல் அமைப்புகளும் தி.த.நா.கா மீது பகைமை கொண்ட சில தனிப்பட்டவர்களும், குறுக்கீட்டால் அத்துமீறிய இந்த வன்முறைச் சம்பவங்கள் எங்கள் கட்டுப்பாட்டிற்கு அடங்காமல் நிகழ்ந்துவிட்டன. அவைகளுக்காக நாங்கள் வருந்துகிறோம். இதனாலேயே எங்கள் போராட்டத்தை உடனே நிறுத்தி வைத்தோம். அதைத் தொடரும் நோக்கம் இப்போதும் இல்லை. ஆகவே எங்கள் தலைவர்கள் மீது தொடுக்கப்பட்ட கேசுகளை வாபஸ் பெற்று அவர்களை விடுதலை செய்ய வேண்டும்". *(அதே புத்தகம் – பக்கம் – 302)***

**குறிப்பு** : தலைவர்கள்மீது தொடுக்கப்பட்ட கேசுகளை மட்டும் வாபஸ் வாங்க வேண்டுமாம். தொண்டர்கள் சிறையிலேயே மடிந்தாலும்பறவாயில்லை. அவர்கள் அனைவரும் நாடார் மக்கள் தானே? என்பதே இந்த ஒப்பந்தத்தின் உள் நோக்கம் என்பது தெளிவு.

இந்த மன்னிப்பு சாசனம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. அதன் தமிழாக்கம்தான் மேலே தரப்பட்டது. யார் இதை திரு.நேசமணியிடம் எடுத்துச் சென்று ஒப்புதல் பெறுவது? நீண்ட முகவுரையுடனே தி.த.நா.கா தலைவர் திரு.ராமசாமிபிள்ளையே இந்த ஒப்பந்த நகலை எடுத்துச் சென்று ஒப்புதலுக்காக திரு.நேசமணியிடம் கொடுத்தார். இவர் ஏன் திரு.நேசமணியின் ஒப்புதல் வேண்டி அவரிடம் தர வேண்டும்? அந்த கட்சியின் தலைவர் என்ற நிலையில் அவரே ஒப்புதல் தந்துவிட்டு, சிறையில்

இருக்கின்றவர்களை விடுவித்திருக்கலாமே. பிறகு ஏன் அதை அவர் செய்யவில்லை? தனிப்பட்ட முறையில் திரு.ராமசாமி பிள்ளையால் அதைச் செய்வதற்கு முடியாது. இவர் மட்டும் ஒப்புதல் தந்தால் பட்டம் தாணுபிள்ளை ஒத்துக் கொள்ளவுமாட்டார். அவருக்கு திரு.நேசமணியைத்தான் சரணடையச் செய்ய வேண்டும். அப்போதுதான் தென் திருவிதாங்கூரில் வாழ்கின்ற பெருவாரி நாடார் மக்கள் அதை ஒப்புக் கொள்வர் என்பது பட்டம் தாணுபிள்ளை அறிந்ததே. அதனால்தான், நாடார் மக்களை ஒட்டு மொத்தமாக அடக்கி தன்வயம் கொண்டு வருவதற்கு திரு.நேசமணியின் ஒப்புதலை அவர் விரும்பினார்.

திரு.நேசமணியின் போராட்டத்தின் நோக்கமே "நாடார் மக்களின்" 200 ஆண்டு கால அடிமைத்தனத்தில் உருவான மானங்கெட்ட வாழ்விலிருந்து அவர்களை விடுவித்து, தாய் தமிழகத்துடனே இணைக்க வேண்டும் என்ற கோட்பாடு. ஆனால் திரு.ராமசாமிபிள்ளையின் எண்ணம், நாடார் அல்லாதவர்களையாவது சிறைகளிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பது மட்டுமேயாகும். நாடார் தலைவர்களும் அதே சிறையில் இருந்தும், அவர்களிடத்தில் இந்த ஒப்பந்த வாசகத்தைக் காட்டாமல் நாடார் அல்லாதவர்களிடம் மட்டுமே காட்டி அவர்களுடைய ஒப்புதலையும், பாராட்டையும் பெற்றதன் நோக்கம் இதுதான்.

ஆனால் திரு.நேசமணி முட்டாளோ, மடையனோ அல்ல என்பதை திரு.ராமசாமிபிள்ளை கணடுகொண்டார். முன் வடிவ நகலைப் பார்த்த உடனே திரு.ராமசாமி பிள்ளையைப் பார்த்து நேசமணி வினவினார்.

> "நமது போராட்டத்தில் தலையிட்ட வேறு அரசியல் அமைப்புகள் யாவை, குறுக்கிட்ட அரசியல் விரோதிகள் யார், யார் என்று தெளிவுபடுத்த வேண்டும். அப்படித் தெளிவுபடுத்தும் போது அவை நம் போராட்ட நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.

அல்லாவிட்டால் அது சந்தர்ப்பவாதமாகிவிடும். உடன்படிக்கை முன் வடிவமும் ஒரு பொது மன்னிப்புக்கு அச்சாரம் வைப்பது போல் இருக்கும். பொதுவாக கம்யூனிஸ்டுகள் தலையீட்டினால் வன்முறைகள் நிகழ்ந்து விட்டன என்று பேசப்படுகிறது. ஆனால் எந்த அளவுக்கு கம்யூனிஸ்டு கட்சி மட்டும் இதற்குப் பொறுப்பு என்பது நிரூபிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்''.

“... வன்முறைச் செயல்களுக்கெல்லாம் மூல காரணம் அரசாங்கத்தின் ஏவலாளர்கள் (Agent provocatures) என்றுதான் சொல்லியிருக்கிறோம். இது உண்மையுடம் கூட. இதைவிட்டு விலகி வேறு விதமாகப் பேசினால் இந்த சமாதான உடன்படிக்கை ஒருமாப்பு ஆர்ஜி ஆகிவிடும்'' என்று தனது பதிலை கூறினார் மார்ஷல் நேசமணி. ***(அதே புத்தகம் – பக்கம் – 303)***

இதைக் கேட்டதும் தலைவர் திரு.பி.ராமசாமி பிள்ளைக்கு வாய் அடைத்துப் போயிற்று. பதில் கூற முடியாமல் திணறினார். அவ்வேளையில் பெரியவரின் ஜுனியர் வழக்கறிஞர் திரு. பக்ருதீன் ஆதம், ராமசாமி பிள்ளைக்கு கரம் கொடுப்பது போன்று, இந்த உடன்படிக்கையின் வடிவத்தைப் பற்றிப் பரிந்து பேசினார். “காலம் கடத்தாமல் உடன்படிக்கை முன் வடிவத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்றும் அல்லாவிட்டால் “நாம் கானல் நீரைத் தேடி ஓடிக் கொண்டே இருப்போம்'' என்றும் அவசரப்பட்டு பேசிவிட்டார். அப்போது தான் இவருக்கும் இந்த உடன்படிக்கை தயாரிப்பில் பங்கு இருக்கிறது என்ற உண்மையை திரு.நேசமணி புரிந்து கொண்டு, **“இந்த மந்திரிசபை மேலும் ஒரு நூற்றாண்டுகள் தொடரும் என்று நம்பிக் கொண்டிருக்கிறாயா?”** என்று காட்டமாக கடிந்து கொண்டார். திரு. ஆதம் ஆடிப்போனார். ***(அதே புத்தகம் – பக்கம் – 304)***

எதற்கும் திரு.அப்துல்ரசாக் ஊருக்கு வந்த பிறகு அவரையும் கலந்து ஆலோசித்து ஒரு முடிவுக்கு வரலாம் என்று கூறிவிட்டார். குறித்த காலத்தில் திரு.அல்துல்ரசாக்கும்

நாகர்கோவில் வந்துவிட்டார். ஏதோ ஒரு அவசர காரியமாக அவரது வரவை எதிர்பார்த்திருக்கிறார் என்ற செய்தி ஜூனியர் திரு.ஜேம்ஸ் வாயிலாக அறிந்து, பெரியவரைப் பார்ப்பதற்கு விரைந்து சென்று அவரைச் சந்தித்தார். புதிய உடன்படிக்கையின் நகலை திரு.அப்துல் ரசாக்கிடம் அவர் தந்தார். அதை படித்துப் பார்த்த திரு.ரசாக், இதற்கு முன்பு இரண்டு முறை சிதைந்து போன முன் வடிவு போன்று இதுவும் இருக்கிறது என்பதால் திரு.ராமசாமிபிள்ளையை உடனே வரவழைத்து ஆலோசனையைத் தொடங்கினார். ஆலோசனை தொடங்கிய உடனே திரு.ராமசாமிபிள்ளை "முன்வடிவத்திலுள்ளவைகளை ஒன்றில் அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டும், இல்லையேல் அப்படியே விட்டுவிட வேண்டும்" என்று ஒரே வரியில் முடித்துக் கொண்டார். இதைக் கேட்ட திரு.நேசமணி "அப்படியானால் இதை முன்கூட்டியே சொல்லியிருந்தால், வீணாகக் காத்திருக்க வேண்டியிருக்காதல்லவா?" என்று உடனடிப் பதில் தந்து வருத்தப்பட்டார். தலைவர் திரு.பி.ராமசாமிப்பிள்ளை பதில் கூறவில்லை. அவரிடம் "ஏன் இந்த மனமாற்றம்" என்று திரு.ரசாக் வினவினார். சற்று ஏளனப் பாணியில் அவர் பதில் வந்தது.

> "நமக்கெல்லாம் இங்கிருந்து கொண்டு நீண்ட வாதப்பிரதிவா தங்களையெல்லாம் செய்து கொண்டிருப்பது சுலபம்தான். ஆனால் தலைவர்களும், களப்பணியாளர்களும் சிறைக் கூடங்களில் வதைக்கப்படுகிறார்கள், வாடுகிறார்கள், வெந்து கொண்டிருக்கிறார்கள் என்று ஓலமிட்டார். அவருக்கு மட்டும்தான் கவலையும் வேதனையும் என்று நினைப்பது போல அது தெரிந்தது".

அதற்கு போம் வழி என்ன என்பதை ஆலோசிக்கத்தானே அவர்கள் கூடியுள்ளனர். ஆலோசனை தொடங்குவதற்கு முன்பே, குதற்கவாதம் செய்தால் எப்படி ஆலோசிக்க முடியும், என்று திரு.ரசாக் வினவினார். அப்போதுதான் விஷயத்தை அவர் வெளியிட்டார். அது அவரின் முயற்சியின் பயன் என்று கூறிக்கொண்டார்.

“முன் வடிவம், நன்றாக யோசித்து தன் கருத்துக்களையும் உட்கொண்டு, தன் ஆலோசானைப்படியே தயாரிக்கப் பட்டிருக்கிறதென்றும், சிறைப்பட்டிருக்கும் நண்பர்களும் கூட இதனை ஆமோதித்துவிட்டார்கள் என்றும், ஆகவே மேற்கொண்டு ஆலோசனையை நீட்டிக் கொண்டு போவது சரியல்லவென்றும் அறிவுறுத்தினார். ஆமோதித்தவர்கள் பட்டியலில் ஆறு பெயர்கள் மட்டுமே அவருக்கு உச்சரிக்க முடிந்தது. அத்தனை பேருமே தக்கலை சப் ஜெயிலில் இருந்தார்கள். அங்கே வேறும் பலர் உண்டு” “கைதாகி ஜாமீன் மறுக்கப்பட்டு பல சிறைகளில் காவலில் இருந்தவர்கள் எண்ணிக்கையோ ஆயிரத்துக்கும் அதிகம். அந்த நிலையில் அரசியல் ரீதியில் தீர்வுகாண வேண்டிய ஒரு பிரச்சனையை... வெறும் ஆறு பேர் முடிவுக்கு விடுவது பொருந்துமா?” என்று திரு.ரசாக் வினவினார். ***(அதே புத்தகம் – பக்கம் – 306)***

இதுவரை அமைதியாக கவனித்துக் கொண்டிருந்த திரு.நேசமணி பேசத் தொடங்கினார்.

**“நான் தி.த.நா.கா.வை ஆரம்பித்த அன்று முதல் ஒரு கூட்டமாக இயங்கினோம். கூட்டத்தில் பலர் இருந்தார்கள். அவர்களில் பலர் போயிருப்பார்கள். புதியவர்கள் சிலர் வந்திருக்கிறார்கள்.** ஒரு கூட்டமாக இயங்கும் போது இப்படிப் பலர் அங்குமிங்கும் வந்து போய்க் கொண்டிருப்பார்கள். யார் யார் வந்தார்கள் யார், யார் போனார்கள் என்பது பிரச்சனை ஆகாது. கூட்ட இயக்கத்தின் பொறுப்பு யாருக்கு என்பது தான் பிரச்சனை. அப்படி வரும் போது எனக்கில்லை, அவனுக்கு, இவனுக்கு என்று தட்டிக் கழிக்க முடியாது. அப்படிப் பேசுவது பழங்காலத்து பள்ளிக்கூட பையன்கள் பேச்சு. ஒரு ஆபத்து வரும் போது, ஒரு விபத்து நேரிட்டபோது, இது எனக்குத் தெரியாது, இவனைக்

கேளுங்கள், அவன்தான் பொறுப்பு என்றெல்லாம் பேசுவது சிறு பிள்ளைத்தனம். அதே மூச்சில் நாங்கள் ஒரு இயக்கமாக இயங்கிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லுவதும் அறியாமை. அது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன்: நானும் சில நண்பர்களும் காவலில் இருக்கும் போது நீங்கள் முதல் சர்வாதிகாரியாகச் சில முடிவுகளை மேற்கொண்டு அமல்படுத்தி நடத்தினீர்கள். உங்களுக்குப் பிறகு குஞ்சன் நாடாரும் இப்படி செயல்பட்டிருக்கிறார்".

"அப்படியாக நடந்த பல நிகழ்ச்சிகள் சிலருக்கு வெறுப்பாகவும், வேறு சிலருக்கு சிறப்பாகவும் படலாம். இன்னும் வேடிக்கையாக இருக்கும். இன்னின்ன தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் போது நான் சிறையில் இருந்தேன். ஆகவே அந்த தீர்மானங்கள் என்னைக் கட்டுப்படுத்தமாட்டா என்று நான் சொன்னால், இதைத்தான் யானையைச் சுளவால் மறைப்பது என்று சொல்லுகிறார்கள். சுளவை வைத்து நம் கண்ணை மறைத்துக் கொண்டு யானையை மறைத்து விட்டதாக எண்ணிக் கொண்டிருக்கிற திருப்தி. இந்த வேடிக்கையை நாம் செய்யவா? நமக்குத் தெரியாமல் நமக்கு விரோதமாக நம் இயக்கத்தில் யாராவது நுழைந்திருந்தால் அவர்களை அப்போதே இனம் காட்டியிருக்க வேண்டும். இப்போது நாம் அடையாளம் காட்ட முடியாது. வாதமுகத்துக்காக யாரையாவது அப்படி அடையாளம் காட்டினால் போதுமா? அது பொருந்த வேண்டாமா? அது வீண் முயற்சி. கோழைத் தனத்தின் நெடி அதில் வீசுகிறது. ஆகவே இப்படிப் பேசுவதற்கு என்னால் உடன்பட முடியாது. நான் நகரசபைத் தலைவராக இருக்கும் போது இரண்டொரு முறை துப்புரவுத் தொழிளார்கள் கிளர்ச்சி செய்திருக்கிறார்கள். அத்து மீறிப்போன நேரத்தில் நான் அவர்களை கண்டித்திருக்கிறேன். ஆனாலும் சாக்கடைகள் நிரம்பிப் போன நேரத்திலும், இல்லங்களில்

சுத்தித் தொழில் முடங்கிப் போன நேரத்திலும், துப்புரவுத் தொழிலாளர்கள் முடக்கிவிட்டார்கள். அதற்கு நான் பொறுப்பல்ல என்று கையை விரித்தது இல்லை. பெரிய "சங்கிலி"யாகவே நின்று புகல் சொல்லியிருக்கிறேன். ஆகவே யாரையும் விட்டுக் கொடுத்தோ, தட்டிக் கழித்தோ, பேசுவது பயன்படாது. நாசவேலைகள் நடந்துவிட்டன என்று ஒத்துக்கொண்டிருக்கிறோம். இவைகள் சர்க்கார் ஏவிவிட்ட குண்டர்களால் (Agent provocateurs) ஏற்பட்டவை என்று அப்போதே சொல்லி வந்திருக்கிறோம். அதை இப்போதும் சொல்வோம். நடந்து போன நாச வேலைகளுக்காக, இறந்து போன வீரர்களுக்காக,ஊனப்பட்டத் தோழர்களுக்காக வேதனைப்படுகிறோம், துயரப்படுகிறோம் என்று அப்போதே சொல்லி வந்ததிருக்கிறோம். அதை இப்போதும் சொல்ல முன் வருவோம். உடன்படிக்கை முன் வடிவத்தை இந்த கோணத்தில் மாற்றியமைக்க வேண்டும், அல்லது இதைக் காற்றிலே பறக்கவிட வேண்டும்" என்று முடித்துவிட்டார். ***(அதே புத்தகம் – பக்கம் – 307 & 308)***

இதனால் முன் வடிவம் வடிவமைக்கப்படாமலே போயிற்று. ஜஸ்டிஸ் சங்கரன் விசாரணைக் கமிஷன் அறிக்கையும் வெளி வந்துவிட்டது. முதலமைச்சரும், போலீஸ்துறை அமைச்சருமான பட்டம் தாணுபிள்ளைக்கு வீரவாளும், கேடையமும் கொடுத்து அவர் பாராட்டிவிட்டார். இதனால் தி.த.நா.காவின் எதிர்காலம் இருண்டுவிட்டதாக ஒரு பிரமை தென் திருவிதாங்கூரில் பரப்பப்பட்டது. மீட்சிப் பாதையில் வந்த நல்லதோர் சந்தர்ப்பத்தை உதைத்து தள்ளிவிட்டார் நேசமணி என்று சில வட்டாரங்களில் பேசப்பட்டது. திரு.பட்டம் தாணுபிள்ளை 08.07.1954 அன்று பழவங்காடி மைதானத்தில் பேசியது போன்று அடித்து அடக்கிவிட்டார் என்றும், அதற்கு எதிராக தி.த.நா.கா. எடுத்த அனைத்து பின் நடவடிக்கைகளும் தோற்றுப் போயின என்றும் பரப்பப்பட்டன. என்ன நடக்குமோ என்ற ஏக்கம் எங்கும் பரவலாக காணப்பட்டது.

ஆனாலும் ஆடாமல் நின்றார் ஆதங்கோட்டு வீரன், மார்ஷல் நேசமணி. ***(அதே புத்தகம் – பக்கம் – 309)***

இங்கே நடந்தேறிய நிகழ்ச்சிகளை கூர்ந்து ஆராய்ந்தால் ஒரு உண்மையைக் காண முடிகிறது. நாடார் மக்களைத் தவிர்த்து, தி.த.நா.காவில் ஊடுருவி இருந்த மற்ற சமுதாயத்தவர்களை: செட்டிகள், மீனவர்கள், தலித்துக்கள், வெள்ளாளர்கள்; இசுலாமியர்கள் போன்றோர் நாடார்களை மட்டும் சாதியின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுவிட்டனர் என்பது புலனாகும். அனைத்து சாதித் தலைவர்களும், திரு.அப்துல் ரசாக்கை விடுத்து, தமிழர்கள் மீது இழிவைச் சுமத்துவதற்கே கங்கணம் கட்டினர். ஆனாலும் மார்ஷல் நேசமணியின் நெஞ்சுரத்தின் முன்பு அவர்கள் தோல்வியைக் கண்டனர். திரு. நேசமணியும் தங்களைப்போன்று கோழையாகத்தான் இருப்பார் என்று எண்ணினர்.

## 59. மீட்புக்கு நேராக நேசமணி :

மீட்புப் பாதையில் வந்த நல்லதோர் சந்தர்ப்பத்தை உதைத்துத் தள்ளிவிட்டார் நேசமணி என்று சில வட்டாரங்களில் பேச்சுக்கள் பலமாக நடந்தன. இதனால் சில அடிவருடிகள் தி.த.நா.காங்கிரசை விட்டு வெளியேறிவிடவும் சிந்தித்து வந்தனர். இவர்கள் யார் என்று கேட்கிறீர்களா? அடிமை ஒப்பந்தத்துக்கு முன் வடிவம் கொடுத்த அந்த ரோட்டறிக் குழுமம்தான். ஆனால் திரு.நேசமணி அடையாறு ஆலமரம் போன்று அசையாமல் நின்றார். ஆகையால் மீட்பின் முன்னோசை அவர் காதுகளில் ஒலிக்கத் தொடங்கிற்று.

12.12.1954-ல் எர்ணாகுளத்தில் திரு.மாதவன் நாயர் தலைமையில் நடந்த காங்கிரஸ் கன்வென்ஷனில், பனம்பிள்ளி கோவிந்தமேனன் ஒரு முக்கிய தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

> "... பிரஜா சோஷியலிஸ்டு சர்க்காருக்குத் தாங்கள் அளித்து வந்த ஒத்துழைப்பை நிறுத்திக் கொண்டு மற்ற

எதிர்கட்சிகளைப் போல தாங்களும் ஒரு எதிர்கட்சியாக இயங்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். ஒருவர் நீங்கலாக இந்த தீர்மானம் ஏகமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது". ***(அப்துல் ரசாக் – நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம் – பக்கம் – 311)***

இந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டு திரு.மாதவன் நாயர், இந்தியத் தேசியக் காங்கிரஸ் பார்லமென்றரி போர்டு அங்கீகாரம் வேண்டி டில்லிக்குப் பறந்தார். அங்கீகாரம் அளிப்பதை தடை செய்திடும் நோக்கத்தோடு, முதலமைச்சர் பட்டம் தாணுபிள்ளையும் அடுத்த விமானத்தில் டில்லி விரைந்தார். பிரதமர் ஜவஹர்லால் நேருவையும், உள்துறை அமைச்சர் கைலாஷ்நாத் கட்ஜுவையும் பட்டம் சந்தித்தார். ஆயினும் டிசம்பர் 16-ம் தேதியே காங்கிரஸ் பார்லமென்றரி போர்டு தீர்மானத்துக்கு தனது அங்கீகாரத்தை அளித்துவிட்டது. சட்டமன்றத்தில் முக்கிய எதிர்கட்சியாக உட்கார்ந்து கொண்டு சிறுபான்மை கட்சிக்கு அமைச்சரவை அமைத்திட காங்கிரஸ் கட்சி ஆதரவு அளித்து வந்தாலும், அமைச்சரவையில் அது நேரடியாக பங்கு கொள்ளவில்லை. காங்கிரசாகவே முன்வந்து திரு.தாணுபிள்ளைக்கு ஆதரவுக்கரம் நீட்டியதே தவிர, திரு.தாணுபிள்ளையின் வேண்டுகோளுக்கு இணங்கியல்ல இந்த ஏற்பாட்டை காங்கிரஸ் செய்தது. அதற்கு சில காரணங்கள் உண்டு. திரு.தாணுபிள்ளையின் தேர்தல் கூட்டாளிகளான இடதுசாரிகளுடன் அவர் சேர்ந்து விடக்கூடாது என்பதுதான் இவர்களது நிபந்தனையற்ற ஆதரவுக்குக் காரணம். அப்படி நிபந்தனையற்ற ஆதரவு அளித்தாலும், சில விஷயங்களில், குறிப்பாக திட்டப்பணிகளை செயல்படுத்துவதற்கு முன்பு காங்கிரஸ் கட்சியை கலந்தாலோசிக்க வேண்டும் என்ற எழுதப்படாத ஒப்பந்தம் ஒன்றும் செய்யப்பட்டிருந்தது. ஆனால் இந்த ஒப்பந்தத்தை பட்டம் அரசு மீறிவிட்டது என்று காங்கிரஸ் வட்டாரம் இப்போது முறுமுறுத்தது. தவிரவும், தென் தாலுகாக்களில் தமிழர் –

மலையாளி என்ற வேறுபாட்டை உருவாக்கி, தமிழர்கள் மீது வன்கொடுமைகளும், துப்பாக்கிச் சூடுகளும் பி.எஸ்.பி. அரசு உருவாக்கி விட்டது என்றும் அது ஆதங்கப்பட்டது. இவைகளுக்கெல்லாம் சமாதானமாக, பட்டம் தாணுபிள்ளை பிரதமர் ஜவஹர்லால் நேருவின் கடிதங்களுக்கு தி.த.நா.கா. தலைவர் திரு.பி.ராமசாமி பிள்ளை காட்டிய மரியாதையின்மையையும், அது தவறானது என்றும், தொடர்ந்து அரசு மேற்கொண்ட சமாதான முயற்சிகளையெல்லாம் அது புறம் தள்ளிவிட்டது என்றும் சமாதானம் கூறினார். பண்டித நேருவுக்கு தி.த.நா.கா மீது ஏற்பட்டிருந்த சிறு மன வருத்தத்தை மிக லாவண்ணியமாக இங்கே பயன்படுத்திக் கொண்டார் முதலமைச்சர் திரு. பட்டம் தாணுபிள்ளை.

அதனால், பார்லமென்றறி போர்டு அளித்த அங்கீகாரத்தை ரத்து செய்யாமலே, தலைவர் என்ற முறையில் பண்டித நேரு ஒரு மாற்று ஆலோசனையைத் தந்தார். அதன்படி திரு – கொச்சி சட்டமன்ற காங்கிரஸ் கட்சி முழு சுதந்திரத்தோடு ஒரு எதிர்கட்சியாக இயங்க வேண்டும் என்றும், அதே நேரம் சட்டமன்றத்தை கலைத்து விடுவதற்கான ஒரு சூழ்நிலையை அங்கே உருவாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் இருந்தது அந்த ஆலோசனை. இதனால் காங்கிரஸ் கட்சிக்கு இரட்டைப் பொறுப்பு உருவாயிற்று. ஒன்று, குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்டு விடக்கூடாது. அடுத்தது பி.எஸ்.பி. அரசு, அதாவது திரு. பட்டம் தாணுபிள்ளை கம்யூனிஸ்டுகள் பிடியில் சிக்கிவிடக்கூடாது. ஆகையால் காங்கிரசின் இந்த இரட்டைப் பொறுப்பின் உள்நோக்கத்தை திரு.பட்டம்தாணுபிள்ளை நன்றாக உணர்ந்து கொண்டார். அதாவது, உணர முடிந்தது. எனினும் காங்கிரஸ் கட்சி தடம் புரண்டு வேறு கட்சியின் ஒத்துழைப்புடன் அரசைப் பிடிப்பதற்கான வாய்ப்பு உருவாகியிருப்பதையும் அவர் அங்கே கண்டார். காங்கிரசின் இந்த நிலையைத்தான் **“இருண்ட மேகத்தில் வெள்ளிக்கீற்று தெளிந்தோடுவதை”** திரு.நேசமணி கண்டார் என்று குறிப்பிடுவதன் பொருள்.

## 60. வெள்ளிக்கீற்றைத் தேடி :

திருவிதாங்கூர் – கொச்சி நீதிமன்றங்களில் நீதி தடைபட்டது. அரசியல் தீர்வு காண்பதற்கும் இங்கே வழியைக் காணவில்லை. பி.எஸ்.பி அரசிடமிருந்து தி.த.நா.கா.வுக்கு விடுக்கப்பட்ட தீர்வு அழைப்பிலும் கண்ணியம் காணப்படவில்லை. பட்டத்தின் கால்களில் சென்று வீழ்ந்து அடி பணிய வேண்டும் என்று சில உயர் நிலையினர் அலைகின்றனர். சட்டமன்ற உறுப்பினர்களில் ஏழு பேரை பட்டம் அரசு சிறையிலடைத்திருக்கிறது. மற்ற ஐவரில் நான்கு பேர்கள் மீது வழக்குகள் பதிவு செய்து, கைது செய்து சிறையில் அடைப்பதற்கு தீவிர முயற்சியில் தாணுபிள்ளை அரசு இறங்கியுள்ளது. ஒருவர் நோய் வாய்ப்பட்டு மருத்துவமனையில் சிகிட்சை பெற்று வருகிறார். இவைகளுக்கு எல்லாம் மேலாக சரிந்து விட்ட நிலையில் உள்ள தி.த.நா.காவை மீண்டும் உயிரூட்ட வேண்டியுள்ளது. ஆகவே என்ன செய்வது என்று மார்ஷல் தீவிரச் சிந்தனையில் ஆழ்ந்து விட்டார். திடீரென அவர் ஒரு முடிவுக்கு வந்து விட்டார். முன்பு சொல்லப்பட்ட “வெள்ளிக்கீற்றை” நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நன்றாக பயன்படுத்தி பி.எஸ்.பி அரசை அடித்து வீழ்த்த வேண்டும். அதற்கான வழிகளை ஆராயத் தொடங்கினார். தனது அனுபவங்களிலிருந்து அவர் கற்றுக் கொண்ட படிப்பினை “தன் சொந்தக் காலில் நிற்க வேண்டும்” என்பதே.

## 61. பிராமணர்கள் உதவி :

முதலில் உள்ளேயிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களை சிறை மீட்க வேண்டும். வெளியே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பயம் இல்லாமல் சுதந்திரமாக நடமாட வேண்டும். அப்படியானால்தான் இந்த பன்னிரு சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றவர்களின் சுதந்திரத்தின் திறவுகோலை கையிலே எடுத்து வருவார்கள். இதற்கான முயற்சியில் திரு.நேசமணி இறங்கினார். ஆகவே இந்த முறையில் அவசியமான எல்லா சட்ட ஆலோசனைகளையும்

முறைப்படுத்தி அவைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான உதவிகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்று திரு.நேசமணி, திரு.அப்துல் ரசாக்கை பணித்தார். அவரும் இவ்வழியில் இறங்கிவிட்டார்.

“இது விஷயமாக நான் முதலில் சந்தித்தது மூதறிஞர் ராஜாஜியை. திருவிதாங்கூர் – கொச்சி நிலைமையை மிக நன்றாகவே அறிந்திருந்த அவருக்கு நான் சொன்ன விளக்கத்தை மிகச் சுலபமாக புரிந்து கொள்ள முடிந்தது. எடுத்த எடுப்பிலேயே இந்த பிரச்சனைக்கு உச்ச நீதிமன்றம் (Supreme Court) ஒன்றுதான் புகல் சொல்ல முடியும் என்று சொல்லிவிட்டார்.

“மக்கள், நீதிமன்றங்கள் மீது நம்பிக்கை இழந்து விட்டார்களே என்று நான் மலைத்தேன். சட்டப் பிரச்சனைகளுக்கு நீதிமன்றங்கள் வழியாகத்தான் முடிவு காண முடியும் என்று சிரித்துக் கொண்டே என்னைக் கேட்டார். திருவிதாங்கூர் – கொச்சி உயர்நீதிமன்றம் வரையுள்ள எல்லா நீதிமன்றங்களும் அளித்த தீர்ப்புகள் எங்களுக்கு எதிராகப் போயிருக்கின்றன. ஜஸ்டிஸ் சங்கரன் விசாரணைக் கமிஷன் அளிக்கும் தீர்ப்பும் எங்களுக்கு எதிராகப் போகும் என்று தெரிகிறது. அந்த நிலையில் உச்ச நீதிமன்றம் இவர்கள் தீர்ப்புகளை புறக்கணித்துவிட்டு எங்களுக்கு ஆதரவாக ஒரு தீர்ப்பை வழங்குமா என்று நான் கேட்டேன். ஆசங்கை வரலாம். அதற்காக உச்ச நீதிமன்றத்தை அணுகாமல் வேறு என்ன வழியைத் தேடுவீர்கள் என்று என்னைக் கேட்டார்கள். உச்ச நீதிமன்றம்தான் இதற்குச் சரியான நீதி வழங்க முடியும். அதற்காக குற்றவியல் வழிமுறைச் சட்டத்தில் ஒரு பிரிவு உறங்கிக் கொண்டிருக்கிறது. எப்போதாவது ஒரு வேளா வேளையில்தான் அது விழிப்புறச் செயல்படுகிறது. அதைக் பயன்படுத்தி நீங்களும் உங்கள் முறையீட்டைத் தெரியப்படுத்தலாம். ஒரு வேளை செலவு அதிகப்படும் என்று நினைத்தால் சோதனைக்காக சிலரை மட்டும்

மனுதாரர்களாக வைத்து முறையிடலாம், என்று சிரித்தவாறே சொல்லிக் கொண்டு வேறு சரியான சட்ட ஆலோசனை எடுத்துக் கொள்ளுமாறும் என்னைக் கேட்டுக் கொண்டார். நான் கேட்டுக் கொள்ளாமலே, என்னோடு வந்திருந்த என் நண்பர் H.D. ராஜாவைப் பார்த்து "இவர்களுக்கு உதவி தேவைப்படும்" என்று கனிவோடு சொல்லி வைத்தார். இதன் பிறகு டெல்லியில் உச்ச நீதிமன்றத்தில் பணிபுரியும் வழக்கறிஞர் திரு.கணபதி ஐயரையும் ஆலோசனைக்காகக் கலந்துகொண்டு, அதே கோர்ட்டில் தலைசிறந்த மூத்த வழக்கறிஞர்களில் ஒருவரான N.C. சாட்டர்ஜியை இருமுறை சந்தித்துப் பேசினேன்".

> "... அவரும் ராஜாஜி சொன்ன அதே அபிப்பிராயத்தைத்தான் கொண்டிருந்தார். கூடுதலாக அவர் வேறொன்றும் சொன்னார். அதாவது 'சோதனை ஓட்டத்திற்காக' என்று மனுதாரர்கள் எண்ணிக்கையை குறைக்க வேண்டாம் என்றும், திருவிதாங்கூர் கொச்சியில் தாக்கலாகியிருந்த அத்தனை கேசு எதிரிகளையும் உள்ளடக்கித்தான் மனுக்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும், அப்படிச் செய்வதால் மொத்த செலவடக்கமும் குறையும். அதே சமயம் கேசுகளின் வேகமும் முழுமையாக வெளிப்படும் என்றும் ஆலோசனை தரப்பட்டது".

"ஆகவே தி.த.நா.கா. தொண்டர்கள், தலைவர்கள், சம்பந்தப்பட்ட எல்லா வழக்குகளையும் அண்டை மாநிலக் கோர்ட்டுகளுக்கு மாற்றம் செய்ய உச்ச நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யும் முடிவோடும், அதற்கான வழிமுறைகளையும் கையில் எடுத்துக் கொண்டு நேசமணியின் அங்கீகாரத்துக்காக நான் ஊர் வந்தேன்...". ***(மேற்படி புத்தகம் – பக்கம் 314 – 315)***

இது குறித்து தலைவர் திரு. பி. ராமசாமிப்பிள்ளையையும் பொதுச் செயலர் திரு.ஆர்.பொன்னப்ப நாடாரையும், இளம் வழக்கறிஞர் திரு.பக்ரூதீன் ஆதத்தையும் கலந்து ஆலோசிக்க

வேண்டும் என்று திரு.நேசமணி விரும்பியதால் அவர்கள் அழைக்கப்பட்டனர். உடனே அவர்களும் வந்துவிட்டனர். ஆனால் இந்த வழிமுறையில் நம்பிக்கை ஏற்படவில்லை திரு.பி.ராமசாமிபிள்ளைக்கு. உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதாயின், பி.எஸ்.பி. அரசின் குரோதம் மேலும் அதிகரிக்கும் என்றும், அதனால் சிறைகளில் வாடுபவர்களுக்கு அதிக துன்பம் உருவாகும் என்றும் அவர் ஆரூடம் கூறினார். ஆனால் திரு.நேசமணி அவர் பேச்சை வழிமறித்து, ஏதாவது கண்ணியமான உடன்பாட்டுக்கு அரசு வருவதாக இருந்தால் உச்சநீதிமன்ற தாவாவை திரும்பப் பெற்று விடலாம் என்ற முடிவோடு, உச்ச நீதிமன்றத்தில் தாவா தொடர்வது என்று முடிவெடுக்கப்பட்டது.

காலவிரையத்தை தவிர்க்கும் வகையில் அன்றிரவே பிரபல வழக்கறிஞர் தைக்காடு சுப்பிரமணிய அய்யரை தொடர்பு கொண்டு இந்த முடிவை தெரிவித்து, உச்ச நீதிமன்றத்தில் குற்றவியல் நடவடிக்கைச் சட்டம் 527 ஆம் பிரிவுப்படி திருவிதாங்கூர் – கொச்சியில் விசாரணையில் இருந்து வந்த 11 வழக்குகளையும் அண்டை மாநிலமான சென்னை உயர் நீதிமன்றத்துக்கு மாற்றுவதற்கான மனுக்களும், உறுதிமொழிகளும் தயாரிக்கப்பட்டன. மனுதாரர்களின் எண்ணிக்கையோ 234. மனுக்களையும், உறுதிமொழிகளையும் தயாரிக்கும் பொறுப்பு திரு.நேசமணியிடம் விட்டார் திரு.தைக்காடு சுப்பிரமணிய அய்யர். இராப்பகல் என்று பாராமல் இவைகள் தயாரிக்கப்பட்டு, அய்யரின் பார்வைக்கு வைக்கப்பட்டு, முழு வடிவம் பெற்றன. இதற்கிடையே ஜஸ்டிஸ் சங்கரன் கமிஷன் அறிக்கை 21.12.1954-ல் திருவிதாங்கூர் அரசு கெஜட்டில் வெளியானது. எதிர்பார்த்தது போன்று, அரசுக்கு சாதகமாகவும், போலீஸ் நடவடிக்கைகளை நியாயப்படுத்தி அவர்களுக்கு பாராட்டும் தந்து தீர்ப்பளித்திருந்தார் ஜஸ்டிஸ்.

இந்த முறையீடு மனுக்களை எவ்வாறு திரு.நேசமணி தயார் செய்தார் என்பதைக் குறித்து திரு.அப்துல் ரசாக் இவ்வாறு கூறுகிறார்:-

> "அன்றும் (21.12.1954) மறுநாளும் அவர் எப்படி இயங்கினார் என்பதை வெறும் வார்த்தைகளில் விவரித்து விட முடியாது. அவர் குடியிருந்த வீடு மிக சிறிய வாடகை வீடு. கொள்ளளவுக்கு மேலாக அங்கு கூட்டம். உறவினர்களும், மற்றவர்களும், வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் துயரத்தின் சாயல். உதவியாட்கள் நினைத்த நேரத்தில் கிடைக்கமாட்டார்கள். தேவையான குறிப்புகளும் பத்திரிகைகளும் அங்கு முறைப்படுத்தி வைக்கப்படவில்லை. நானும், பக்ருதினும், ஜேம்சும் இடையிடையே அவருக்கு உதவத்தான் செய்தோம். ஆனாலும் இரவு பகலென்றும் பாராமல், அணுகி வந்து கொண்டிருந்த கிறிஸ்துமஸ்ஸையும் எண்ணாமல் பம்பரமாகக் கறங்கினார். அப்போது அவர் காட்டிய இயக்க வேகத்தை அவரிடம் நான் எப்போதுமே கண்டதில்லை. புயலில் சுற்றும் காற்றாலை போல இயங்கினார் என்றால் அது தகும். ***(அதே புத்தகம் – பக்கம் – 317 & 318)***

இவருடைய அபார முயற்சியால் 31.12.1954-க்கு முன்பு டெல்லி உச்ச நீதிமன்றத்தல் 680 of 1954; 681 of 1954; 682 of 1954; 683 of 1954 என்று நான்கு வழக்குகள் தாக்கலாகிவிட்டன. அதனை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட உச்சநீதிமன்றம் முதல் வாய்தா 27.01.1955 என்று அறிவித்துவிட்டது. இந்த உச்ச நீதிமன்ற வழக்குகளைத் தாக்கல் செய்வததும், அது சார்பான ஆலோசனைகளைத் தந்ததும் பிராமண வழக்கறிஞர்களேயாவர். வேறு மாநில உயர்நீதிமன்றத்துக்கு வழக்குகளை இடமாற்றம் செய்வதற்கான சட்டச்சரத்தை உணர்த்தியவர் ஸ்ரீராஜகோபலாச்சாரியார் ஆவார். தவிரவும் வழக்குகளுக்குத் தேவைப்பட்ட நிதியைத்

தந்தவர்களும் ஐந்து அந்தணர்களே. அவர்கள் முறையே T.V.S. கிருஷ்ணா, திரு.H.D.ராஜா (M.P) இந்தியன் வங்கி உயர் அதிகாரிகள் மூவர் ஆவர்.

மேலே குறிப்பிட்ட நான்கு வழக்குகளிலும் மனுதாரர்களின் கோரிக்கை ஒன்றாகவேயிருந்தன. நீதியின் பொருட்டு மனுதாரர்கள் சம்பந்தப்பட்ட குற்றவியல் வழக்குகள் அனைத்தும் சென்னை மாநில நீதிமன்றங்களுக்கு மாற்றலாக வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. இதன் விசாரணை 27.01.1955 என நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. இந்த வழக்கை முன்னின்று நடத்துவதற்காக திரு.நேசமணியும், திரு.ரசாக்கும் 21.01.1955 அன்றே டெல்லிக்கு புறப்பட்டுவிட்டனர். அன்று ரயிலில்தான் பயணம் செய்ய வேண்டும். குறைந்தது 4 நாட்களாவது வேண்டும் டில்லி சென்று சேருவதற்கு. இவர்களைப் போன்று தைக்காட்டு திரு.சுப்பிரமணிய ஐயரும், டெல்லி புறப்பட்டுவிட்டார். ரயில் பயணத்தின்போது மூணாறில் அன்று ஹைவே கமிஷனராக இருந்து திரு.நேசமணிக் குழுவினரை முதல் முதலாக கைது செய்து சிறையில் அடைத்த திரு.அலெக்ஸாண்டரும் அதே ரயிலில் இவர்களுடனே பயணித்துக் கொண்டிருந்தார். மாநிலப் பணியில் இருந்து விடுவித்துக் கொண்டு மத்திய அரசுப் பணியேற்பதற்காக அவர் டில்லி செல்வதாக அவரே கூறிக் கொண்டார். அனைவரும் சுமுகமாக அளவளாவிக் கொண்டனர். அனைவரும் டெல்லி சென்றடைந்த உடன் வழக்கறிஞர் திரு.கணபதி ஐயரின் அலுவலகத்திற்குச் சென்று வழக்கு சார்புடைய விஷயங்களை அலசி ஆராய்ந்தனர். அடுத்த நாள் (27.01.1955) வழக்கு விசாரணைக்கு தலைமை நீதிபதி B.K.முக்கர்ஜி தலைமையில் நீதிமன்றம் கூடிற்று. அவரோடு நீதிபதி திரு.விவிலியன்போஸ், நீதிபதி திரு.B.ஜெகநாத்தாஸ், நீதிபதி திரு.T.R.வெங்கட்ராம ஐயர் ஆகியோரும் உடன் இருந்தனர்.

மனுதாரர்களின் வழக்கறிஞர் திரு.சுப்பிரமணிய ஐயரிடம் நீதிபதி திரு. ஜெகநாததாஸ் “மனுவில் கூறப்பட்டுள்ள 13

குற்றச்சாட்டுகளில் எந்த குற்றச்சாட்டு மிக முக்கிய குற்றச்சாட்டு" என்று கேட்டார். அதற்குப் பதில் சொல்வதற்கு முன்பாக தலைமை நீதிபதியிடமிருந்து ஒரு கேள்வி எழும்பியது. அனைத்துக் குற்றச்சாட்டுகளின் சுருக்கத்தை ஒரு வாக்கியத்தில் சுருக்கமாகச் சொல்லுங்கள் என்றார் அவர். இதற்கு வழக்கறிஞர் திரு.சுப்பிரமணிய ஐயர்:

> "திருவிதாங்கூர் – கொச்சி தென்பாகத்தில் ஒரு ஸ்தம்பித்த நிலை ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து அலுவலகங்கள், முன்சிப்பல் செயலகங்கள், நீதிமன்றங்கள் முதலியவை சரியாகச் செயல்படவில்லை. இந்த ஸ்தலஸ்தாபனங்களின் தலைவர்கள் பலரும், வழக்கறிஞர்களில் சிலரும், சிறையிலிருக்கிறார்கள். அது போலவே சட்டப் பேரவையில் இருக்க வேண்டிய மக்கள் பிரதிநிதிகள் சிறையிலிருக்கிறார்கள். இவர்கள் ஜாமீனில் வெளியே வந்தால் தொடுக்கப்பட்டிருக்கும் வழக்குகளை குலைத்து விடுவார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்களுக்குத்தான் அப்படியென்றால் திருவிதாங்கூர் – கொச்சிக்கு வெளியே தவித்துக் கொண்டிருக்கும் 3000-க்கும் அதிகமான உள்ளூர் தமிழர்களுக்கு உள்ளேயும் வர முடியவில்லை, நிலைமை அவ்வளவு சீர்கெட்டு இருப்பதால் நேர்மையான, நீதிபூர்வமான விசாரணை அங்கு நடைபெறுவதற்கு வாய்ப்பு இல்லை" என்று பதில் தந்தார்.

அதே வேளையில் நீதிபதி வெங்கட்ராம ஐயர் கேட்டார்: "நடந்து முடிந்த நீதி விசாரணைக் கமிஷன் அறிக்கை உங்களை எவ்வாறு பாதிக்கும்" என்ற கேள்வியை எழுப்பினார். இதற்கு பதிலாக வழக்கறிஞர் சுப்பிரமணிய ஐயர்: "அறிக்கை அளித்த நீதிபதி சங்கரன் அவர்களின் முடிவுக்கு எதிராக அவரின் கீழ் பணியாற்றுகின்ற எந்த மஜிஸ்ட்ரேட் அல்லது எந்த நீதிபதி கருத்து தெரிவிப்பார்" என்றார். இத்துடன் மனுதாரர்கள் சார்பு விசாரணை

முடிந்த நிலையில் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் திரு. மாத்தியூ மூரிக்கனை பார்த்து, நீதிபதி விவியன்போஸ் கேட்டார்:

"எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட உறுதிமொழியிலும் தமிழர் மலையாளிகளுக்கிடையே போட்டி பூசல்களும், வஞ்சமும் நிலவுவதாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிலையில் அண்டை மாநிலத்திலுள்ள ஒரு நீதிமன்றத்தில்; தமிழரோ, மலையாளியோ அல்லாத ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்துவதில் உங்களுக்கு மறுப்பு என்ன?" என்று கேட்டார். அதற்கு அவர் "அங்கேயும் மலையாளி விரோத மனப்பான்மை மேலோங்கி இருக்கிறது. ஆகவே நேர்மையான, நடுநிலைமை வாய்ந்த விசாரணைக்கு அங்கேயும் வாய்ப்பிருக்க முடியாது" என்று பதில் தந்தார். இத்துடனே விசாரணை முடிந்து நீதிமன்றம் கலைந்தது.

சிறிது நேரத்தில் நிதிமன்றம் மீண்டும் கூடியது. தனது தீர்ப்பை வெளியிட்டது.

> "மனுதாரர்கள் சம்பந்தப்பட்ட திருவிதாங்கூர் – கொச்சி கேசுகளை மைசூர் உயர்நீதிமன்ற அதிகார வரம்பிற்கு உட்பட்ட நீதிமன்றங்களுக்கு மாற்றலாகும் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது" என்ற தீர்ப்பு வெளியானது.

**நீதிமன்ற அறையிலிருந்து திரு.நேசமணி, போர்க்களத்தில் வெற்றிவாகைச் சூடிய ஒரு மார்ஷலின் கம்பீரத்தோடு வெளியே வந்து கொண்டிருந்தார். இவ்வாறு செய்வதற்கரியச் செயலைச் செய்ததினால்தான திரு. நேசமணி ஒரு மார்ஷலைப்போன்று வெற்றிப் புன்னகை கொண்டார். தேர்தல் பிரச்சாரத்தின்போது நேசமணியின் மார்ஷல் பட்டத்தை கிண்டல் செய்த பெருந்தலைவர் காமராஜருக்கு இப்போது புரிந்திருக்கும் குமரித்தந்தைக்கு யார் "மார்ஷல்" பட்டம் தந்தது என்று "பெருந்தலைவர்" பட்டம் போன்று**

**"மார்ஷல்" பட்டமும் கடைச்சரக்கு அல்ல என்று புரிந்து கொள்ளுங்கள். அவ்வமையம் திரு.என்.சி.சாட்டார்ஜி அவர்கள் திரு.நேசமணியின் இருகரங்களையும் பற்றி வாழ்த்துத் தெரிவித்து தனது மகிழ்ச்சியை பரிமாறிக் கொண்டார்.** இவரிடமிருந்து விடுபட்டு, திரு.நேசமணி தனது வலதுகரமாக அன்று தொட்டு இறுதி வரை தனது நிழல் போன்று தொடர்ந்து உதவி வந்த திரு.எ.அப்துல் ரசாக்கின் கரங்களை பற்றி குலுக்கி தனது எல்லையில்லா மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டார். பல மாதங்களாகச் சொல்லொண்ணா துயரத்தை அடக்கி வைத்திருந்த அவரது நெஞ்சத்திலிருந்து மகிழ்ச்சியின் ஊற்று முகத்தில் நெளிந்தோடியது. தமிழர்களின் துயரங்களுக்கெல்லாம் விடிவு காலத்தின் விடிவெள்ளி அங்கே உதித்தது என்று கூறி தனது மகிழ்ச்சியை திரு.ரசாக்கிடம் பகிர்ந்து கொண்டார். இந்த மகிழ்ச்சியில் பங்கு கொள்வதற்கு அவர்கள் இருவரை தவிர வேறு எவரும் அங்கே இல்லையே!

தந்திகள் பறந்தன. உச்சநீதிமன்றத்திலிருந்து மைசூர் உயர்நீதிமன்றத்துக்கு தந்தி பறந்தது. அனைத்து ஆவணங்களும் அங்கே அவசரமாக சென்றடைய வேண்டும். அன்றிரவே திரு.நேசமணி விமானம் மூலம் பெங்களூர் சென்று சேர்ந்து விட்டார். டெல்லியில் இருந்தும், நாகர்கோவிலில் இருந்தும் ஏற்பாடாகியிருந்த தேவையான ஆவணங்கள் அனைத்தும் ஆட்கள் மூலம் பெங்களூர் வந்து சேர்ந்துவிட்டன. பெங்களூரில் பிரபல வழக்கறிஞர் திரு.இ.வி.மாத்யூவை தி.த.நா.கா-வின் வழக்கறிஞராக திரு.நேசமணி அமர்த்தினார். இவர்கள் இருவரும் வழக்கு குறித்து கலந்து ஆலோசித்து, காவலில் இருந்த ஏழு சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பில் ஜாமீன் மனுக்கள் 01.02.1955-ல் சமர்ப்பிக்கப்பட்டன. தலைமை நீதிபதி ஜஸ்டிஸ் மேடப்பாவும், ஜஸ்டிஸ் பத்மனாபாவும் அடங்கிய பெஞ்சில் மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 18.02.1955 அன்று விசாரணை நாளாக நிச்சயிக்கப்பட்டது.

## 62. நம்பிக்கையில்லாத் தீர்மானம் :

காங்கிரஸ் கட்சியின் பின் துணையுடனே ஆட்சி நடத்துகின்ற பி.எஸ்.பி முதலமைச்சர் திரு.பட்டம் தாணுபிள்ளையின் வன்ம ஆட்சியால் பல தொல்லைகளை அனுபவித்துக் கொண்டிருந்த தமிழர்களின் நலன் காத்திடும் பொருட்டு, அந்த அமைச்சரவையின் மீது சட்டமன்ற உறுப்பினர் திரு.எ.சிதம்பரநாதன்நாடார் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கான அறிவிப்புக் கொடுத்தார். அந்த தீர்மானம் 23.01.1955 அன்று விவாதிப்பதாக சட்டமன்றத் தலைவர் நாள் குறித்திருந்தார். ஜனவரி 25-ம் நாள் சட்டமன்றத்தில் ராஜபிரமுகர் உரையைத் தொடர்ந்து இந்த ''நம்பிக்கையில்லா'த் தீர்மானம் விவாதத்துக்கு வைக்கப்பட்டிருந்தது. அதே வேளையில் தி.த.நா.கா சட்டமன்ற உறுப்பினர்கள் ஏழு பேர் சிறையில் இருந்தனர். அவர்கள் ஜாமீனில் விடுதலையாகி 27.01.1955-க்கு முன்பு வெளியே வந்தால்தான் இந்த விவாதத்தில் கலந்து கொண்டு வாக்கெடுப்பில் கலந்து கொள்வதற்கு முடியும். ஆனால் திருவிதாங்கூர் நீதிமன்றங்களில் – உயர்நீதிமன்றம் வரை – அவர்களது ஜாமீன் மனுக்கள் தள்ளுபடியாகிவிட்டன. எனவே உச்சநீதிமன்ற ஆணைப்படி அந்த தாவாக்கள் மைசூர் உயர்நீதிமன்றத்திற்கு மாற்றலாகி, 27.01.1955 தான் அங்கே பதிவாகியிருந்தன. அதனால் அந்த ஏழு சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதலையாவதில் மேலும் காலதாமதம் ஏற்படும். இந்த நிலையில் நம்பிக்கையில்லா தீர்மானம் வாக்கெடுப்புக்கு வந்தால் அது தோல்வியடைவது நிச்சயமாகிவிடுமாகையால், அந்த விவாதத்தை பிந்திய நாள் ஒன்றுக்கு மாற்றுவதற்காக சிதம்பரநாதன் அவைத் தலைவரை வேண்டினார். இதற்கிடையில் சிறையில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் ஜாமீனில் வெளியில் வந்துவிடுவார்கள் என்ற எதிர்பார்ப்பில் ஜனவரி 5-ம் நாளுக்கு விவாதத்தை தள்ளி வைக்க வேண்டும் என்று திரு.சிதம்பரநாதன் வேண்டிக் கொண்டார். விவாதத்தைத் தள்ளி வைக்கக்கூடாது என்று முதலமைச்சர் திரு.பட்டம் தாணுபிள்ளை தனது எதிர்ப்பைத் தெரிவித்தார். ஆனால் எதிர்கட்சித் தலைவரான காங்கிரஸ்

உறுப்பினர், திரு.பனம்பிள்ளி கோவிந்தமேனன், உறுப்பினர் கோருகின்ற கால அவகாசம் தர வேண்டும் என்று கோரி. திரு.சிதம்பரநாதனின் உதவிக்கு வந்தார். இல்லையெனில் தீர்மானத்தை முன்மொழிய வேண்டாமென்றும், திரு.கோவிந்தமேனன் அவைத் தலைவரை கேட்டுக்கொண்டார். இதற்குப் பிறகு, சபாநாயகர் விவாதத்தை 1956-ம் ஜனவரி 29-ம் தேதிக்கு மாற்றி வைத்தார்.

29.01.1956-ல் கூடிய சட்டமன்றக் கூட்டத்தில் சிதம்பரநாதன், தன் முந்தைய கூட்டத்தில் கேட்டுக்கொண்டது போல், பிப்ரவரி 5-ம் நாளுக்கு தள்ளிப் போடாமல் அன்றே வைத்திருப்பதால், தீர்மானத்தை முன்மொழிய விரும்பவில்லையென்று கூறி அதற்கு மறுத்துவிட்டார்.

## 63. மைசூர் உயர் நீதிமன்றத்தில் :

மைசூர் உயர்நீதிமன்றத்தில் 01.02.1955 அன்று சிறையில் இருந்த ஏழு சட்டமன்ற உறுப்பினர்களை ஜாமீனில் விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி ஜாமீன் மனுக்கள் தாக்கல் செய்தார் வழக்கறிஞர் திரு.இ.வி.மாத்தியூ. தலைமை நீதிபதி ஜஸ்டிஸ் மேடப்பா, ஜாமீன் மனுக்களை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு இடைக்கால ஜாமீன் அளித்து உத்தரவு பிறப்பித்தார். தவிரவும் வழக்கு விசாரணையை 18.02.1955-க்கு நிச்சயித்துவிட்டார். இதன் அடிப்படையில் இந்த ஏழு சட்டமன்ற உறுப்பினர்களும் 04.02.1955 மாலை சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டனர். ஆனால் ஜனவரி 25-ம் தேதியிலிருந்தே இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள், காவல்துறையின் கைது நடவடிக்கையில் இருந்து தப்புவதற்காக தலைமறைவாகிவிட்டனர். இவர்களை ரகசிய இடத்தில் மறைத்து வைத்திருந்தார் திரு.எ.நேசமணி. இவர்கள் எங்கு இருக்கின்றனர் என்பது தி.த.நா.காவினருக்கே சொல்லப்படவில்லை. திரு.அப்துல் ரசாக்குக்குக் கூட அவர் சொல்லவில்லை என்றால் அத்தகைய இரகசிய இடத்தில் அவர்கள் வைக்கப்பட்டிருந்தனர்.

## 64. மீண்டும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் :

மைசூர் நீதிமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏழுபேர்களுக்கும் ஜாமீன் கிடைத்ததைத் தொடர்ந்து திரு.கொச்சி சட்டமன்றத்தில் அன்றிரவே இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் தாக்கலாயின. இரவு 11.00 மணிக்கு திரு.T.S.ராமசாமிபிள்ளையும், 11.05 மணிக்கு திரு.S.சேஷரத்ரிசர்மாவும் இந்த தீர்மானங்களைத் தாக்கல் செய்தனர். அன்றிரவே இவர்கள் இருவரும் போட்டி போட்டுக் கொண்டு ஏன் இவைகளைத் தாக்கல் செய்தனர் என்பது மர்மம். ஒரு வேளை இடைக்கால ஜாமீன் கிடைத்துவிட்டது என்பதை அறிந்து கொண்டு, இவர்கள் தாக்கல் செய்திருக்கலாம். மற்றவர்கள் இதைத் தாக்கல் செய்வதற்கு முன்பே தாக்கல் செய்து பெயரைத் தட்டிச் செல்லலாம் என்றும் இவர்கள் எண்ணியிருக்கலாம். இருப்பினும் பி.எஸ.பி. உறுப்பினரான நாஞ்சில் நாட்டுவாசியான திரு.T.S.ராமசாமிபிள்ளை அவரது கட்சி அமைச்சரவை மீது ஏன் இந்த அவநம்பிக்கை? நாகபுரி மாநாட்டில் தமிழர் நலன்கள் பால் பேசுவதற்கு திரு.நேசமணியிடம் ஒப்புக்கொண்டிருந்த திரு.T.S.ராமசாமிபிள்ளை அங்கே மேடை ஏறாமல் ஏமாற்றிவிட்டார் அல்லவா? அதனால் தென்திருவிதாங்கூர் தமிழர்கள் இவர் மேல் கொதிப்படைந்து இருந்தனர். இதனால் அவருக்கு சொந்த வீட்டிற்கு திரும்பி வரக்கூட முடியாத சூழ்நிலை. அதனால் அவர் திருவனந்தபுரத்திலேயே தங்கி வந்தார். அவர் திரும்பவும் நேசமணியைத் தொடர்பு கொண்டு, மக்கள் கோபத்திலிருந்து தன்னை காத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஒருவேளை அவரைக் காத்துக் கொள்ளும்படியாக, திரு.நேசமணியின் ஆலோசனையின் அடிப்படையில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தனது கட்சி அரசு மீது தந்திருக்கலாம் என்றும் எண்ணலாம்.

இந்த இரு நம்பிக்கையில்லாத் தீர்மானங்களையும் சபாநாயகர் ஏற்றுக் கொண்டு, அதன் மேல் விவாதத்தை 1956 பிப்ரவரி 8-ம் தேதி என்று நிச்சயித்தார். இதனிடையே திருவிதாங்கூரில்

பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த ஏழு சட்டமன்ற உறுப்பினர்களும் 1955 பிப்ரவரி நான்காம் நாள் விடுதலையாகிவிட்டனர்.

## 65. நேசமணியின் ராஜ தந்திரம் :

தலைமறைவாக இருந்த இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களும், அதாவது திரு.பி.ராமசாமிபிள்ளையும் மற்றும் திரு.ஆர்.பொன்னப்பநாடாரும் சட்டமன்றத்துக்கு வந்தால்தானே 8-ம் தேதி எடுக்கப்படுகின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு சாதகமான பெரும்பான்மை பலம் கிடைக்கும் என்று முதலமைச்சர் திரு.பட்டம் தாணுபிள்ளை கணக்குக் கூட்டினார். எனவே இவர்கள் இருவரையும் சட்டமன்றத்துக்கு உள்ளே விடாமல், முன்கூட்டியே கைது செய்து உள்ளே தள்ளிவிட்டால், அமைச்சரவை வாக்கெடுப்பில் வெற்றி பெற்று விடலாம் என்பது அவரது கணிப்பு. அவர்களை எவ்வாறேனும் கைது செய்து விட வேண்டும் என்பது அரசின் தீவிர முயற்சி. தேவைப்பட்டால் அவர்கள் பயணம் செய்யும் கார் சக்கரங்களை சுட்டு அவர்களை கைது செய்வதற்கும் ரகசிய உத்தரவுகள் கொடுக்கப்பட்டிருந்தன. ஆனால் 7-ம் தேதி வரையும் அவர்கள் அரசு இயந்திரங்களிடம் சிக்கவில்லை. காரணம் அவர்களை திரு.நேசமணி திருநெல்வேலியில் வெளியிடப்படாத இடத்தில் தலைமறைவாக வைத்திருந்தார். திருவிதாங்கூர் – கொச்சி போலீசாரின் கழுகுக் கண்களில் இருந்து எவ்வாறு அவர்களை தப்ப வைத்து சட்டமன்றத்தில் கொண்டு சேர்த்தார் என்பதை திரு.அப்துல் ரசாக் எழுதுகிறார்.

> “திருநெல்வேலியிலிருந்து அன்று நள்ளிரவில் புறப்பட்டுத் தென்காசி செங்கோட்டை வழியாக நெடுமங்காடு வந்து திருவனந்தபுரம் வருகிறார்கள் என்று ஒரு பலமான வதந்தி நிலவியது. (இதை வேண்டுமென்றே திரு.நேசமணி கிளப்பி விட்டார்). இன்னொரு புரளி. 7-ம் தேதி நள்ளிரவுக்கு பிறகு புறப்பட்டு கூடங்குளம் அஞ்சுகிராமம் வழியாக 8-ம் தேதி விடியற்காலை தைக்காடு – வழுதைக்காடு ரோட்டிலுள்ள

சீனிவாச கரையாளர் வீடு வந்து சேரப் போகிறார்கள் என்றும்; 6-ம் தேதி முதல் திருவனந்தபுரத்தில் தங்கி வந்த எனக்கு மார்ஷல் நேசமணியிடமிருந்து வந்த தகவல் என்னவென்றால்: 8-ம் தேதி வைகறை 6 முதல் 8 மணி வரை பார்க்வியூ பங்களாவை (இங்குதான் பனம்பிள்ளியும் அவர் கட்சிக்காரர்களும் தங்கி வந்தார்கள்) சற்று கவனித்துக் கொண்டால் போதும் என்று மட்டுமே. இந்த பங்களா மியூசியத்துக்கு எதிராகவும், மகாத்மாகாந்தி ரோடு 5 விளக்கு சந்திப்புக்குச் சற்று தென் கிழக்காகவும் அமைந்திருக்கிறது.

“யார் இவர்கள்? கொள்ளைக் கூட்டத் தலைவர்கள் அல்ல. தி.த.நா.கா. தலைவர் பி.ராமசாமி பிள்ளையும் பொதுக் காரியதரிசி ஆர்.பொன்னப்பநாடாரும் ஆவர். காவல்படையினருக்கு “டிமிக்கி” கொடுத்து வரும் கொள்ளைத் தலைவர்களை முழங்கால்களுக்குக் கீழே சுட்டு பிடிக்க கட்டளைகள் பிறந்ததாகப் பழங்கதைகளில் படித்திருக்கிறேன். அதுபோல இவர்களைச் சுமந்து கொண்டோடும் கார் டயர்களைச் சுட்டு இவர்களைப் பிடிக்க உத்தரவு உலா வந்து கொண்டிருந்தது. காவல் கிணறு–அஞ்சுகிராமம் சாலை, கரமனைப் பாலம், கவுடியார், சாஸ்தாமங்கலம் சந்திப்பு முதலிய இடங்களில் போலீஸ் ரோந்துகள் தீவிரமாகவே நடைபெற்றன. நானும் இரண்டு மூன்று முறை பார்க்வியூவிற்கும் கவுடியார் சந்திப்புக்குமிடையே சுற்றிக் கொண்டிருந்தேன். (இந்த சுற்றல் போலீசின் கவனத்தை சிதறடிக்கும் என்பது திரு.நேசமணிக்கு நன்றாகத் தெரியும்).

“காலை 7.45 கடந்துவிட்டது. எட்டு மணிக்கு அசம்பிளி கூடும். அங்கேதான் அன்று தாணுபிள்ளை மந்திரிசபையின் தலைவிதி முடிவு கட்ட நிச்சயிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் பார்க்வியூ பக்கமாக எட்டு மணி வரை நான் சுற்றிவிட்டு, அந்த இருவரும் வரவில்லையே என்ற ஐயத்தோடு அசம்பிளி மண்டபத்துக்குப் போய் விட்டேன். அங்கே நான் கண்டது ஆச்சரியம்! அவர்கள் இருவரும்

அவரவர் இருக்கையில் இருக்கக் கண்டதுதான். எப்படி வந்து விட்டார்கள் என்று அளவு கடந்து ஆச்சரியப்பட்டேன். என் கவனத்திலிருந்த பார்க்வியூ பக்கத்திலிருந்து தான் அவர்கள் இருவரும் இன்று காலை 7.45 மணிக்குப் புறப்பட்டுப் போய் இருக்கிறாக்ள். என் கண்களில் எப்படி தப்பிவிட்டார்கள் என்று வியந்தேன். பார்க் வியூ பக்கம் 5 விளக்கு சந்திப்புக்குச் சற்று வடமேற்காக நூறு கஜத் தொலைவில் எல்.எம்.எஸ். ஆஸ்டல் (தங்கும் விடுதி) இருக்கிறது. அது நான் கொஞ்சமும் எதிர்பாராத இடம். 7-ம் தேதி இரவோடு இரவாக இவர்கள் அங்கு வந்து தங்கிவிட்டார்கள். மறுநாள் காலை, பார்க்வியூ பங்களாவிலிருந்து காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் அசம்பிளிக்குப் புறப்பட்டுப் போன பிறகு இவர்கள் இருவரும் எல்.எம்.எஸ். ஆஸ்டலிலிருந்து புறப்பட்டு அசம்பிளி ஹாலுக்குள் 7.45 மணிக்கே நுழைந்துவிட்டார்கள். எல்.எம்.எஸ். ஆஸ்டல் எனக்குத் தெரிந்த இடம்தான். ஆனால் இவர்கள் அங்கு வருவார்கள் என்று எனக்கு ஒரு துப்பும் கிடைக்கவில்லை. ஒருவேளை அவர்களே அதைத் தெரிந்திருக்கமாட்டார்கள். குனிந்தவன் கீழே குனிந்து போவது என்று ஒரு தந்திரம் உண்டு. கண்ணும் காதும் தெரிந்தாற்போல முழுப் பொறுப்பும் எடுத்து இதை நடத்தி முடித்தவர் மார்ஷல் நேசமணி ஒருவர்தான்". ***(எ.அப்துல் ரசாக் – நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம் – பக்கம் 328 & 329)***

## 66. பட்டத்தின் வீழ்ச்சி :

திரு.பட்டம் தாணுபிள்ளையை வீழ்த்துவதற்கான இந்த பிரம்மாஸ்திரத்தை திரு.நேசமணி எவ்வாறு எய்தார் என்பது, அவரது வலதுகரமாக நின்று இயங்கி வந்த திரு.அப்துல்ரசாக்குக்கு கூடத் தெரியாமல் நிறைவேற்றினார் என்பது வியப்பு. திருநெல்வேலியில் தலைமறைவாக வைக்கப்பட்டிருந்த திரு.பி.இராமசாமி பிள்ளையும், திரு.ஆர்.பொன்னப்பநாடாரும் 06.02.1956 அன்று செங்கோட்டை சென்று திரு.எல்.எஸ்.கரையாளர் பாதுகாப்பில் தங்கிவிட்டு, அடுத்தநாள் (07.02.1954) சாயங்காலம் புறப்பட்டு, புளியறை,

சாணார்காவு, ஆரியன்காவு, குளத்துப்புழை, பச்சைப் பாலோடு, நெடுமங்காடு வழி திருவனந்தபுரம் எல்.எம்.எஸ். ஹாஸ்டலுக்கு நடு இரவு வந்தனர். அவர்களை ஹாஸ்டல் வார்டன் திரு.அப்பாவு கிராண்டு வரவேற்று, ஹாஸ்டலில் இரவு தங்க வைத்தார். திரு.அப்பாவு கிராண்டு நெய்யூர் லட்சுமிபுரம் எல்.எம்.எஸ் சபையைச் சார்ந்தவரும், திரு.நேசமணியின் ஆராதகனும், உத்தமசிஷியனுமாவார். இவர் திருவனந்தபுரம் அரசு தலைமைச் செயலகத்தில் பணிபுரிந்து வந்தார். அதே வேளையில் பாளையம் ஸ்டேடியம் அருகாமையில் உள்ள எல்.எம்.எஸ். வளாகத்தில் அமைந்திருக்கின்ற வில்ஸ் ஆண்கள் ஹாஸ்டல் வார்டனாகவும் செயலாற்றி வந்தார். திரு.நேசமணியின் முன்னேற்பாட்டின்படி, இவர்கள் இருவரையும் திரு.கிராண்டு வரவேற்று, இரகசியமாக அவரது பாதுகாப்பில் தங்க வைத்து, அடுத்த நாள் (08.02.1956) கூடவிருக்கின்ற சட்டமன்ற அவைக்கு காலை 7.00 மணியளவில் கொண்டு சேர்த்திட வேண்டும் என்பதாக ஏற்பாடாகியிருந்தது. இந்த ஏற்பாடு திரு.நேசமணிக்கும் திரு. கிராண்டுக்கும் மட்டும் தெரிந்த இரகசியம் ஆகும். திருவனந்தபுரத்தில் போலீஸ் படையினரையும் அவர்களின் நாயர் உளவாளிகளையும் திசை திருப்புவதற்காக மட்டும் திரு.ரசாக்கை பயன்படுத்தினார் திரு.நேசமணி. அவர் நிற்கின்ற இடமான 5 விளக்குத்தூண் வளாகத்தில் மட்டுமே போலீஸ் அரண் இருக்கும் என்பது திரு.நேசமணியின் ஆரூடம். அதே வேளையில் எல்.எம்.எஸ். ஹாஸ்டலிலிருந்து தலைமைச் செயலகம் வரை போலீஸ் படையினரின் கண்காணிப்புக்கு வெளியில் இருக்கும். அந்த வெற்றுப் பகுதி வழியாக இருவரையும் திரு.கிராண்டின் காரில் ஏற்றி, கீழே உட்கார வைத்து, (இருக்கையை விட்டு கீழ்ப்பாக்கத்தில்) குனிந்த நிலையில் சட்டமன்ற அரங்கின் பின்புற வாயில் வழியாக உள்ளே அனுப்பி வைப்பது என்பதே திட்டம். இதை செவ்வனே யாரும் சந்தேகப்படாத முறையில் நிறைவேற்றினார் திரு.கிராண்ட்.

“பொன்னப்பநாடார் நேசமணியை அரசியலிலும், வழக்கறிஞர் தொழிலிலும் ஆசானாகக் கொண்டவர். இவருக்கு திருவிதாங்கூர் சட்டசபையில் “மாயா பொன்னப்பன்” என்று ஒரு பெயர் உண்டு. நேசமணி ஆலோசனையால் அப்பாவு கிராண்டு உதவியோடு வில்ஸ் ஹாஸ்டலில் மறைத்து வைக்கப்பட்டார். இவருடன் இராமசுவாமிபிள்ளையும் தங்கியிருந்தார். திடீரென சூழ்ந்திருந்த காவல் படையையும் ஏமாற்றி இவர்களை கிராண்ட் சட்டசபைக்குள் கொண்டு சேர்த்தார். இதனால் பட்டம் மந்திரிசபை கவிழ்ந்தது. திடீரென சட்டசபையில் தோன்றியதால் இவரை ‘மாயா பொன்னப்பன்’ என்று அன்புடன் அழைப்பர்”. ***(அதே நூல் – பக்கம் – 378 – அடிக்குறிப்பு)***

08.02.1955 காலை 8 மணிக்கு சட்டசபை கூடியது. டி.எஸ்.ராமசாமிபிள்ளை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்தார். இதற்கு முன்பாக பி.எஸ்.பி. கட்சியிலிருந்து முறையோடு விலகியிருந்தார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்தத் தீர்மானத்தை அவர் முன் மொழிந்ததும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் அவரைப் பாராட்டினர். ஆனால் எதிர்கட்சி வரிசையில் இருந்த இடது முன்னணிக் கட்சித் தலைவர் திரு.டி.வி.தாமஸ் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார். ஆனால் எதிர்கட்சித் தலைவர் பனம்பிள்ளிகோவிந்த மேனன் தீர்மானத்தை ஆதரித்து விரிவான உரை ஒன்றை நிகழ்த்தினார். தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடந்தது. இதில் பரிதாபம் என்னவென்றால் தீர்மானத்தை எதிர்த்தும், பட்டம் தாணுபிள்ளையை ஆதரித்தும் பேசிய இடது முன்னணியினர் யாரும் ஓட்டெடுப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலை வகித்ததுதான். தீர்மானத்துக்கு ஆதரவாக காங்கிரஸ் உறுப்பினர்கள் 45 பேரும், தி.த.நா.கா. உறுப்பினர்கள் 12 பேரும், வேறு இரண்டு பேரும் வாக்களித்தனர். பனம்பிள்ளி மொழியில் கூறுவதென்றால், ஆனை மீது உயர்ந்து

நின்ற பட்டம் தாணுபிள்ளை, இப்போது தரையில் தன்காலில் நின்றவாறே தடம் புரண்டு விட்டார். பி.எஸ்.பி. மந்திரிசபை குடை சாய்ந்தது. அன்று ஆர்ப்பரித்து நின்ற நாயர் சமுதாயம் இப்பொழுது முக்காடு போட்டு கவலையோடு ஆங்காங்கே முடங்கி ஒளிந்து கொண்டது.

அவர்களது தோல்வியை ஏற்று 14.02.1955 திங்கள் அன்று சக மந்திரிகளோடு திரு.பட்டம் தாணுபிள்ளை பதவி விலகினார். திரு.நேசமணி நாகர்கோவிலில் இருந்து ஏவிய இரு ஏவுகணைகள் குறி தவறாமல் திருவனந்தபுரம் சட்டமன்றத்தில் நுழைந்து பட்டம் தாணுபிள்ளையைத் தாக்கி அழித்துவிட்டது. இதனால் தமிழர்கள் பெரியதொரு நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். அன்று நேசமணிக்கு புறமுதுகு காட்டியவர்களும், அங்கலாய்த்துக் கொண்டு அலைந்து திரிந்தவர்களும், மறைந்து நின்று அறம்பாடியவர்களும், நான் நீ என்று ஓடிச் சென்று திரு.நேசமணியைப் பாராட்டத் தவறவில்லை.

பட்டத்தின் இந்த வீழ்ச்சியால் தென் திருவிதாங்கூர் நாடார் மக்கள் குதூகலமடைந்தனர். இந்த இன்ப அதிர்ச்சியால் தன்நிலை மறந்த பாறைச்சாலையை அடுத்த ஊரான நெடுவான்விளையில் பனைத்தொழில் செய்து வந்த திரு.பொடியன் நாடார் உயிர் துறக்க வேண்டி வந்தது. இவர் பனைமரத்தில் பாதி உயரம் ஏறிய உடனே, பட்டத்தின் வீழ்ச்சியின் வெற்றி ஊர்வலம் பாறச்சாலையில் இருந்து பளுகல் ஊர் சென்றது. இதை கண்ணுற்ற திரு.பொடியன் நாடார் தன்நிலை மறந்து, “பட்டம் விழுந்து விட்டானா” என்று உரத்த குரலில் கூறி, இரு கைகளையும் பனைமரத்தில் இருந்து எடுத்து கைதட்ட முயன்றார். அந்தோ பரிதாபம். மரத்தில் இருக்கிறோம் என்பதை மறந்து கைதட்டியதால், தவறி கீழே விழுந்து அதே இடத்தில் உயிர் நீத்தார். வெற்றி ஊர்வலம் சென்றவர்கள் இவரை ஏந்தி இறுதி ஊர்வலம் சென்றனர். இந்த நிகழ்ச்சி, பட்டத்தின் மீது தமிழ் மக்கள் குறிப்பாக நாடார் மக்கள் எந்த அளவுக்கு அதிருப்தியோடு இருந்தனர் என்பதற்குச் சான்றாக உள்ளது.

பட்டத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து தென்திருவிதாங்கூரில் சகஜநிலை வேகமாகத் திரும்ப ஆரம்பித்துவிட்டது. இங்கே அமைக்கப்பட்டிருந்த போலீஸ் தாவளங்கள் பிரிக்கப்பட்டு, கொட்டு கொத்தளங்களுடன் திருவனந்தபுரம் பார்த்துச் சென்றன. காடுகளிலும், குகைகளிலும், அண்டை மாநிலத்திலும் சென்று ஒளிவில் பதுங்கியவர்கள் சாரை சாரையாக ஊர் திரும்பி தங்களது குடும்பத்துடன் இணைந்து கொண்டனர். எங்கும் அமைதி நிலவத் தொடங்கியது. ஆத்திரப்பட்டவர்களும், பாவலாக்காரர்களும் கூட நிம்மதிப் பெருமூச்சுவிட்டனர்.

பட்டத்தின் பி.எஸ்.பி. அரசு வீழ்ச்சியுற்ற அன்றே (14.02.1955) காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் பனம்பள்ளி கோவிந்தமேனன் முதலமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்டார். இந்த அமைச்சரவைக்கு தி.த.நா.கா. சட்டமன்ற உறுப்பினர்கள் 12 பேரும் ஆதரவு தந்தனர். காங்கிரஸ் அமைச்சரவை திருவிதாங்கூரில் பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து, அதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த மார்ஷல் நேசமணிக்கு இந்தியாவில் பல இடங்களிலிருந்தும் பாராட்டுத் தந்திகள் வந்து குவிந்த வண்ணமிருந்தன. தி.த.நா.கா. சட்டமன்ற உறுப்பினர்கள் திருவனந்தபுரம் மாவட்ட காங்கிரசில் உழைக்கும் உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட்டு அரசுக்குத் தார்மீக ஆதரவு அளித்தனர்.

## 67. மீண்டும் மைசூர் நோக்கி :

இடைக்கால ஜாமீனில் வெளிவந்த சட்டமன்ற உறுப்பினர்களின் மனுக்கள் மீது விசாரணை 18.02.1955 அன்று நிச்சயிக்கப்பட்டிருந்தது. கோர்ட்டார் ஒரு வேளை இடைக்கால ஜாமீனை மீண்டும் நீட்டலாம், அல்லது ரத்து செய்யலாம். ரத்து செய்வதற்கு அவசியம் இருக்காது என்று திரு.நேசமணி நன்கு உணர்ந்திருந்தார். ஜாமீன் மனுக்களை எதிர்க்க வேண்டாம் என்று பனம்பிள்ளி அரசிடமிருந்து அதன் வழக்கறிஞருக்கு ஆலோசனைக் கட்டளை சென்று விடும் என்றும்

அவருக்குத் தெரியும். இருந்தும் பெங்களூர் நீதிமன்றத்துக்கு அவசரமாக அவர் புறப்பட்டுவிட்டார். பலர் ஆச்சரியப்பட்டனர். அதற்கு ஒரு முக்கிய காரணமிருப்பதாக அவர் கூறினார். அந்தக் காரணத்தை அறிந்து கொள்வதற்கு அவரது அபிமானிகள் ஆவலாக இருந்தனர். அவர் சொன்னார். “பி.எஸ்.பி. அரசு குதப்பித் துப்பிய வார்த்தைகளை அதையே விழுங்கச் செய்ய வேண்டும் (The P.S.P. Government must be made to eat its own words) என்றார்.

பிப்ரவரி 18-ம் தேதி மைசூர் உயர்நீதிமன்றம் தலைமை நீதிபதி மேடப்பா தலைமையில் கூடியது. விவாதத்துக்காக ஜாமீன் மனுக்களை எடுத்துக் கொண்ட வேளையில், திரு.கொச்சி அரசு வழக்கறிஞர் திரு.குமரன் அச்சன் எழுந்து, தமக்கு ஜாமீன் மனுக்களை எதிர்க்க வேண்டாம் என்று அரசு தெரிவித்து இருப்பதாகக் கூறினார். உடனே மனுதார் வழக்கறிஞர் திரு.ஈ.வி.மேத்யூ எழுந்து, அரசின் மனமாற்றத்திற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். இருந்தாலும் உச்சநீதிமன்றத்தை அலட்சியப்படுத்தி அரசு தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்மனுவில் கூறப்பட்டிருக்கின்ற சில வார்த்தைகளை ஆட்சேபிக்காமலிருக்க முடியாது என்றார். ஒரு அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்படுகின்ற உறுதிமொழி அந்த அரசின் தலைமைச் செயலாளர்தான் சமர்ப்பிப்பார். ஆனால் இந்த நிகழ்ச்சியில் தலைமைச் செயலருக்குப் பதிலாக உறுதிமொழியை போலீஸ் உதவிக் கண்காணிப்பாளர் சமர்ப்பித்து உச்சநீதிமன்றத்தை இழிவுபடுத்தியும், மனுதாரர்களை தரக்குறைவாகவும் எழுதியிருக்கிறார்கள். எனவே இவைகளை அப்படியே ஆவணங்களில் விடுவது நல்லதல்ல என்று மனுதாரர் வழக்கறிஞர் திரு. மாத்யூ உறுதிபடச் சொன்னார். இந்த கட்டத்தில் தலைமை நீதிபதி குறுக்கிட்டு அரசு தரப்பு உறுதிமொழியில் உச்சநீதிமன்றத்தை இழுத்துப் பேசுவதற்கு காரணம் என்ன? என்று கேட்டார். இதற்கு சரியான சமாதானம் கூற இயலாத அரசு பப்ளிக் பிராசிக்கூட்டர் திரு.குமரன் அச்சன் எழுந்து அதற்கு வருத்தம்

தெரிவித்தது மட்டுமல்லாமல் அத்தகைய பதப்பிரயோகத்தை வாபஸ் வாங்குவதாகவும் தெரிவித்தார். சொன்னால் மட்டும் போதுமா? என்ற தலைமை நீதிபதியின் குறிப்பை புரிந்து கொண்டு அவர் எழுதியும் கொடுத்துவிட்டார். ஆனாலும் தலைமை நீதிபதி தொடர்ந்து,

> “சட்ட ஆலோசகர்களைக் கொண்ட திருவாங்கூர் – கொச்சி சர்க்கார் நாட்டின் உச்சநீதிமன்றத்தைப் பற்றி இப்படி ஒரு போலீஸ் ஆபீசர் வாயிலாக இகழ்ந்திருப்பது மரியாதைக்குறைவு மட்டுமல்ல, மன்னிப்புக் கேட்க வேண்டிய ஒரு செய்கையும்தான் என்று ஏற்றுக் கொண்டார்."

இதைக்கேட்டதும், திரு - கொச்சி வழக்கறிஞர் நிலைதடுமாறிப் போனார். பட்டம் தாணுபிள்ளை பதவியில் தொடர்ந்தாரோ இல்லையோ, அவர் குதப்பிய வார்த்தைகளை அவரே விழுங்கிவிட்டார். இதற்காகவே திரு.நேசமணி மீண்டும் பெங்களூர் சென்று அதை செவ்வனே செய்து பழியைத் தீர்த்துவிட்டார். இதற்காக கூட்டத்தில் ஒருவராக நீதிமன்றத்துக்குள் நுழைந்த திரு.நேசமணி ஒரு “மார்ஷலாக”த் தலை நிமிர்ந்து வெளியே வந்தார். (அட்டைப்படம் பார்க்க) எடுத்த காரியத்தை முடிக்காமல் அவர் ஓயமாட்டார் என்ற எண்ணத்தை பலரும் புரிந்து கொண்டனர். இப்படிப்பட்ட எண்ணம் கல்குளம், விளவங்கோடு மக்களிடம் இருந்தது. ஆனால் அகஸ்தீஸ்வரம் தாலுகாவில் தேவாலய வழிபாட்டுக்காரர்களிடம் மட்டும்தான் இது இருந்தது என்பதை மறைப்பதற்கில்லை. ***(அதே புத்தகம் – பக்கம் – 341)***

## 68. புனரமைப்புக் கமிஷன் :

அன்றைய சூழ்நிலைகளில், திருவிதாங்கூர் தமிழ்பிரதேசங்கள் பிரிந்து சென்று தாய் தமிழகத்துடன் இணைக்கும் முயற்சியை மறுபரீசிலனை செய்ய வேண்டும் என்று திரு.நேசமணியை மூவர் வலியுறுத்தினர். இந்த வகையில் திரு.கருமுத்து தியாகராஜ

செட்டியார் இவரை டெல்லியில் இருமுறை சந்தித்துப் பேசியிருக்கிறார். திரு.A.V.தாமஸ் டில்லியில் வைத்து பலமுறைகள் நேசமணியைச் சந்தித்து பேசியிருக்கிறார்.தவிரவும் திரு.நேசமணி சென்னையில் திரு.இராசகோபாலாச்சாரியார் அவர்களை சந்தித்தபோது அவர் இது குறித்து பேசியிருக்கிறார். தமிழ்நாட்டுனே வந்து இணைந்தால், பிந்திய காலங்களில் அத்தமிழ் பிரதேசங்களை முற்றிலும் தமிழகம் புறக்கணித்துவிடும் எனற தூரநோக்கு ஆரூடத்தின் அடிப்படையில் மூதறிஞர் திரு.நேசமணியை அறிவுறுத்தினார். ஆனாலும் மானம் கெட்ட வாழ்வு திருவிதாங்கூர் நாடார்களுக்கு இனியும் வேண்டாம் என்ற திடமான இறுதி முடிவால் திரு.நேசமணி இந்த ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். அன்று அறிஞர்கள் தந்த அறிவுரைகள் சரியென இன்று நிரூபணமாகிக் கொண்டிருக்கின்றன.

இதற்கிடையில் மாகாணங்கள் புனரமைப்புக் குழுமத்தின் பரிந்துரை 1955 டிசம்பர் 14-ம் நாள் நாடாளுமன்றத்தின் பரிசீலனைக்காக உள்துறை அமைச்சர் கோவிந்த் வல்லப்பந்து சமர்ப்பித்தார். இதில் முதலாவதாக தென் மாநிலங்களின் புனரமைப்புகள் குறித்த விவாதம் தொடங்கியது. கமிஷனின் 290-வது சரத்துப்படி:-

290. “The main claim advanced on behalf of Madras is for the addition of the Tamil speaking areas of Travancore – Cochin. This claim rests mainly on linguistic considerations and grounds of geographical contiguity and relates to nine taluks, namely, Thovala, Agasteeswaram, Kalkulam, Vilavancode and Neyattinkara in Trivandrum District, Devikulam and Peermedu in Kottayam District, Shenkottai in Quilon District and Chittur in Trichur District”.

இந்த ஒன்பது தாலுகாக்களையும் திருவிதாங்கூர் – கொச்சியில் இருந்து பிரித்து அண்டை மாநிலமான மதிராசியுடன் சேர்க்க வேண்டும் என்பதே தி.த.நா.காங்கிரசின் கோரிக்கையும்,

ஆர்ப்பாட்டங்களும் ஆகும். ஆனால் கமிஷன் தந்ததோ 5 தாலுகாக்கள் மட்டுமே. நெய்யாற்றின்கரை, தேவிகுளம், பீர்மேடு மற்றும் சிற்றூர் தாலுகாக்களை வேண்டுமென்றே அவர்கள் விட்டுவிட்டனர். அதற்கு பின்னணியில் கமிஷன் உறுப்பினரான சர்தார் கே.எம். பணிக்கரின் ஊடுருவல் இருந்தது.

293. "As a result of the re-sorting of census slips of the Tamil speaking taluks of the Travancore – Cochin state, the percentage of people with different mother tongues in the nine taluks claimed by the Madras government are now available. These figures show that in the four southern taluks, namely Agasteeswaram, Thovala, Kalkulam and Vilavancode, situated in what is known as Nanjilnad, the percentage of Tamil speaking people is above 79. The wishes of the people of this area have been clearly expressed and there is no particular reason why these wishes should not have been respected".

79 விழுக்காடு மக்கள் தமிழ் பேசுகின்றமையால் இந்த நான்கு தாலுகாக்களையும் தாய் தமிழகத்துடன் இணைவதை தடுப்பதற்கில்லை என்று கமிஷன் கூறுகிறது. இதை ஏற்றுக் கொண்டாலும் நடைமுறையில் அவ்வாறு இல்லை. நாஞ்சில் நாட்டு வெள்ளாம்பிள்ளைகளில் 75% மக்கள் மலையாளம்தான் பேசுகின்றனர். அதே போன்று விளவங்கோடு தாலுகாவில் 50% மக்கள் மலையாளமும், தமிழும் கலந்து பேசுகிறார்கள். ஆனால் இந்த தாலுகாவை முழுவதும் தாய் தமிழகத்துடன் இணையவிட்டனர். ஆனால் இதைப் போன்று நெய்யாற்றின்கரை தாலுகாவில் இன்றும் 75% மக்கள் நாடார்கள் ஆவார். இவர்கள் தமிழையும் மலையாளத்தையும் பேசவும் எழுதவும் திறன் படைத்தவர்கள்

ஆவர். அங்கே தமிழ் கற்பதற்கு தமிழ் பள்ளிகள் இல்லாததால் அவ்விடத்து நாடார் மக்கள் மலையாளத்தைக் கற்று, பேச வேண்டியதாயிற்று. ஆயினும் இவர்களின் தாய்மொழி இன்றும் தமிழ்மொழிதான். ஆனால் இந்த இரண்டும் கெட்டான் இருமொழிக் கலாச்சாரம் மலையாளிகளுக்குச் சாதகமாக ஆக்கிவிட்டது சர்தார் கே.எம்.பணிக்கரைக் கொண்ட மாநிலங்கள் புனரமைப்பு கமிஷன். இதனால் இக்கமிஷன் தமிழர்களுக்கு ஓர வஞ்சகம் செய்துவிட்டது. தமிழர்களின் நலன்கள் பாதுகாத்திட கமிஷனில் ஒரு தமிழன் இல்லாததும் இதற்கு ஒரு காரணம் ஆகும்.

294. “The Chenkottai Taluk is partly an enclave in Thirunelveli District of Madras State and the percentage of Tamil speaking people in this taluk is 93. Physically and geographically it belongs to Tirunelveli District in which it should now merge”.

93 விழுக்காடுகளைக் கொண்ட செங்கோட்டைத் தாலுகா சென்னை மாகாணத்துடன் இணையும் என்று குழுமம் ஆணை பிறப்பித்திருந்தும், நடைமுறையில் அவ்வாறு இணைக்கப்படவில்லை. அதில் 30% இடம்தான் தமிழ்நாட்டுடன் இணைந்தது. 70% செங்கோட்டையை கேரளத்துக்கு தாரைவார்த்தார் பெருந்தலைவர் காமராசர். கிடைத்ததையும் இழந்தோம். செங்கோட்டையிலும் நாடார் சமுதாய மக்களும், கரையாளர் சமுதாய மக்களுமே பெருவாரியாக இன்றும் வாழ்கின்றனர்.

295. “The Devikulam and Peermade Taluks stand on a some what different footing. These are hilly areas which for various economic and other reasons, are of great importance to the state of Travancore – Cochin. The percentage of Tamil speaking people in the Devikulam and Peermade taluks is 72 and 44 respectively ….”

1941 மக்கள் கணக்குப்படி தேவிகுளத்தில் 53,934 தமிழர்களும், 8,282 மலையாளிகளும் உள்ளனர். இங்கே, பீர்மேடு தாலுகாவில் 31,911 தமிழர்களும், 31,748 மலையாளிகளும் உள்ளனர். இருசாரரும் சம அளவில் உள்ளனர். ஆனால் கமிஷனிடம் தமிழர்கள் வெறும் 44 விழுக்காடு என்று கேரள அரசு கூறியிருக்கின்றது. தவிரவும் கமிஷன் இந்த மலைப் பிரதேசங்களில் முறையாக சுற்றுப் பயணம் செய்யாமலே, மக்களை சந்தித்து நிலைமைகளை தெரிந்து கொள்ளாமலே, தமிழர்கள் வந்து போகிறவர்கள் என்று அரசால் சொல்லப்பட்டதை அவ்வாறே ஒப்புக் கொண்டுள்ளனர். தவிரவும் 1954-ல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் இந்த இரு தொகுதிகளிலும் இருந்து தி.த.நா.கா நிறுத்திய இரு வேட்பாளர்களும் வெற்றி பெற்றுள்ளனர். மலையாளி காங்கிரஸ் வேட்பாளர்கள் படுதோல்வியடைந்தனர். பீர்மேட்டில் தமிழர்கள் வெறும் 44 விழுக்காடு என்றால் தமிழர் வேட்பாளர் எங்ஙனம் வெற்றி பெற முடியும்? எனவே மலையாளிகளுக்குச் சாதகமாக அவ்விடங்களை அளிப்பதற்காகவே கமிஷன் கண்டுபிடித்த நொண்டிக் காரணங்களாகும் அவைகள் என்பது வெட்ட வெளிச்சம்.

சிற்றூர் தாலுகாவைப் பொறுத்தமட்டில் அங்கே 91 விழுக்காடு தமிழர்கள் வாழ்கின்றனர். தவிரவும் இது சென்னை மாகாணத்தின் கோயம்புத்தூர் மாவட்டத்தின் உள்ளில் கருநாடக எல்லையில் அமைந்துள்ளது. ஆயினும் இவ்விடத்தை கேரளத்துக்கு கொடுத்துவிட்டது கமிஷன்.

எனவே இங்கே தமிழ் பிரதேசங்களை பங்கு வைக்கும் போது கேரளத்திற்கு பெருவாரி தமிழ் இடங்களை கமிஷன் கொடுத்து, தமிழகத்துக்கு ஓர வஞ்சனை செய்தது. ஒரு இடத்தில் மக்கள் தொகையை எடுத்துக் கூறுகிறது. இன்னொரு இடத்தில் மொழியை துணைக்கு எடுத்துக் கொள்கின்றனர். வேறொரு இடத்தில் பொருளாதாரத்தை துணைக்கு அழைத்துக் கொள்கின்றது. தவிரவும் சென்னை மாகாண அரசு கமிஷனிடம் முழு மனதோடு அணுகி தமிழ்

பிரதேசங்களை தமிழ்நாட்டுடன்தான் இணைக்க வேண்டும் என்று நெருக்குதல் தராமலும் விட்டுவிட்டனர். அவ்வேளையில் பெருந்தலைவர் காமராசர்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தார். அது சார்பாக அவர் எந்த வகையிலும் முழு மனதுடன் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. “மேடானால் என்ன; குளமானால் என்ன, எல்லாமே ஒன்றுதான்” என்ற நிலையில் அவர் இருந்து விட்டார். திரு.நேசமணியின் பால் அவர் கொண்டிருந்த காழ்ப்புணர்வால்தான் திருவிதாங்கூர் தமிழ் பிரதேசங்களை குறித்து அவர் வாழாவெட்டியாக இருந்தார் என்பது தெளிவு.

இணைப்பு நாளான 01.11.1956-ல் நாகர்கோவில் எஸ்.எல்.பி. உயர் நிலை பள்ளி மைதானத்தில் இணைப்பு விழா நடந்த வேளையில் தமிழ்நாடு முதலமைச்சர் கர்மவீரர் காமராசர் முக்கிய விருந்தினராகக் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார். அவ்வமையம் அவரது ஏற்புரை மேலே சொன்ன கருத்துக்குச் சான்றாக நின்றது. அவர் கூறினார்.

> “இணைப்பு முதல் நாளன்றே இப்படியாக கோரிக்கை மேல் கோரிக்கை அடுக்கி வைக்க நீங்கள் முறப்பட்டுவிட்டால் கேட்பவர்கள் நாங்கள் உங்களுக்கு பலவாக்குறுதிகள் தந்ததாக நினைக்க மாட்டார்களா? அப்படி யாராவது உங்களுக்கு வாக்குறுதிகள் தந்து சென்னையோடு இணையும்படி கேட்டார்களா?”

இந்த பேச்சிலிருந்து நம்பால், அவர் கொண்டுள்ள எண்ணம் என்ன? என்பது வெளிப்படையாகத் தெரிகிறது அல்லவா?

நானும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டவன் என்ற முறையில் அவர் சொன்ன இன்னொரு காரியத்தையும் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும். என்னுடனே பல கல்லூரி மாணவர்கள் அந்த விழாவில் கலந்ததுண்டு. அவர்களில் ஒருவர்தான் திரு.டி.சிட்னி பிரான்சிஸ், 203 ஹென்டிறி தெரு, நாகர்கோவில் – 1.

என்னைப்போன்று அவர் இன்றும் வாழ்ந்து வருகிறார். அவர் தனது 79-வது அகவையில் வாழ்கிறார். அவர் கூறுவதையும் நாம் செவிமடுப்போம்.

> “திரு.காமராசர் அவர்கள் இணைப்பு நாள் ஏற்புரையில் இவ்வாறு பேசினார்: ‘நீங்கள் கேரளத்தில் இருந்து வந்திருக்கிறீர்கள். கல்வியிலும் பொருளாதாரத்திலும் வளர்ந்து உள்ளீர்கள். ஆரல்வாய்மொழிக்கு கிழக்கே உள்ளவர்கள் இந்த நிலையை எட்டுவதற்கு இன்னும் பல காலம் வேண்டும். அதுவரை உங்களுக்கு எங்களால் ஒன்றும் செய்ய இயலாது. செய்யவும் மாட்டோம். பிரிந்து வந்து தமிழர்களோடு இணைந்து விட்டோம் என்ற நிறைவோடு மட்டும் இருங்கள். நீங்கள் விரும்பினால் இன்றே உங்களை மீண்டும் கேரளத்துடனே சேருவதற்கு நான் ஒழுங்கு செய்யலாம்”. ***(பேட்டி : நூலாசிரியர் – நாள் 27.08.2010)***

எனவே தமிழகத்தின் முதலமைச்சர் திரு.காமராசர் அவர்களுக்கு கன்னியாமரித் தமிழர்கள் அழையாத விருந்தாளிகள்தான். அதனால் தான் இந்த இணைப்பை அவர் சிறிதும் விரும்பவில்லை. இதனால்தான் திரு.நேசமணியை கேரள காங்கிரசுடன் ஒத்துப்போவற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தினார். தவிரவும் அவரைக் குறைத்தும் பழித்தும் பேசினார். அவருக்கு எதிராகச் செயல்படுவதற்கு அகஸ்தீஸ்வரம் நாடார் சமுதாயத்தை துாண்டியது மட்டுமல்லாமல், பிரிவினை உருவாக்குவதற்கும் பல முயற்சிகள் எடுத்துக் கொண்டர். சாமித்தோப்பபுப்பதி முன்னாள் அறங்காவலா் திரு.பாலகிருஷ்ணன் நாடாரையும், பொற்றையடி வாரிஸ்காரர் திரு.ப.தாணுலிங்கம் நாடாரையும் இம்முயற்சியில் ஈடுபட வைத்தவரும் இவரேயாவார். அவர்களது முயற்சிகள் முழுமையாக வெற்றியடையவில்லை யென்றாலும் அவற்றின் தாக்கம் பிற்காலத்தில் இங்கே பெரிதாக உணரப்பட்டது.

இணைப்பு நாளன்று திரு.நேசமணிக்கு மக்கள் அளித்த வெள்ளிக்குடம், திரு.காமராசருக்கு அன்பளிப்பாக கொடுக்கப்பட்டது. இவ்வாறு நாடார் மக்களின் இரண்டு நூற்றாண்டு காலமாக நடந்த பிரிவினைப் போர் அன்றுடன் முடிவுக்கு வந்தது.

## 69. இன்றைய இளைய தலைமுறை :

நாடார் சமுதாயத்தின் அடிமைவாழ்வு இந்த மண்ணில் சுமார் 200 ஆண்டுகள் கழிந்து முடிவடைந்துவிட்டது. அந்த அடிமை வாழ்விலிருந்து விடுதலை பெறுவதற்கு 1822-தொட்டு தொடர்ந்து பல காலகட்டங்களாக உயர்சாதியிடமும், அவர்களது அரசிடமும் விடுதலைப்போர்கள் நடத்தப்பட்டன. 1822-ல் புலிப்புனம் இசக்கிமாடன் தண்டல்காரனின் தலைமையிலும், அதற்குப் பிறகு புரோட்டஸ்டான்று கிறிஸ்தவ மிஷினரிகளான திருவாளர்கள் சார்லஸ் மீடு அய்யர், மால்ட் ஐயர், பேலீஸ் ஐயர், ஜாண் காக்ஸ் ஐயர், ஜேம்ஸ் ரசல் ஐயர், போன்றவர்களின் வழிகாட்டலிலும், பிந்திய காலங்களில் மேக்கோடு ஆசான் திரு.நாராயணன் நாடார் தலைமையிலும் நடந்தன. இறுதியாக திரு.எ.நேசமணியின் தலைமையில் 1947-முதல் 1956 வரை இவ்விடுதலைப் போர் நடந்தது. இந்த போராட்டங்களின் இறுதி வெற்றியை, குமரித் தந்தை மார்ஷல் எ.நேசமணியின் காலத்தில் பெறுவதற்கு முடிந்தது. இந்த வெற்றியின் ‘கனியான’ கன்னியாகுமரி மாவட்டத்தை 1.11.1956 அன்று தாய்த்தமிழகத்துடன் இணைத்தார் திரு.நேசமணி அவர்கள். இதனால் அவரை **"குமரித்தந்தை"** என்று கூறி சிறப்பித்தனர் குமரிநாட்டு மக்கள்.

இந்த நீண்டதொரு விடுதலைப் போரைக் குறித்து இந்நாளைய இளைய தலைமுறைக்கு எதுவும் தெரியவில்லை. இன்று அவர்கள் தங்கு தடையின்றி அனுபவித்து வருகின்ற சுதந்திரத்தைப் போன்று அவர்களது மூதாதையர்களும் எவ்வித இடையூறுகளுமின்றி வாழ்ந்தனர் என்று தப்புக் கணக்கு போட்டுள்ளனர், அதனால் இந்த விடுதலையின் முக்கியத்துவம் என்ன? என்பதை அவர்களால் இன்று உணர்ந்து கொள்வதற்கு இயலவில்லை. இத்தகைய நிகழ்வுகள்

நடந்திருக்குமா? என்றும் அவர்கள் ஐயம் கொள்கின்றனர். அன்று நமது மூதாட்டிகளும், மூதாதையர்களும் அரைகுறை ஆடைகள்தான் அணிய வேண்டும் என்ற இந்து உயர் சாதியினரின் கரிசனையை நம்புவதற்காக தென்தாமரைகுளம் அய்யா வழி நிறுவனரான முத்துக்குட்டி என்ற முடிசூடும் பெருமாளின் தாயாரும், மனைவியும், அவரை தொட்டில் பாடையில் திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கு சுமந்து சென்று கடல் நீராடும் காட்சியை இங்கே அச்சிடுகின்றோம்.



**குளிக்கும் வேளையில் கடல் அலைகள் முத்துக்குட்டியை இழுத்துச் சென்றன** **5** **Muthukutti trapped by waves during sea-bath**

स्नान करते समय मुत्तुकुट्टि को लहरें खींच ले चलीं।

இந்தப் படம் கன்னியாகுமரி, ரயில்நிலையம் அருகாமையில் திரு. குமரி அனந்தனால் நிறுவப்பட்டிருக்கும் ‘பண்பாட்டு மையத்தில்’ தத்ரூபமாக சித்தரிக்கப்பட்டிருப்பதில் இருந்து கட்டணம் கட்டி புகைப்படமாக எடுத்ததாகும். இப்பொழுதாவது இளைய சமுதாயம் நமது மூதாதையர்களின் அன்றைய நிலை எவ்வாறு இருந்தது என்பதை உணர்வார்கள் என்று எண்ணுகிறோம். அந்த நிலையில் இருந்து இன்றைய நிலைக்கு வருவதற்காக நாடார் சமூகத்தில் மறுமலர்ச்சியை உருவாக்கித் தந்தவர்கள் சீர்திருத்தக் கிறிஸ்தவச் சமயத் தொண்டர்கள்

மட்டுமாவர் என்பதை மறைப்பதற்கோ, மறுப்பதற்கோ இல்லை. இத்தகைய மறுமலர்ச்சி உருவாகுவதற்கு அவர்கள் ஆங்கிலக் கல்வியையும், அத்துடனே தாய் மொழிக் கல்வியையும் நமக்குத் தந்தனர். இந்த ஒடுக்கப்பட்ட சமூகத்தின் கல்விக் கண்களைத் திறந்தவர்களும் அவர்களேயாவர். அதனால் எதிரிகூட பொறாமை கொள்ளும் அளவுக்கு இந்த ஒடுக்கப்பட்ட சமுதாயம் கல்வியிலும், பொருளாராதத்திலும் சமுதாய அந்தஸ்திலும் உயர்ந்தது. எனவே இந்த மறுமலர்ச்சியின் வரலாறுகளை இன்றைய இளைய சமுதாயம் உன்னிப்புடன் கற்க வேண்டும். அறிவர் டி.பீட்டர், மற்றும் அறிவர் திருமதி. ஐவி பீட்டர் எழுதிய "மலையாளி ஆதிக்கமும் தமிழர்கள் விடுதலையும்" என்ற ஆய்வு நூலைக் கட்டாயம் படிக்க வேண்டும் என்று ஆலோசனை கூறுகிறேன்.

## 70. ஒரு நாடார் விடுதலைப் போராட்டம் :

திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசின் நடபடிகள் நாடார் சமுதாயத்தில் மட்டுமே பெரும் தாக்கத்தை உருவாக்கின, இவர்கள் நடத்திய பிரச்சாரக் கூட்டங்களில் பங்குகொண்டவர்களில் பெருவாரியானவர்கள் நாடார்கள் மட்டுமே.

"நவம்பர் 11-ம் நாள்(1947) விளவங்கோடு தாலுகாவிலுள்ள பாகோடு என்ற ஊரில் மைதீன் பிள்ளை என்ற வழக்கறிஞரின் தலைமையில் நடத்தப்பட்ட ஒரு கூட்டத்தில்... அப்பகுதியைச் சேர்ந்த நாடார் சமுதாயத்தின் சுமார் 500பேர் கலந்து கொண்டனர்.

(File No.D.Dis.424/1947-C.S English Record/ Kerala State Archieves/ Trivandrum as quoted by Dr.Ivy Peter and Dr. D.Peter in their book" Malayali Adikkamum, Thamilar Vidhuthalayum- page.106.)

"நவம்பர் 12-ம் நாள் விளவங்கோடு தாலுகாவைச் சேர்ந்த பாஞ்சிவிளை என்ற ஊரில் சாம் நத்தானியேல் தலைமையில் நடந்த

கூட்டத்திலும் அப்பகுதியைச் சார்ந்த சுமார் 500 நாடார்கள் கலந்து கொண்டனர்...". ***(அதே புத்தகம் – பக்கம் – 107)***

> "About 500 persons, mostly Nadars of the locality attended. The speakers appealed to the Tamilians in general and Nadars in particular to stand united under the Tamil Nadu Congress. They also warned the Nadars against falling a prey to the tricks played by the state Congressities to get the support of the Nadars in the elections". ***(From the I.G. of Police to the Registrar, Huzur Secretariat dated 14.11.1947 – as quoted in the above book – page 107)***

"நவம்பர் 15-ம் நாள் குழித்துறையில் தி.த.நா.கா சார்பில் ஒரு பிரமாண்டமான கூட்டம் நடத்தப்பட்டது. சுமார் 30,000 பேர் திரண்டிருந்த அக்கூட்டத்திற்கு நாகர்கோவிலைச் சார்ந்த வழக்கறிஞர் சிவராமபிள்ளை தலைமை தாங்கினார்". ***(Ibid – Page 107)***

"நவம்பர் 16-ம் நாள் கல்குளம் தாலுகாவிலுள்ள மைலோடு என்ற ஊரில் நடந்த கூட்டத்திற்கு சிதம்பரநாதன் நாடார் தலைமை வகித்தார். மாலை 6 மணிக்கு தி.த.நா.காங்கிரசார் திங்கள்சந்தை சந்திப்பிலிருந்து கூட்டம் நடந்த இடத்துக்கு வந்தனர். இக்கூட்டத்தில் அப்பகுதியைச் சேர்ந்த சுமார் 5,000 நாடார்கள் கலந்து கொண்டனர்". ***(Files D-Dis supra cited as quoted in the above book – page 107)***

Thennithottam : "All the speakers condemned the attitude of the Nairs towards the Tamilians. About 4,000 persons mostly Nadars attended". ***(From the I.G. of Police to the Registrar, Huzur Secretariat, dated 18.11.1947 – Ibid – Page 108)***

**Vanniyoor :** "About 2000 persons, mostly Nadars were present – (21.11.1947) ***(From the I.G. of Police to the Registrar, Huzur Secretariat, dated 18.11.1947 – Ibid – Page 108)***

"… About 5,000 persons, mostly Nadars attended. The President A. Nesamony criticised the report of the Reforms Committee and pointed out the inadequate representation given to S.I.U.C. Christians, and depressed classes such as Asaris, Kammalars etc in the Tamil Areas. Tamilians have once for all decided to establish a Tamil province in the state even at the risk of their lives". ***(From the I.G. of Police to the Registrar, Huzur Secretariat, dated 27.11.1947 – Ibid – Page 108)***

இதேபோன்று கல்குளம் மற்றும் விளவங்கோடு தாலுகாக்களில் பல சிற்றூர்களில் விளக்கக்கூட்டங்களை தி.த.நா.காவினர் நடத்தியுள்ளனர். அனைத்து கூட்டங்களிலும் நாடார் மக்களே கூடியிருந்தனர். பிற சமுதாயங்களைச் சார்ந்தவர்கள் அங்கே காணப்படவில்லை.

இவைகளுக்கெல்லாம் புறம்பாக, ஆகஸ்டு 11-ம் நாள் 1954-ல் விடுதலை நாள் போராட்டங்களில் துப்பாக்கிச் சூட்டில் உயிர் பறிக்கப்பட்ட 11 பேர்களில் இருவரைத் தவிர ஏனையவர்கள் அனைவரும் நாடார் பெருமக்களேயாவர்.

இதற்கு முன்பு, 12.02.1948 மற்றும் 14.02.1948 ஆன நாட்களில் சுட்டுக் கொல்லப்பட்ட இருவரும் நாடார் மக்களேயாவர். இந்தத் துப்பாக்கிச் சூடுகளுடன் பட்டம் தாணுபிள்ளை அரசு நின்றுவிடவில்லை. தொடுவட்டியிலும, புதுக்கடையிலும் துப்பாக்கிச்சூடு நடந்த 11-08-1954 நாள் தொட்டு, முதலமைச்சர் திரு.பட்டம் தாணுபிள்ளை ராஜினாமா செய்த 14.02.1955 வரையில் இடைப்பட்ட 188 நாட்கள் பகலிலும், இரவிலும் நாடார் மக்களை மட்டும் குறி வைத்து மலையாளி சிறப்புக் காவல்துறையினர் கைது செய்து சித்திரவதைகள் நடத்தினர். இவ்வாறு சித்திரவதைப்பட்டு வெளி வந்தவர்களில் தி.த.நா.கா. தலைமை அலுவலகத்துக்கு தங்கள் வேதனையை எழுத்து மூலம் தெரிவித்தவர்கள். சுமார் 228 பேர். வட்டார வாயிலாக இவர்களின் எண்ணிக்கைகள் கீழ் தரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆற்றூர் வட்டாரம் | - | 9 பேர் |
| 2. | மேக்காமண்டபம் வட்டாரம் | - | 4 பேர் |
| 3. | மூலச்சல் வட்டாரம் | - | 13 பேர் |
| 4. | தக்கலை வட்டாரம் | - | 19 பேர் |
| 5. | வில்லுக்குறி வட்டாரம் | - | 9 பேர் |
| 6. | நெய்யூர் வட்டாரம் | - | 7 பேர் |
| 7. | கொற்றிகோடு வட்டாரம் | - | 6 பேர் |
| 8. | குழிக்கோடு வட்டாரம் | - | 4 பேர் |
| 9. | கப்பியறை வட்டாரம் | - | 11 பேர் |
| 10. | ஆறுதேசம் வட்டாரம் | - | 19 பேர் |
| 11. | பைங்குளம் வட்டாரம் | - | 12 பேர் |
| 12. | குன்னத்தூர் வட்டாரம் | - | 7 பேர் |
| 13. | கிள்ளியூர் வட்டாரம் | - | 11 பேர் |
| 14. | ஏழுதேசம் வட்டாரம் | - | 8 பேர் |
| 15. | கொல்லங்கோடு வட்டாரம் | - | 5 பேர் |
| 16. | மார்த்தாண்டம் வட்டாரம் | - | 34 பேர் |
| 17. | நட்டாலம் வட்டாரம் | - | 11 பேர் |
| 18. | குழித்துறை வட்டாரம் | - | 11 பேர் |
| 19. | விளவங்கோடு வட்டாரம் | - | 10 பேர் |
| 20. | பாகோடு வட்டாரம் | - | 14 பேர் |
| 21. | அருமனை வட்டாரம் | - | 6 பேர் |
| | **மொத்தம்** | - | **228 பேர்** |

(அறிவர் டி.பீட்டர் – குமரி மாவட்ட விடுதலை, கல்குளம் – விளவங்கோடு நாடார் மக்கள் தந்த விலை – பக்கம் 27 முதல் 185 வரை)

இந்த 228 பேர்களையும் அடித்தும், உதைத்தும், இடித்தும், முறித்தும், வர்மத்தில் குத்தியும், வன்மமிழைத்தனர் மலையாள காவல்துறையினர். விடுதலையாகி வந்தவர்களில் பலர் ரத்தவாந்தி எடுத்து உயிர் இழந்தனர். இவர்கள் அனைவரும் நாடார் மக்களேயாவர். இவர்களைத் தவிர திருநெல்வேலி மாவட்டம் சென்று அஞ்ஞாதவாசம் மேற்கொண்டவர்கள் சுமார் 3000-க்கும் மேல். இம்மாவட்டத்தில் காடுகளுக்குச் சென்று மறைந்து நின்றவர்கள் 1500-க்கும் அதிகம். இவர்கள் அனைவரும் நாடார் மக்களேயாவர். சிறை சென்று சித்திரவதைப்பட்டவர்களில் நாஞ்சில் நாட்டு வெள்ளாம்பிள்ளைகளோ, அகஸ்தீஸ்வரம் நாடார் மக்களோ எவரும் இல்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால் தியாகிகள் வரிசையில் அரசு ஓய்வூதியம் பெறுகின்றவர்களின் எண்ணிக்கையோ நாஞ்சில் நாட்டில் ஏராளம். என்னே பித்தலாட்டம்?

ஆகையால் தி.த.நா.காவின் இந்த போராட்டம் நாடார் மக்களின் விடுதலையை முன் வைத்து நடத்தப்பட்ட நாடார் மக்களின் இறுதி விடுதலைப் போராட்டம் என்பது ஆவணங்களின் அடிப்படையில் மெய்ப்பிக்கப்படுகிறது. இதனால்தான் பிற தமிழ் சமுதாயங்களான வெள்ளாளர்கள், மீனவர்கள், தலித்துகள், இசுலாமியர்கள், செட்டிகள் போன்றவர்கள் தங்களது முழு இருதய சுத்தியுடன் இப்போராட்டங்களில் கலந்து கொள்ளவில்லை.

> “முஸ்லீம் சமுதாயத்தினரின் ஆதரவைப் பெறுவதற்காக அவர்கள் பெருபான்மையாக வசிக்கும் திருவிதாங்கோடு பகுதிகளில் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. தமிழர்கள் என்ற முறையில் தங்கள் தார்மீக ஆதரவைக் கொடுக்க அவர்கள் முன் வந்த போதிலும், இவ்வியக்கத்தில் சேர்ந்து அதன் செயல்பாடுகளில் ஈடுபடுவதை அவர்கள் விரும்பவில்லை”.
> ***(Kerala State archieves : File No DDis 424/47 – CS English records – as quoted by Mrs. Ivy Peter –Malayalee Adikkayamum Thamilar Viduthalaiyum – Page 109)***

“கத்தோலிக்க சமுதாயத்தினரின் ஆதரவைப் பெறுவதில் எடுத்துக் கொண்ட முயற்சியில் முழு வெற்றியடையவில்லை. மலையாள பாதிரிமார்களின் கட்டுப்பாட்டிலிருந்த பங்குகளில் தமிழ் இயக்கத்துக்கு ஆதரவு கொடுப்பதை அவர்கள் தடை செய்தனர். கத்தோலிக்க சமுதாயத்தில் பெரும்பான்மையாக இருந்தவர்கள் மீனவர்கள். இவர்கள் பெரும்பாலும் மலையாள பாதிரிமார்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தனர். தமிழ் கத்தோலிக்க சமுதாயத்தினர் தி.த.நா. காங்கிரசை ஆதரிக்க வேண்டாம் என்றும் A.J.ஜாண், P.T.சாக்கோ, அக்கம்மா செறியான் ஆகியோர் அங்கமாக இருக்கும் சமஸ்தான காங்கிரசையே ஆதரிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்து துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டன”. ***(Ibid – Page 109)***

“பறையர் சமுதாயத்தினரும் இவ்வியக்கத்திற்குத் தங்கள் ஆதரவைக் கொடுக்கவில்லை. அகில திருவிதாங்கூர் பட்டிகை சமுதாயத்தினரின் கூட்டமைப்பு (All Travancore Schedule Caste Federation) என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அதன் சார்பில் பல கூட்டங்கள் நடத்தி தி.த.நா. காங்கிரசை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தனர்”. ***(Ibid – Page – 110)***

“1947 – நவம்பர் மாதத்தில் கல்குளம் தாலுகாவிலுள்ள பிரம்மபுரம் என்ற ஊரில் கிருஷ்ணன்வகை சமுதாயத்தைச் சேர்ந்த முக்கிய தலைவர்களில் ஒருவரான கொச்சப்பன் பிள்ளை என்பவர் தி.த.நா.கா சார்பில் ஒரு கூட்டம் நடத்த ஒழுங்கு செய்தார். கிருஷ்ணன்வகை சமுதாயத்தை சேர்ந்த சுமார் 1000 பேர் அங்கு திரண்டு வந்து அச்சமுதாயத்தின் சார்பில் அங்கு கூட்டம் நடத்தக் கூடாதென்று கூச்சலிட்டனர்”. ***(Ibid – Page – 110)***

“வெள்ளாளர் மகாசபை என்ற அவர்களது சமுதாய அமைப்பு அதன் உறுப்பினர்களை தி.த.நா.காங்கிரசிலிருந்து விலகி நிற்குமாறும், தேர்தலில் தி.த.நா.காங்கிரசுக்கு வாக்களிக்கக் கூடாதென்றும் அறிவுறுத்தியது”. ***(Ibid – Page – 111)***

“கேரள முதலிச் சமுதாயத்தினரும் இவ்வியக்கத்தில் ஆர்வம் காட்டவில்லை. நூல் உரிமம் பெறுவதற்கு அரசின் ஆதரவு கிடைப்பதற்காக அவர்கள் தி.த.நா.காங்கிரசிலிருந்து விலகி நின்றதோடு திருவிதாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் இயக்கத்திலும் தீவிரமாக ஈடுபட்டனர்”. ***(Ibid – Page – 111)***

ஆகையால் குமரி மாவட்டத்தில் உள்ள நாடார்களைத் தவிர பிற சமுதாயத்தவர்கள் அனைவரும் இப்போராட்டத்திற்கு எதிராக செயல்பட்டுள்ளனர். தோவாளைத் தாலுகாவில் வெள்ளாளர்கள்தான் பெரும்பான்மையினர். அங்கே தி.த.நா.காங்கிரஸ் சார்பில் தேர்தலில் நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள் என்றும் வென்றதில்லை. ஏன்? வெள்ளாளரான திரு.பி.எஸ்.மணி கூட, தி.த.நா.கா வேட்பாளராக இத்தொகுதியில் போட்டியிட்டும் தோல்வியைத்தான் கண்டார். இதுதான் அன்றைய நிலை. எனவே, திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் என்பது முழுக்க முழுக்க ஒரு நாடார் அமைப்பாக இருந்தது. அவர்களது விடுதலை வேண்டி நாடார்கள் பல இன்னல்களையும் உயிர்த்தியாகங்களையும் செய்தனர். முடிவாக வெற்றியும் பெற்றனர்.

## 71. அத்து மீறல்களும், துயரங்களும் :

11.08.1954 அன்று மார்த்தாண்டத்தில் பிற்பகல் 1.30 மணியளவிலும், புதுக்கடையில் மாலை 5.00 மணியளவிலும், தி.த.நா.காங்கிரஸ் பொதுக் கூட்டத்தினர் மீது கண்மூடித்தனமாக போலீஸ் பல்முறைச் சுட்டனர். இதில், மார்த்தாண்டத்தில் ஆறு நபர்களும், புதுக்கடையில் ஐவரும் உயிர் இழந்தனர். அத்துடனே போலீஸ் அட்டூழியம் நின்றுவிடவில்லை. தொடர்ந்து, 188 நாட்கள் போலீஸ்காரர்களின் கொள்ளையடித்தல், வீடுகள் சூறையாடுதல், மக்களை அச்சுறுத்தி பணம் பறித்தல், கண்டால் அறியுந்நவர்களைக் கைது செய்தல் போன்ற சமூதாய விரோதச் செயல்கள் ஏராளம் நடந்தன. அதே வேளையில் கல்குளம், விளவங்கோடு மற்றும்

திருவனந்தபுரம் சிறைச்சாலைகளில் அடைக்கப்படிருந்த தொண்டர்கள் அடைந்த சிறைத் துயரங்கள் சொல்லில்லடங்கா.

1919 ஏப்ரல் 13-ம் நாள் பஞ்சாப் மாகாணத்தில் அமிர்தசரஸ் ஊரில் இருக்கின்ற ஜாலியன் வாலாபாக் சதுக்கத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்கள் 400-க்கும் மேல், காயமுற்றவர்கள் சுமார் 2500. அந்த சதுக்கத்தில் இருந்த பாழ்கிணற்றில் குதித்து உயிர் நீத்தவர்களின் எண்ணிக்கையின் அதிகாரப்பூர்வ கணக்கு இன்று வரை அறிய முடியவில்லை. இந்த படுகொலை நடந்தது ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்திய ஆட்சிகாலத்தில். ஆனால் அந்த துயரம் அன்றோடு அதாவது 13.04.1919 நாள் மட்டும் நடந்து நின்று விட்டது. அதற்குப் பிறகு போலீஸ்காரர்களின் நரவேட்டைத் தொடரவில்லை. அவர்கள் தொடர்ந்து மக்களைத் துயரப்படுத்தவுமில்லை.

ஆனால் பட்டம் தானுபிள்ளையின் மலையாளி போலீசாரின் நரவேட்டை 11.08.1954 முதல் 04.02.1955 வரை அதாவது மைசூர் உயர்நீதிமனறத்தில் ஏழு சட்டமன்ற உறுப்பினர்களும் ஜாமீனில் விடுவிக்கப்படும் வரை, அதாவது 188 நாட்கள் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தொண்டர்கள் மீது தொடர் வன்கொடுமைகள் இழைக்கப்பட்டன. அத்தகையக் கொடுமைகளின் தன்மைகளை அனுபவித்தவர்கள் வாயிலாக கேட்கும்போது நமது நெஞ்சம் வெடித்துவிடும் போலத் தோன்றும்.

இந்தச் செய்திகள் அனைத்தும் டாக்டர்.டீ.பீட்டர் எழுதி வெளியிட்ட **“குமரி மாவட்ட விடுதலை, கல்குளம் - விளவங்கோடு நாடார் மக்கள் தந்த விலை 1948 to 1954"** என்ற புத்தகத்திலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளதாகும்.

1. **முதன்முதலாக திருவனந்தபுரம் அரசு சட்டக் கல்லூரி மாணவன், தக்கலையைச் சார்ந்த திரு.S.M. ஞானப்பிரகாசம் எழுதுவதைப் பார்ர்போம்.**

"……I was a law student studying in the Trivanduram Law College …. on Saturday the 14th (August 1954) I started from Trivandrum and reached my native town Thuckalay at about 8.30 A.M. When I was walking home from the bus stand the Sub-Inspector of police Mr. Kuttikrishna Menon arrested me and took me to the police station".

"….. The P.C. Achuthan came from the Inspector's room and asked me to remove my shirt. Then he took my money purse and hand it over to Thanupillay (P.C.5888)…. Then the above mentioned Achuthan took me to the Western end of the passage that runs north of the biggest Lock-up. He then caught me by my hair and pressed my neck down, placed my neck in between his two thighs and began pounding me with his right elbow at the lower part of my back. The three other constables who were standing by joined with him in the terrible process. The four began pounding me on my back in quick succession with elbows, fist and heels. Each blow came down upon me with such a force that my back began to sink lower and lower down while neck got in the tight hold of the thighs. At last I found myself lying flat on my face, the constables still kicking me with the heels. I yelled like a dog in pain and crawled like a worm on the floor. This inhuman process continued for about 10 minutes until at last the Sub-Inspector who had either given permission or ordered the constable to test heir hands upon me who had all along been hearing my helpless cries of agony came and stopped it".

"Sir, words fail to describe the magnitude of the sufferings we suffered in the police station. Every thing that befell on us after August 11th was some thing repugnant to human nature and human dignity. It was degrading to the hearer the sufferers. Every

Lock up room was an unworthy of a democratic country. I did not feel it like one run by a civilized country. On the other hand I felt as if I had fallen into the hands of an uncivilized barbarous a and brutish who had neither any sense of justice nor any humanity we were not treated like human beings". ***(Ibid-Page 52,53,54)***

ஒன்றுமறியாத சட்டக்கல்லூரி மாணவனுக்கே இந்த கதி என்றால் சாதாரண மனிதனின் கதி எவ்வாறு இருந்திருக்கும்?

**2. திரு.ஜி.முத்துநாயகம், ஒரு அரசாங்க ஊழியர். ஆவர் தனது பணி நிமித்தம் காப்பிக்காடு வழியாக படந்தாலுமூட்டுக்கு சென்று கொண்டிருந்தார். அவர் எழுதுகிறார்:**

"......காப்பிக்காட்டில் வைத்து திடீரென ரிசர்வ் போலீசாரின் வேன் வருவதைக் கண்டேன். எனது முன்னிலையில் வந்ததும் வேகமாக நிறுத்தினார்கள். வேனில் உள்ளிலிருந்து "வெடிவைக்கனும்" என்ற குரலும், "மாகாணம் அமைக்கானாணு கட்சி பொருந்நு" என்று சொல்லி லத்தியாலும், தேக்கு மூடாலும் இடித்தனர். உடனே வேனில் ஏற்றி பூட்ஸ் காலால் முதுகில் மிதித்து, மாகாணம் வேணுமோடா, நேசமணி தன்றே ராசா தன்னியோடா" என்றும், "இங்ஙேர்க்கும் குறேக்கூட மாகாணத்தில் பங்கு கொடுக்கணமல்லோ", என்றும், "இந்தா பிடிச்சுசோ விளவங்கோடு மாகாணம்" என்றும் வைத்து இடிக்கு மேல் இடி இடித்தனர். பின்னர் எனது கையிலிருந்து பைலை வாங்கி பார்த்தனர். "எவிடே யாணடோ நினக்கு ஜோலி" என்றும், பாம்கூர் இன்ஸ்றக்டெர் என்று அறிந்ததும் "கருப்புகட்டியாணோடா" என்றும் கூறி இடித்தனர். பின் கையில் பிச்சாத்தி வல்லதும் உண்டோ என்று இடுப்பு, பாக்கெட் எல்லாம் பார்வையிட்டனர். அப்போது கையில் இருந்த ரூபாயை 98-14-0 கண்டதும் எடுத்தனர். பின் புதுக்கடையில் வேனை நிறுத்தினர். சிலர் உள்ளிருந்து என்னை கொடுமையாக தாக்கினர். அதில் ரத்தமும்

பீறிட்டது. பின் ஏண்டா கருப்புகட்டி, ஸ்டேஷனில் சென்று கருப்புகட்டி காய்க்கணும் என்று சொல்லி அடியை நிறுத்தினர். நான் மூச்சற்றுக் கிடந்தேன்....” ***(பக்கம் - 109 - 110)***

**3. D. ராமைய்யன், மருதூர் குறிச்சி,**

“......நான் கோர்ட் மறியலுக்கு ஆகஸ்டு 11-ம் தேதி போயிருந்தேன். பள்ளியாடி சப் ரெஜிஸ்ட்ரார் ஆபிஸ் முன் வைத்து அரஸ்டு ஆனேன். வேனில் ஏற்றி சுற்றி வந்தார்கள். வழியில் கண்டவர்களையெல்லாம் வேனில் ஏற்றி அடித்தார்கள். ஆகஸ்டு 12-ம் தேதி முதல் எல்லோரையும் இறக்கிவிட்டு அடியும் இடியும் தந்தார்கள். கேடி பொன்னப்பன் ஆசாரியின் போதனையால் என்னை பிரத்தியேகம் ஸ்டேஷன் பின்பக்கம் கொண்டு போய் இடித்தனர். நான் மயங்கி விழுந்தேன் ......”. ***(பக்கம் - 76)***

**4. விளவங்கோடு ஆறுதேசம் கொச்சுநாடார் செல்லன் கூறுகிறார் :**

“......1954 ஆகஸ்டு 11-ம் தியதி காந்தி மைதானத்தில் இருந்து புறப்பட்ட கோர்ட் மறியல் பார்ட்டி 17 பேரில் நானும் ஒருவன்... அடியாலும் இடியாலும் கீழே விழுந்த என்னை காலால் மிதித்தார்கள். பின் லாக்கப்பில் அடைத்தார்கள். 2.00 மணிக்கு மேல் போலீஸ் ஸ்டேஷன் ஒரு கொலைக்களமானது. மாலையில் நூற்றுக்கணக்கணக்கான பேரை கொண்டு வந்து படுத்தியபாடு சொல்லவோ, எழுதவோ முடியாது. செத்த பிணங்களாக இழுத்து வந்தார்கள். பயந்து நடுங்கினோம்.......” . ***(பக்கம் - 77)***

**5. குண்டடிபட்டு படுகாயம் அடைந்த ஆறுதேசம் குஞ்சுகாளி தங்கராஜ் எழுதுகிறார் :**

“......ஆகஸ்டு 11-ம் தியதி புதுக்கடையில் நடந்த கூட்டத்துக்கு சென்றிருந்தேன். கூட்டம் தொடங்கி சிறிது நேரத்தில் போலீஸ் சுட்ட சத்தம் கேட்டது. கூட்டம் கலைந்து ஓடியது. வலது

கைபுஜத்தினருகலாய் ஓர் குண்டு வந்து பாய்ந்தது. மூர்ச்சையற்று விழுந்தேன். பின் மறுநாள் காலையில் விழித்தேன். பக்கத்து வீட்டு பன்றி வளர்க்கும் கூட்டின் மேல் கிடந்தேன். தூக்கி போட்டவர் யார் என்று தெரியாது. எனக்கு எழுந்து நடக்கவோ, நிற்கவோ முடியாது. பின்பாகம் பாய்ந்த குண்டு மார்பில் நாலுவிரல் வீதியில் துளைத்துக் கொண்டு போயிருந்தது. என் அண்ணன்மார்கள் வந்து தூக்கி வீட்டுக்குக் கொண்டு போனார்கள். பின் ஒரு டாக்டரிடம் ரகசியமாய் சிகிட்சை பெற்றேன். 4 மாதங்களுக்கு பிறகு டாக்டர். மத்தியாசிடம் சிகிட்சை பெற்றேன். எனக்கு திரும்ப முடியாது - கை அசைத்து வேலை செய்ய முடியாது. . . . . .” ***(பக்கம் -77)***

### 6. ஆறுதேசம் சாமி பொன்னையா கூறுகிறார்:

“......1954 ஆகஸ்டு 11-ல் புதுக்கடை கூட்டத்துக்கு போனேன். கூட்டம் நடந்து கொண்டிருந்த போது வெடிச்சத்தம் கேட்டது. சிலர் வெடிபட்டு கீழே விழுந்தனர். நானும் ஓடினேன். வலது கால் துடையில் துப்பாக்கி குண்டு பாய்ந்தது. நான் விழித்து பார்க்கும் போது நெய்யூர் ஆஸ்பத்திரியில் இருந்தேன். இரணியல் P.C. வந்து கெட்டவார்த்தைகளால் ஏசினார் . . . . இப்பொது எனக்கு நடமாட முடியாது .......”. ***(பக்கம் - 79)***

### 7. சாமுவேல் நாடார் மகன் தாசன் நடார் எழுதுகிறார்

“......கடையில் ஆட்களை காணாத ஆத்திரத்தில் மேசையை உடைத்து எனது மனைவியின் பணைய மீட்டுக்கு வைத்திருந்த 128 ரூபாயும், மற்றும் மேசையில் இருந்த 225 ரூபாய் 12 அ.9 பைசாவையும், கணக்கு புக்கையும் எடுத்தனர். மேலும் 9 சில்லுகளையுடைய கண்ணாடி பெட்டியையும், சில்லறை சாமான்களையும் உடைத்து நாசப்படுத்தினர். மேலும் கோபம் தீராமல் பெட்ரோமாக்ஸ் லைட்டு ஒன்றும், டார்ச்சுலைட் ஒன்றும், பழக்குலைகளையும் எடுத்துச் சென்றனர் .....”. ***(பக்கம் - 82)***

## 8. ஆறுதேசம் எஸ். எரோனிமூஸ் எழுதுகிறார்

"......சுமார் 5.30 மணிக்கு என் வீட்டில் கூட்டமாக போலீசார் வந்து வீட்டுக் கதவை சமட்டி திறந்தார்கள். வீட்டிலிருந்த என்னை அடிச்சும், இடிச்சும், தோக்கின் பாத்தியாலும் இடித்தார்கள். பிறகு போலீஸ் வேனில் ஏற்றினார்கள். வேன் குழித்துறையில் போனதும் எனது கழுத்தில் இட்டிருந்த ஒரு பவுன் எடையுள்ள ஒரு செயினையும், மோதிரத்தையும் பயமுறுத்தி தட்டிப்பறித்தார்கள். என்னை குழித்துறை லாக்கப்பில் ஆக்கப்பட்டேன். அங்கும் அடியும், உதையும் கணக்கில் மீறியிருந்தன. என்னிடம் விசேஷித்த ஏழு கல்லுகளுடைய ஒரு ஜோடி கடுக்கன் மாத்திரம் பயிலில் சேர்த்து வாங்கினார்கள். எண்பது நாட்கள் கழித்து ஜாமீனில் இறங்கினேன். அதற்கு பிறகு காட்டுக்கடை வைத்தியரிடம் சிகிட்சை பெற்றேன்.........". ***(பக்கம் - 86)***

## 9. ஆர். நாடான் கண்ணு நாடார், பைங்குளம் தனது துயரத்தை குறித்து இவ்வாறு கூறுகிறார்

"......ஆகஸ்டு 11-ல் என் கடையை திறக்கவில்லை . . . . சாயங்காலம் 7.00 மணிக்கு கடையை திறந்தேன். சாமான் எடுப்பதற்குள் றிசர்வு போலீஸ் வந்தது. கழுத்தை பிடித்து வேனில் ஏற்றும் போது கழுத்தில் கிடந்த 2 பவுன் மாலையை எடுத்தார்கள். சுடடா சுடடா, என்று வண்டிக்குள்ளிலிருந்து சத்தம் வந்து கொண்டிருந்தது. நான் தப்பி ஓடிவிட்டேன் .........". ***(பக்கம் - 91)***

## 10. ஆர்.தங்கையய்யன் நாடார், பைங்குளம்

..... 1954 ஆகஸ்டு 11-ம் தியதி 7.00 மணிக்கு எனது கடைக்கு சாமான்கள் கொண்டு வரும் போது D.S.P., A.S.P., மாஜிஸ்டிரேட்டு, சர்க்கிள், சப் இன்ஸ்பெக்டர் உள்பட 4 வேன் நிறைய போலிஸ்சாரும் என் கடையின் பக்கம் நின்றார்கள். அப்போது A.S.P., என்னிடம் யார் என்று கேட்க நான்தான் என்றதும், பெயர் என்ன என்று கேட்டார். தங்கைய்யா என்றேன். சாதி என்ன என்று கேட்க நாடார் என்றதும்

வேனில் ஏறும்படி A.S.P., என்னிடம் கூறவே வேனில் ஏறினேன். நான் ஏறிய வேனில் பி.சி. லச்சுமணன் நாடாரும், C10 முஞ்சிறை சுகுமாரன் நாயரும், பி.சி. பாகோடும் இருந்தார்கள். . . . . . என்னை ஏற்றிச் சென்ற வேன் வெட்டுமணியிலிருந்து தக்கலை சென்றது. குழித்துறை போகும் வழியில் ரிசர்வ் போலீஸ், தோக்கு மூடு கொண்டும், கால் கொண்டும் தாக்கினார்கள். பிறகு அங்கிருந்தவர்களுடன் நானும் தள்ளப்பட்டேன். அப்போது பி.சி. 1001-ம், நெய்யாற்றின்கரை காளை என்ற இடியன் கிருஷ்ணபிள்ளையும், பி.சி. சாகிப்பும் முதலாவதாக வந்து என்னை தாக்கினார்கள். பி.சி. 1001 எனது முதுகின் மீது இருந்து கொண்டே, நின்னே தன்னே முதலாவது கொல்லும்டா, என்று கூறிக்கொண்டே என்னை பலமாக தாக்கினார். அவ்வமையம் நல்லதம்பி நாடார், பார்சல் செல்லப்பன், போன்றவர்களை லாக்கப்பின் உள்வைத்து தாக்கிக் கொண்டு இருந்தார்கள் . . . . . ***(பக்கம் - 92, 93)***

**11. எம். ராமசுவாமி நாடார், பைங்குளம்**

**. . .** 1954 ஆகஸ்டு 11-ம் தியதி திரு - தமிழக விடுதலை தினத்தை முன்னிட்டு எனது வியாபாரஸ்தலமான புதுக்கடை சந்தைக்கு முன் இருக்கின்ற பலசரக்கு கடையை நான் திறக்கவில்லை. எனது கடைக்கு பின்தான் பொதுக்கூட்டம் நடந்து கொண்டிருந்தது . . . . வேறு சிலர் என்னையும் பலரையும் பிடித்து வேனில் இழுத்து தள்ளினர். வேனில் வைத்தும் லாக்கப்பிற்கு முன்னிலும், லாக்கப்பில் வைத்தும் என்னை மிருகத்தனமாக தாக்கினர். மூன்று தினங்கள் எனக்கும் மற்ற ஆட்களுக்கும் யாதொரு விதமான உணவும் தரவில்லை. நான் இப்போதும் நாட்டு வைத்தியமாக இருக்கிறேன் . . . . . ***(பக்கம் - 94)***

**12. என். கொச்சன் நாடார், பைங்குளம்**

**. . .** 1954 ஆகஸ்டு 11-ம் தியதி துப்பாக்கி பிரயோகம் கொண்டு புதுக்கடையில் கிடந்த நாடான் குட்டி நாடார்,

லெச்சுமணனன் நாடானை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகும் வழியில் ரிசர்வு போலீசார் பிடித்து அடியும், இடியும் தந்ததால் இப்போ நான் வேலை செய்ய முடியவில்லை. துப்பாகிமூடு கொண்டு நெஞ்சில் இடித்ததால் ரத்தம் சற்திச்சேன். பல குடிவைத்தியம் செய்தும் பலன் இல்லை . . . . . ***(பக்கம் - 94)***

**13. என். செல்வராஜ், மார்த்தாண்டம்**

இவர் ஒரு மாணவன். பள்ளிக்கூடத்திலிருந்து ஆகஸ்டு 11-ம் நாள் கடைப்பிடித்த விடுதலை தினத்தன்று மாணவர்கள் ஜாதா சென்ற போது . . . . . இவ்வாறு எழுதுகிறார்.

> நான் வழக்கம்போல ஆகஸ்டு 11-ம் தியதி 8.30 மணிக்கு பாடசாலை சென்றேன். திரு - தமிழக விடுதலை தினமானபடியால் நாங்கள் பாடசாலையில் இருந்து ஜாதாவாகப் போக ஆரம்பித்தோம். தலைமை உபாத்தியாயர் ரிசர்வு போலீசை வருத்தியிருந்தார் . . . நான் வேனை நீக்கித் தரும்படி கேட்டேன். அதற்கு போலீசார் சுட்டுவிடுவோம் என்று பயமுறுத்தினார்கள். சுடுங்கள் என்று சொல்லி எல்லோரும் முன்னேறி மேற்கு திசையாக ஜாதாவாக் போய்க் கொண்டிருந்தோம். குழித்துறை சென்றதும் வேனை கொண்டு வந்து எங்கள் முன்னே நிறுத்தினார்கள் . . . . உடனே என்னை அடித்துப் பிடித்து வேனில் போட்டார்கள். வேனில் உள்ளே போட்டு உதைத்தார்கள். அடித்தார்கள். கூச்சல் போடாதே என்று இடித்தார்கள். “மாகாணம், இதோ வாங்கிக்கோடா” என்று திரும்பவும் தோக்கு மூடால் இடித்தார்கள். கடைசியில் மூச்சு இல்லாமல் ஆனேன். அன்றைய தினம் என் கையில் எனக்கும், தங்கைக்கும் பீஸ் கொடுக்கும்படியாக 15- ரூபாயும், என் கழுத்தில் தங்க செயினும், இரண்டு மோதிரமும், வாட்சும் இருந்தது. நான் உணர்வு வந்து பார்க்கும் சமயம் இதுகள் ஒன்றும் இல்லாமல் என் உடைகள் கிழிந்தும் என் உடம்பு

காயப்பட்டும் நரகவேதனை அனுபவித்து லாக்கப்பில் காணப்பட்டேன் ... பார்சல் செல்லப்பன், நல்லதம்பி நாடார் கோபால கிருஷ்ணன் அட்வகேட் இவரை அடித்து முடித்து போட்டுக்கிட்டு, வக்கீல் சாறே இக்கேஸ் ஏது வகுப்பில் கொள்ளிக்கலாம் என்று கேட்டு தாக்கினார்கள் ....". ***(பக்கம் – 122, 123)***

இவ்வாறு தங்களது சிறைத் துயரங்கள், போலீஸ் அட்டூழியங்கள் மற்றும் நீதிமன்ற வஞ்சனைகள் போன்ற துயர நிகழ்ச்சிகளால் பாதிக்கப்பட்ட 228 நபர்களிடத்திலிருந்தும் மார்ஷல் நேசமணிக்கு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. இந்த நபர்களில் கல்குளம் வட்டத்திலிருந்து 80 பேர்களிலிருந்தும், விளவங்கோடு வட்டங்களிலிருந்து 148 நபர்களிடமிருந்தும் பெறப்பட்டிருந்தன. இதில் விசேஷம் என்னவெனில், அகஸ்தீஸ்வரம் வட்டத்திலிருந்தும், தோவாளை வட்டத்திலிருந்தும் ஒரு நபரிடமிருந்து கூட இத்தகைய சிறைத் துயரங்கள் குறித்த விண்ணப்பம் வரவில்லை என்பதே. ஆனால் தியாகிகள் பென்ஷன் பெறுவதில் இந்த வட்டத்தினர் முன்னணியில் இருக்கின்றனர் என்பதும் சிந்தனைக்குரிய விஷயம் ஆகும். செய்யாத தியாகத்துக்கு கொள்ளாத அன்பளிப்பு. "பந்திக்கு முந்து, போருக்கு பிந்து" என்ற முதுமொழிக்கு நல்ல சான்று இவ்விருவட்ட தியாகிப் பென்ஷன்தாரர்கள் ஆவர். கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களில் போலீஸ் வன்மங்களுக்கு ஆளாக்கப்பட்டும், தியாகி பென்ஷன் வாங்குவதற்கு மறுத்தவர்களும் அனேகர் உண்டு. பணத்துக்காக நாங்கள் தி.த.நா.க. போராட்டங்களில் கலந்து கொள்ளவில்லை. தன்மானம் காப்பதற்காகவே இந்த போராட்டங்களில் ஈடுபட்டோம் என்று சொன்னவர்கள் ஏராளம். இந்த வரிசையில் மணலிக்கரை திரு.லாசர் பெருவட்டரைக் கூறலாம். கிள்ளியூர் திரு.ஜான்ஞானசிகாமணி காண்டிராக்டரைச் சொல்லாம். பைங்குளம் திரு.பேரின்பநாயகத்தைக் கூறலாம். முக்காடு சிட்டிக்கார தங்கப்பனைச் சொல்லலாம். இவர்களில் சிலர் தங்கள்

கல்வியைக்கூட தொடர இயலாத நிலை அங்கே உருவானது. போலீஸ் வேட்டைக்குப் பயந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் தங்கள் கல்வியை இழந்தனர். இளைஞர்களை கல்வி நிலையங்களுக்குச் செல்லவிடாமலும், பெரியோர்களை பணிக்கு செல்ல விடாமல் அவர்களின் பொருளாதார நிலையை சீர்குலைத்து சான்றோர் சமுதாயத்தை முடமாக்கி அழித்துவிடுவதையே நோக்கமாகக் கொண்டு பட்டம்தாணு பிள்ளையின் மலையாளி அரசு திட்டமிட்டு செயல்பட்டது. உண்மையில் இப்பேர்பட்டவர்கள் தான் "தியாகி" என்ற சொல்லுக்குச் சான்றானவர்கள் எனக் கருதலாம்.

போலீஸ் அட்டுழியங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்த பிறகு, பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து, அவர்கள் அனுபவித்த சிறைக் கொடுமைகள் குறித்தும், போலீஸ் அராஜகம் குறித்தும் விளக்க விண்ணப்பங்களை தி.த.நா.க. தலைவர் "செய்தித்தாள்" (தினமலர் போன்ற) வாயிலாக கோரப்பட்டுள்ளது. அதை ஏற்றுத்தான் மேலே குறிப்பிட்ட 228 தியாகிகளும் தங்களது விளக்க மனுக்களை மார்ஷல் நேசமணிக்கு அனுப்பி வைத்தனர். இந்த 228 நபர்களில் எவரும் திரு.நேசமணியை கடிந்து கொள்ளவோ அல்லது தூஷித்துப் பேசவோ இல்லை என்பது நோக்குதற்குரியது. இது எதைக் காட்டுகிறது. மக்கள் மார்ஷல் நேசமணியின் தலைமையில் முழு நம்பிக்கை வைத்திருந்தனர் என்பதைக் காட்டுகிறது. தங்களை அவர் எவ்வாறேனும் காத்துக் கொள்வார் என்று அசையா நம்பிக் கொண்டவர்களாக அவர்கள் காணப்பட்டனர். வெடிச்சத்தம் கேட்ட உடனே ஜீவாவைப்போல காட்டுப்பாதை வழி வேறு நாட்டுக்கு தப்பி ஓடி மறைந்து கொள்பவர் மார்ஷல் நேசமணி அல்லர் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். ஆகவேதான் அவர்கள் மார்ஷல் நேசமணிக்கு நேராக "எங்கள் ராசாவே, அப்பச்சியே" என்று அபயக்குரல் எழுப்பினர். அப்போதெல்லாம் அவர் அங்கே ஓடோடியும் வந்துள்ளார். ஆனால் அன்னாருடன் ஒப்பனைக்காக அரசியல் களத்தில் இருந்தவர்களும் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

மார்ஷல் நேசமணி மீது குற்றம் கண்டுபிடிப்பதற்கென்றே பாவலா மரியாதை தந்தவர்களும் உண்டு. தேவிகுளம் மறியலைக் கேட்ட உடனே "யாரைக் கேட்டுக் கொண்டு, அல்லது யாரின் அறிவுரையின் நிமித்தம் மூணாறில் தடையை மீறினார்கள்" என்று ஈனக் குரல் எழுப்பியவர்களும் உண்டு. இதில், அரசு உயர் அதிகாரிகள், பெருவணிகர்கள், வழக்கறிஞர்கள், ஆங்கில மொழி ஆர்வலர்கள், மேற்படிப்பு புள்ளிகள் போன்ற மேட்டுக்குடி கனவான்களாகிய திருவாளர்கள். பி.ராமசுவாமிபிள்ளை, எ.எம்.சைமன்,என்.எ.நூர்முகமது, வி.கே.ராஜாபிள்ளை மற்றும் எம்.கே.பாவா போன்றோரைக் குறிப்பிடுகிறார் திரு.எ.அப்துல்ரசாக்.

எனவே தென் திருவிதாங்கூர் தமிழர்கள் குறிப்பாக நாடார்கள் தங்களது உயிர்களைத் துறந்தும், அடிபட்டும், இடிபட்டும், ரத்தவாந்தி எடுத்தும், வெண்சிறையேறியும், லாத்திக் கம்பாலும் தோக்கு மூட்டாலும் இடிகள் வாங்கியும், பூட்ஸ் காலால் மிதிபட்டும், தம் பொருட்களை இழந்தும், நகைகளை பறி கொடுத்தும் தான் இந்த குமரி மாவட்டத்தை உருவாக்கியிருக்கின்றனரேயல்லாமல் மலையாளிகள் இரத்தினக் கம்பளம் விரித்து "போய் வா தமிழனே" என்று அம்மானை பாடி வழி அனுப்பி வைக்கவில்லை என்பதை இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்து கொள்வது நல்லது. தெரிந்து தெளிவடைவதற்கு இப்பேர்பட்ட விடுதலை வரலாற்றுப் புத்தகங்களை வாங்கிப் படித்து தெளிவடைய வேண்டும், விடுத்து சப்பைப் புத்தகங்களையோ, திரிக்கப்பட்ட செய்திகளையோ படித்துவிட்டு வரலாறு படைத்தவர்களை தூஷிப்பது அறிவீனம்.

## 72. குமரித் தந்தை நேசமணிக்கு மணிமண்டபம் :

அண்மையில் (20.09.2010) தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் நாகர்கோவிலில் நடந்த தி.மு.க முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு மார்ஷல் எ.நேசமணிக்கு மணிமண்டபம் அமைப்பதற்கான அறிவிப்பை வெளியிட்டார்கள். அவ்வமையம்

அவர் குறிப்பிட்டார்:- "... இங்கே தான் குமரி மாவட்டத்துக்காக, தாய் தமிழகத்தோடு குமரி மாவட்டம் இருந்தே தீர வேண்டும் என்பதற்காக, மார்ஷல் நேசமணி தலைமையில் மாபெரும் போராட்டம் நடத்திய தொண்டர்கள் இன்னமும் இருக்கிறார்கள். அவர்கள் மார்ஷல் நேசமணிக்கு காட்ட வேண்டிய மரியாதையை, அவர் பிறந்து, வளர்ந்து, தொண்டாற்றி, சிறைபுகுந்து, தியாகம் செய்த அவர்கள் கட்சியிலிருந்து எதையும் செய்யவில்லையே என்ற குறையை தீர்க்கக் கூடிய ஒருவன் கருணாநிதிதான் என்று வந்ததும் வராததுமாக கோரிக்கை எழுதிக் கொடுத்தால் மறந்து விடுவேன் என்று அச்சில் ஏற்றி கோரிக்கை அளித்து இருக்கிறார்கள்" என்று பேசினர். ***(தினகரன் 21.09.2010 – பக்கம் – 1)***

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளபடி (....அவர்கள் மார்ஷல் நேசமணிக்கு காட்ட வேண்டிய மரியாதையை, அவர் பிறந்து, வளர்ந்து, தொண்டாற்றி சிறை புகுந்து தியாகம் செய்த அவர்கள் கட்சியிலிருந்து எதையும் செய்யவில்லையே....?) என்பதை யாரை சுட்டி நிற்கிறது. மார்ஷல் நேசமணி தந்தையாக நின்று உருவாக்கிய "காங்கிரஸ் கட்சி"யைத்தான் குத்திக்காட்டுவதாக அது உள்ளது. தந்தைக்கு மக்கள் செய்ய வேண்டிய கடமையை, காட்ட வேண்டிய மரியாதையை குமரி மாவட்ட காங்கிரஸ்காரர்கள் காட்டாமல் முற்றிலும் அவரை மறந்து விட்டனர் என்பதையே நாசூக்காக அவர் குத்திக் காட்டினார். இது முற்றிலும் உண்மை.

ஆனால் காங்கிரஸ்காரர்களோ, இம்மாவட்டத்தின் தத்துபிள்ளையான திரு.காமராசருக்கு கன்னியாகுமரியில் அரசு மணிமண்டபம் அமைக்க வேண்டும் என்று உண்ணா நோன்பு போராட்டம் நடத்தியதை யாரும் மறந்திருக்கமாட்டார்கள். நாகர்கோவில் வேப்பமூடு சந்திப்பில் நிறுவியிருந்த திரு.காமராசரின் சிலையை, Crane உதவி கொண்டு அகற்றுவதற்கு நாகர்கோவில் நகராட்சி முயற்சித்த போது, இம்மாவட்ட காங்கிரஸ்காரர்கள்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.குமாரதாஸ் தலைமையில் “சிலை கட்டிப்பிடிப்பு“ போராட்டம் நடத்தியதையும் மக்கள் மறந்திருக்கமாட்டார்கள். ஆனால் இந்த தத்துப்பிள்ளைக்கு சிலை நிறுவுவதற்கான இடத்தை, அதாவது கன்னியாகுமரி மாவட்டம் என்ற 1684 சதுர கிலோ மீட்டர் பரப்புக் கொண்ட செல்வம் கொழிக்கும் பூமியை தமிழகத்துக்கு உருவாக்கித் தந்த “நவீன பரசுராமனுக்கு” அவன் பிறந்த வீட்டில் மரியாதை இல்லை என்பதையே மாண்புமிகு கலைஞர் சுட்டிக்காட்டி, காங்கிரஸ்காரர்களுக்கு சம்மட்டி அடி கொடுத்திருப்பதை மக்கள் மறந்து விடக்கூடாது. இந்த நன்றி கெட்ட காங்கிரஸ்காரர்கள் மார்ஷல் நேசமணிக்கு திரு.காமராசர் பொன்னாடை போர்த்துகின்ற நிழற்படத்தைக் கூட கன்னியாகுமரி காமராசர் நினைவு மண்டபத்தில் வைப்பதற்கு மனமில்லாதவர்களாகக் காணப்படுவதையும் சேர்த்தே கலைஞர் அவர்களைச் சாடியிருக்கிறார். மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு இம் மாவட்ட கிறிஸ்தவ நாடார் மக்களின் சார்பில் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம். “நன்றி”. “மனமார்ந்த நன்றி”. மார்ஷல் நேசமணிக்கு மணிமண்டபம் கட்டப்படாமல் இருப்பினும் நாங்கள் அரசை குறைத்துப் பேசமாட்டோம். இந்நாள் காங்கிரஸ்காரர்களுக்கு கிடைத்த சாட்டை அடியை நாங்கள் வரவேற்கிறோம். இந்த சாட்டையடியானது இம்மாவட்டத்தில் காங்கிரஸ்காரர்களின் அழிவுக்கு அச்சாரம் தந்தாற்போன்று அமைந்து உள்ளது. அவர்கள் அழியட்டும். மார்ஷல் நேசமணி உருவாக்கித் தந்த இந்த பூமியில் நன்றி கெட்ட காங்கிரஸ்காரர்கள் இனிமேல் அரசியல் நடத்தக்கூடாது.

## 73. வரலாற்றில் நேசமணி :

மார்ஷல் நேசமணி 1947 செப்டம்பர் திங்கள் 8 ஆம் நாளில் நாகர்கோவில் கஸ்பா சபை வளாகத்தில் அமைந்திருக்கும் ஆலன் நினைவு மண்டபத்தில் வைத்து “திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ்” என்ற அரசியல் அமைப்பை உருவாக்கினார். இந்த அமைப்பை வேறு சிலர் உருவாக்கியதாக நாஞ்சில் நாட்டு வரலாற்று ஆசிரியர்கள் பலர் எழுதத் தொடங்கியுள்ளனர். ஆனால், மார்ஷல்

நேசமணி அவர்கள் தானே இந்த அமைப்பை உருவாக்கியதாக திட்டவட்டமாகக் கூறுகிறார்.

> "...இதுவரை அமைதியோடு கவனித்துக் கொண்டிருந்த மார்ஷல் நேசமணி இப்போது பேச ஆரம்பித்தார். நான் தி.த.நாக.காவை ஆரம்பித்த அன்று முதல் ஒரு கூட்டமாக இயங்கினோம். கூட்டத்தில் பலர் இருந்தார்கள். இருந்தவர்களில் பலர் போயிருப்பார்கள்...". ***(திரு.எ.எ.ரசாக் – பக்கம் – 307)***

ஆகையால் இந்த அரசியல் அமைப்பை அவரே ஆரம்பித்தார். நாகர்கோவில்காரர் தான் ஆரம்பித்தார் என்ற பேச்சுக்களும், எழுத்துக்களும் இதனால் பொய்த்துப் போயிற்று. இருப்பினும் இன்றும் சில வெள்ளாம்பிள்ளைகள் தங்கள் முயற்சிகளைத் தொடர்ந்த வண்ணமிருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு.மு.கருணாநிதி அவர்கள் 'நெஞ்சில் நிறைந்த நேசமணி'யைக் குறித்து எழுதும் போது:

> "திருவிதாங்கூர் சமஸ்தான நிர்வாகத்தில் இருந்த தமிழ் நிலமான குமரிப் பகுதியை மீட்டு தமிழகத்தோடு இணைப்பதற்குப் போராடி வெற்றி கண்டவர் நேசமணி அவர்கள்" என்று குறிப்பிடுகிறார். ***(திரு. எ.எ. ரசாக் – அணிந்துரை பக்கம் – III)***

வெள்ளாம்பிள்ளை திரு.பி. எஸ்.மணி 15.03.1953 அன்று தி.த.நா.கா-வின் உறுப்பினர் பதவியிலிருந்து ராஜினாமா செய்துவிட்டு வெளியேறினார். இவர் எந்த கட்சியிலும் நிரந்தமாகவோ அல்லது நீடித்தோ இருக்கமாட்டார் என்று O.S.No:328/99-ல் தீர்ப்புக் கூறிய நாகர்கோவில் கூடுதல் உரிமையியல் நீதிபதி திரு.எம்.எஸ். சுப்பிரணியன் 14.07.2004-ல் கூறுகிறார். இப்பேர்பட்ட பல அரசியல் கட்சி உறுப்பினர், மார்ஷல் நேசமணியை புகழ்வதற்கும் தயங்கவில்லை. அவர் எழுதுகிறார்:

அன்புடையீர்,

“கழிந்த 30 ஆண்டுகளாக நான் உங்களை அறிவேன். இதில் 17 ஆண்டுகளாக நான் உங்களுடன் **சேர்ந்தும், பிரிந்தும் தூர நின்றும்,** உங்களை கவனித்திருக்கிறேன். குமரி மாவட்ட மக்களின் பெரும்பான்மையோர் உங்களிடம் அன்பும், மதிப்பும் கொண்டிருப்பதைக் காணுகிறேன். நீங்கள் விரும்பியிருந்தால் வேறு துறைகளில் மிக உயர்ந்திருக்க முடியும். எனினும் மக்கள் தொண்டு, அரசியல் இவற்றைக் கொண்டு குமரி மாவட்டத்தில் முதன்மை வகிக்கீறீர்கள். இம்மதிப்புக்குரிய தன்மைக்காகத்தான் என் வணக்கத்தையும், வாழ்த்தையும் இச்சந்தா்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதுமையடைந்திருக்கிறீர்கள். கட்சி சார்பில்லாமல் அனைவரும் உங்களை இந்நேரத்தில் பாராட்டுகிறார்கள். மகிழ்ச்சி. நீங்களும் இனி கட்சி சார்பற்ற உயரிய நிலையில் **குமரி மக்களின் தந்தையாக**, அறிவுரை கொடுப்பவராக இருக்க வேண்டுமென்று என் எதிர்பார்ப்பு.

தேக நலத்துடன் பல்லாண்டு வாழ பிரார்த்திருக்கிறேன்.

என்றுமுங்கள் பி.எஸ்.மணி” ***(குமரியை மீட்டோன் நேசமணி – பக்கம் – 112)***

மார்ஷல் நேசமணியின் 70-வது பிறந்த நாளையொட்டி திரு. பி.எஸ்.மணி விடுத்த வாழ்த்துச் செய்திதான் இந்தக் கடிதம். இந்தச் செய்தி திரு.பி.எஸ்.மணியின் உள்ளத்தின் ஆழத்திலிருந்து, உண்மையாக வெளிப்பட்டதாகும் என்று நாம் உணரலாம். இதில் வேறு சந்தேகத்துக்கு இடமில்லை.

குமரித் தந்தை மார்ஷல் எ. நேசமணி அவர்கள் 01.06.1968 அன்று காலமானார்கள். இவர் காலமாகி சரியாக பதினாறு (16)

ஆண்டுகள் கழித்து இதே பி.எஸ்.மணி, தன் வாயால் மனமாரப் புகழ்ந்த அதே நெஞ்சம், நேசமணியை இருட்டடிப்பு செய்யும் நோக்குடன் “நேசமணி ஒரு பொய்” என்ற வஞ்சக நூலை எழுதி நாஞ்சில் நாட்டில் பரவலாக வினியோகித்தார். குமரித் தந்தையை அவர் சார்ந்த சமுதாயமோ, அல்லது அவர் சார்ந்த காங்கிரஸ்காரர்களோ சிறப்பிக்காத நிலையில், அவர் மறக்கப்பட்டுவிட்டார் என்ற நினைப்பில், இத்தகைய ஒரு இருட்டடிப்பு புத்தகத்தைப் படைத்தனர் நாஞ்சில் நாட்டு வெள்ளாம் பிள்ளைகள். இந்த பொய் நூலுக்கு அச்சாரம் குறித்து, அணிந்துரை வழங்கியிருப்பவர் சாந்த சொரூபி என்று புனையப்பட்ட திரு.சாம் நத்தானியேல் ஆவார். அவர் குமரித் தந்தையாகிவிடலாம் என்று எண்ணியிருப்பார் போலும். இவைகளையே தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், நாகர்கோவிலில் 20.09.2010 அன்று நடந்த தி.மு.க. முப்பெரும் விழாவில் இவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

> “... இங்கேதான் குமரி மாவட்டத்துக்காக, தாய் தமிழகத்தோடு குமரி மாவட்டம் இருந்தே தீர வேண்டும் என்பதற்காக, மார்ஷல் நேசமணி தலைமையில் மாபெரும் போராட்டம் நடத்திய தொணடர்கள் இன்னமும் இருக்கிறார்கள். அவர்கள் மார்ஷல் நேசமணிக்கு காட்ட வேண்டிய மரியாதையை, அவர் பிறந்து, வளர்ந்து, தொண்டாற்றி, சிறைபுகுந்து, தியாகம் செய்த அவர்கள் கட்சியில் இருந்து எதையும் செய்யவில்லையே என்ற குறையைத் தீர்க்கக் கூடிய ஒருவன் கருணாநிதிதான்...” என்றுகூறி நேசமணி ‘பொய்’ அல்ல ‘உண்மை என்று விளம்பியுள்ளார்.

## 74. மக்கள் மனதில் நீங்கா இடம் :

மக்கள் மனதில் தனக்கென நீங்கா இடம் பிடித்தவர் குமரித்தந்தை மார்ஷல் நேசமணி, அவர் சொன்னால் ஆயிற்று என்ற சிறப்பு அவருக்கு மக்களிடத்தில் உண்டு, எது வந்தாலும்

அவர் பார்த்துக்கொள்வார் என்ற மனநிலை மக்களிடத்தில் ஆழமாகக் காணப்பட்டது. ஆனால் மக்களிடத்தில் தனக்கென எதையும் அவர் கேட்டதில்லை.

குமரிமாவட்டம் தாய்தமிழகத்துடன் இணைக்கப்பட்ட பிறகு, புதிய அரசியல் கூட்டுகளும், புதிய பழக்கவழக்கங்களும் உருவாகி பாண்டிக்காரனும், பாண்டிக்காட்டான்களும் சம்பந்தம் உருவாக்கி, குமரி அரசியலில் பெரும் சிக்கல்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இணைப்புக்கு முன்பு தமக்கும் தமது ஸ்தாபனமான தி.த.நா.காவுக்கும் எதிராக செய்யப்பட்ட சதிகளையும், கசப்புணர்ச்சிகளையும் மறந்துவிட்டு, காங்கிரஸ் வேட்பாளர்கள் என்ற ஒரே நோக்கில் அவர்களுக்காக மக்களிடத்தில் பரிந்து பேசி, மக்களால் நிராகரிக்கப்பட்ட T.T. டானியேல், தாணுலிங்க நாடார்களை வெற்றிப்பெறச் செய்வதற்காக தனது சொந்த செல்வாக்கை (Charisma) பயன்படுத்தி அவர்களை வெற்றிபெறச் செய்தபின்பும், தனது கட்சிப்பணியை குறைத்துப் பேச இவர்களே முன்னிறங்கினர். இந்த சூழ்நிலையில் 1962 -ல் மீண்டும் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

நன்றிகெட்ட இந்தப் போக்குக்கு தான் ஆளாக வேண்டாம் என்ற முடிவோடு, இத்தேர்தலை விட்டு ஒதுங்கி விடுவது என்று மார்ஷல் எ. நேசமணி முடிவு செய்துவிட்டார். இந்த நிலையில் காமராஜர் தலையிட வேண்டியநிலை ஏற்பட்டது. நேரிலும், பலமுறை தொலைபேசி மூலமும் தேர்தலில் ஈடுபடுமாறு நேசமணியை வற்புறுத்தினார் திரு. காமராசர். அவர் கட்சியிலிருந்து ஒதுங்கி வெளியேறிவிட்டால் அவரை எதிர்ப்பது பெரும் கஷ்டம் என்பதை திரு. காமராசர் 1953-ல் நடந்த திரு. கொச்சி இடைத்தேர்தல் மூலம் நன்றாக அறிந்திருந்தார். எனவே வற்புறுத்தி நேசமணியை நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட

வைத்துவிட்டார். நேசமணி களத்தில் நிற்கிறார் என்றால், காங்கிரஸ் அத்தனை இடங்களையும் வென்றுவிடும் என்பது காமராசர் அறிந்த ரகசியம்தான்.

ஆனால் தனது உடல் நிலை சரியில்லாததைக் காரணம் காட்டி தேர்தல் பணிகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டார் என்பது நிஜம். வாதநோயால் அவர் அவதிப்பட்டு வந்தது உண்மை. கட்சியின் விருப்பத்தை நிராகரிக்க வேண்டாம் என்ற எண்ணத்தில் அதை ஏற்றுக்கொண்டாலும், தேர்தலிலிருந்து ஒதுங்கி இருப்பது என்ற தனது முடிவில் உறுதியாக இருந்தார். வேட்பு மனுவை தாக்கல் செய்துவிட்டு தனது மகன் வில்சன் அப்பலோசை தனது தேர்தல் பிரதிநிதியாக நியமித்துவிட்டு, அம்பாசமுத்திரம் சென்று எ. அப்துள் ரசாக்கை கண்டு, வில்சன் அப்பலோசை வழி நடத்துவதற்குப் பணித்து விட்டு பம்பாய்க்கு தனது மகள் வீட்டில் ஓய்வுஎடுப்பதற்காக சென்றுவிட்டார்.

பொறுப்பை நிர்வகிக்கும் துணிவில்லாமல் மார்ஷல் நேசமணி தலை மறைவாகிவிட்டார் என்று தாணுலிங்கம், T.T. டானியேல் ஆகியோர் நாகூசாமல் எதிர்பிரசாரத்தில் இறங்கி விட்டனர். ஆனால் மக்கள் இவர்களது குதர்க்கப்பேச்சை சட்டை செய்யவில்லை. மார்ஷல் விரைவில் திரும்பி வந்து விடுவார் என்றும் பலர் பிரச்சாரம் செய்தனர். மார்ஷல் இல்லாதது காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களுக்கு படுபாதகத்தை உருவாக்கிவிடும் என்றும் காமராசருக்கு பாடம் புகட்டுவதற்காகவே நேசமணி களத்தில் இருந்து பின்னேறி விட்டார் என்றும் T.T. டானியேலும், தாணுலிங்கவும் காமராசரின் காதில் ஊதினர்.

ஓட்டுப்பதிவுக்கு முந்திய நாளன்று மார்ஷல் நேசமணி பம்பாயிலிருந்து திரும்பி வந்து விட்டார். மறுநாள் காலையில் தேர்தல் நடந்து கொண்டிருந்த வாக்குச் சாவடிகளை சுற்றிப்பார்ப்பதற்காக காலை 9.30 மணிக்கு புறப்பட்டு, நாகர்கோவில், செட்டிக்குளம்,

ராஜாக்கமங்கலம் ரோடு வழியாக மணவாளக்குறிச்சி, மண்டைக்காடு போன்ற வாக்குச் சாவடிகளை ஒரு பார்வை பார்த்தார். அவ்வளவுதான். மக்கள் ஆர்ப்பரித்தனர். மார்ஷல் வந்துவிட்டார், தந்தை வந்துவிட்டார் என்று உற்சாகம் பொங்க மக்கள் ஆரவாரம் செய்தனர். செய்தி காட்டுத்தீ போன்று குமரிமாவட்டம் ஓட்டுமொத்தமாக, நிமிடத்தில் பரவியது. வாக்குப்பதிவு விறுவிறுப்படைந்தது.

இதைப்போன்று குளச்சல், கருங்கல், புதுக்கடை, மார்த்தாண்டம் வந்து விட்டார் மார்ஷல். அங்கிருந்து ஆற்றுப்பாலம் வழி குறித்துறை வந்தார். இந்த இடம் நாயர்களின் கோத்திரம் ஆகும், அங்கிருந்த கூட்டத்தினரை உற்சாகப்படுத்திவிட்டு நாகர்கோவிலுக்கு திரும்பினார். வீடு வந்து சேர்ந்த மார்ஷலை பத்திரிகையாளர்கள் சூழ்ந்து தேர்தல் முடிவு எப்படியிருக்கும் என்று கேட்டனர்.

"நேற்று வீடு வந்து சேர்ந்த என்னால் எதைச் சொல்ல முடியும்" என்று கையைவிரித்தார்.

ஒருநாள் கழித்து முடிவுகள் வந்தன. அவரை எதிர்த்துப் போட்டியிட்டவர்கள் மூவரில் இருவர் ஜாமீனை இழந்தார். இழக்காதவர் ஒருவர். அரிசன வகுப்பைச் சார்ந்த விவேகானந்தர் மட்டுமே. ஆனாலும் இவர் விளவங்கோடு தாலுகா பக்கம் போகவேயில்லை. மக்களிடம் போகாமல், மக்களிடம் ஓட்டு கேட்காமல் எதிரிகளை தேர்தல் களத்தில் அடித்து வீழ்த்திய சாதனை உலகசாதனையல்லவா? இதைக்கண்டு பெருந்தலைவர் காமராசரே அசந்து போனார். வீடு வீடாக, தெருத்தெருவாக ஏறி இறங்கி, மக்களிடம் வாக்குக் கேட்டு அலைந்து திரிந்தும், காமராசர் தேர்தலில் தோற்றுப்போனார். இது குறித்து அப்துன்ரசாக் கூறுகிறார்:-

". . . இந்தியாவின் மிகப்பெரிய அதிசயம் என்னவென்றால், தொகுதிக்குப் போகாமலே, வாக்காளர்களை அணுகி அவர்களுடைய ஆதரவை கேட்காமலே இந்தியாவில் தேர்தலில் வென்ற இருவரில் ஒருவராக இவர் (நேசமணி) திகழ்ந்தார்.

மற்றவர் தேவர்த் திருமகன் என்று சிறப்பிக்கப்படும் முத்துராமலிங்கத் தேவர் ஆவார்.!"

இதைவிட இன்னொரு அதிசயம். "என் தேர்தல் தோழர்களுக்குத்தராத ஓட்டு எனக்குத் தேவையில்லை" என்று எந்த வேட்பாளனும் சொன்னதுண்டா?. பண்டித நேரு கூட சொன்னதில்லை. பேரறிஞர் அண்ணா சொன்னதில்லை. பெருந்தலைவர் திரு. காமராசர் சொன்னதுண்டா? ஏன், கலைஞர் மு. கருணாநிதியவர்கள் சொன்னதுண்டா? ஆனால் குமரித்தந்தை மார்ஷல் எ. நேசமணி அவர்கள் சொன்னார்!. கிறிஸ்தவர்களிடத்தில் துணிந்து சொன்னார். இது குறித்து திரு. அப்துல் ரசாக் எழுதுகிறார்.

". . . இல்லை, நாடாளுமன்றத்திற்கு மட்டும்தான் உங்கள் ஆதரவை எனக்குத் தருகிறீர்கள் என்றால், சங்கைக்குரிய குரு அவர்களே (Rev. Fr. Navamony) என்னை மன்னித்து விடுங்கள். என் தேர்தல் தோழர்களை விட்டுக் கொடுத்து விட்டு நான் உங்கள் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லை . . . அப்படிச் செய்ய முடியாவிட்டால் எனக்காக நீங்கள் இரக்கப்பட வேண்டாம். நான் கவலைப்படவும் மாட்டேன் . . . ஆனால், அழகப்பபுரம் வட்டாரத்தில் தனக்கு வாக்களிக்க வேண்டாம் (An Unworthy Vote is an Unholy Vote !) என்று நேசமணி உதாரமாகப் பேசியதைப்போல வேறுயாரும் எங்கும் பேசியதில்லை".

***எ.எ. ரசாக் - நேசமணி ஒரு சரித்திரத்திருப்பம் - பக்கம் -140 மற்றும் 141)***

இவர்தான் குமரித் தந்தை மார்ஷல் எ. நேசமணி மக்கள் தலைவர். மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துக்கொண்ட பெரும் விடுதலைவீரர். தமிழன் இழந்த மண்ணில் கொஞ்சத்தையாவது தமிழ்த்தாய்க்கு மீட்டுத்தந்த ஒரே வீரமகன் மார்ஷல் எ. நேசமணி ஆவார்.!!!

## 75. தமிழன் இழந்தது ஏராளம் !

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ்கூறும் நல்லுலகத்து! ". . . என்று பழந்தமிழகத்து எல்லையைக் குறித்தார் பனம்பாரனார். இவர் அதங்கோட்டு ஆசானின் ஊருக்கு அடுத்த ஊரான பனம்பழஞ்சியைச் சார்ந்தவர். தொல்காப்பியர், அதங்கோட்டு ஆசான் மற்றும் பனம்பாரனார் ஆகிய மூவரும் ஒரு சாலை மாணாக்கர் ஆவர். இந்த தமிழ் நிலத்தை தன்னரசுகளான சேர சோழ பாண்டியர்கள் கி.மு. 1000 முதல் கி.பி. 250 வரையில் சீரும்சிறப்புடனும் ஆண்டு வந்தனர். ஆனால் கி.பி. 250 முதல் கி.பி. 575 வரை இத்தமிழ் மண்ணை சேரர் மற்றும் பாண்டியர்கள் களப்பிரர் என்ற வேற்றரசுக்கு முற்றிலும் இழந்தனர். அதே போன்று சோழர்களும் தமிழ் மண்ணை கி.பி. 300 முதல் கி.பி. 900 வரை பல்லவர்களிடம் இழந்தனர். தமிழர்கள் இழந்த தங்களது நாட்டை பாண்டியர்கள் கி.பி. 575- ல் மீட்டு கி.பி. 875 வரை மீண்டும் ஆண்டனர். திரும்பவும் பாண்டிய நாட்டை கி.பி. 1310 -ல் இசுலாமியர்களுக்கும், கி.பி. 1364-ல் விசயநகர தெலுங்கர்களுக்கும், அவர்களைத் தொடர்ந்து கி.பி. 1529 -ல் கருநாடக நாயக்கர்களுக்கும் இழந்தனர். நாயக்கர்களைத் தொடர்ந்து மராட்டியர்களுக்கும், பிறகு கருநாடக நவாபுகளுக்கும் பாண்டிய நாடு கைமாறிற்று. அவ்வாறு பாண்டிய நாடு முழுவதும் ஆற்காடு நவாபுக்குச் சொந்தமாயிற்று. பிறகு இம்மண்ணை தமிழர்கள் மீட்கவே இல்லை. ஆற்காடு நாவாபின் இறையாண்மையின் கீழ் இன்றைய குமரிமாவட்டம், அதாவது நாஞ்சில் நாடு உள்ளடக்கம் இருந்தது. இந்த நாவாபிடமிருந்து நாஞ்சில் நாட்டை மலையாள நாடாகிய திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மா (கி.பி 1729 - 1758) கி.பி. 1752 -ல் கிரையம் கொடுத்து திருவிதாங்கூருடன் இணைத்துக்கொண்டார். இவ்வாறு பாண்டியர்களின் மண்ணான இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் மலையாள நாடான திருவிதாங்கூருக்கு சொந்தமாயிற்று. இது திருவிதாங்கூரில்

கி.பி. 1956- நவம்பர் முதல் தேதி வரை இருந்தது. இவ்வாறு தமிழர்கள் இழந்தது ஏராளம். சோழநாட்டை தமிழர்கள் இழந்தனர். சேரநாட்டை இழந்தனர். பாண்டிய நாட்டையும் முழுமையாக இழந்தனர். இழந்த தமிழ் மண்ணை யாரும் மீட்கவே இல்லை.

இந்திய சுதந்திர நாடான பிறகு தமிழ்நாடு என்றொரு மாநிலம் உருவாயிற்று. ஆயினும் தமிழ் மண்ணை முழுவதுமாக இந்த தமிழ்நாடு உட்கொள்ளவில்லை. கன்னியாகுமரி மாவட்டம் என்ற தமிழ் மண்ணை தமிழகத்துக்கு மீட்டுத் தந்தவர் குமரி தந்தை மார்ஷல் எ. நேசமணியாவார். தமிழ் ஈழத்தை இன்று வரை தமிழர்களால் மீட்டுக்கொள்ள முடியவில்லை. தமிழர்களின் மண்ணான தேவிகுளம் பீர்மேட்டையும் மீட்டுக்கொள்ள தமிழர்களால் இயலவில்லை. செங்கோட்டையில் தமிழர்கள் பெருவாரியாக வாழ்கின்ற இடங்களையும் மலையாளிகளிடத்தில் இருந்து மீட்டு தமிழகத்துடனே இணைத்துவிட தமிழர்களால் இயலவில்லை. தமிழ் மண்ணான சிற்றூரையும் ஆந்திரர்களுக்கு இழந்தோம்.

ஆனால் தமிழன் இழந்த பாண்டிய மண்ணான கன்னியாகுமரி மாவட்டத்தை, மார்ஷல் எ. நேசமணி அவர்கள் மீட்டுத் தாய்த் தமிழகத்துடன் இணைத்தார் என்பது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு நிகழ்ச்சியாகும். இழந்த தமிழ் மண்ணை மீட்டுத்தந்த மார்ஷல் எ. நேசமணிக்கு சிறப்புகள் செய்வதற்கு தமிழர்கள் என்ற முறையில் நாம் கடமைப்பட்டுள்ளோம். தமிழ் உணர்வுடையவர்கள், தமிழ் உணர்வு கொண்ட தமிழ் அரசு இருப்பின் அதன் முதற்கடமையாக சென்னை மெரீனா கடற்கரையில் மார்ஷல் எ. நேசமணியின் முழு உருவ வெங்கலச்சிலையை அமைத்து, **"தமிழன் இழந்த புனிதமண்ணை மீட்ட ஒரே ஒருவன்"** என்று பொன்னெழுத்துகளில் பொறித்திருப்பர். தமிழகத்தை மலையாளி ஆண்டான். தெலுங்கன் ஆண்டான். கன்னடத்துக்காரன் ஆண்டான். தமிழன் ஆளாத குறையால் தமிழன் இழந்த மண்ணில் ஒருசிறிய பாகத்தையாவது மீட்டுத்தந்த

குமரித்தந்தை மார்ஷல் எ. நேசமணி ஆவார் என்பதை தமிழ் மக்களுக்குச் யாரும் சொல்லவில்லை. அதை இருட்டடிப்பு செய்தனர், வடுகத் தமிழர்கள் சுருங்கக் கூறின் தமிழகத்தை மீண்டும் "களப்பிரர்" மக்களாட்சி என்ற போர்வையில் அபகரித்துக் கொண்டனர். எனவே அவரது இச்செயலை உலகறியச் செய்வதற்கு அவரது உருவச்சிலையை சென்னை கடற்கரையில் நிறுவ வேண்டியது தமிழனின் கடமையன்றோ! தமிழ் உணர்வுடையோர் இது குறித்து சிந்திப்பதற்கு கடமைப்பட்டவர்கள் ஆவர்.

**தமிழன் இழந்தது ஏராளம் – மீட்டதோ கொஞ்சம் !**

**அந்த கொஞ்சமே இன்றய குமரி மாவட்டம் !!**

**மீட்டவரோ குமரித் தந்தை A. மார்ஷல் நேசமணி !!!**

## Annexere
## 11th August 1954 and There after

Representations have been made by various bodies and individuals regarding the situation in Travancore Tamil Nadu since August 11, 1954. I submit this statement to clarify the incidents that took place on that date and subsequently and what led to these incidents.

1. **Sri. Pattom Tanu Pillay is an enemy of the Travancore Tamil Nadu Congress :**

During the course of the election in 1948 he caused the shooting at Mangad and Keezhkulam and two valuable lives were lost. About sixty cases were filed by the police under his instruction. When he headed the first ministry and until his downfall he followed a policy of discrimination with the avowed object of destroying the Travancore Tamil Nadu Congress (T.T.N.C.). The proceedings of the Legislative Assembly of that time and the various representations made by us bear this out.

It was widely talked about that Sri. Pattom Thanu Pillay is to head a ministry as soon as the last elections were over. He through his friends approached the President of the T.T.N.C. and offered the speakership of the local Assembly. But, we who had fought all political parties in the state did not wish to be allied to any party or be under obligation to any party which

would undermine our independent existence as an opposition group. So, the offer was turned down. This infuriated him. Subsequently in the elections to the various standing committees, the Council of State and the Devaswom Board, the T.T.N.C. had to adopt a course opposed to his wishes and his party candidates suffered reverses one after the other. These infuriated him further and he assumed a hostile attitude and made up his mind to take vengeance on us.

**2. Representaion to the Ministers for the execution of irrigation Projects :**

When the Minister for Finance presented his first budget we found that the construction of the Neyyar Left Bank Channel included in the First Five Year Plan was given up during the Plan period. Various other irrigation and drinking water supply schemes which were included in successive budgets but were not executed mostly because they benefited the Travancore Tamil Nadu were omitted in the budget. So the fourteen members of the T.T.N.C. Parliamentary Party presented a memorandum requesting the ministers to reconsider the budget proposal so as to include certain schemes and to execute those schemes included in the budget without allowing any amount to iapse. Failing which we stated that we would be compelled to adopt other methods. A copy of this representaion was sent to all the Ministers concerned in New Delhi. The Secretary of the party wrote to the Chief Minister to fix a day so that we might wait on him and discuss the matter with him. He was not courteous enough to fix a day. He turned a deaf ear to our requests and we understand that he laughed at our requests and stated that he would not be persuaded by threats.

### 3. Persecution of Tamils in Deviculam :

Since the presentation of the Memorandum by the T.T.N.C. to the Boundary Commission urging the merger of the Taluks of Deviculam and Peermade along with other Tamil taluks with the Madras State, the Tamils in these taluks are being harassed by the police at the instance of interested parties. The Local branch of the T.T.N.C. informed us that security proceedings have been started against about 400 persons including women and that most of them are being tortured by the local police. Labour leaders were arrested, fettered and paraded through the streets of Munnar in pouring rain. One Sri. Kuppuswamy was so belaboured that his ear drum is ruptured and he had become an invalid. Hearing this, four representatives of T.T.N.C including three members of the local Legislative Assembly went over to Deviculam, investigated the situation there and made a representaion to the local Sub-Inspector of Police would ease the situation. He refused to look into the matter and the situation there was deteriorating. So several urgent representaions were made and they too were not attended to.

### 4. Defiance of prohibitory order in Deviculam :

Since the Government did not pay any heed to our representaions, the T.T.N.C. declared the observance of June 30th as Deviculam Day in Travancore Tamil Nadu. It was observed peacefully everywhere by holding public meetings and passing resolutions condemning the police atrocities and the Government. But, I had planned a visit to Deviculam on July 4 and so the observance of that day was postponed to that date. Before I reached Deviculam on the July 3rd the police succeeded in getting an order under Section 144 Cr.

P.C. promulgated to prevent me from contacting our local leaders and addressing public meetings. I thought that I should not be a coward and felt it my duty to disobey that illegal order. So, a notice was served on the local Magistrate intimating him that Sri. Childambaranathan, (Ex. Minister) Sri. A.A. Razak, Member, Council of States, and I would disobey the order and we did so, on July 4th, we were arrested, convicted and sentenced to six weeks imprisonment. This was followed by batches of satyagrahies mostly led by members of the local Assembly, Presidents of Panchayats and other responsible leaders, disobeying the prohibitory order.

**5. Launching of peaceful satyagraha :**

Following our imprisonment the T.T.N.C. decided upon launching peaceful satyagraha to express our dissatisfaction with the present ministry and to demonstrate that all our fundamental rights are in jeopardy in this state and that nothing would save us except an immediate merger with the Madras State. This was carried on from July 9th to August 11th most peacefully and batches of satyagrahies courted imprisonment. There had been no violence to any person and no untoward incident.

**6. A concerted plan to discredit the T.T.N.C. and to crush it down with violence :**

The T.T.N.C. declared August 11th to be observed as Deliverance Day throughout Travancore Tamil Nadu. The Chief Minister in his reply to an adjournment motion on July 12th in the local Legislative Assembly stated that he would **Beat down the T.T.N.C. agitation.** On August 8th he addressed a public meeting in the Pazhavangadi Maidan in Trivandrum

when he threatened the Tamils in Trivandrum and asked them whether they too are leaving the State with those in Tamil Nad. At the same time he threatened to ruthlessly put down the T.T.N.C. agitation with an iron hand on the pretext of granting security to Malayalees. He engineered an anti T.T.N.C. movement of his own caste men. This was followed by provocative articles in the Malayalam press at the instance of the Puplic Relations Officer. On the night of August 9th all those who were in the Jails for disobying the prohibitory order were ordered to be released even though some of us had ony three days more to complete the term. This included six members of the local Assembly and two members of the Parliament. We were thus released, in furtherance of a concerted plan by goverment of creating incidents and book us all imputing criminal acts on the Deliverace Day.

**7. The Deliverance Day :**

The day was observed peacefully throughout Tamilnad. No incident happened till 1.30 p.m. except wanton lathi charges on peaceful processions at Nagercoil and Marthandam. Complete hartal was observed. There was massing of police force in all centres. But nothing happened to provoke the police to action.

**8. The incidents as they happened at Marthadam :**

A peaceful procession of students was wantonly lathi charged by the police and two students on the pretext of pelting stones were severly beaten and taken into the police van. The students dispersed and lay on the road about half a mile away in front of the school demanding the release of the students. If only the two students were released nothing would have happened at Marthandam.

A peaceful procession of the T.T.N.C. was taken out along the main roads. A batch of vounteers picketted the Sub-Registrar's Office and no police man was there. The procession then moved on to the Magistrate's Court with the volunteers for picketting. The police who had mustered strong in the court compound rushed through two gates at different places and wantonly charged the processionists. Confusion prevailed and a few were beaten up with lathis and carried away. Hundreds were injured.

By this the situation in front of the school worsened by the action of the headmaster of the local Government High School who called in the police. The police indulged in indiscriminate lathi charge on passers by and the students. Hundreds were injured and they were carried away in police vans and brutally tortured. Then began a reign of terror. Police were let loose. One telegraph post and eight telephone posts within a distance of three miles were pulled down. Obstructions are alleged to have been placed on the main road. But it is significant that nobody was caught red handed in the act even though fully loaded police vans with armed police were running up and down the road. This was a situation created by the police and their hirelings. Then began the chase and the shooting at random on the pretext of pelting with stones. In isolated places, one by one wounded far exceeds those mentioned in the press notes. People have fled for their lives and until they return after normal conditions, the number of dead and wounded cannot be assessed.

**9. The incident at Puthukaday :**

Early on the morning of August 11 the Sub-Registrar's Office close by Puthukaday, there was a demonstration in front

of the Sub-Register is alleged to have requisitioned police help from Marthandam even though a police out post was closeby. In the evening a peaceful meeting was held in a compound at Puthukaday presidend over by Sri. C. Gopalakrishnan, Advocate. The armed police appeared there pushed him and his companion Mathiazhagan into a police van and tourtured them. With no warming the police opened fire. The police chased the people shooting indiscriminately at various places. The casialities were very heavy. Nobody knows how many were killed and how many were wounded. Rumours are afloat that two lorry loads of dead and wounded were carried away to Trivandrum. The damage to the Post Office and the police out post are subsequent events made up by the police and their hirelings to justify the shooting, for **while the people were flying for their lives men of a particular community chased them and severely manhandled them.**

**10. Terrorism Prevails :**

The wounded when carried to the hospital were snatched away and their helpers arrested and tortured. Five wounded persons were removed to the hospital and they are all now figuring as accused. So, several of the wounded died for want of proper medical relief. From the afternoon of August 11 terrorism prevails. There is no safety of person and property. Police informers and our political enemies have seized this opportunity of supplying lists of T.T.N.C. workers, and sympathisers to the police. Armed police with these lists seize all those whom they could find on the road, in market places, in the fields, in villages and vehicles. If they are in the list they are beaten and taken into the van, if not they are

given a sound thrashing and driven off. Fields lie without being harvested. Nobody is safe to follow his own avocations. Sanctity of homes have been violated and the modesty of women outraged. It is now a police Raj. Inhuman cruelties are perpetuated in the name of Law and order. Sri. Kunjan Nadar, M.L.A. was arrested at midnight by forcibly breaking open his house. Then what about others?

**11. The Black Holes :**

Every police lockup is awfully crowded. There is not even sitting spaces in some lock ups. Organised violence and torture is the order of the day in these lock ups. The skies are rent with their sreams at night - a living death in the cell. The spectre of death is before their eyes. There is no account of those arrested, and locked up in jalls. Several are alleged to have been removed to hospitals. But where to find them is the question?

**12. Medical relief :**

The urgent matter for consideration is the check up of all those locked in police lock ups by a competent medical officer of repute and to render medical aid to all those who have been tortured by the police. It is quite evident that no magistrate would even dare to grant bail to any until the evidence of torture is obliterated. It is a humane problem that requires immediate attention. Physicians are requisitioned stealthly to treat the wounded in the lock ups to obliterate evidence of torture.

**13. Sham Justic :**

Nothing need be said of the early records in each case. Competent courts would adjudge on their relative value. The Chief Minister had been to places where shooting

took place and whole heartedly supported the action of the police in public. Then he directed the district collector to hold an enquiry about the shooting. Witnesses were suborned and in the death stillness of a court surrounded by hundreds of armed police the court held its sittings. Who would dare to give evidence speaking the truth and nothing but the truth. It was only a mockery of justice. Now, no minister is tired of haranguing that the shooting was justified and what justice can be obtained and from whom is the question.

**We are witnessing today the worst forms of communalism making strident march in Tamil Nad. Sri. Pattom Thanu Pillay is a Malayalee and he cannot brook the sight of a Tamilian crossing his path. He is a Nair who thirsts for the blood of the Nadar, his opponent. He has drunk enough of its, not once but twice. Could not this orgy of manhunting and man slaughter be put an end to?**

**14. Cases Launched :**

We are not in a position even today to give the number of cases that have been taken up from every police station since August 11th. From the information available we are led to think that atleast 12 cases have been taken up and the accused in them are innumerable. As usual the police say 2000 others or 150 others or the others in all their reports. Thus they are casting a very wide net and nobody in Tamil Nad is sure whether he is an accused or not. All the names of those who are in the lock ups are not available. But, in the mean time interested parties and police are having a good harvest.

**15. Asylum in the Madras State :**

People have fled and have taken refuge in the Madras State and elsewhere. The police are attempting to haul them up and they have met with failure. This has led to the outburst of the Chief Minister at Ernakulam making a wild allegation that the Chief Minister of Madras and Sri. Subramoniam would have invaded Tamil Nad if there was no Central Government. Thus the attitude of the Chief Minister of this State is made up.

**16. An enforced non-co-operation :**

Every Panchayat member, Panchayat President, Municipal Councillor and Municipal Chairman is either arrested or is wanted. So panchayats and municipalities have ceased to function. How long they would continue as such is a question. Thus all local self governing institutions are at a stand still. Shope are closed. Market places deserted and normal life in all areas is rendered impossible owing to the activities of police vans.

**17. An impartial judicial enquiry :**

The T.N.N.C. demands an enquiry by a tribunal consisting of two non-officials of repute in the public life of India presided over by an eminent judge of the status at least of a High Court Judge from outside Travancore - Cochin. We are prepared to lead evidence before such a tribunal and substantiate every allegation that has been made in this statement. The tribunal should have wide powers not only to investigate the firing but also police excesses and tortures and into the conduct of all officers connected with the incidents on August 11 and subsequently.

Finally the T.T.N.C appeals to every citizen in Travancore Tamil Nad to be calm and never retaliate violence with violence. Violence would defeat our objective and we would play into the hands of our enemies. To those who lost their lives we bow in silence and offer our heart felt condolences to the bereaved families. To Those mothers and sisters whose dear ones are lauguishing behind prison bars we extend our sympathy. We assure you that eminent counsels are engaged to defend them and to prove their innocence. To those who are suffering from police tortures and to those who are rendered destitute we have been able to afford some relief. But that is not adequate and organised relief is shortly forthcoming. We have passed through blood and fire. We have aroused the conscience of all right thinking people throughout India irrespective of party allegiance. Our friends from the Madras State visited us and comforted us and to them we are much indebted. We have marched neareer to our goal. Through this suffering let us renew our faith in our objective.

*30th August, 1954* — A. Nesamony

To

The President,
Indian National Congress
New Delhi.